
யாதுமாகி
என்னுள்
நின்றாய்
பிரேமா

## முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

எனது இரு தோழிகளின் தூண்டுதலின் பேரில் எழுதத் தொடங்கிய நான், என் குடும்பத்தாரின் உறுதுணையோடும், வாசகர்களாகிய உங்களின் வரவேற்போடும், 'அருணோதயம்' திரு. அருணன் ஐயா அவர்களின் ஆதரவோடும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன்.

இந்த என் மூன்றாவது நாவல், விறுவிறுப்பாகக் கொடுக்க முயற்சித்திருக்கிறேன். இதில் உள்ள நிறை, குறைகளை premaarumugam@yahoo.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். நீங்கள் குறிப்பிடும் நிறைகள் எனக்கு ஊக்கமளிக்கும். நீங்கள் சொல்லப் போகும் குறைகள் என்னை மேலும் வளரச் செய்யும். உங்களின் விமர்சனங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

அன்புடன்,

பிரேமா

# யாதுமாகி என்னுள் நின்றாய்



## 1



'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்' என்ற பாரதியாரின் வரிகளைக் கூறிக்கொண்டே பாண்டிச்சேரியில் தனது வீட்டின் படுக்கை அறையில் துயில் கொண்டிருந்த பிருந்தா கண் விழித்தாள்.

தினமும் அதிகாலையில் நாம் உயிரோடு எழுவதே நாம் செய்த தவம் தான் என்று பாரதி பாடியதில் பிருந்தாவிற்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. தனது தாயும், தந்தையும் தனது பதினாறாவது வயதில் ஒரு சாலை விபத்தில் இறந்த பின் மனிதர்கள் வாழும் ஒவ்வொரு நாளும் அவர்கள் செய்த தவத்தால் விளைந்ததாகவே பிருந்தா கருதினாள்.

பிருந்தா இருபத்தி மூன்று வயது யுவதி. மெல்லிய உடல் அமைப்புக் கொண்டவள். அவளது சாந்தம் தவழும் முகம் பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும். மூன்று வருடங்கள் பாண்டிச்சேரி கல்லூரி ஒன்றில் படித்துப் பட்டம் வாங்கிய பின் NIFTல் அஞ்சல் வழிக் கல்வியில் ஃபாஷன் டெக்னாலஜி படித்தாள். அவளது தோழி ஒருத்தி பாண்டிச்சேரியிலேயே பொட்டிக் ஷாப் வைத்திருந்தாள். அங்கு வரும் வாடிக்கையாளர்கள் சிலருக்கு எம்பிராய்டரி வேலை செய்து கொடுப்பாள்.

பெற்றோர்கள் மறைந்தாலும் அவளுக்கு வசதிக் குறைவு ஏற்படும் நிலையில் அவர்கள் அவளை வைக்கவில்லை. அவள் பெயரில் நிறையச் சொத்துக்கள் இருந்தன. அவளது பெற்றோர்கள் மறைந்த பின் ஒன்று விட்ட சித்தி சாரதாவும், அவரது மகன் பிரகாஷும் அவளுக்குத் துணையாக இவளது வீட்டில் தங்கிக் கொண்டனர்.

சாரதா பாசத்தைப் பெரிதாகப் பொழிய மாட்டார். அதே சமயம் அவர்களால் இவளுக்கு எந்தத் தொல்லையும் இதுவரை ஏற்பட்டதில்லை. அவர்களது வறுமை இவளுக்கு ஆதரவாக இங்கேயே இருக்க வைத்தது.

பிருந்தா எழுந்து குளித்துத் தயாராகி சாப்பிட்டு முடித்து பதினோரு மணி போல் வீட்டை விட்டு வெளியே கிளம்பினாள். இன்று அவளது தோழிக்குப் பிறந்தநாள். அதற்காக பிறந்த நாள் பரிசும், கேக்கும் வாங்கக் கிளம்பினாள்.

பிருந்தா தான் வாங்கிய பரிசுப் பொருளுடனும், கேக்குடனும் அவர்கள் சந்திக்க இருப்பதாக முடிவு செய்திருந்த ஹோட்டலுக்குள் சென்றாள்.

வழக்கம் போல் இவள் தான் முதல் ஆளாகச் சென்றிருந்தாள். ஒரு ஓரமான மேஜையைப் பார்த்து அங்கு போய் அமர்ந்தாள்.



இவள் இடம் தேடி அமர்ந்த அடுத்த நிமிடம் அவளது நெருங்கிய கல்லூரித் தோழி ப்ரியா அங்கு வந்து சேர்ந்தாள்.

''அப்பாடா நீயாவது வந்து சேர்ந்தியே! தனியா எவ்வளவு நேரம் உட்கார்ந்து இருக்கணுமோன்னு பயந்து போய் இருந்தேன்'' என்று பிருந்தா சொன்னதும், ப்ரியா முறைத்தாள்.

''இல்லை பயம் இல்லை ப்ரியா. போர் அடிக்குமேன்னு சொல்ல வந்தேன். வாய் தவறி...'' என்று பிருந்தா இழுக்கவும்,

''பொய் சொல்ல டிரை பண்ணாதே பிருந்தா. அது உனக்கு வராது. எதுக்காகவும் பயப்படக்கூடாதுன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்.''

''ம்ம்ம் நீங்க யாராவது என் பக்கத்திலே இருந்தால் பயம் வருவது கிடையாது. தனியா இருக்கும்போது தான் கஷ்டமா இருக்கு. பசங்க கும்பலா வந்தாலோ இல்லை என்னை யாராச்சும் உற்றுப் பார்த்தாலோ தான் கொஞ்சம் பயம் வந்திடுது'' என்று சொன்னவளை மேலும் ஏதும் சொல்லி வருத்தப்படுத்த வேண்டாம் என்று ப்ரியா முடிவு செய்தாள்.

''சரி நான் ஒரு ஜோக் சொல்லுறேன் கேளு. ஒரு மனைவி அவ கணவன்கிட்டே ஏங்க நான் இப்படியே சமைச்சுப் போட்டால் எனக்கு என்ன கிடைக்கும்ன்னு கேட்டாளாம். அதுக்கு அவ கணவன் சீக்கிரமா என் இன்சூரன்ஸ் பணம் உனக்குக் கிடைக்கும்ன்னு சொன்னானாம்'' என்று ப்ரியா சொல்லி நிறுத்த... சில நொடிகள் விழித்த பிருந்தா அதன் பின்பே அந்த ஜோக்கைப் புரிந்து கொண்டு சிரித்தாள்.

''அப்பாடா சிரிச்சிட்டியா. நான் கூட உனக்கு விம் போட்டு விளக்கணுமோன்னு ஒரு நிமிஷம் பயந்து போனேன். இது தொடர்பாவே நான் இன்னொரு ஜோக் சொல்லுறேன் கேளு'' என்று ப்ரியா சொன்னதும் பிருந்தா ஆர்வமாக அவளைப் பார்த்தாள்.

''ஒரு காட்டிலே எல்லா மிருகங்களுக்கும் காட்டு ராஜா சிங்கம் போட்டி வைச்சுச்சாம். போட்டி என்னன்னா எல்லா மிருகமும் வரிசையா வந்து ஜோக் சொல்லணும். யார் கடைசி வரை சிரிக்காமல் இருக்காங்களோ அவங்க தான் வின்னர். எல்லா மிருகமும் ஆர்வமா வந்து ஜோக் சொல்ல ஆரம்பிச்சதாம். முதல்ல முயல் வந்து சொல்லுச்சாம். அடுத்தது மான், நரி, ஓநாய், சிறுத்தை. இப்படி ஒவ்வொரு மிருகமா ஜோக் சொல்லச் சொல்ல... சிரிப்பை அடக்க முடியாமல் சிரிச்ச மிருகங்கள் எல்லாம் அவுட் ஆகி வெளியேறிக்கிட்டு இருந்ததாம். அப்போ ஆமை மட்டும் தான் எந்த ஜோக்கிற்கும் சிரிக்காமல் இருந்துச்சாம்.

ஜோக் சொல்ல வேண்டிய வரிசையில் புலியும், யானையும் மட்டும் தான் இருந்துச்சாம். அதனால அந்த ரெண்டு ஜோக்குக்கும் ஆமை சிரிக்காமல் இருந்தால் ஜெயிச்சிடும் என்று எல்லோரும் போட்டியை ரொம்ப ஆர்வமா பார்த்துக்கிட்டு இருந்தாங்களாம். அப்போ புலி வந்து ஜோக் சொல்லியதும் ஆமை சிரிச்சிடுச்சாம்.

சிங்கம் ஆமையைப் பார்த்து, ''இவ்வளவு நேரம் தாக்குப் பிடிச்சியே! இன்னும் யானை மட்டும் தானே பாக்கி. சிரிக்காமல் இருந்திருந்தால் நீ ஜெயிச்சு இருப்பியே. இப்படி கோட்டை விட்டுட்டியே!'' அப்படின்னு கேட்டுச்சாம்.



அதுக்கு அந்த ஆமை, ''முதலில் அந்த முயல் சொன்ன ஜோக் சூப்பர் இல்ல?!'' அப்படின்னு கேட்டுச்சாம்.

அடக் கடவுளே உனக்கு இப்போ தான் அந்த முதல் ஜோக்கே புரிஞ்சதா? இது தான் ஆமை வேகமா? அப்படின்னு கேட்டு எல்லா மிருகங்களும் தலையிலே அடிச்சிக்கிட்டாங்களாம்'' என்று ப்ரியா சொல்லி முடிக்கவும்,

பிருந்தா கலகலவெனச் சிரித்துக் கொண்டே, ''சூப்பர் ப்ரியா. எங்கே இருந்து புடிச்ச இந்த ஆமை ஜோக்கை?'' என்று கேட்டாள்.

அவள் சிரிப்பதை ஒரு புன்னகையுடன் பார்த்துக் கொண்டே, ''தென்கச்சி சுவாமிநாதன் சொன்ன ஜோக் இது'' என்று ப்ரியா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அன்று பிறந்தநாள் கொண்டாடும் அவர்களது தோழி சாந்தி உள்ள நுழைந்தாள்.

சாந்தி அவர்கள் அருகே வந்து அமர்ந்தாள். அவர்கள் இருவரும் காலையில் போனில் வாழ்த்துச் சொல்லியிருந்தாலும் நேரில் இப்பொழுது தான் பார்ப்பதால் சாந்தியிடம் தங்களின் வாழ்த்துக்களைச் சொன்னார்கள்.

வாழ்த்துச் சொல்லி முடித்தவுடன் பிருந்தா சாந்தியிடம், ''ஒரு வாரமா, நீ எனக்கு போன் பண்ணுவதே இல்லை. ஏன் சாந்தி?'' என்று குறைபட்டாள்.

''ம்ம்ம் எப்படி பண்ணுவாங்க. நீ தான் புது நம்பர் மாத்திட்டியே. எனக்கு நம்பர் தெரிஞ்சால் தானே பண்ண முடியும்'' என்று பதில் சொன்ன சாந்தியிடம்,

''நீ போன் பண்ணிக் கேட்டால் நான் நம்பர் தந்திருப்பேன் தானே?'' என்று பிருந்தா சொன்னதும்,

ப்ரியாவும், சாந்தியும் தங்கள் தலை மேல் கை வைத்துக் கொண்டு அவளைப் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

''எங்களுக்கு இப்படி ஒரு லூசு பிரண்டு!'' என்று அவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து சொல்ல... அப்பொழுது தான் பிருந்தாவிற்குத் தான் செய்த தவறு புரிந்தது.

''அட ஆமா! நம்பரே தெரியாமல் எப்படி போன் பண்ண முடியும்? நான் ஒரு லூசு'' என்று சொல்லித் தன் தலையில் அடித்துக் கொண்டவள், ''இதுக்குத் தான் சாந்தி என் லேண்ட் லைன் நம்பரையும் எழுதி வைச்சுக் கோன்னு நான் உன்னை ரொம்ப நாளா சொல்லுறேன். அவசரத்துக்கு உதவும் தானே!'' என்றாள்.

''ப்ச்சு... அத உங்க சித்தி இல்ல எடுப்பாங்க'' என்று சாந்தி சலித்துக் கொள்ளவும்,

''எடுத்தால் என்ன? அவங்க நல்லவங்க தான் சாந்தி.''

''உனக்கு வெளுத்ததெல்லாம் பால் பிருந்தா. நான் வசதி இல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவளா! அதனால் நான் என்னமோ உன் சொத்தை அபகரிக்க வந்த மாதிரியே அவங்க என்னைப் பார்ப்பாங்க. சரி விடு. உன் லேண்ட் லைன் நம்பரைத் தா. நான் பதிஞ்சு வைச்சுக்கிறேன். நீ சொன்ன மாதிரி அவசரத்துக்கு உதவும்'' என்று கூறி அவளது வீட்டு எண்ணை வாங்கிக் கொண்டாள்.

''சரி பெர்த்டே கேக் வாங்கிட்டு வரச் சொல்லி இருந் தேனே? எங்கே அதை வெளியே எடு!'' என்று ப்ரியா சொன்னதும், பிருந்தா ஒரு மாதிரி விழித்துக் கொண்டே தான் கொண்டு வந்திருந்த பையில் இருந்து அதை எடுக்கக் குனிய...

''நில்லு. என்ன தப்பு பண்ணினாய்? அதை முதலில் சொல்லு. உன் முழியே சரியில்லையே'' என்று ப்ரியா அவளைப் பார்த்துக் கேட்க,



''வந்து...'' என்று பிருந்தா தயங்கவும்,

''சும்மா சொல்லு. நீ ஏதோ சொதப்பிட்டேன்னு தான் உன் முகத்தைப் பார்த்தாலே எனக்குத் தெரியுதே'' என்று ப்ரியா சொன்னதும்,

''நான் கேக் ஷாப் போய் கேக் வாங்கி பேர் எல்லாம் எழுதிட்டு வெளியே வந்தேனா... அப்போ தான் எனக்கு திடீர்னு சந்தேகம் வந்துச்சு. கேக்கிலே கடைக்காரர் என்ன எழுதினார் என்று. வாசலிலே வைச்சுப் பிரிச்சுப் பார்த் தேனா... அதிலே அவர் ஹேப்பி அனிவர்சரி சாந்தின்னு எழுதிக் கொடுத்திட்டார்'' என்று சொன்னதும் சாந்தி அவளைப் பார்த்து முறைக்க...

''இல்ல சாந்தி, நான் பெர்த்டேன்னு கரெக்ட்டா தான் சொன்னேன். அவர் காதிலே சரியா விழலை போல'' என்று பரிதாபக் குரலில் சொன்னவள் தன் கதையைத் தொடர்ந்தாள்.

''அந்தக் கடைக்காரர்கிட்டே போய் அதை அழிச்சு மாத்த முடியுமான்னு கேட்டேன். க்ரீம் மேலே எழுதி யதை அழிக்க முடியாதுன்னு சொல்லிட்டார். சரின்னு வேற கேக் வாங்கினேன். கேக்கிலே என்ன எழுதணும் என்று பேப்பரிலே எழுதித் தாம்மான்னு சொன்னார்...'' என்று இழுக்கவும்,

''ம்ம்ம்... நீ இழுக்கறதைப் பார்த்தால் அதையும் சொதப்பிட்டியா?'' என்று ப்ரியா சந்தேகம் கேட்க,

''வந்து... பதட்டத்திலே நான் ஹேப்பி பெர்த் டே பிருந்தான்னு எழுதிக் கொடுத்திட்டேன்'' என்று சொன் னதும் தோழிகள் இருவரும், 'இவளை வைத்துக் கொண்டு நாம என்ன செய்வது?!' என்பது போல் பார்த்தனர்.

இருவரையும் பார்த்துப் பாவமாக முழித்துக் கொண்டிருந்த பிருந்தாவிடம் ப்ரியா, ''இதையும் அழிக்க முடியாதுன்னு மூணாவதா ஒரு கேக் வாங்கினாயா?'' என்று கேட்டாள்.

''வாங்கினேன் தான். ஆனால் வேற கடையிலே... இல்லைன்னா அந்தக் கடைக்காரர் என்னை லூசுன்னு இல்ல நினைச்சுக்குவார்'' என்று பிருந்தா சொன்னதும்,

''அதாவது எங்களுக்கு எல்லாம் தெரிஞ்ச உண்மையைக் கடைக்காரருக்குத் தெரியவிடாமல் பாத்துக்கிட்டே! அப்படித்தானே? கிரேட் பிருந்தா!'' என்று ப்ரியா நக்கல் பண்ணவும்,

அவளை முறைத்துக் கொண்டே பிருந்தா அந்தக் கேக்கை வெளியே எடுத்தாள்.

''என்ன ஒரு கேக்கை மட்டும் எடுக்கிறாய். மிச்ச ரெண்டும் எங்கே?'' என்று சாந்தி கேட்டவுடன்,

''நமக்கு எதுக்கு மூணு கேக்குன்னு வழியிலே ரெண்டு பிச்சைகாரங்ககிட்டே தூக்கிக் கொடுத்து, என் பிரண்டுக்குப் பிறந்தநாள். அவளை வாழ்த்துங்கன்னு சொன்னேன்'' என்று பிருந்தா பதில் அளித்தாள்.

தனது வலது கையை மேஜையில் ஊன்றி அதில் தன் கன்னத்தைச் சாய்த்துக் கொண்ட ப்ரியா, ''பிச்சைக்காரனுக்கு? ஃபிரஷ் க்ரீம் கேக்? ம்ம்ம் அப்புறம்...'' என்று சுவாரஸ்சியமாக கதை கேட்கத் தொடங்க...

''அவங்களும் உன் பிரண்டு நல்லா இருக்கணுமான்னு வாழ்த்தினாங்க'' என்று பிருந்தா சொன்னதும்,

''கேக்கை கொடுத்த உன்னை வாழ்த்தலையா?'' என்று ப்ரியா கேட்க,



''என்னையும் மகராசியா இருமான்னு சொன்னாங்க'' என்று சந்தோஷத்துடன் பிருந்தா சொல்ல,

''நீ கேக்கைக் கொடுத்ததுக்குப் பதிலா சாப்பாடு வாங்கிக் கொடுத்தாலும் அவங்க வயிறாவது நிறைஞ்சிருக்கும்'' என்று சாந்தி சொல்லவும்,

''கரெக்ட். அதே தான் அந்தப் பிச்சைக்காரனும் சொன்னான். இந்தக் கேக் வாங்கின காசுக்கு எனக்கு நீங்க சாப்பாடு வாங்கித் தந்து இருக்கலாம்ன்னு. சரின்னு நானும் காசு கொடுத்தேன்.''

''சாப்பாட்டுக்குக் காசா? எவ்வளவு கொடுத்தாய்? ஐம்பதா அல்லது நூறா?'' என்று சாந்தி கேட்டவுடன்,

''உனக்கு நம்ம பிருந்தாவைச் சரியாத் தெரியலை சாந்தி. அவ கேக் வாங்கச் செலவான காசைக் கொடுத்திருப்பாள். என்ன பிருந்தா நான் சொல்லுறது சரி தானே?'' என்று ப்ரியா நக்கல் பண்ண...

''நான் ஒண்ணும் அவ்வளவு எல்லாம் தரலை. ஒரு கேக்கோட விலை இருநூற்று இருபத்தைந்து ரூபாய். நான் ஆளுக்கு இருநூறு என்று நானூறு ரூபாய் தான் கொடுத்தேன்'' என்று வீராப்புடன் பதில் சொன்ன பிருந்தாவிடம்.

''ஆமாமா... நானூறுக்கும், நானூத்தி ஐம்பது ரூபாய்க்கும் நடுவிலே லட்சக் கணக்கிலே இல்லை வித்தியாசம் இருக்கு'' என்ற தோழிகள் இருவரும் அவளை நக்கல் பண்ணினார்கள்.

அவள் ஒன்றும் சொல்லாது அமைதியாக இருக்க...

''சரியான இளிச்சவாய் மாட்டினாள். இவ அட்ரஸை வாங்கி வைச்சு அப்பப்போ இவகிட்டே எதையாச்சும்

கறக்கலாம்ன்னு அந்தப் பிச்சைக்காரன் ஐடியா பண்ணாமல் இருந்தால் சரி தான்'' என்று ப்ரியா அலுத்துக் கொண்டவுடன்,

''ஓ! அதுக்குத் தான் அட்ரஸ் கேட்டானா?'' என்று ஆச்சரியமாக பிருந்தா கேட்டாள்.

''அடிப்பாவி! அப்போ அட்ரஸைக் கொடுத்திட்டியா?'' என்று சாந்தியும்,

''பின்னே உனக்குத் தாங்க்ஸ் கார்டு அனுப்பவா கேட்டு இருப்பான்!'' என்று ப்ரியாவும் ஒரு சேரக் கேட்டனர்.

பிருந்தா ப்ரியாவை முறைத்துக் கொண்டே, ''வெளி ஆளுங்களுக்கு எல்லாம் அட்ரஸ் கொடுக்கக் கூடாதுன்னு எனக்குத் தெரியாதா என்ன?! நான் ஒண்ணும் கொடுக்கலை'' என்றாள்.

''அப்பாடா... இதையாவது சரியா செஞ்சியே. நீ ஒரு அப்பாவி பிருந்தா. உன்னை ஏமாத்துறது ரொம்ப ஈஸி. உன்னைக் குழந்தை மாதிரி பார்த்துக்கிற ஒரு ஹஸ்பண்ட் கிடைக்கணும். அதுதான் என் பிரார்த்தனையே!'' என்று ப்ரியா பெருமூச்சு விட்டாள்.

''சரி நான் போய் கையைக் கழுவிட்டு வரேன்!'' என்று சொல்லி ப்ரியா அகலவும், பிருந்தாவும் சாந்தியிடம் அதையே சொல்லிக் கொண்டு எழுந்து திரும்ப ஒரு இளைஞன் அவள் மேல் மோதினான்.

''சாரி... சாரி'' என்று சொல்லியவாறே அவன் விரைவாக நகர்ந்து விட்டான்.

''இடியட், நின்னு பொறுமையா ஒரு சாரி கூடச் சொல்லாமல் போறான் பாரு!'' என்று சாந்தி அவனைத் திட்டினாள்.



''விடு சாந்தி. அவனுக்கு என்ன அவசரமோ!'' என்று பிருந்தா சொல்லவும்,

''நீ இப்படியே எல்லோருக்கும் வக்காலத்து வாங்கு!'' என்று சாந்தி சலித்துக் கொண்டாள்.

அதன் பின்பு அவர்கள் கேக் வெட்டி பிறந்த நாளைக் கொண்டாடினர். சாப்பிட்டு முடித்து சாந்தி சென்றதும் ப்ரியா பிருந்தாவிடம், ''அடுத்த வாரம் ஃபாரின் டூர் போறேன் இல்லையா. அதுக்காக நான் நாளைக்கு சென்னைக்கு ஷாப்பிங் போறேன். நீயும் வருகிறாயா?'' என்று கேட்டாள்.

''எனக்கு வேலை ஒண்ணும் இல்லை. நானும் உன் கூட வரேன்'' என்று கூறி பிருந்தா தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

இருவரும் பேசிக் கொண்டே அங்கே இருந்து கிளம்பினார்கள்.



## 2



ஒரு வாரம் கடந்திருந்த நிலையில்...

தூங்கி எழுந்த பிருந்தா தனது காலைக் கடன்களை முடித்துவிட்டு அறையை விட்டு வெளியேறினாள்.

அவள் வெளியே வந்தவுடன் சாரதா சமையலறையில் தயாராகி இருந்த காபியை எடுத்துக் கொண்டு வந்து பிருந்தாவிடம் நீட்டினார். அவர் இது மாதிரி செய்தாலே அவர் இவளிடம் பேச விரும்புகிறார் என்று அர்த்தம்.

காபியைக் கையில் வாங்கிக் கொண்டே, ''தாங்க்ஸ் சித்தி. சொல்லுங்க... என்ன விஷயம்?'' என்று நேரடியாக விஷயத்தைக் கேட்டாள்.

''நான் இதுவரைக்கும் உன்னிடம் என் பையன் படிப்புக்கு மட்டும் தானே பணம் கேட்டு வாங்கி இருப்பேன்?'' என்று கேட்டார்.

'இப்போ எதுக்கு இப்படி ஒரு கேள்வி?' என்று வியந்தவளாக, ''ஆமா சித்தி. நீங்க கடந்த ஏழெட்டு வருஷமா வீட்டு செலவுக்கு மட்டும் தானே பணம் கேட்டு வாங்கியிருக்கீங்க. இப்போ திடீர்ன்னு எதுக்கு இப்படி ஒரு கேள்வி? ஓ! உங்களுக்கு எதுக்காவது பணம் தேவைப்படுதா? எவ்வளவு?'' என்று கேட்டாள்.

அவர் ஆயிரக் கணக்கில் ஏதோ கேட்கப் போகிறார் என்று பிருந்தா எண்ணியிருக்க...

சாரதாவோ, ''நீ நாலு வருஷம் முன்னாடி எனக்கு இந்த சொத்தில் பங்கு தரேன் என்று சொன்னாய் தானே? அது உண்மை தானே?'' என்று லட்சங்களுக்கு அடிப் போட்டார்.

''ஆமா சித்தி. நீங்க தானே என்னைப் பார்த்துக்கிறீங்க. எனக்கும் கூடப் பிறந்தவங்க யாருமில்லை. அதனால என் சொத்தில் மூன்றில் ஒரு பாகத்தை உங்க பையன் பேரிலே எழுதித் தரதா சொன்னேன்...'' என்று இழுத்து நிறுத்த,

''நீ சொன்னதை நானும் என் பையன் பிரகாஷிடம் சொல்லி இருந்தேன். அவன் ஒரு பொண்ணை லவ் பண்ணுறானாம். அந்தப் பொண்ணு வீடு பெரிய இடம். பொண்ணோட அப்பா மகேந்திரன் உன்னிடம் என்ன இருக்குன்னு என் பொண்ணைக் கட்டிக்க ஆசைப்படுற



என்று நம்ம பிரகாஷைப் பார்த்துக் கேட்டு இருக்கார். இவனும் நீ சொத்து தருவாய்ன்னு நம்பி தன் சொத்தா இந்த வீட்டையும், அவன் பார்த்துக்கிட்டு இருக்கிற டிபார்ட்மெண்டல் ஸ்டோரையும் சொல்லி இருக்கான்'' என்றார்.

'இது இரண்டையும் தான் நான் தருவேன் என்று எப்படி இவர்கள் நினைத்தார்கள்?' என்று பிருந்தாவிற்கு ஆச்சரியம் வந்தது.

இருந்தாலும் அவளுக்கு அந்த இரண்டையும் விட்டுத் தருவதில் எந்த நஷ்டமும் இல்லை. எப்படியும் தன்னால் டிபார்ட்மெண்டல் ஸ்டோரைப் பார்த்துக் கொள்ள முடியாது. அதை நிர்வகிக்கும் பிரகாஷே அதை எடுத்துக் கொள்வதால் அவனுக்குமே அது உதவியாக இருக்கும்.

பிருந்தா தன் பெற்றோர்களுடன் வாழ்ந்த வீடு இதுவல்ல. அவர்கள் மறைவிற்குப் பிறகு அங்கேயே தொடர்ந்து வசித்தால் அவளுக்கு அவர்களது நினைவு வந்து வாட்டும் என்ற காரணத்தால் தங்களுக்குச் சொந்தமான இந்த வீட்டிற்கு பிருந்தா மாறினாள். அதனால் இப்பொழுது குடியிருக்கும் இந்த வீடு குறித்து எந்த சென்டிமென்ட்டும் அவளுக்குக் கிடையாது. அதனால் அவர்கள் கேட்பதையே தந்துவிட்டுப் போகலாம் என்று பிருந்தாவிற்குத் தோன்றியது.

இன்னும் சொல்லப் போனால் தான் முடிவு செய்து வைத்திருந்த மூன்றில் ஒரு பாகம் என்பதைவிட அவர்கள் கேட்பது கம்மி தான் என்பதால் அவள் அவர்களின் பேச்சை ஆமோதிக்கும் விதமாய்,

''சரி சித்தி. நான் இதுவரை உங்களுக்கு எதைத் தருவது என்று தீர்மானிக்கவில்லை. ஆனாலும் நீங்கள் கேட்பதையே உங்களுக்குத் தரேன்'' என்றாள்.

''நல்லதுமா. ஆனால் பிரகாஷ் இது ரெண்டும் உன் பேரில் தான் இருக்கு என்ற உண்மையை அந்த மகேந்திரனிடம் சொல்லியிருப்பான் போல. அதனால அந்த மகேந்திரன் ரெண்டையும் உன் பேருக்கு மாத்திட்டு வந்து பொண்ணு கேளு. இல்லைன்னா வேற மாப்பிள்ளை பார்த்திடுவேன் என்று சொல்லி நம்ம பிரகாஷைத் திருப்பி அனுப்பி இருக்கார். நீ வக்கீல்கிட்டே சொல்லி அதை மாத்தித் தரியா?'' என்று கேள்வி எழுப்பினார்.

''சரி சித்தி. நான் குளிச்சிட்டுப் போய் வக்கீல் அங்கிளைப் பார்த்துப் பேசுறேன்'' என்று சொல்லி பிருந்தா தனது அறைக்குச் சென்று வெளியே செல்லத் தயாராக ஆரம்பித்தாள்.

அவள் குளித்து முடித்து சாப்பிட்டு நேரே தங்களது குடும்ப வக்கீலைப் பார்க்கச் சென்றாள். அவர் அவளது தந்தையின் நண்பருமாவார்.

''வாம்மா!'' என்று வரவேற்று தனது ஆபீஸ் அறையில் அவளை அமர வைத்தவர், ''என்ன சாப்பிடுகிறாய்?'' என்று உபசரிக்க ஆரம்பித்தார்.

''நான் சாப்பிட்டுவிட்டுத் தான் அங்கிள் வந்தேன்'' என்று தான் வந்த விஷயத்தை அவருக்கு விளக்க... அவர் ஒன்றும் கூறாது அவளை மேலிருந்து கீழ் வரைப் பார்வையிட்டார்.

''என்ன அங்கிள் இப்படிப் பார்க்குறீங்க? நான் ஏதாச்சும் தப்புப் பண்ணிட்டேனா?'' என்று அவள் தயக்கத்துடன் கேட்க,

''இல்லையா பின்னே? யாரைக் கேட்டு இப்படி ஒரு முடிவு எடுத்தாய்? நீ கொடுப்பதாச் சொன்ன சொத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமா?'' என்றார்.



''ப்ச்சு. எல்லாத்தையும் நானே வைச்சுக்கிட்டு என்ன அங்கிள் பண்ணப் போறேன்? அவங்க ரெண்டு பேரும் இல்லைன்னா நான் அநாதையாத் தான் தவிச்சிருக்கணும்.''

''அவங்க ஒண்ணும் அவங்க காசிலே உன்னை வளர்க்கலைமா. உன் காசிலே தான் அவங்களே இத்தனை நாளா காலம் தள்ளினாங்க.''

''அதனால இப்போ என்ன அங்கிள்? வயசு பொண்ணா இருந்துக்கிட்டு என்னால தனியா காலம் தள்ளி இருக்க முடியாது அங்கிள். அவங்க எனக்குப் பாதுகாப்பா... ஒரு அரண் மாதிரி இருந்து இருக்காங்க. பிரகாஷ் அண்ணன் இருப்பதால என்னை எந்தக் காலிப் பயலும் கிண்டல் பண்ணியதில்லை. அதனால் நானே தான் விருப்பப்பட்டு அவங்களுக்குச் சொத்துக் கொடுக்கிறதா சொன்னேன்.''

''எல்லாம் சரி பிருந்தா. ஆனால் நீ இப்படி தானம் பண்ணிடுவேன்னு தெரிஞ்சு தான் உங்க அப்பா உன்னோட சொத்தை உன்னால தனியா விற்க முடியாதுன்னு உயில் எழுதி வைச்சிட்டுப் போயிட்டான். உனக்குக் கல்யாணம் நடந்து உன் புருஷனும் கையெழுத்துப் போட்டால் தான்மா உன்னால சொத்தை விற்கவோ, வேற யாருக்கும் எழுதிக் கொடுக்கவோ முடியும். இந்தா உயில். படிச்சுப் பாரு!'' என்று அவள் பேச ஆரம்பித்ததுமே, அந்த உயிலைத் தேடி எடுத்தவர் அதை அவள் கைகளில் தர... பிருந்தா செய்வதறியாது திகைத்தாள்!

அவர் சொன்னபடி தான் உயிலில் எழுதி இருந்தது.

''வேற வழி எதுவும் இல்லையா அங்கிள்?'' என்று பிருந்தா கேட்க, அவர் உதட்டைப் பிதுக்கினார்.

அவரிடம் இருந்து விடைபெற்று ஒரு சோர்வுடன் அவள் தனது வீட்டினை அடைந்தாள். ஆவலே உருவாக சாரதா அவளை எதிர்கொண்டார்.

''என்னம்மா சொன்னார் வக்கீல்?''

''பேங்கில் இருக்கிற பணத்தைத் தான் சித்தி என்னால என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். மற்ற படி சொத்தை மாற்ற வேண்டும் என்றால் இப்போ முடியாதாம்'' என்று அவள் வருத்தத்துடன் மொழிய,

''ஏன்? ஏன் முடியாதாம்?'' என்று சாரதா ஒரு வேகத்துடன் கேட்டார்.

''எனக்குக் கல்யாணம் ஆன பின், என் கணவர் வந்து கையெழுத்துப் போட்டால் தான் செல்லுபடியாகுமாம். உயில் அப்படித் தான் சித்தி சொல்லுது.''

''ப்பூ இவ்வளவு தானா? பேசாமல் நீ கல்யாணம் பண்ணிக் கொள். உனக்கும் இருபத்தி மூணு வயசாகுது தானே?''

அவரது பேச்சில் அதிர்ந்தவளாக, ''என்ன சித்தி இப்படிச் சொல்லுறீங்க? நான் என் கல்யாணத்தைப் பற்றி யோசிச்சுக் கூடப் பார்த்ததில்லை'' என்றாள்.

''இத்தனை நாள் யோசிக்கலை என்றால் என்ன? இனிமேல் யோசி. இந்த வீட்டைப் பிரகாஷுக்குத் தரதா சொல்லியிருக்க... பிரகாஷுக்கு கல்யாணம் ஆனால் நீ இந்த வீட்டில் இருக்க முடியாது தானே?'' என்று சாரதா சொன்னதும்,

பிருந்தாவிற்குத் தன் வீட்டிலேயே தான் அந்நியப்பட்டது போல் அந்த நொடி தோன்றியது.

தன் பெற்றோர்கள் தனது நல்லதிற்குத் தான் இப்படி ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறார்கள் போல! எனக்குக் கல்யாணம் என்று ஒன்று நடந்து நான் என் கணவனுடன் சென்று விட்டால் அதற்குப் பின்பு இந்த வீடு இவர்கள் கைக்குப் போனால் பரவாயில்லை. இல்லாவிட்டால் இப்பவே என்னை வெளியே தள்ளிவிடுவாங்க போல! என்று எண்ணினாள்.



''மகேந்திரன் அவர் பொண்ணுக்கு அடுத்த மாசம் கல்யாணம் பண்ணனும் என்று சொல்லுறார். அதனால ஒரு மாசத்துக்குள் நீயும் யாலரையாவது கல்யாணம் பண்ணிக் கொள்!'' என்று போகுற போக்கில் சொல்லிக் கொண்டே சாரதா சென்று மறைந்தார்.

கல்யாணமா? அதுவும் ஒரு மாதத்திற்குள்ளா? நானே பண்ணிக்கணும் என்றால் எங்கே போய் மாப்பிள்ளை தேடுவேன். இந்த ஃபாஸ்ட் புட் காலத்தில் ரெடி ஃபுட்ஸ் என்று நிறைய இருப்பது போல் என்னைக் கல்யாணம் பண்ண மாப்பிள்ளைகள் தயாராக வரிசையில் காத்துக் கொண்டா இருக்கிறார்கள்? நான் அவர்களில் ஒருவரைத் தேர்வு செய்து கல்யாணம் பண்ணிக் கொள்ள!

பிருந்தாவிற்கு தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்தது.

இதற்கு என்ன தான் தீர்வு என்று யோசித்தவளுக்குப் 'பேசாமல் அந்த மகேந்திரனைச் சென்று சந்தித்து அவகாசம் கேட்டால் என்ன!' என்று தோன்றியது.

'சொத்து என்னோடது! அதை பிரகாஷும், அவனது மனைவியும் அனுபவிக்க நான் எந்தத் தடையும் சொல்லப் போவதில்லை. அதனால் எனக்குக் கல்யாணம் ஆன பின் சட்டப் பூர்வமாக மாற்றித் தருகிறேன் என்று கேட்டுப் பார்க்கலாமே!' என்று பிருந்தாவிற்குத் தோன்றியது.

அவள் தனது யோசனையை சாரதாவிடம் தெரிவிக்க...

''எனக்கு ஒண்ணும் இல்லைமா. அவர் ஒத்துக்கிட்டால் போதும். எனக்கு என் மகன் நல்ல நிலைமையில் வாழ்ந்தால் அதுவே போதும். ஒரு தாயா நான் அப்படி ஆசைப்படுவதில் தப்பு ஒன்றும் இல்லையே?'' என்று பிருந்தாவிடம் கேட்கவும்,

'இதற்கு என்னவென்று பதில் சொல்வது? அவர் நினைப்பது நியாயம் தானே!' என நினைத்தவளாய் தலையை மட்டும் அசைத்துவிட்டு அகன்றாள்.

சாரதாவிடம் அனுமதி வாங்கிய பின், பிருந்தா பிரகாஷின் மூலம் தான் மகேந்திரனைச் சந்திக்க விரும்புவதாகத் தகவல் தெரிவிக்கச் சொன்னாள்.

அவரது வீட்டிற்கு அவள் சென்ற பொழுது ஒரு இளைஞன் அவளை எதிர் கொண்டான்.

அவன் நவநாகரீகத்தின் மொத்த அடையாளமாய்த் திகழ்ந்தான். முரட்டு ஜீன்ஸ், காதுகளில் கடுக்கன், கரடுமுரடாக வளர்ந்த தாடி என்றிருந்தவன் வாயினில் பபிள்கம்மை மென்று கொண்டே பிருந்தாவை ஏற இறங்கப் பார்த்தான்.

அவன் பார்வையிலேயே தன்னைத் துகிலுரிவதைக் கண்டவள் கடுப்பானாள்.

''மிஸ்டர் மகேந்திரனைப் பார்க்கணும்...'' என்று பிருந்தா தயங்கி நிறுத்த,

''உள்ளே வாங்க. அப்பாவைக் கூப்பிடுறேன்'' என்று சொல்லி அவளுக்கு அலுவலக அறை ஒன்றிற்கு வழி காட்டினான்.

அவள் அங்கு சென்று அமர்ந்த சில நொடிகளில் மகேந்திரன் வந்து சேர்ந்தார்.



''வாம்மா! நீ தான் பிரகாஷோட ஒண்ணு விட்ட தங்கச்சியா?'' என்று வரவேற்றவர், ''சொல்லுமா? என்ன விஷயம்? என்னிடம் என்ன சொல்ல ஆசைப்பட்டாய்?'' என்று கேட்டார்.

''நீங்க பிரகாஷ் பேருக்குச் சொத்து மாறின பிறகு தான் உங்க பொண்ணை, பிரகாஷுக்குக் கல்யாணம் பண்ணித் தரதா சொன்னீங்களாம். அந்த வீடும், டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோரும் அண்ணனுக்குத் தான். அதுக்கு நான் கியாரண்டி. இப்பத் தான் எங்க வக்கீல் அங்கிளை கன்சல்ட் பண்ணினேன். என் கணவர் கையெழுத்துப் போட்டால் தான் சொத்தை விற்கவோ, மாற்றவோ முடியுமாம். அதனால் இப்போ உடனடியா என்னால மாத்தித் தர முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். நான் கண்டிப்பா என் கல்யாணத்திற்குப் பிறகு அந்த சொத்தை பிரகாஷுக்கு எழுதித் தருவேன். நீங்க என் பேரிலே நம்பிக்கை வைச்சு இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கணும்.''

''உன்னையே எனக்குத் தெரியாது. உன்னை நம்புறதா வேண்டாமான்னே நான் யோசிக்கணும். இதுல உன் வருங்காலப் புருஷன் சொத்தை எழுதித் தருவான் என்று நான் எப்படிமா நம்ப முடியும்? நான் வியாபாரி மா. எதையுமே சட்டப் பூர்வமா... பத்திரமா இருந்தால் தான் நம்புவேன்...'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவரது மகன் உள்ளே நுழைந்தான்.

வந்தவன், ''அப்பா எனக்குப் பணம் வேணும்'' என்றான்.

''எதுக்கு மூர்த்தி?'' என்றார்.

இந்தத் தறுதலைக்குப் பேரு மூர்த்தியா?!' என்று பிருந்தா மனதினுள் கிட்டிக் கொண்டாள்.

''சென்னையில் டிஸ்கோதேக்குப் போறேன் டாட். அதுக்குத் தான் பணம் வேணும்.''

''நைட் தானே போகணும். அதுக்கு எதுக்கு இப்பவே கிளம்பிட்டே?''

''வெறும் டிஸ்கோதே மட்டும் போவாங்களா? கேர்ள் பிரண்டோட மஜாவா இருக்க வேண்டாமா?'' என்றதும்,

''சரி என்னவோ பண்ணித் தொலை!'' என்று அவனிடம் கத்தைப் பணத்தை நீட்டினார்.

பார்த்துக் கொண்டிருந்த பிருந்தா, 'நல்ல குடும்பம்டா இது!' என்று எண்ணிக் கொண்டாள்.

பிள்ளை வார நாளில் வேலை வெட்டியைப் பார்க்காமல் பாண்டிச்சேரியில் இருந்து கூத்தடிக்கச் சென்னை செல்கிறான். அதுக்கு அவன் அப்பாவும் பணத்தைக் கொடுத்து அனுப்பி வைக்கிறார். இப்படி ஒரு வீட்டிலா இந்த பிரகாஷ் அண்ணன் பெண் எடுக்க நினைக்கிறார்?!

இவங்க ரெண்டு பேரும் இப்படி இருக்கிறாங்க... அந்தப் பெண்ணு எப்படி இருப்பாளோ? என்று நினைத்துப் பார்க்கும் பொழுதே பிருந்தாவிற்கு பிரகாஷ் மீது பரிதாபம் தோன்றியது.

பிருந்தாவைப் பார்த்த மூர்த்தி தன் தகப்பனின் காதில் கிசுகிசுத்துவிட்டு அகன்றான்.

அவன் சென்றதும் மகேந்திரன் பிருந்தாவைப் பார்த்து, ''என் பையனுக்கு உன்னைப் பிடிச்சிருக்காம். பேசாமல் நீ அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள். இந்தச் சொத்துப் பிரச்சனையும் சரியாகிவிடும். ரெண்டு கல்யாணத்தையும் ஒரே மேடையிலே நடத்திடலாம். நீ என்ன சொல்கிறாய்?'' என்று அவள் தலை மேல் இடியை இறக்கினார். பிருந்தா அதிர்ந்து விழித்தாள்!



'கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தான் பிரகாஷ் அண்ணன் பவம். இந்த வீட்டில் வந்து மாட்டிக்கப் போறாரேன்னு நினைச்சேன். அந்த நிலைமை எனக்கா? நான் இந்தத் தறுதலையைக் கல்யாணம் பண்ணுவதுக்குப் பதிலா தண்டவாளத்திலே தலையைக் கொடுத்திடலாம்' என்று அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

தனது ஆத்திரத்தை வெளியே காட்டாது, ''உங்க பையனுக்குத் தான் கேர்ள் பிரண்ட் இருப்பதா சொன்னாரே சார். பின்னே எப்படி என்னிடம் இப்படி ஒரு கேள்வி கேட்குறீங்க?'' என்றதும்,

''அதெல்லாம் கூத்தடிக்கத் தான்மா சரியா வரும். குடும்பம் நடத்தச் சரிப்படுமா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

அவரது சிரிப்பைக் கண்ட பிருந்தா, 'நல்ல அப்பா! நல்ல பிள்ளை!' என எண்ணியவளாய் இருக்கையில் இருந்து எழுந்து, ''நான் கிளம்புறேன் சார்'' என்று தன் இரு கரம் கூப்பி வணங்கி விடைபெற்றாள்.

'எங்கே போய் விடப் போகிறாள்! பிரகாஷுக்கு பிரஷர் கொடுத்தால் போச்சு!' என நினைத்துக் கொண்டவர் பிருந்தாவிடம் வேறெதுவும் கேட்காமல் இன்முகமாகவே விடை கொடுத்தார்.



## 3



மிதமிஞ்சிய கடுப்பில் பிருந்தா வீடு வந்து சேர்ந்தாள்.

மதியச் சாப்பாட்டிற்கு பிரகாஷ் வீட்டிற்கு வந்திருந்தான். அவன் பிருந்தாவிடம் நடந்ததைக் கேட்டறிந்தான்.

"நீ அந்த மூர்த்தியைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்சியா என்ன?" என்று பிரகாஷ் கேள்வி எழுப்பினான்.

"இல்லைண்ணா. நான் எதுவும் அது மாதிரி சொல்லலை."

"அவர் அவ்வளவு நல்லவர் இல்லை பிருந்தா" என்று பிரகாஷ் சொல்லவும்,

அருகே நின்று கேட்டுக் கொண்டிருந்த சாரதா, "ஒரு கால்கட்டுப் போட்டால் அடங்காத காளையைக் கூட அடக்கிவிடலாம்டா பிரகாஷ். நீ ஏதாவது பேசி அவளைக் குழப்பாதே!" என்று பிரகாஷின் பேச்சிற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

சாரதா சமையலறை நோக்கிச் சென்றதும் பிரகாஷ் அவரைப் பின் தொடர்ந்து போனான்.

"ஏன்மா என்னைப் பேசவிடாமல் தடுத்தீங்க. அந்த மூர்த்தி ஊர் சுத்தத் தான் மா லாயக்கு. அவனிடம் எல்லாக் கெட்ட பழக்கமும் இருக்கு. அதான் அவளை எச்சரிக்கலாம்ன்னு பார்த்தேன்."

மகனது பேச்சைக் கேட்டுக் கடுப்பாகிப் போன சாரதா, "உனக்கு அந்த மகேந்திரன் பொண்ணு வேணுமா வேணாமா?" என்று கேட்டார்.

"இது என்னமா கேள்வி. எனக்குக் கல்யாணம் என்று ஒன்று நடந்தால் அது அவ கூடத் தான் என்பதில் நான் உறுதியா இருக்கேன்."

"அப்படின்னா நீ உன் வாயை மூடிக்கிட்டு சும்மா இரு. அந்த மகேந்திரனோ உனக்கு ஒரு மாசம் தான் கெடு



கொடுத்திருக்கார். இவளுக்கு அதுக்குள்ளே எங்க போய் நாம மாப்பிள்ளையைப் பிடிக்க? அப்படியே பிடிச்சாலும் சொத்தை உனக்கு விட்டுத் தர அவன் சம்மதிக்கணுமே! இதெல்லாம் நடக்குற காரியமா? அந்த மகேந்திரன் சொன்ன யோசனைப்படி நடந்தால் தான் உன் கல்யாணம் எந்தச் சிக்கலும் இல்லாமல் நடக்கும்" என்றதும்,

"ம்ம்ம்... சரி மா!" என்றான் பிரகாஷ்.

சமையலறை வாயிலில் இதைக் கேட்டுக் கொண்டிருந்த பிருந்தா தான் வந்த சுவடு தெரியாமல் திரும்ப எத்தனிக்க... அதற்குள் சாரதாவும், பிரகாஷும் அவளைப் பார்த்து விட்டனர்.

பிரகாஷ் ஒன்றும் சொல்லாது வீட்டை விட்டு வெளியேறினான்.

சாரதா பிருந்தாவிடம், "எனக்கு உன்னை ஏழெட்டு வருஷமா பக்கத்தில் இருந்து வளர்த்த பாசம் இருக்கு. இல்லைன்னு சொல்லலை. ஆனால் என் முன்னால உனக்கு பிருந்தா முக்கியமா இல்லை பிரகாஷ் முக்கியமா என்ற கேள்வி எழுந்தால் நான் கண்டிப்பா என் பையன் என்று தான் சொல்லுவேன்.

நான் உன்னை அந்த மூர்த்தியைக் கல்யாணம் பண்ணித் தான் ஆகணும் என்று சொல்ல மாட்டேன். ஒரு மாசத்துக்குள்ளே நீ யாரை வேண்டுமானாலும் கல்யாணம் பண்ணிக்கோ. அப்படி முடியாத பட்சத்தில் நீ மகேந்திரன் பையனைக் கல்யாணம் பண்ணிக் கொள். உன் சொத்தை நாங்க ஒண்ணும் அபகரிக்கலை. ஆனா நீ தான் எங்களுக்குச் சொத்துத் தரதா வாக்குக் கொடுத்தாய். அந்த வாக்கைக் காப்பாத்தறதோ இல்லைக் கண்

டுக்காமல் போறதோ உன் விருப்பம். உன் மனசாட்சி படி நடந்துக்கோ.

இப்பக் கூட நீ எங்க மேலே போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து எங்களை வெளியேத்த நினைக்கலாம். அப்படி நாங்க வெளியேறினால் உனக்கு என்ன பாதுகாப்பு என்பது பற்றியும் யோசிச்சுக்கோ. நாங்க வெளியேறிய பின் மூர்த்தி மாதிரி எத்தனை ஆளுங்களை நீ சமாளிக்க வேண்டி இருக்கும் என்று யோசிச்சுப் பாரு. நான் உன்னை மிரட்டலை. நிதர்சனத்தைச் சொன்னேன். நான் காரெக்டர் ஆர்ட்டிஸ்ட்டா இல்லை வில்லியா என்பது உன் கையில் தான் இருக்கு'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

'மனிதர்கள் இப்படிக் கூடவா இருப்பார்கள்? 'தான்' என்று வந்து விட்டால் இந்த அளவிற்கு நிறம் மாறுவார்களா?! இல்லை இவர்களது இயல்பே இது தானா?! இவர்கள் எப்பொழுதுமே சுயநலமானவர்கள் தானா? சாந்தி சொல்வது போல் அவளை எல்லாம் சித்தி தள்ளி தான் நிறுத்தி இருப்பார்களோ? அப்படிப் பார்த்தால் இவர்கள் நிலைமை சாந்தியையும் விடக் கீழானது தானே?! சாந்தி வீட்டினர் தங்களது செலவிற்கு பிறரை எதிர்பார்க்கும் சூழ்நிலையில் இல்லையே! சித்தி இந்த வீட்டிற்கு வரும்போது என்ன கொண்டு வந்தார்? இப்பொழுதாவது "பிரகாஷ் அண்ணா கடையைப் பார்த்துக் கொள்கிறான். சம்பாத்தியம் உண்டு. ஆனால் அன்று...' என்று எண்ணிப் பார்த்த பிருந்தாவிற்கு வருத்தமாக இருந்தது.

பேசாமல் இவர்களை வெளியேற்றிவிட்டு நாம் போய் ப்ரியா வீட்டில் தங்கிக் கொள்வோமா என நினைத்தாள்.



அப்படி நினைத்த நொடி பிருந்தாவிற்கு ப்ரியாவின் அம்மா தான் கண் முன்னே வந்தார். அவளது வீட்டில் அவள் அம்மா ஒரு மாதிரி. அவருக்கு பிடித்தவர்களிடம் மட்டும் தான் நன்றாகப் பேசுவார். மீதி பேர்களிடம் முகம் திருப்பிக் கொள்வார். முதலில் இருந்தே என்ன காரணமோ அவருக்குப் பிருந்தாவைப் பிடிக்காது. அதனால் தன்னால் அங்கே செல்ல முடியாது என்று முடிவெடுத்தாள்.

அடுத்தது வக்கீல் அங்கிள்... வக்கீல் அங்கிளின் வீட்டிற்குச் செல்லலாம் என்றால் அங்கே அவருக்கு வளர்ந்த இரணடு மகன்கள் இருக்கிறார்கள். அங்கேயும் செல்ல முடியாத சூழ்நிலை.

மிஞ்சி இருப்பது சாந்தி. அவள் ப்ரியா அளவிற்கு நெருங்கிய தோழி இல்லை. அவள் வீட்டிற்குச் செல்ல முடியாததற்கு அது மட்டுமே காரணம் அல்ல. அவளுக்கு அப்பா கிடையாது. ஆண் துணை இல்லாமல் அவள் அம்மாவோ சாந்தியையும் அவள் தங்கையையும் வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இதிலே மூர்த்தி மாதிரி ஒரு ஆணால் பிரச்சனை என்று சொல்லிக் கொண்டு அங்கே செல்ல முடியாதே. அது மற்ற இரு பெண்களுக்கும் ஆபத்தாய் முடிந்தால்...

என்ன செய்வது? இந்தப் பிரச்சனைக்கு என்ன தான் தீர்வு? என்று யோசித்த பிருந்தாவிற்கு மூச்சு முட்டியது.

தனது நெருங்கிய தோழி ப்ரியாவிற்கு போன் செய்தாள்.

''ஹே பிருந்தா எப்படி இருக்க?''

''ப்ரியா நான் நல்லா இருக்கேன். ஆனால் என் மூடு தான் சரியில்லை. உன் கூடக் கொஞ்சம் பேசணும்.''

"என்ன ஆச்சு பிருந்தா? சரி நாம சாயங்காலம் பீச்சிலே மீட் பண்ணுவோம். சரியா அஞ்சு மணிக்கு வந்துவிடு" என்று சொல்லி ப்ரியா அழைப்பைத் துண்டித்தாள்.

பிருந்தா மாலை ஐந்து மணிக்குத் தன் தோழியைக் கடற்கரையில் சந்தித்தாள்.

பார்த்தவுடனே பிருந்தாவின் சோர்வு கண்ணில் பட அவளை ஒன்றும் கேட்காத ப்ரியா அவளது கையை அழுத்திக் கொடுத்தவாறே அவளைத் தண்ணீருக்கு அருகே அழைத்துச் சென்றாள்.

சிறிது நேரம் தண்ணீரில் கால் நனைய நின்றவர்கள் கரைக்குத் திரும்பி ஒரு படகின் அருகே சென்று அமர்ந்தார்கள்.

"இப்பச் சொல்லு பிருந்தா? என்ன உன் பிரச்சனை?" என்று கேட்டவுடன் நடந்தது அனைத்தையும் பிருந்தா சொன்னாள்.

அதைக் கேட்டு ப்ரியா அதிர்ந்தாள்!

"வாட்? அவங்களுக்கு சொத்து வரணும் என்பதற்காக வெட்டிப் பயல்ன்னு தெரிஞ்ச ஒருத்தனை உன்னைக் கட்டிக்கச் சொல்லுறாங்களா? இதே அவங்க பெத்த பொண்ணா இருந்தா இப்படிச் சொல்லுவாங்களா? உனக்கு சப்போர்ட்டுக்கு ஆள் இல்லைன்னு நினைச்சுட்டாங்களா? பேசாமல் அவங்க ரெண்டு பேர் மேலேயும் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து உள்ளே வை. அப்பத்தான் அடங்குவாங்க" என்று சொன்ன ப்ரியாவைப் பார்த்து ஒரு விரக்தியான முறுவலை உதிர்த்த பிருந்தா,

"நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன். நன்றி மறக்க மாட்டேன் என்கிற தைரியம் தானே அவங்



"அப்படின்னா இதுக்கு என்ன தான் முடிவு பிருந்

"தெரியலை. நான் கும்பிடுற பெருமாள் தான்
னைக் காப்பாத்தணும்!" என்று பெருமூச்சு விட்டா

"எனக்கு ஒரு விஷயம் புரியலை பிருந்தா... உ
அப்பாவும், அம்மாவும் ரோட் ஆக்ஸிடெண்ட்டிலே ந
இறந்தாங்க. அப்படின்னா இந்த உயில் எங்கே இ
முளைச்சது?"

"எங்கப்பாவுக்கு ஜோஸியத்தில் அதீத நம்பிக்
அவருக்கு ஒரு ஆஸ்தான ஜோதிடர் இருந்தார். அ
சொல்லுற எல்லாமே எங்க அப்பா வாழ்க்கையி
பலிச்சிருக்கு. இந்த ஆக்ஸிடெண்ட் உட்பட அத
தான் அப்பா சொத்தைக் காவல் காக்குற பொறுப்
வக்கீல் அங்கிளிடம் கொடுத்து விட்டு இப்படி
உயிலும் எழுதி இருக்கிறார்."

"ஆனா அவர் எழுதின உயில் உன் எதிர்காலத்
கேள்விக் குறி ஆக்கிடும் போலவே!" என்று ப்
வருத்தம் கொள்ளவும்,

"ப்ச்சு. இது நானா இழுத்து விட்டுக்கிட்டது. அவ
குறை சொல்லாதே! எங்கப்பா என் கல்யாண
யத்தைக் கூட ஜோசியரிடம் கேட்டுச் சொல்லி இரு
விஷ்ணு பெயர் உடையவர் தான் எனக்குக் கண
வருவாராம்!" என்று பிருந்தா சொல்ல... அவளை ப
இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சொத்தைப் பாதுகாக்க நினைச்ச உங்கப்பா
விட பெரிய சொத்தான உன்னையும் பாதுகாக்க
நல்ல ஆளா பிடிச்சு இருக்கலாம் தானே?!"

"ம்ம்ம் அப்படி ஒருத்தர் இருந்திருந்தா அ
செய்யாமலா போயிருப்பார். ரெண்டு பக்கமும்

டுக்காமல் போறதோ உன் விருப்பம். உன் மனசாட்சி படி நடந்துக்கோ.

இப்பக் கூட நீ எங்க மேலே போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து எங்களை வெளியேத்த நினைக்கலாம். அப்படி நாங்க வெளியேறினால் உனக்கு என்ன பாதுகாப்பு என்பது பற்றியும் யோசிச்சுக்கோ. நாங்க வெளியேறிய பின் மூர்த்தி மாதிரி எத்தனை ஆளுங்களை நீ சமாளிக்க வேண்டி இருக்கும் என்று யோசிச்சுப் பாரு. நான் உன்னை மிரட்டலை. நிதர்சனத்தைச் சொன்னேன். நான் காரெக்டர் ஆர்ட்டிஸ்ட்டா இல்லை வில்லியா என்பது உன் கையில் தான் இருக்கு'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

'மனிதர்கள் இப்படிக் கூடவா இருப்பார்கள்? 'தான்' என்று வந்து விட்டால் இந்த அளவிற்கு நிறம் மாறுவார்களா?! இல்லை இவர்களது இயல்பே இது தானா?! இவர்கள் எப்பொழுதுமே சுயநலமானவர்கள் தானா? சாந்தி சொல்வது போல் அவளை எல்லாம் சித்தி தள்ளி தான் நிறுத்தி இருப்பார்களோ? அப்படிப் பார்த்தால் இவர்கள் நிலைமை சாந்தியையும் விடக் கீழானது தானே?! சாந்தி வீட்டினர் தங்களது செலவிற்கு பிறரை எதிர்பார்க்கும் சூழ்நிலையில் இல்லையே! சித்தி இந்த வீட்டிற்கு வரும்போது என்ன கொண்டு வந்தார்? இப்பொழுதாவது "பிரகாஷ் அண்ணா கடையைப் பார்த்துக் கொள்கிறான். சம்பாத்தியம் உண்டு. ஆனால் அன்று...' என்று எண்ணிப் பார்த்த பிருந்தாவிற்கு வருத்தமாக இருந்தது.

பேசாமல் இவர்களை வெளியேற்றிவிட்டு நாம் போய் ப்ரியா வீட்டில் தங்கிக் கொள்வோமா என நினைத்தாள்.



அப்படி நினைத்த நொடி பிருந்தாவிற்கு ப்ரியாவின் அம்மா தான் கண் முன்னே வந்தார். அவளது வீட்டில் அவள் அம்மா ஒரு மாதிரி. அவருக்கு பிடித்தவர்களிடம் மட்டும் தான் நன்றாகப் பேசுவார். மீதி பேர்களிடம் முகம் திருப்பிக் கொள்வார். முதலில் இருந்தே என்ன காரணமோ அவருக்குப் பிருந்தாவைப் பிடிக்காது. அதனால் தன்னால் அங்கே செல்ல முடியாது என்று முடிவெடுத்தாள்.

அடுத்தது வக்கீல் அங்கிள்... வக்கீல் அங்கிளின் வீட்டிற்குச் செல்லலாம் என்றால் அங்கே அவருக்கு வளர்ந்த இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். அங்கேயும் செல்ல முடியாத சூழ்நிலை.

மிஞ்சி இருப்பது சாந்தி. அவள் ப்ரியா அளவிற்கு நெருங்கிய தோழி இல்லை. அவள் வீட்டிற்குச் செல்ல முடியாததற்கு அது மட்டுமே காரணம் அல்ல. அவளுக்கு அப்பா கிடையாது. ஆண் துணை இல்லாமல் அவள் அம்மாவோ சாந்தியையும் அவள் தங்கையையும் வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இதிலே மூர்த்தி மாதிரி ஒரு ஆணால் பிரச்சனை என்று சொல்லிக் கொண்டு அங்கே செல்ல முடியாதே. அது மற்ற இரு பெண்களுக்கும் ஆபத்தாய் முடிந்தால்...

என்ன செய்வது? இந்தப் பிரச்சனைக்கு என்ன தான் தீர்வு? என்று யோசித்த பிருந்தாவிற்கு மூச்சு முட்டியது.

தனது நெருங்கிய தோழி ப்ரியாவிற்கு போன் செய்தாள்.

''ஹே பிருந்தா எப்படி இருக்க?''

''ப்ரியா நான் நல்லா இருக்கேன். ஆனால் என் மூடு தான் சரியில்லை. உன் கூடக் கொஞ்சம் பேசணும்.''

"என்ன ஆச்சு பிருந்தா? சரி நாம சாயங்காலம் பீச்சிலே மீட் பண்ணுவோம். சரியா அஞ்சு மணிக்கு வந்துவிடு" என்று சொல்லி ப்ரியா அழைப்பைத் துண்டித்தாள்.

பிருந்தா மாலை ஐந்து மணிக்குத் தன் தோழியைக் கடற்கரையில் சந்தித்தாள்.

பார்த்தவுடனே பிருந்தாவின் சோர்வு கண்ணில் பட அவளை ஒன்றும் கேட்காத ப்ரியா அவளது கையை அழுத்திக் கொடுத்தவாறே அவளைத் தண்ணீருக்கு அருகே அழைத்துச் சென்றாள்.

சிறிது நேரம் தண்ணீரில் கால் நனைய நின்றவர்கள் கரைக்குத் திரும்பி ஒரு படகின் அருகே சென்று அமர்ந்தார்கள்.

"இப்பச் சொல்லு பிருந்தா? என்ன உன் பிரச்சனை?" என்று கேட்டவுடன் நடந்தது அனைத்தையும் பிருந்தா சொன்னாள்.

அதைக் கேட்டு ப்ரியா அதிர்ந்தாள்!

"வாட்? அவங்களுக்கு சொத்து வரணும் என்பதற்காக வெட்டிப் பயல்னு தெரிஞ்ச ஒருத்தனை உன்னைக் கட்டிக்கச் சொல்லுறாங்களா? இதே அவங்க பெத்த பொண்ணா இருந்தா இப்படிச் சொல்லுவாங்களா? உனக்கு சப்போர்ட்டுக்கு ஆள் இல்லைன்னு நினைச்சுட்டாங்களா? பேசாமல் அவங்க ரெண்டு பேர் மேலேயும் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து உள்ளே வை. அப்பத்தான் அடங்குவாங்க" என்று சொன்ன ப்ரியாவைப் பார்த்து ஒரு விரக்தியான முறுவலை உதிர்த்த பிருந்தா,

"நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன். நன்றி மறக்க மாட்டேன் என்கிற தைரியம் தானே அவங்களுக்கு" என்றாள்.



"அப்படின்னா இதுக்கு என்ன தான் முடிவு பிருந்தா?"

"தெரியலை. நான் கும்பிடுற பெருமாள் தான் என்னைக் காப்பாத்தணும்!" என்று பெருமூச்சு விட்டாள்.

"எனக்கு ஒரு விஷயம் புரியலை பிருந்தா... உங்க அப்பாவும், அம்மாவும் ரோட் ஆக்ஸிடென்ட்டிலே தானே இறந்தாங்க. அப்படின்னா இந்த உயில் எங்கே இருந்து முளைச்சது?"

"எங்கப்பாவுக்கு ஜோஸியத்தில் அதீத நம்பிக்கை. அவருக்கு ஒரு ஆஸ்தான ஜோதிடர் இருந்தார். அவர் சொல்லுற எல்லாமே எங்க அப்பா வாழ்க்கையிலே பலிச்சிருக்கு. இந்த ஆக்ஸிடென்ட் உட்பட. அதனால் தான் அப்பா சொத்தைக் காவல் காக்குற பொறுப்பை வக்கீல் அங்கிளிடம் கொடுத்து விட்டு இப்படி ஒரு உயிலும் எழுதி இருக்கிறார்."

"ஆனா அவர் எழுதின உயில் உன் எதிர்காலத்தைக் கேள்விக் குறி ஆக்கிடும் போலவே!" என்று ப்ரியா வருத்தம் கொள்ளவும்,

"ப்ச்சு. இது நானா இழுத்து விட்டுக்கிட்டது. அவரைக் குறை சொல்லாதே! எங்கப்பா என் கல்யாண விஷயத்தைக் கூட ஜோசியரிடம் கேட்டுச் சொல்லி இருக்கார். விஷ்ணு பெயர் உடையவர் தான் எனக்குக் கணவரா வருவாராம்!" என்று பிருந்தா சொல்ல... அவளை ப்ரியா இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சொத்தைப் பாதுகாக்க நினைச்ச உங்கப்பா அதைவிட பெரிய சொத்தான உன்னையும் பாதுகாக்க ஒரு நல்ல ஆளா பிடிச்சு இருக்கலாம் தானே?!"

"ம்ம்ம் அப்படி ஒருந்தர் இருந்திருந்தா அதைச் செய்யாமலா போயிருப்பார். ரெண்டு பக்கமும் வேற

சொந்தம் இல்லை என்பதால் தான் இந்த சித்தி கூட மட்டும் அவர் தொடர்பு வைச்சுக்கிட்டே இருந்து இருக்கார். இத்தனை நாளா எந்தப் பிரச்சனையும் இல்லாமல் தானே இருந்தது. ம்ம்ம் பார்ப்போம். வருங்காலம் எனக்கு என்ன தரக் காத்திருக்கு என்று!''

ப்ரியா எதுவும் போது அமைதி காத்தாள்.

திடீரென நினைவு வந்தவளாக பிருந்தா, ''ஹேய்! நீ நாளைக்கு அதிகாலையிலேயே கிளம்பி ஃபாரின் டூர் போகப் போறே தானே! எல்லாத்தையும் பேக் பண்ணிட்டியா?'' என்று கேட்டாள்.

''ப்ச்சு! எனக்கு உன்னை இந்த நிலைமையில் விட்டுப் போக மனசே வரலை பிருந்தா. நான் வேணா போகாமல் இருந்து விடட்டுமா?'' என்று கேட்டாள்.

குடும்பத்தோடு செல்லும் வெளிநாட்டு பயணத்திற்கு ப்ரியா வரவில்லை என்று சொன்னால் அவளது அம்மாவிற்குக் கோபம் வரும் என்பதை உணர்ந்த பிருந்தா,

''சே! சே! எனக்கு ஒண்ணும் ஆகாது ப்ரியா. இருபது நாள் தானே! நீ போயிட்டு வா. வக்கீல் அங்கிள் வேற துணை இருப்பார். ஏதாச்சும் ஹெல்ப் வேணும் என்றால் நான் அவரைக் கேட்டுக்கிறேன். நீ பயப்படாமல் சந்தோஷமா டூரை என்ஜாய் பண்ணிட்டு வா!'' என்றாள்.

பிருந்தாவின் சமாளிப்பு ப்ரியாவை சமாதானப்படுத்தவில்லை. அவளை சகஜமாக்குவதற்காக பிருந்தா பேச்சைத் திசை திருப்பினாள்.

''ஹேய் ப்ரியா! என் ஃபேவரைட் ஹீரோ படம் ரிலீஸ் ஆகி இருக்கு. நாளைக்கு நான் நம்ம சாந்தி கூடப் போய் பார்க்கப் போகிறேன். ஏற்கனவே அவ டிக்கெட்



எடுத்துட்டாள். ஆனா ஒண்ணு பாதி நாள் தியேட்டருக்கு கடைசி நிமிஷத்திலே வராமல் ஏதாச்சும் காரணம் சொல்லி சொதப்புவாள். அது தான் அவகிட்டே இருக்கு ஒரு தொல்லை பிடிச்ச விஷயம்.''

''அப்புறம் ஏன் அவ கூடப் போகிறாய்?''

''வேற வழி. நீ இருந்தால் உன் கூடப் போகலாம். எனக்கு முடிக்க வேண்டிய வேலை எதுவும் இல்லை. அப்புறம் வீட்டில் இருந்தால் போர் அடிக்குமே!'

வீட்டிலே இருந்து கொண்டு சித்தி முகத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கப் பிடிக்கவில்லை என்று பிருந்தா சொல்ல நினைத்தாள். ஆனால் ப்ரியா வருத்தப் படுவாள் என்று சொல்லாமல் மறைத்தாள்.

''வேலைன்னு சொன்னதும் தான் ஞாபகம் வருது. உன் ஃபேவரைட் புளூ கலர் சுடிதாரில் எம்பிராய்டரி போட ஆரம்பிச்சியே! அதை முடிச்சிட்டியா?'' என்று கேட்டுக் கொண்டே ப்ரியா அங்கிருந்து நகர, பிருந்தாவும் அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டே இணைந்து நடந்தாள்.



## 4



மறுநாள் பிருந்தா படம் பார்க்க தியேட்டர் போனாள்.

வழக்கம் போல் சாந்தியைக் காணாது அவளது கைப் பேசிக்கு முயற்சித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவளோ அதை எடுத்துப் பேசவில்லை.

அப்பொழுது, ''ஹலோ யாருக்காக வெயிட் பண்ணு றீங்க? உங்க பிரண்டுக்கா?'' என்று தன்னருகில் வந்து நின்று தன்னிடம் கேள்வி கேட்ட அந்த இளைஞனை பிருந்தா ஒரு அந்நியப் பார்வை பார்த்தாள்.

அவள் பதிலொன்றும் சொல்லாது அமைதி காக்க... அவனே தொடர்ந்து பேசினான்.

''பாய் பிரண்டா? கேர்ள் பிரண்டா? ஓ! நீங்க என் னோட முதல் கேள்விக்கே பதில் சொல்லலை தானே? அப்படின்னா இதுக்கும் பதில் சொல்ல மாட்டீங்க. அப்ப சரி நான் என்னைப் பற்றிச் சொல்லுறேன். கேளுங்க. என்னங்க சொல்லவா?'' என்று அவன் கேட்டதும்,

'இவன் என்ன லூசா?!' என்பது போல் பிருந்தா அவனைப் பார்த்தாள்.

''ஓ! நான் என்ன என் காதைப் பஞ்சு வைச்சா அடைச் சிருக்கேன் என்று கேட்குறீங்களா? அதுவும் சரிதான். நான் என் பிரண்டுக்காக வந்தேங்க. பையன் தான். கேர்ள் பிரண்டு எல்லாம் இல்லைங்க. நான் ரொம்ப நல்ல பையனாக்கும். என்று சொன்னதும்,

'நான் இவனைக் கேட்டேனா!' என்று பிருந்தா மனதில் நினைத்துக் கொண்டாள்.

''சினிமாக்கு வரேன்னு சொல்லிட்டு கடைசி நிமி ஷத்திலே கேன்சல் பண்ணிட்டான். இப்போ என்கிட்டே ஒரு டிக்கெட் எக்ஸ்டிராவா இருக்கு. உங்களுக்கு வேணுமா? ஹேய்! நான் ஒண்ணும் பிளாக் டிக்கெட் விக்குற ஆள் இல்லை. நீங்க டிக்கெட் விலை... அதாங்க நூறு ரூபா கொடுத்தால் போதும்'' என்று அவன் சொன்னதும் பேசாமல் அவனிடம் டிக்கெட்டை வாங்கிப் படத்தைப்



பார்த்துவிட்டுச் செல்வோமா என்று பிருந்தா நினைக்க ஆரம்பித்தாள்.

''என்னங்க அதே விலைன்னா வேண்டாமா? கொஞ்சம் குறைச்சுக் கொடுக்கவா? சரி தொண்ணூற்று ஒன்பது ரூபா கொடுங்க. அப்படிச் சில்லரையா கொடுக்க முடியலைன்னா நீங்க நூறு ரூபா கொடுங்க. நான் ஒரு ரூபாய் சில்லரை கொடுக்கிறேன்.''

'என்ன ஒரு தாராளம்!' என்பது போல் பார்த்தாள்.

''என்ன வேண்டாமா? சரி ஒரு எண்பது ரூபா தரீங்களா? இந்த டிக்கெட்டை வாங்கினால் இவன் பக்கத்திலே உட்கார வேண்டி வருமேன்னு யோசிக்குறீங் களா? நான் நல்ல பையன்ங்க. நான் இவனுக்கு 100 சதவிகிதம் கியாரண்டி தரேன். என்னடா இவனே இவனுக்கு கியாரண்டி தரானேன்னு பார்க்குறீங்களா? வேறே வழி? எனக்குத் தெரிஞ்சவங்க யாராச்சும் இங்க இருந்தால் அவங்களை விட்டுச் சொல்லச் சொல்லலாம். ஆனா யாரும் இங்கே இல்லையே. அப்போ நானே தானே என் புகழைப் பாடிக்கணும்'' என்றான்.

'சரியான செல்ப் டப்பா' என்று நினைத்தவள் ஒரு வழியாக அந்த டிக்கெட்டை வாங்கிக் கொண்டு அவ னிடம் நூறு ரூபாயைக் கொடுத்தாள்.

''ஓ! புல் பேமண்ட் பண்ணிட்டீங்களா? நான் கூட நீங்க இன்ஸ்டால்மென்ட்டிலே பே பண்ணுவீங்க ளோன்னு நினைச்சேன். தாங்க் யூ!'' என்று சொல்லி அவளிடம் இருந்து பணத்தைப் பெற்றவன் தியேட் டரின் உள்ளே நுழைந்தான்.

அவனுக்கு அடுத்து அவள் வந்து அமர்ந்து படம் பார்க்க ஆரம்பித்தாள். அவன் சொன்னது போல் அவன்

அவளிடம் எந்த சில்மிஷமும் செய்யவில்லை. நல்லவனாகவே நடந்து கொண்டான்.

ஆனால் பின் இருக்கையில் இருப்பவன் தான் முன் இருக்கை வரைக் காலை நீட்டி இவளது பின்னங்காலைத் தடவினான்.

பிருந்தா தனது கால்களை முன் பக்கமாக நீட்டிக் கொண்டாள். படத்தில் மூழ்கியவள் தன்னையறியாமல் தன் காலை பின்னோக்கி மடக்க மீண்டும் ஒரு முறை அவன் இவள் காலைத் தடவவும் இவள் அவஸ்தையாய் நெளிந்து கொண்டே முன் பக்கமாக நகர்ந்தாள். சரியாக அப்பொழுது இடைவேளை விடவே அவள் எழுந்து வெளியே சென்றாள்.

திரும்பி வந்து அமரும் பொழுது பிருந்தாவிடம் டிக்கெட் விற்றவன், ''நீங்க என் சீட்டில் உட்காருங்க'' என்று இடம் மாற்றி உட்கார்ந்து கொண்டான்.

ஒரு காலில் மட்டும் ஷூவை அணிந்து கொண்டு அடுத்த காலில் உள்ள ஷூவைக் கழட்டி வைத்துவிட்டு அவன் காத்திருந்தான். ஆள் மாறியது தெரியாத பின்னிருக்கை ஆசாமி அவன் காலைத் தொட முயல ஷூ காலால் ஒரு மிதி மிதித்தான்.

'ஐயோ!' என்ற குரல் பின்னால் ஒலித்தது.

பிருந்தாவிடம் திரும்பி, ''இதைத் தான் அவன் அப்போதில் இருந்து செய்யுறானா? ஓங்கி மிதிக்கலைன்னாலும் பரவாயில்லை. திரும்பி ஒரு முறை விட வேண்டாம்? சிறுமை கண்டு பொங்குன்னு பாரதி சொன்னதை எல்லாம் படிச்சதில்லையா? ஒருவேளை மேடம் பாண்டிச்சேரி என்பதால் பிரெஞ்சு எடுத்துப் படிச்சிங்களோ!'' என்று நக்கல் பண்ணினான்.



அதன் பின்பு வேறு எதுவும் அவளிடம் பேசவில்லை.

படம் முடிந்து அவள் வெளியே நடந்து சாலைக்கு வர... அவனும் அவளைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது வேகமாக வந்த வண்டியைக் கவனிக்காது அவள் நடந்து செல்ல... அவன் அவளின் இடையில் கை கொடுத்து அவளை ஓரமாக இழுக்க,

பிருந்தா விட்டாள் ஒரு அறை!

இடது கன்னத்தில் அறை வாங்கியவன் வலது கன்னத்தையும் சேர்த்துத் தனது இரு கன்னங்களையும் இரு கைகளால் மறைத்துக் கொண்டு, ''சிறுமையைக் கண்டு தானேங்க பொங்கச் சொன்னேன். என்னை ஏங்க அடிச்சீங்க?'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

அறைந்து முடித்த பின்பே அவள் தன்னைக் கடந்து வேகமாகச் சென்ற வண்டியை கவனித்தாள். அவன் அதற்காகத் தான் தன்னை இழுத்து இருக்கிறான் என்று புரிந்து கொண்டாள்.

''சாரி சாரி... தெரியாமல் நடந்திடுச்சு'' என்று அவள் பதற,

அவனோ, ''ஏங்க இவ்விடம் முறை மற்றும் அறை வாங்கப்படும் அப்படின்னு போர்டு எழுதி என் கழுத்திலே மாட்டி இருக்கேனா என்ன? ஒண்ணு முறைக்குறீங்க. இல்லைன்னா அறையுறீங்க. ம்ஹூம்... நாட்டிலே நல்லவங்க எல்லாம் நடமாட முடியாது போல! நான் கூட நீங்க பார்க்க சாதுவா தெரியுறீங்க. உங்க கூட பிரண்ட்ஷிப் வைச்சுக்கலாம்ன்னு பார்த்தேன். ம்ஹூம் நீங்க சரிபட்டு வர மாட்டீங்க. திடீர்ன்னு நீங்க பாட்டுக்கு காளி

அவதாரம் எடுத்து என்னைக் காலி பண்ணுறீங்க! நானோ சின்னப் பையன். என்னாலே தாக்குப் பிடிக்க முடியாது மா! எதுக்கு வம்பு!'' என்று புலம்பினான்.

''ப்ச்சு... நான் தான் சாரின்னு சொல்லுறேனே!'' என்று பிருந்தா அலுத்துக் கொள்ள,

''அப்போ உங்களை பிரண்டா ஆக்கிக்கலாமா?'' என்று அவன் சந்தேகத்துடன் இழுக்க,

அவள் ஆம் என்றோ இல்லை என்றோ சொல்லாமல் அமைதி காத்தாள்.

''நான் போய் சாப்பிடப் போறேன். செம பசி. நீங்களும் வரீங்களா? டிக்கெட்டுக்குக் காசு கேட்ட மாதிரி சாப்பாட்டுக்கு எல்லாம் காசு கேட்க மாட்டேன். நாலு பேருக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்தால் புண்ணியம் தானே! எனக்குப் பணம் சம்பாதிக்குறதை விட புண்ணியம் சம்பாதிக்கப் பிடிக்கும்!''

பிருந்தாவிற்குக் காலையில் வீட்டில் சரியாகச் சாப்பிடாததால் நல்ல பசி. சரி என்று அவனைப் பின் தொடர்ந்து சாப்பிடச் சென்றாள்.

அவர்கள் எதிரெதிர் இருக்கையில் சென்று அமர்ந்து உணவினை ஆர்டர் செய்தார்கள்.

''சாப்பாடு வர வரைக்கும் ஏதாச்சும் பேசிக்கிட்டு இருப்போமா?'' என்று அவன் கேள்வி எழுப்ப,

''உங்களுக்கு வாய் வலிக்காதா?'' என்று பிருந்தா கேட்டாள்.

''வாயா? எதுக்கு? நான் விடாம பேசுறதுனால கேட்கு றீங்களா? கடவுள் வாயைப் பேசுறதுக்கு தானே படைச்சு இருக்கார். அதை வைச்சு நான் பேசத் தானே



செய்யுறேன். நான் ஒண்ணும் அதை வைச்சு நடக்க டிரை பண்ணலையே! அப்புறம் எப்படிங்க எனக்கு வலிக்கும்?'' என அவன் அதி முக்கிய சந்தேகத்தை எழுப்ப...

''ஷப்பா!'' என்று பெருமூச்சு விட்டாள்.

''சரி விடுங்க. வழக்கம் போல நான் பேசுறேன். நீங்க கேளுங்க!'' என்றான். ஏதோ ஆண்டாண்டு காலமாய் அது தான் வழக்கம் என்பது போல!

''உங்களுக்கு ஜோஸியத்திலே நம்பிக்கை இருக்கா?'' என்று அவன் கேட்டவுடன் பிருந்தாவின் கண்கள் மின்னின.

''கண்ணுல திடீர்ன்னு பிரகாசம் ஏறுவதைப் பார்த்தால் மேடமுக்கு நம்பிக்கை இருக்கும் போல...'' என்று சொன்னவன்,

''எனக்கு ஜோஸியம் சொல்லத் தெரியும். நான் வேணா பார்த்துச் சொல்லவா?'' என்று கேட்டு அவளது கையை நீட்டச் சொல்லி பார்க்க ஆரம்பித்தான்.

அவன் அவளது கையை மறந்தும் பற்ற முயற்சிக்க வில்லை.

அவன் முதல் கேள்வியாக, ''உங்க அம்மா அப்பா இப்போ...'' என்று தயங்கி நிறுத்த,

ஒரு வருத்தமான முகபாவனையோடு அவள் அதை ஆமோதித்தாள்.

''ஐம் சாரி!'' என்று சொன்னவன் மேலும் அவளது கையை ஊன்றிக் கவனித்துப் பார்த்துவிட்டு, ''இப்போ நீங்க ஒரு சிக்கலில் மாட்டி இருக்கீங்க. சரியா?'' என்று கேட்டான்.

அவளது பதிலை எதிர்பார்த்து அவள் முகம் பார்க்க அவளது அமைதியில் அவன் தனது பேச்சினை மாற்ற எண்ணியவனாய்,

''சரி நான் வேற சொல்லுறேன். சும்மா உங்களுக்குப் பிடிச்சது... இப்படி'' என்று சொன்னவன், ''உங்களுக்கு கலரிலே புளூ கலர் தானே பிடிக்கும்?'' என்றான்.

''ம்ம்ம்'' என்று அவள் உம் கொட்டவும்,

''உங்களுக்குப் பிடிச்ச ஹீரோ சூர்யா, சரியா?''

''ம்ம்ம்...''

''உங்களுக்கு ஆடை வடிவமைப்பது பிடிக்கும். சரியா?''

'எப்படி இப்படி?!' என்று நினைத்தவள் ஆர்வமாக அவனைப் பார்க்க,

''ஐயா படு ஸ்மார்ட்ங்க. செய்யுற வேலை எல்லாம் ரொம்பத் தெளிவா இருக்கும். ப்ச்சு... என்னைப் பற்றி நானே பெருமையா சொல்லக் கூடாதுங்க. ஆனால் நீங்க தான் நல்லதா எதுவுமே என்னைப் பற்றிச் சொல்ல மாட் டேங்குறீங்களே! அதான் நானே சொல்ல வேண்டியதா இருக்கு'' என்று அலுத்துக் கொண்டவன்,

''வேண்டும் என்றால் இப்படிப் பண்ணுவோமா?'' என்று கேட்டதும்,

'எப்படி?' என்பது போல் அவள் பார்க்க...

''அடுத்த முறை நாம மீட் பண்ணும் போது என் பெருமையைப் பற்றி பேசுறதுக்கென்றே நான் ஒரு ஆளை அப்பாயிண்ட் பண்ணிக் கூட்டிட்டு வரேன். ஒரு முழு நாள் சம்பளம் எல்லாம் கொடுத்தால் எனக்குக் கட்டுப்படி ஆகாதுங்க. அதனால மணிக்கு இவ்வளவு ரூபாய்ன்னு சம்பளம் பேசுறேன். நீங்களும் என்னை நாள்



கணக்கா எல்லாம் மீட் பண்ண பிளான் போடாதீங்க. ஒரு சில மணி நேரம் மட்டும் என்னைப் பார்த்தால் போதும் என்று நினைங்க'' என்று அவன் சொன்னதும், அவள் தனது நெற்றியைப் பிடித்துக் கொண்டாள்.

''என்னாச்சு? இவனோட பெரிய தலைவலியா இருக் குன்னு நினைக்குறீங்களா? இல்லை நிஜமாவே தலை வலியா? நிஜமா என்றால் என்ன மாத்திரை வேணும்?'' என்று அவன் பெரிய மாத்திரைப் பட்டியலை ஒப்பித் தான்.

''நீங்க மெடிக்கல் ரெப்பா இருக்கீங்களா?'' என்று பிருந்தா கேட்டவுடன்,

''ஹய்யோ! எப்படிங்க கரெக்ட்டா கண்டு பிடிச்சீங்க? நான் கூட உங்க கையைப் பார்த்துத் தான் ஜோசியம் சொன்னேன். ஆனா நீங்க என் கையைக் கூடப் பார்க் காமல் சொல்லுறீங்க என்றால் வெரி ஸ்மார்ட்ங்க நீங்க! ஒருத்தங்க என் கூட பிரண்டா இருக்கணும்ன்னா அவங்க முக்கியமா ஸ்மார்ட்டா இருக்கணும். சோ நான் உங்களை என் பிரண்டா ஏத்துக்கிறேன்'' என்று கூறிக் கொண்டே அவன் தனது வலது கரத்தை நீட்டி, ''பிரண்ட்...'' என்று கேட்டு நிறுத்தினான்.

அவளையும் அறியாமல் அவளது வலது கரம் உயர்ந்து அவனது கையோடு இணைந்தது.

அவளது கை பற்றிக் குலுக்கியவன், ''உங்க பேர் என் னன்னு சொல்லலையே?'' என்றான்.

''பிருந்தா'' என்று அவள் சொன்னதும்,

''நைஸ் நேம். பிருந்தா... பிந்து... ஷார்ட் அன்ட் ஸ்வீட்டா இல்லை?'' என்று அவளது பேரைச் சுருக்கியவன் அவளேயே கேள்வியும் கேட்டான்.

அவள் ஒன்றும் கூறாது அவனை முறைக்க...

''ஏங்க யாரும் உங்களை அப்படிக் கூப்பிட்டதில்லையா? அப்போ நான் அப்படியா கூப்பிடுறேன். ஐம் ஆல்வேஸ் ஸ்பெஷல்!'' என்று தோள் குலுக்கிக் கொண்டான்.

சரியாக அந்த நேரம் சாப்பாடு வந்தது.

''ஃபர்ஸ்ட் ஸ்வீட் சாப்பிடுங்க. நம்ம பிரண்ட் ஷிப்பும் அதே மாதிரி ஸ்வீட்டா ஆரம்பிக்கட்டும்'' என்று சொல்லி சாப்பாட்டுடன் வந்திருந்த அல்வாத் துண்டை அவள் முன் வைத்தான்.

''உங்களுக்கு அல்வா பிடிக்குமா? எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதுவும் திருநெல்வேலி அல்வான்னா ரொம்ப ரொம்பப் பிடிக்கும். சும்மா தொண்டையிலே வழுக்கிக் கிட்டுப் போகும்'' என்று அவன் ரசித்துச் சொல்ல,

''எனக்குப் பிடிச்ச ஸ்வீட்டே அல்வா தான்'' என்று சொல்லி அதையே முதலில் சாப்பிட ஆரம்பித்தாள்.

பிருந்தா அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அவனோ அப்பொழுதும் பேசிக் கொண்டே இருந்தான்.

நடுவில் பிருந்தாவிற்கு போன் வந்தது. அவள் பேசி முடிக்கும் வரை மட்டும் தான் அவன் அமைதியாக இருந் தான். இன் சரியான 'வாயாடன்' என்று பிருந்தா அவ னுக்கு நாமகரணம் சூட்டும்படியாக அவன் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தான்.

அவள் சென்று கை கழுவி விட்டு வருவதற்கும் சாப் பிட்டதற்கான பில் வரவும் சரியாக இருந்தது.

பிருந்தா அந்த பில்லை வேகமாக எடுத்துப் பார்த்து அதற்கான பணத்தையும், டிப்ஸுக்கான பணத்தையும் சேர்த்து வைத்து சர்வரிடம் நீட்டினாள்.



''ஏங்க என் புண்ணியத்தைத் தட்டிப் பறிக்குறீங்க? வேணும்ன்னு கேட்டால் நானே பெருந்தன்மையா விட்டுக் கொடுத்திருப்பேன். இதுக்கு போய் சின்ன புள்ளை மாதிரி அவசர அவசரமா வேலை செய்யுறீங்க. ம்ஹூம் உங்களுக்கு என் நல்ல குணம் ஒண்ணு கூடத் தெரிய மாட்டேங்குது. சரி கிளம்புங்க. நான் இன்னும் சாப்பிட்டு முடிக்கலை. நான் சாப்பாடை வேஸ்ட் பண் ணாமல் சாப்பிட்டு விட்டுக் கிளம்புறேன்'' என்று சொல்லி அவளைக் கிளப்பினான்.

அவள் ஒன்றும் சொல்லாது அங்கிருந்து கிளம்பிச் சென்றாள்.



## 5



பிருந்தா சினிமா பார்த்துவிட்டு, சாப்பிட்டும் முடித்த பின் வேறு எங்கு செல்வது என்று தெரியாமல் வீடு திரும்பினாள். வீட்டிற்கு வந்ததும் ஒரு வெறுமையை உணர்ந்தாள்.

இவ்வளவு நேரமும் அவன் பேசிப் பேசியே தன்னுடைய வெறுமையைப் போக்கியது அவளுக்கு நன்றாகப் புரிந்தது. பின் நன்றாகத் தூங்கி ஓய்வு எடுத்தாள்.

தூங்கி எழுந்தவளுக்கு அவனது நினைவு தான் முதலில் வந்தது. 'கொஞ்ச நேரம் தான் பேசிப் பழகி னான். ஆனாலும் என் மனதில் பச்சக்கென்று பசை போல் ஒட்டிக் கொண்டான்' என நினைத்துக் கொண்டாள்.

மாலைக் காபியைப் பருகலாம் என நினைத்து அறையை விட்டு வெளியே வந்தாள்.

அப்பொழுது வாயிலில் அழைப்பு மணி ஒலிக்க... சாரதா யாரென்று பார்க்கச் சென்றார். வந்தவன் மூர்த்தி.

அவன் பிரகாஷைப் பார்ப்பதற்காக வந்ததாக சாரதாவிடம் தெரிவித்தான். அவன் சாரதாவிடம் தான் பேசினான். ஆனால் பார்வை மொத்தமும் பிருந்தாவின் மேல் தான் இருந்தது. அவனது பார்வையில் பிருந்தா கூசிப் போனாள்.

சாரதா பிரகாஷைக் கடையில் சென்று பார்த்துக் கொள்ளும்படிக் கூறி அனுப்பி விட்டார்.

அவன் சென்றதும் பிருந்தா தனது வீடே பாதுகாப்புக் குறைவான இடம் ஆகிவிட்டதாகக் கருதினாள். சித்திக்கு இவன் தான் மூர்த்தி என்று தெரிந்திருந்தால் ஒரு வேளை உள்ளே அழைத்து வந்து சீராட்டி இருப்பார்களோ என்று தோன்றியது.

வீட்டு எண்ணிற்கு போன் வர அவளது பயமும், எண்ணமும் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

சாந்தி தான் அழைத்திருந்தாள். வழக்கம் போல் தான் வராததற்கு ஏதோ ஒரு காரணத்தைக் கூறினாள்.

''அதை ரொம்ப சீக்கிரமா சொல்லிட்டே போல!'' என பிருந்தா அவளை நக்கலடிக்க,

''நான் மதியத்திலிருந்து உன் செல்போனுக்கு எத்தனை முறை தெரியுமா போட்டேன். ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது. அதான் வேற வழியில்லாமல் இப்போ வீட்டு எண்ணுக்குக் கூப்பிடுறேன்'' என்று சொல்லிய சாந்தி சிறிது நேரம் பேசிவிட்டு அழைப்பைத் துண்டித்தாள்.

சமையலறைக்குச் சென்று காபியை எடுத்து வந்து பருகியவள் தனது கைப்பையில் தனது கைப்பேசியை



எடுத்துப் பார்க்க விரும்பி தேடினால்... அது அங்கே இல்லாது போக.. கடைசியாக எங்கே எப்பொழுது போன் பேசினோம் என நினைத்துப் பார்க்க மதியம் ஹோட்டலில் பேசியது நினைவு வந்தது.

'ஐயோ! அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டோம் போலவே! ஒருவேளை அவன் நம்மிடம் இருந்து சுட்டு விட்டானா? சே சே! அவனைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. ஒரு வேளை நாம மறந்து போய் விட்டு விட்டு வந்ததை அவன் பத்திரமாக எடுத்து வைத்தாலும் வைத்திருப்பானோ?

அவன்... ஆமாம் அவன் பெயர் என்ன? நம்ம பேரைக் கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டானே! அவன் பேரை ஏன் சொல்லலை? ஒரு வேளை நாம கேட்டு இருக்கணுமோ? சரி இப்பப் பிரச்சனை அது இல்லை. என் போனை நான் எங்கே சென்று தேடுவது?' எனக் குழம்பித் தவித்தாள்.

இரவு எட்டு மணி போல் வீட்டு எண்ணிற்கு அவளுக்கு மீண்டும் ஒரு போன் வந்தது. எடுத்துப் பேசினாள்.

எதிர்முனையில், ''பிருந்தாகிட்டே பேச முடியுமா?'' என்று ஒரு ஆண் குரல் கேட்கவும், யாராய் இருக்கும் எனக் குழம்பியவளாய், ''எஸ் பிருந்தா தான் பேசுறேன்'' என்று சொன்னதும்,

''ஹாய் பிந்து!'' என்ற குரல் கேட்ட நொடி,

'அட இவனா! இவனுக்கு எப்படி என் நம்பர் தெரிந்தது. அதற்கு முன்பு என் செல்போனைப் பார்த்தாளா என்று கேட்க வேண்டுமே' என நினைத்து அவள் வாய் திறக்கும் முன்பு வழக்கம் போல் அவனே பேச ஆரம்பித்தான்.

''நீங்க உங்க செல்போனை ஹோட்டல் டேபிளில் வைச்சுட்டுப் போயிட்டீங்க. நீங்க போனதும் தான்

பார்த்தேன். சரின்னு ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வைச்சுட்டேன். நீங்க வீட்டுக்குப் போக எப்படியும் அரை மணி நேரம் ஆகும். அதுக்கு அப்புறமா உங்க வீட்டு எண்ணுக்குக் கூப்பிடணும் என்று நினைச்சேன். ஆனால் வேலை பிசியிலே மறந்து போயிட்டேன். இப்பத் தான் ஞாபகம் வந்தது. நான் உங்க போனை மிஸ்யூஸ் பண்ணலைங்க. அப்போ ஸ்விட்ச் ஆஃப் பண்ணியவன் இப்போ உங்க வீட்டு நம்பர் பார்க்கத் தான் ஆன் பண்ணியிருக்கேன். இப்போ திரும்பவும் ஆஃப் பண்ணிடுறேன். என் போன் நம்பர் எழுதிக்கிறீங்களா...'' என்று சொல்லி தனது எண்ணை அவளிடம் பகிர்ந்தான்.

அருகிலிருந்த பேப்பரில் அவனது போன் நம்பரை எழுதியவள், அப்பொழுது தான் நினைவிற்கு வந்தவளாக,

''உங்க பேர் என்ன?'' என்று கேட்டாள்.

''ரொம்ப சீக்கிரமே கேட்குறீங்களே! என் பேர் விஷ்ணு. நாளைக்கு நான் உங்க போனைத் திருப்பித் தரேன்'' என்று சொன்னவன் அழைப்பைத் துண்டித்தான்.

'வி...ஷ்...ணு' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

அவளுக்கு அவளது தந்தை சொல்லிய அவளது வருங்காலக் கணவனின் பெயர் என்ற ஞாபகம் எழுந்து அவளை ஒரு மாதிரி இம்சித்தது.

அன்று இரவு தூக்கம் வராமல் அவள் டி.வி. பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்க, பிரகாஷ் கடையில் இருந்து வீடு திரும்பினான்.

அவன் தனது தாயின் அறையைப் பார்வையிட்டுக் கொண்டே, ''பிருந்தா அந்த மூர்த்தி இங்க வீட்டுக்கு சாயங்காலம் வந்தானாமே! அவனை ஒரு மாசம் பொறுத்திருக்கும் படி நான் சொல்லி இருக்கேன். இனிமேல்



வீட்டுக்கு வரவேணாம் என்றும் சொல்லி இருக்கேன். நீ சீக்கிரமா வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்கோ!'' என்று சொல்லிவிட்டு அகன்றான்.

தனது அறைக்குள் திரும்பியவள் சிந்தனையில் ஆழ்ந்தாள். 'திடீர்ன்னு கல்யாணம் பண்ணிக்கோ என்றால் நான் மாப்பிள்ளைக்கு எங்கே போவேன்? நான் என்ன மாப்பிள்ளையை என் துப்பட்டாக்குள்ளே முடிஞ்சு வைச்சுக்கிட்டா சுத்திக்கிட்டு இருக்கேன்?' என்று நினைக்கும் பொழுதே விஷ்ணு அவள் கண் முன் வந்து சென்றான்.

மறுநாள் காலையில் பூங்காவிற்கு வந்து அவளது கைப்பேசியைப் பெற்றுக் கொள்ளுமாறு விஷ்ணு கூறி இருந்தான்.

விஷ்ணு அவளைப் பூங்காவில் சந்தித்து அவளிடம் கைப்பேசியை நீட்டியதும் பிருந்தா ஒன்றும் சொல்லாது பெற்றுக் கொண்டாள்.

அவள் ஏதோ யோசனையுடன் அமைதியாக இருக்க...

''ப்ச்சு நான் கூட நேற்று உங்களை பிரண்டா ஏத்துக்க முடிவு பண்ணினேன். அது தப்போன்னு இப்போ பீல் பண்ணுறேன். எதுக்கும் என் முடிவை மறு பரிசீலனை பண்ணலாம்ன்னு யோசிக்கவே ஆரம்பிச்சுட்டேன்னா பார்த்துக்கோங்க'' என்று அவன் சலித்துக் கொள்ளவும்,

'ஏன்?' என்பது போல் ஏறிட்டவளிடம், ''பின்னே என்னங்க... உங்க செல்போனை பத்திரமா திருப்பிக் கொடுத்திருக்கிறேன். ஒரு சின்ன தாங்க்ஸ் கூடச் சொல்ல மாட்டேங்குறீங்க. இப்படி இருக்குறவங்களை எல்லாம் பிரண்டா வச்சுக்கிட்டு என்னால காலம் தள்ள முடியாதுப்பா!'' என்று தோள் குலுக்கிக் கூறினான்.

அவள் உடனே, ''என் செல்போனை எடுத்து வைச்சு, பத்திரமா திருப்பிக் கொடுத்ததுக்கு தாங்க்ஸ்'' என்றாள்.

''ஹலோ ஹலோ! நீங்க சொல்லுறதைப் பார்த்தால்... என்னவோ நான் தான் உங்க செல்போனை எடுத்து வைச்சுக்கிட்டு ஒரு நாள் கழிச்சுத் திருப்பித் தருவது மாதிரியில்ல இருக்கு. விஷ்ணு நல்லதுக்கே காலம் இல்லை'' என்று வானத்தைப் பார்த்துக் கூறியவன் பின் குனிந்து பிருந்தாவைப் பார்த்து,

''எனக்கு உங்க தாங்க்ஸ் வேண்டாம். ஏன்னா வார்த்தையைக் கூட கேட்டு வாங்க மாட்டான் இந்த விஷ்ணு. ஹை ரைமிங்கா இருக்கு இல்ல?! பாராட்ட மாட்டீங்களா?'' என்று கேட்டவன்,

''சாரி சாரி உங்ககிட்டே இருந்து எதையும் கேட்டு வாங்க மாட்டேன் என்று இப்பத் தானே சொன்னேன்'' என்று பிருந்தாவைப் பார்த்துச் சொன்னவன், ''அதுக்குள்ள மறந்துட்டியேடா'' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான்.

''முன்னாடி எல்லாம் இப்படி இருக்க மாட்டியேடா. ரொம்பவே ஸ்மார்ட் ஆச்சே நீ! ஒரு வேளை சகவாச தோஷமோ?'' என்று கூறியவன் பிருந்தாவை மேலிருந்து கீழ் வரை பார்வையிட்டான்.

''செல்ப் டப்பா'' என்று பிருந்தா முணுமுணுக்கவும்,

''என்னது செல்ப் டப்பாவா? இந்த செல்பிலே அழகா வரிசையா அடுக்கி வைச்சு இருப்பாங்களே... அதையா சொல்லுறீங்க? நான் அழகா இருக்கேன் என்று சொல்லுறீங்களா? இல்லை என் பல் எல்லாம் வரிசையா இருக்குன்னு சொல்லுறீங்களா? இப்ப தாங்க உங்களுக்குப் பாராட்டவே மனசு வருது போல!'' என்று சொன்னான்.



தன்னைத் தானே நல்லவன், வல்லவன் என்று புகழ்ந்துக்கிறானே என்று செல்ப் டப்பான்னு கூப்பிட்டால் அதையும் தனக்குச் சாதகமா பயன்படுத்திக்கிறானே! இவனை... என்று பிருந்தா கடுப்பானாள்.

''சரிங்க நான் கிளம்புறேன்'' என்று அவன் விடை பெற்றுச் சென்றதும் இவனிடம் உதவி பெறலாமா என்று பிருந்தா யோசிக்க ஆரம்பித்தாள்.

வீடு திரும்பியவளுக்கு அவனிடம் கேட்டுப் பார்க்கலாம் என்ற எண்ணமே வலுப்பெற தனது வீட்டு எண்ணிலிருந்து அவன் முதல் நாள் அவளிடம் கொடுத்திருந்த அவனது கைப்பேசிக்கு அழைத்து அன்று மாலை அவனை மணக்குள விநாயகர் கோவிலுக்கு வரச் சொன்னாள்.

அவனும் ஏன் எதற்கு என்று கேட்காமல் வருவதாக ஒத்துக் கொண்டான்.

அவள் மாலை கோவிலுக்குச் செல்லும் வழியில் எதிரே வந்த மூர்த்தி கோணலாக ஒரு சிரிப்பை உதிர்த்து இவளது வயிற்றில் புளியைக் கரைத்தான்.

இவள் கோவிலைச் சென்று அடையும் பொழுது விஷ்ணு யாரையோ போட்டு அடித்துக் கொண்டிருந்தான்.

என்னவென்று விசாரித்தபோது ஒரு பள்ளி மாணவியைக் கேலி செய்தவனை விஷ்ணு அடித்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது.

கோவிலில் நடை திறந்தவுடன் முதல் ஆளாய் இவள் உள்ளே சென்று சாமியைக் கும்பிட்டு விட்டு ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்தாள். அவனும் அவ்வாறே செய்தான்.

அவளுக்கு மனக்கண்ணில் மூர்த்தியின் கோணல் சிரிப்பே வந்து வந்து போனது.

அவள் உடனே, ''என் செல்போனை எடுத்து வைச்சு, பத்திரமா திருப்பிக் கொடுத்ததுக்கு தாங்க்ஸ்'' என்றாள்.

''ஹலோ ஹலோ! நீங்க சொல்லுறதைப் பார்த்தால்... என்னவோ நான் தான் உங்க செல்போனை எடுத்து வைச்சுக்கிட்டு ஒரு நாள் கழிச்சுத் திருப்பித் தருவது மாதிரியில்ல இருக்கு. விஷ்ணு நல்லதுக்கே காலம் இல்லை'' என்று வானத்தைப் பார்த்துக் கூறியவன் பின் குனிந்து பிருந்தாவைப் பார்த்து,

''எனக்கு உங்க தாங்க்ஸ் வேண்டாம். ஏன்னா வார்த்தையைக் கூட கேட்டு வாங்க மாட்டான் இந்த விஷ்ணு. ஹை ரைமிங்கா இருக்கு இல்ல?! பாராட்ட மாட்டீங்களா?'' என்று கேட்டவன்,

''சாரி சாரி உங்ககிட்டே இருந்து எதையும் கேட்டு வாங்க மாட்டேன் என்று இப்பத் தானே சொன்னேன்'' என்று பிருந்தாவைப் பார்த்துச் சொன்னவன், ''அதுக்குள்ள மறந்துட்டியேடா'' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான்.

''முன்னாடி எல்லாம் இப்படி இருக்க மாட்டியேடா. ரொம்பவே ஸ்மார்ட் ஆச்சே நீ! ஒரு வேளை சகவாச தோஷமோ?'' என்று கூறியவன் பிருந்தாவை மேலிருந்து கீழ் வரை பார்வையிட்டான்.

''செல்ப் டப்பா'' என்று பிருந்தா முணுமுணுக்கவும்,

''என்னது செல்ப் டப்பாவா? இந்த செல்பிலே அழகா வரிசையா அடுக்கி வைச்சு இருப்பாங்களே... அதையா சொல்லுறீங்க? நான் அழகா இருக்கேன் என்று சொல்லுறீங்களா? இல்லை என் பல் எல்லாம் வரிசையா இருக்குன்னு சொல்லுறீங்களா? இப்ப தாங்க உங்களுக்குப் பாராட்டவே மனசு வருது போல!'' என்று சொன்னான்.



தன்னைத் தானே நல்லவன், வல்லவன் என்று புகழ்ந்துக்கிறானே என்று செல்ப் டப்பான்னு கூப்பிட்டால் அதையும் தனக்குச் சாதகமா பயன்படுத்திக்கிறானே! இவனை... என்று பிருந்தா கடுப்பானாள்.

''சரிங்க நான் கிளம்புறேன்'' என்று அவன் விடை பெற்றுச் சென்றதும் இவனிடம் உதவி பெறலாமா என்று பிருந்தா யோசிக்க ஆரம்பித்தாள்.

வீடு திரும்பியவளுக்கு அவனிடம் கேட்டுப் பார்க்கலாம் என்ற எண்ணமே வலுப்பெற தனது வீட்டு எண்ணிலிருந்து அவன் முதல் நாள் அவளிடம் கொடுத்திருந்த அவனது கைப்பேசிக்கு அழைத்து அன்று மாலை அவனை மணக்குள விநாயகர் கோவிலுக்கு வரச் சொன்னாள்.

அவனும் ஏன் எதற்கு என்று கேட்காமல் வருவதாக ஒத்துக் கொண்டான்.

அவள் மாலை கோவிலுக்குச் செல்லும் வழியில் எதிரே வந்த மூர்த்தி கோணலாக ஒரு சிரிப்பை உதிர்த்து இவளது வயிற்றில் புளியைக் கரைத்தான்.

இவள் கோவிலைச் சென்று அடையும் பொழுது விஷ்ணு யாரையோ போட்டு அடித்துக் கொண்டிருந்தான்.

என்னவென்று விசாரித்தபோது ஒரு பள்ளி மாணவியைக் கேலி செய்தவனை விஷ்ணு அடித்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது.

கோவிலில் நடை திறந்தவுடன் முதல் ஆளாய் இவள் உள்ளே சென்று சாமியைக் கும்பிட்டு விட்டு ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்தாள். அவனும் அவ்வாறே செய்தான்.

அவளுக்கு மனக்கண்ணில் மூர்த்தியின் கோணல் சிரிப்பே வந்து வந்து போனது.

''பிந்து பிந்து'' என்று அழுத்தமாக விஷ்ணு இரு முறை அழைத்த பின்பே அவள் நினைவுலகத்திற்கு மீண்டாள்.

''கூப்பிட்டீங்களா? என்ன?'' என்று அவனைப் பார்த்துக் கேள்வி எழுப்ப...

அவன் அவளைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தான். பின் மெதுவாக, ''என்ன பிரச்சனை? என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்லுங்களேன்'' என்றான்.

இரு நிமிடங்கள் அவனிடம் தன் பிரச்சனையைச் சொல்வதா வேண்டாமா என்று மனதுக்குள் பட்டிமன்றம் நடத்தினாள். பின் காலையில் தான் எடுத்த முடிவை அவனிடம் கேட்டுப் பார்க்கலாமே என்று தோன்ற அவள் தனது பிரச்சனையை மெதுவாக அவனிடம் கூறினாள்.

''சோ என்ன முடிவு செஞ்சு இருக்கீங்க?'' என்று கேட்டதும்,

''நீங்க எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணுறீங்களா?'' என்று தயக்கத்துடன் கேட்க,

''நான் என்ன செய்யணும்?''

''என்னை ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டு இந்த சொத்தை எங்க அண்ணனுக்கு டிரான்ஸ்பர் பண்ணிக் கொடுக்க ஹெல்ப் செய்யுறீங்களா? ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணுற அன்னைக்கே நான் உங்களுக்கு டிவோர்ஸ் பேப்பரிலும் சைன் பண்ணித் தந்திடுறேன். என்னாலே உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வராமல் பார்த்துக்கிறேன்'' என்று அவள் கெஞ்சலாக அவன் முகம் பார்க்க...

அவன் கண் மூடி அமைதியாக இருந்தான்.



அவனது அமைதியைக் கண்டு பயந்தவளாய், ''ஹெல்ப் பண்ண மாட்டீங்களா?'' என்று அவள் மீண்டும் கேட்க...

அவன் தனது கண்களைத் திறந்து அவளது கண்களை நேராக நோக்கி, ''ஏன் பொய்யா கல்யாணம் பண்ணணும். நிஜமாவே நாம கல்யாணம் பண்ணிக்கலாம் பிந்து. உன்னைப் பார்த்த நொடியில் இருந்து ஐம் இன் லவ் வித் யூ!'' என்று சொல்ல,

அவனது கூற்றை ஆமோதிக்கும் வண்ணம் கோயில் மணி அடித்தது.

''கோயில் மணி அடிக்குது. நல்ல சகுனம்'' என்று அவன் சொல்ல இப்பொழுது அவள் கண் மூடி யோசிக்க ஆரம்பித்தாள்.

அவன் அவளைத் தொந்தரவு செய்யாது அவளது அருகே அமைதியாக அமர்ந்திருந்தான்.

அவள் வேற வழியே இல்லையா என்பது போல் அவனை ஏறிட்டுப் பார்க்க...

''இப்பவே பதில் சொல்லணும்ன்னு அவசியம் இல்லை பிந்து. வீட்டிலே போய் யோசித்துச் சொன்னால் போதும்'' என்று சொல்லி அவளைக் கிளப்பினான்.

எழுந்து நடக்க ஆரம்பித்தவளிடம், ''என் செல்போனுக்கு உன் செல்லில் இருந்து ஒரு கால் பண்ணுறியா? உன் நம்பரை நான் ஸ்டோர் பண்ணிக்கிறேன்'' என்றான்.

''என் நம்பர் உங்ககிட்டே இல்லையா?''

''நீ எப்பமா கொடுத்தாய்? நான் நேற்றும் இன்னைக்கும் உன் வீட்டு லேன்ட் லைனுக்கு உன் செல்லில் இருந்து தானேமா கால் பண்ணிப் பேசினேன். அப்பவே என் நம்பருக்கு மிஸ்ட் கால் கொடுத்திருக்கலாமேன்னு

பார்க்குறியா? உன்னிடம் கேட்காமல் எப்படிமா அதைச் செய்ய முடியும்?'' என்று கேட்டான்.

அவனது இந்த விளக்கமே அவளுக்கு அவன் ஒரு கண்ணியவான் என்று நம்ப வைத்தது.

பிருந்தா அவளது செல்லில் இருந்து அவனது செல்லுக்கு ஒரு மிஸ்டு கால் கொடுத்தாள்.

அவள் தனது ஸ்கூட்டியில் ஏற முற்படும் பொழுது, ''பிந்து டேக் கேர். ஏதாவது பிரச்சனை என்றால் என்னைக் கூப்பிடு. பை'' என்று சொல்லி விடை கொடுத்தான்.

'ம்ம்ம்' என்ற முணுமுணுப்போடு ஒரு தலையாட்டலையும் அவனுக்கு அளித்துவிட்டுக் கிளம்பினாள்.



# 6



பிருந்தா வீட்டிற்கு வந்து சேர்ந்த பொழுது சாரதா பெட்டி, படுக்கை எல்லாம் கட்டி வெளியூர் கிளம்புவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தார்.

அவர் அவ்வப்போது தனது சொந்த கிராமத்திற்குச் செல்லுவார். அதுபோல் தனது ஊருக்குக் கிளம்புகிறார் போல் என்று பிருந்தா எண்ணியிருக்க...

அவரோ, ''நானும், பிரகாஷும் காசிக்குப் போகிறோம்மா. பிரகாஷ் அப்பாக்கு காசியில் ஒரு முறை திவசம் பண்ணச் சொன்னாங்க. அவனை இப்பக் கூட்டிக் கொண்டு போனால் தான் உண்டு. அப்புறமா கல்யாணம் ஆனால் அவனைக் கையிலே பிடிக்க முடியாது. அதான் கிளம்பிட்டேன். நாலு இல்லை அஞ்சு நாளில் திரும்பி



விடுவோம்'' என்று சொல்லிக் கிளம்பி விட்டார். பிரகாஷ் ஒன்றும் சொல்லாது அவரைப் பின் தொடர்ந்து சென்று விட்டான்.

'நீயும் வருகிறாய?' என்று ஒரு சம்பிரதாயத்துக்காவது அவர் கேட்பார் என்று பிருந்தா எதிர்பார்த்தாள். அவர் அவ்வாறு கேட்காதது அவளுக்குச் சங்கடத்தை உண்டு பண்ணியது. அவர்களை அனுப்பி வைத்து விட்டு அவள் கதவை அடைத்துவிட்டு தொலைக்காட்சியைப் பார்த்துக் கெண்டிருந்தாள்.

எட்டரை மணி போல் வீட்டு வாசல் மணி அடிக்க... எழுந்து சென்று பீப் ஹோல் வழியாக வந்திருப்பது யார் என்று பிருந்தா பார்வையிட... அங்கு நின்று கொண்டிருந்த மூர்த்தியைக் கண்டு அதிர்ந்தாள்.

அவள் கதவைத் திறக்காமல் தனது படுக்கையறைக்குள் சென்று மறைந்து கெண்டாள்.

அவனும் கிட்டத்தட்ட ஒரு அரை மணி நேரம் விடாது அழைப்பு மணியை அடித்துப் பார்த்துவிட்டு அதன் பின்பே சென்றான். அவன் சென்ற பின் தான் இவளுக்கு நிம்மதியாக மூச்சே விட முடிந்தது.

யாரும் இல்லாமல் தான் தனியாக இருப்பது எவ்வளவு ஆபத்தான விஷயம் என்று உணர்ந்தவளாக தனது வக்கீல் அங்கிளை போனில் அழைத்தாள்.

போனை எடுத்தவர், ''சொல்லுமா பிருந்தா. ஃபிளைட் ஏறப் போய் கொண்டு இருக்கேன். என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

''ஃபிளைட்டா? சென்னையிலா அங்கிள் இருக்கீங்க?'' என்று பிருந்தா விசாரிக்க,

''ஆமா மா. மறந்துட்டியா? மும்பை போறேன். வரதுக்கு ஒரு வாரம் ஆகும் என்று சொன்னேன் தானே? என்ன விஷயம்மா'' என்று கேட்டவுடன்,

''விஷயம் ஒண்ணுமில்லை அங்கிள். சும்மா தான் கூப்பிட்டேன். பத்திரமா போயிட்டு வாங்க'' என்று சொல்லி வைத்து விட்டாள்.

ப்ரியாவும் ஊரில் இல்லை... அங்கிளும் இல்லை. இப்போ யாரிடம் சொல்வது? இதுக்குத் தீர்வு தான் என்ன?

பேசாமல் விஷ்ணுவைக் கல்யாணம் பண்ணிக் கொள் வோமா? பார்க்க நன்றாக இருக்கிறான். வசதி இல்லை போல... ஆனால் நமக்கு அது தேவை இல்லை. நம்ம சொத்தைப் பாதுகாத்தாலே போதுமே? நல்லவனா இருக் கான். அது தான் முக்கியம்.

'அதெல்லாம் சரி. உனக்கு அவன் மேல் பிடித்தம் இருக்கா?' என்று உள் மனம் கேள்வி எழுப்பியது.

'நேற்று அவனை விட்டுப் பிரிந்து வந்தவுடன் ஒரு வெறுமை உணர்வு தோன்றியதே... இன்று அவன் 'டேக் கேர்' என்று சொன்ன பொழுது ஒரு பாதுகாப்பு உணர்வு தோன்றியதே... இதெல்லாம் அவனைப் பிடித்துப் போன தால் தானே?' என்று மனசாட்சிக்குப் பதில் அளித்த பிருந்த விஷ்ணுவின் எண்ணிற்கு அழைத்தாள்.

அவன் எடுத்த எடுப்பிலேயே, ''சொல்லு பிந்து... சாப் பிட்டியா?'' என்று கேட்டான்.

அவனது அக்கறையான விசாரிப்பில் பிருந்தாவிற்கு கண்ணை கரித்துக் கொண்டு வந்தது.

நம்முடைய கஷ்டம், சங்கடம், அழுகை, இயலாமை இவை எல்லாவற்றையும் நம்மால் எல்லோரிடமும்



வெளிப்படுத்திவிட முடியாது. மனதுக்கு நெருங்கியவர் களிடம் தான் அது நம்மையும் அறியாமல் வெளிப்படும்.

சற்று முன்பு வக்கீல் அங்கிளிடம் பேசும் பொழுது உண்டாகாத ஒரு உணர்வு இவனது குரலைக் கேட்ட மாத்திரத்தில் தோன்றி தன்னை அழச் செய்கிறது என் றால்...

மற்ற எல்லோரையும் விட மனம் அவனை அதிகமாக நாடுகிறது என்று தானே அர்த்தம்?!

சற்று முன்பு வரையிலும் தான் ஒரு அநாதை. தன் னைக் கேட்பார் யாரும் இல்லை என்று மனம் நொந்து போயிருந்தவளுக்கு அவனது அக்கறையான விசாரிப்பு அவளை விசும்ப வைத்தது.

அவளது விசும்பலைக் கேட்டவன், ''பிந்து என்னாச் சுமா? ஏன் அழுகிறாய்?'' என்று மீண்டும் மீண்டும் கேட்க,

ஒரு கேவலுடனே அவள் சாரதாவும், பிரகாஷும் தன் னைத் தனியாக விட்டுச் சென்றதையும், மூர்த்தி வந்து தொந்தரவு தந்ததையும் கூறினாள்.

பின் மெதுவாக, ''நாம கல்யாணம் பண்ணிப்போமா?'' என்று கேட்டாள்.

''பத்து நிமிஷத்திலே திரும்ப கூப்பிடுறேன்டா பிந்து'' என்று சொல்லி அழைப்பை வைத்தவன் சொன்னபடி பத்து நிமிடத்திற்குள் திரும்பவும் அழைத்தான்.

''பிந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்குற முடிவில் எந்த மாற்றமும் இல்லை தானே?''

''மாற்றம் எதுவும் இல்லை.''

''நீ என்னை நம்புறே தானே?''

''கண்டிப்பா நம்புறேன்!''

''அப்படின்னா நாம நாளைக்குக் காலையிலே கல்யாணம் பண்ணிக்குறோம். என்னால உன்னைத் தனியா விட முடியாது. அந்த மூர்த்தியிடம் இருந்து உன்னைப் பாதுகாக்கணும் என்றால் நான் உன்னை உடனே கல்யாணம் செய்தால் தான் சரியா வரும்.''

''அது கரெக்ட் தான். ஆனால் நாளைக்கே ஏன் பண்ணனும்?''

''நாளையோட ஆனி மாசம் முடியுதுமா. அடுத்த நாள் ஆடி பிறந்துவிடும். அப்புறம் ஒரு மாசம் கல்யாணம் பண்ண முடியாது. என்னால உன்னை ஒரு மாசத்துக்கு தனியா விட்டு வைக்க முடியாது. என்ன சொல்கிறாய்?''

''ம்ம் சரி...'' என்று அவள் அரை மனதாக முணுகவும்,

''தென் திருப்பதின்னு சொல்லுற திருவந்திபுரம் தேவ நாத பெருமாள் கோவிலுக்குப் போயிருக்கியா பிந்து?''

''பாண்டிச்சேரியில் இருந்து வெறும் முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற கோவில். அதுக்குப் போகாமல் இருப்பேனா?''

''ஓ.கே. அந்தக் கோயிலில் வைச்சுத் தான் நமக்கு நாளைக்குக் கல்யாணம். நான் காலையில் சீக்கிரம் வந்துடுறேன். நீ ரெடியா இரு!'' என்று சொல்லி வைத்து விட்டான்.

இன்னும் கொஞ்ச நேரம் பேசினால் இவள் மனம் மாறி விடுவாள் என்று நினைத்தானோ?

கலவையான உணர்வுடன் தூங்கச் சென்றவள் அதி காலையிலேயே எழுந்தாள். அவனும் அடிக்கடி போன் செய்து பேசிக் கொண்டே இருந்தான்.



'எழுந்து விட்டாயா? குளித்து விட்டாயா?' என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

பிருந்தா போன வாரம், தான் புதிதாக வாங்கிய பிங்க் நிறப் பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டு தயாரானாள்.

அவன் சொல்லி இருந்தபடியே சீக்கிரமே அவளது வீடு வந்து சேர்ந்தான். தான் வாங்கி வந்திருந்த மல்லிகைப் பூவை அவளிடம் கொடுத்து சூடிக் கொள்ளச் சொன்னான்.

''சேலை சிம்பிளா ரொம்ப அழகா இருக்கு. பட்டுப் புடவையா?'' என்றான்.

''ம்ம்ம்... சாப்ட் சில்க்ன்னு ஒரு வெரைட்டி. அதிக கனம் இருக்காது. என் பிரண்டு ப்ரியா இந்த வகைப் புடவை காஸ்ட்லியா இருக்கும்ன்னு சொன்னாள். ஆனா நான் இதை வெறும் நாலாயிரம் ரூபாய்க்கு தான் வாங்கினேன். சீப் அன்ட் பெஸ்ட்டா இருக்கு தானே?'' என்று குனிந்து தன் புடவையைப் பார்வையிட்டபடியே கேட்டவள்,

தலை நிமிர்ந்து அவனைப் பார்த்த வண்ணம், ''ஆமா எனக்குத் தான் யாரும் இல்லை. உங்க வீட்டிலே யார் எல்லாம் இருக்காங்க?'' என்று கேட்டதும்,

''அது எப்படி பிந்து, நீ எப்பவுமே இப்படித் தானா? ஐ மீன் லேட் பிக்-அப் தானா? என் பேரையும் ரொம்ப சீக்கிரமா கேட்டாய்... இப்போ என்னைப் பற்றி டீடெய்ல்ஸையும் ரொம்ப சீக்கிரமா கேட்கிறே? அப்புறம் கல்யாணம் பண்ண மட்டும் எப்படி சம்மதித்தாய்?'' என்று விஷ்ணு கேட்டதும்,

''எனக்கு நீங்க தானே முக்கியம். உங்களைப் பற்றின டீடெய்ல்ஸ் எல்லாம் எனக்கு ரெண்டாம் பட்சம் தானே!

நீங்க யாரா இருந்தாலும் எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு'' என்று சொன்னதும் அவளை இழுத்து அணைத்தான்.

''தாங்க்ஸ் மா'' என்று அவளது காதில் சொன்னவன் சரேலென விலகி,

''நான் தனிக்காட்டு ராஜா தான். வா கிளம்பலாம். டைம் ஆகுது'' என்று சொல்லி தான் வந்த வாடகைக் காரில் ஏறி அமர்ந்தான்.

பிருந்தாவும் வேறொன்றும் கேட்காது அவனுடன் சென்றாள். அவர்கள் கோவிலுக்குச் சென்று சாமியைத் தரிசித்து முடித்த பின் விஷ்ணு அவளது கழுத்தில் தாலியைக் கட்டினான்.

அவர்கள் பிரகாரம் சுற்றி வந்து ஒரு ஓரமாக அமர்ந்த பொழுது அவளது வாடிய முகத்தைப் பார்த்து அவன் காரணம் கேட்க,

''இப்படி யாருமே இல்லாமல் கல்யாணம் பண்ணியது என்னமோ சங்கடமா இருக்கு'' என்றாள்.

''யாருமே இல்லையா? இன்னைக்கு முஹூர்த்த நாள். இங்க எத்தனைக் கல்யாணம் நடந்தது. பார்த்தாய் தானே?''

''ப்ச்சு... அவங்களுக்கு எல்லாம் அவங்க சொந்தக்காரங்க கூட இருந்தாங்க தானே! நமக்குத் தான்...''

''ஏன் நம்ம கூடத் தான் தேவநாத பெருமாள் இருந்தாரே!'' என்று சொல்லி அவளது வாயை அடைத்து விட்டான்.

பின் மலை ஏறிச் சென்று ஹயக்கீரிவரை தரிசித்து விட்டு மதியச் சாப்பாடை வழியில் முடித்துக் கொண்டனர்.



மாலை ஒரு படத்திற்குக் கூட்டிச் சென்றான். இரவு உணவையும் முடித்தபின் வீடு திரும்பினார்கள்.

காலையில் அவன் பெருமாள் துணை இருந்தார் என்று சொன்ன பொழுது அவளது கலக்கம் மறைந்தது. ஆனால். வீட்டிற்குள் வந்து பெற்றோர்களின் புகைப் படத்தைப் பார்த்ததும் அவள் மறுபடியும் கலங்க ஆரம்பித்தாள்.

அவர்களது புகைப்படத்தின் அருகே நின்று கொண்டு அவள் கண்ணீர் சிந்தவும் அவளைத் தோளோடு அணைத்தார் போல் நின்றவன்,

''இவங்க தான் உங்க அம்மா, அப்பாவா பிந்து? அவங்க எப்போ இறந்தாங்க?'' என்று கேட்டான்.

எப்போ என்று சொல்ல வாய் திறந்தவளுக்கு அப்பொழுது தான்... அன்று தான் அவர்கள் இறந்த தினம் என்ற ஞாபகம் வர, அவன் மீது சாய்ந்து கொண்டு அவள் கதற ஆரம்பித்தாள்.

அவளை ஆறுதலாக அணைத்தவன் அவளிடம் இருந்து விஷயத்தைக் கேட்டறிந்து கொண்டான். அவளை அவன் ஆறுதலுக்காக அணைக்க அவள் விலகவுமில்லை. அவனை விலகச் சொல்லவும் இல்லை.

பெற்றோர்கள் இறந்த பின் தனக்கென்று கிடைத்த முதல் உறவை அவள் விட்டு விலகிட நினைக்கவில்லை.

அதனால் இந்த இரவில் அவர்களுக்கு இடையே கூடல் கூட அவளது வருத்தமான மனநிலையை மாற்றும் அருமருந்தாய் அமைந்து போனது.



# 7



மறுநாள் காலையில் அவள் கண் விழித்துப் பார்த்த பொழுது விஷ்ணு அவளருகில் இல்லை. மேஜை மேல் ஒரு பேப்பர் இருக்க... அதை எடுத்துப் பார்த்தாள்.

'அவசரம். அதனால் செல்கிறேன்' என்று மூன்றே மூன்று வார்த்தைகள் மட்டுமே எழுதப்பட்டு இருந்தது. அது கூடக் கோழிக் கிறுக்கலாய் தான் இருந்தது.

பிருந்தா அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சரி கொஞ்ச நேரம் கழித்து போன் பண்ணுவார் என்று நினைத்துக் கொண்டு வேற வேலைகளைப பார்க்கப் போனாள்.

சித்தியும், ப்ரியாவும் ஊரில் இல்லாமல்... கணவனும் அருகில் இல்லாமல் அவளுக்கு ரொம்பவே போர் அடித்தது. மாலை வரை எப்படியோ பொழுதை ஓட்டியவள் அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாதவளாய் கணவனின் கைப்பேசி எண்ணிற்கு அழைத்தாள். அது ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.

பத்து நிமிட இடைவெளியில் மறுடியும், மறுபடியும் முயற்சிக்க அதுவே வந்தது. இரவு வரை அழைத்துப் பார்த்து ஓய்ந்து போனாள்.

'அவசரம் என்று கிறுக்கி இருந்தாரே... என்ன அவசரம் என்று சேர்த்து எழுதி இருக்கலாம் தானே? எங்கே போகிறேன்... எப்போ வருவேன்... என்று எந்த செய்தியும்



சொல்லாமல் போனால் நான் என்னவென்று நினைத்துக் கொள்வது?' என்று பரிதவித்தாள்.

மூர்த்தியால் தொல்லை வருமோ என நினைத்துக் கதவை இறுக மூடி வைத்தவள் ஹாலில் கூட விளக்கை ஏற்றாது படுக்கையறையிலேயே முடங்கினாள்.

மறுநாள் அவள் தூங்கி எழும் வரையும் கூட அவளுக்கு அவனிடம் இருந்து எந்த செய்தியோ, போனோ வரவில்லை.

'நாளைக்கு பதிவுத் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று சொன்னார். இப்படி எங்கேயோ போய் உட்கார்ந்துக்கிட்டாரே!' என்று தவித்தாள்.

'சித்தி வேறு சொத்தை எழுதிக் கேட்பாங்களே. நான் என்ன பதில் சொல்வேன்?' என்று மறுகினாள்.

ஆனால் அவள் ஒரு முறை கூட அவன் தன்னை ஏமாற்றி விட்டுச் சென்றிருப்பானோ என்று மறந்தும் நினைத்துப் பார்க்கவில்லை.

நினைத்துப் பார்த்திருக்க வேண்டுமோ? ஆனால் இனி நினைத்து என்ன பயன்?

யாருமில்லாத திருமணத்தைச் செய்யத் தூண்டிய போதே அவள் சுதாரித்து இருக்க வேண்டும்.

இரவு, பகல் என்று கால நிலையில் மாற்றம் நிகழ்ந்ததே தவிர அவளது வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கணவனிடம் இருந்து எந்தத் தகவலும் தரவில்லை. அவன் கணவன் தானா? என்று முதன் முதலாக அவளுக்குச் சந்தேகம் வந்தது.

நான்கு நாட்கள் கழித்து சித்தி வந்து சேர்ந்த பொழுது அவள் மறந்தும் தனது திருமணத்தைப் பற்றிச் சொல்லவில்லை.

'என்னவென்று சொல்வது? எங்கிருந்தோ ஒருத்தன் வந்தான். என்னைக் கோவிலில் வைத்து மணம் முடித்தான். எனது பெண்மையைச் சூறையாடிய பின் காணோம் என்றா சொல்ல முடியும்.

அப்படி மட்டும் நான் சொன்னேன் என்றால்... அப்போ அந்த மூர்த்தியைக் கல்யாணம் பண்ணிக் கொள் என்று சித்தி யோசனை சொல்லக் கூடும். அது வேலியில் போகும் ஓணானைத் தூக்கி மடியிலே விட்ட கதையாகி விடும்' என நினைத்துக் கொண்டாள்.

பிருந்தாவின் நிலை தெரியாமல் சித்தி வேறு 'பிருந்தா, என்ன முடிவு செய்து இருக்கிறாய்?' என்று கேட்க ஆரம்பித்தார். அவரைச் சமாளிக்க முடியாமல் பிருந்தா திணறினாள்.

அவரது ஊர் எதுவென்று சொன்னார்? என யோசித்துப் பார்த்தாள். அப்படி ஒரு பேச்சே தங்களுக்கு இடையே வரவில்லை என்பதை உணர்ந்தாள். அவன் ஒரு மெடிக்கல் ரெப் என்பது மட்டுமே தானறிந்த ஒரே செய்தி என்பதை நினைத்துப் பார்த்தவளுக்குத் தன்னை நினைத்தே வெட்கமும், அவமானமுமாக இருந்தது.

பதினைந்து நாட்கள் கடந்த நிலையில் முதன் முறையாக விஷ்ணுவின் செல்போன் எண்ணில் என்கேஜ்ட் டோன் கேட்டது.

பிருந்தா சிறகில்லாமல் பறக்க ஆரம்பித்தாள். அப்பாடா இத்தனை நாட்களாக ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது. இன்று ஒரு வழியாக அது வேலை செய்வதற்கு



அறிகுறியாக என்கேஜ்ட் டோன் கேட்கிறதே. இன்னும் சிறிது நேரத்தில் கணவனை அவனது கைப்பேசியில் பிடித்துப் பேசிவிடலாம். விரைவாக கல்யாணத்தை ரிஜிஸ்டர் செய்துவிடலாம் என மனக்கோட்டை கட்டியவள் விடாது அந்த எண்ணிற்கு முயற்சித்துக் கொண்டே இருக்க... இரு நிமிடங்களுக்குப் பின் ரிங் போகும் ஒலி கேட்டது.

போனை எடுத்து ஹலோ சொன்னவன் விஷ்ணுவே தான்! பிருந்தாவிற்குக் கோடிப் பூக்களைத் தலையில் கவிழ்த்தது போல் இருந்தது.

''ஹலோ என்னங்க இப்படிச் சொல்லாமல் போயிட்டீங்க? ஏன் இத்தனை நாளா ஒரு போன் கூடப் பண்ணலை. நான் உங்களைக் காணாமல் தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா?'' என்று இவள் உருக...

''உங்களுக்கு யார் வேண்டும்?'' என்று அவன் கேட்ட கேள்வியில் இவளுக்கு அடிவயிறு கலங்கியது.

''விஷ்ணு...'' என்று அவள் கூப்பிட,

''சாரி ராங் நம்பர்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

இவள் அடுத்த நொடியே திரும்பவும் முயற்சித்தாள்.

''விஷ்ணு விளையாடாதீங்க. ஏன் இப்படிப் பண்ணுறீங்க?'' என்று கேட்டவுடன்...

''நான் தான் ராங் நம்பர்ன்னு சொல்லிக் கட் பண்ணுறேன் இல்ல... கட் பண்ணினா பேசாமல் ஒதுங்கிப் போகத் தெரியாதா உனக்கு?'' என்று மிகக் கடுமையாகச் சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தான்.

அவள் சற்றும் மனம் தாராமல் மீண்டும் ஒரு முறை முயற்சிக்க... அது இம்முறை அணைக்கப்பட்டிருந்தது.

அப்படி என்றால் நாம ஏமாந்து விட்டோமா என்ற எண்ணம் தோன்ற செய்வதறியாது திகைத்தாள்!

இரவு முழுவதும் தலையணையைக் கண்ணீரால் கழுவிக் கொண்டிருந்தாள்.

விடிந்த பின் எழுந்து குளித்து வெளியே வர... சித்தி அருகே இருக்கும் கோவிலுக்குச் செல்வதாகக் கூறி வெளியேறினார்கள்.

அவர்கள் சென்ற ஐந்தாவது நிமிடத்திலேயே மூர்த்தி பல்லை இளித்துக் கொண்டு வந்து நடு ஹாலில் நின்றான்.

'ஓ காட்! இவன் தொல்லை இத்தனை நாளாக இல்லை என்று நினைத்தேனே! இவன் திடீரென எங்கிருந்து முளைத்தான்?' என அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவனது பேச்சு அவள் மனதில் எழுந்த கேள்விகளுக்கு பதில் கூறியது.

''நான் ரெண்டு வாரம் நார்த் இந்தியா டூர் போயிருந்தேன். உன்கிட்டே சொல்லிட்டுப் போகலாம்ன்னு அன்னைக்கு வந்தேன். விடாமல் நானும் பெல் அடிச்சுப் பார்த்தேன். நீ கதவைத் திறக்கலை. ரெண்டு வாரம் ஒரே மஜாவா இருந்தது'' என்று அவன் கண் சிமிட்டிச் சொன்ன விதத்தில்... அவனது மஜாவிற்கான விளக்கம் புரிந்த பிருந்தாவிற்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

மேலும் அவன் வாயில் இருந்து வீசிய துர்நாற்றம் வேறு, 'காலையிலே குடிச்சானா? இல்லை நேற்றுப் போட்டச் சரக்கு தான் இந்தளவுக்கு இன்னும் நாறுதா?' என்று வேறு எண்ண வைத்தது.

''நான் என் கேர்ள் பிரண்டுக்கு கிஃப்ட் வாங்கும் போது உனக்கும் அதே மாதிரி ஒன்று வாங்கி வந்தேன்'' என்று சொல்லி ஒரு கவரை நீட்டினான்.



'இவன் யார் எனக்குப் பரிசளிக்க!' என்ற எண்ணம் தோன்ற பிருந்தா அவனை முறைத்துப் பார்த்தாள். அவன் அதைச் சட்டை செய்யவில்லை.

தனது பரிசை பிருந்தா கையில் வாங்கவில்லை என்றதும் அவனே அதனுள் இருந்த ஒரு இரவு உடையை எடுத்துப் பிரித்துக் காட்டினான்.

உள்ளிருக்கும் அனைத்தும் வெளியே தெரியும் வண்ணம் இருந்த உடையை இவன் தன் கேர்ள் பிரண்டிற்கு வாங்கிக் கொடுத்தானாம். அவளோ இவனோடு கூத்தடிக்கிறவள். அவளுக்குச் சரி தான். ஆனால் எனக்கு இதை எந்த தைரியத்தில் பரிசளிக்கிறான் என்று நினைத்து பிருந்தா கடுப்பானாள்.

அவன் அதை இவள் மேல் வைத்துப் பார்க்க எண்ணியவனாய் அந்த உடையை நீட்டிக் கொண்டே முன்னே வர பிருந்தா திகிலுடன் பின்னடைந்தாள்.

சரியாக இவர்கள் வீட்டு வேலைக்காரி அந்த நேரம் பார்த்து துடைப்பத்தை எடுத்துக் கொண்டு வர... மூர்த்தி கையில் இருந்த சோபாவில் போட்டு விட்டு, ''நான் வரேன்...'' என்று சொல்லிவிட்டு ஒடியே போனான்.

வேலைக்காரி பிருந்தாவின் அருகில் வந்து, ''இவன் என்னாத்துக்கும்மா நம்ம வீட்டுக்கு வரான்? சரியான காலிப் பயல் மா. ஒரு நாள் எங்கிட்ட ராங் காட்டினான்... துடப்பக் கட்டையாலேயே நாலு காட்டு காட்டினேன். அதான் என்னைப் பார்த்ததும் பயந்து அலறி அடிச்சிட்டுப் போறான். இவன் கூட எல்லாம் பேச்சு வைச்சுக்காதீங்கம்மா'' என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

அவன் கொண்டு வந்த துணியைத் தொடக் கூட விரும்பாத பிருந்தா வேலைக்காரியிடம் அதைத் தீ

வைத்துக் கொளுத்தி விடச் சொன்னாள். அவள் அதை எடுத்துச் சென்றதும் சோர்ந்து போய் அமர்ந்து விட்டாள்.

எதிர்காலம் அவளை மிரட்டியது.

சில நிமிடங்களில் திரும்பி வந்த சாரதா பிருந்தாவின் முகத்தை ஒரு எதிர்பார்ப்புடன் பார்த்தவாறே இருந்தார்.

பின் மெதுவாக பிருந்தாவிடம், ''நம்ம வீட்டுக்கு யாரும் வந்தாங்களாமா?'' என்று கேட்டார்.

''இல்லையே...'' என்று பிருந்தா மறுக்க,

''வரலையா? என்று கேட்டவர், ''வந்திருக்கணுமே?'' என்று முனகிக் கொண்டே அவர் அங்கிருந்து நகர்ந்தார்.

'அப்படி என்றால் இது சித்தியின் துணையுடனா நடந்தது?' என்று பிருந்தா விக்கித்துப் போனாள்.

வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்ய முடியும்? பிருந்தாவிற்கு இனியும் இந்த வீட்டில்... ஏன் உயிரோடு இருக்க வேண்டுமோ என்று கூடத் தோன்றியது.

சாப்பிடாமல் வீட்டை விட்டு வெளியேறியவள் ஆட்டோ பிடித்து நேராக வரதராஜ பெருமாள் கோவிலுக்கு வந்தாள்.

பிரகாரத்தில் ஒரு ஓரமாய் அமர்ந்து கொண்டு மனதிற்குள் பெருமாளுடன் சண்டை போட ஆரம்பித்தாள்.

'இந்த நிலை எனக்கு ஏற்பட நான் என்ன தவறு செய்தேன்? யார் குடியைக் கெடுத்தேன்? உன்னை நொடி தோறும் வணங்கியதற்கு இது தானா நீ கொடுக்கும் பரிசு?' என்று பெருமாளைப் பார்த்துக் கேட்டவள் சோர்ந்து போய் அமர்ந்து விட்டாள்.

அவளது கைப்பேசி அதிர்ந்து யாரோ அவளை அழைப்பதை உணர்த்தியது. எடுத்துப் பார்த்தாள். ப்ரியா



தான் அழைத்திருந்தாள். வெளிநாடு சென்றிருந்தவள் அன்று தான் ஊர் திரும்பியிருந்தாள்.

பிருந்தா கைப்பேசியை எடுத்து அழுத்திக் காதில் வைக்கவும்,

''ஹேய் பிருந்தா! எப்படி இருக்கே?'' என்று உற்சாகமே உருவாக அவள் கேட்க,

''உயிரோடு இருக்கேன்'' என்று விரக்தியுடன் இவள் பதில் சொல்ல,

''பிருந்தா என்ன ஆச்சு? இப்போ எங்கே இருக்கே? என்று பதட்டத்துடன் ப்ரியா கேட்க,

''வரத ராஜப் பெருமாள் கோவில்'' என்று பிருந்தா சொன்னதும்,

''நீ அங்கேயே இரு! நான் உடனே கிளம்பி வரேன்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தவள் அடுத்த நொடியே கோவிலை நோக்கிக் கிளம்பினாள்.

ப்ரியா கோவிலை வந்தடைந்து பிருந்தாவைத் தேடினாள். சோகமே உருவாக ஒரே இடத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த பிருந்தாவைக் கண்டு அவளருகில் சென்று அழைக்க... பிருந்தாவிடம் எந்தவொரு அசைவும் இல்லை.

ப்ரியா அவளது தோள் தொட்டு உலுக்க... திரும்பிப் பார்த்த பிருந்தாவின் பார்வையில் ஜீவனே இல்லாததைக் கண்ட ப்ரியா திகைத்துப் போனாள்!

''பிருந்தா என்ன ஆச்சு?'' என்று ப்ரியா கேட்டவுடன்,

அதற்கென்றே காத்திருந்தார் போல்... தன் மனதில் இருப்பதைச் சொன்னாலாவது பாரம் குறையாதா என்ற எண்ணத்தில்... கன்னங்களில் கண்ணீர் உருண்டோட

மடமடவென்று நடந்தது அனைத்தையும் கூறி முடித்தாள்.

''என்ன... யாரையோ உன் கழுத்தில் தாலி கட்ட சம்மதித்தாயா? எப்படி பிருந்தா? உன்னைச் சேர்ந்தவங்கன்னு உன் பக்கத்தில் ஒருத்தர் கூட இல்லாமல்... எங்க யாரிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல்... உனக்குச் சொல்லணும் என்று தோணலையா?'' என்று கேட்டாள். மிதமிஞ்சிய அதிர்ச்சியில் இருந்தவளுக்கு வார்த்தைகள் கூடக் கோர்வையாக வரவில்லை.

''அவர் என் பக்கத்தில் இருந்த போது எனக்கு எதைப் பற்றியும்... ஏன் யாரைப் பற்றியும் சிந்திக்கத் தோன்றவே இல்லை ப்ரியா. நான் எப்பவுமே சொல்லுவேன் தானே... பொது இடத்தில் நீங்க யாராவது என் பக்கத்திலே இருந்தால் மட்டும் தான் நான் பயப்படாமல் இருக்கேன் என்று. ஆனால்·அறிமுகம் இல்லாத அவர் என் பக்கத்தில் வந்து இவ்வளவு பேசிப் பழகியும் கூட எனக்கு பயம் ஏற்படவே இல்லை. அவரருகில் என் வெறுமை எல்லாம் மறைந்தது. நீங்க யாருமே ஊரில் வேறு இல்லையா...''

''அவர் என்ன அவர். சரியான குட்டிச் சுவர். அவன் போட்டோ ஏதாச்சும் வச்சு இருக்கியா?''

''இல்லை. கல்யாணத்தில் கூட அவரோட கேமராவில் தான் போட்டோ எடுத்தோம் ப்ரியா.''

''உங்க லாயர் அங்கிளிடம் விஷயம் சொன்னியா?''

''இல்லை ப்ரியா. அவருக்கு இந்தப் பிரச்சனை... அதாவது மூர்த்தி பற்றிய சிக்கல் எதுவும் தெரியாது.''

''அப்படின்னு எவள் சொன்னாள்? நான் தான் டூருக்குப் போகும் முன்பே அவரைப் பார்த்து உன் விஷயம்



முழுசும் சொல்லிட்டுத் தானே போனேன். உனக்கு என்னோட ஃபேமிலி பிரண்ட் ஆதித்யா பற்றிச் சொல்லி இருக்கேன் தானே! எனக்கு அண்ணன் மாதிரின்னு... அவரை உனக்கு மாப்பிள்ளையாகப் பேசி முடிக்கச் சொல்லி அவர் பற்றிய விவரம் எல்லாம் கொடுத்து விட்டுத் தானே போனேன். உன் அங்கிள் கூட மும்பை போகும் முன்னாலே ஆதித்யாவைச் சந்திச்சதா சொன்னாரே! அவருக்கு ஆதியைப் பிடிச்சிருக்குன்னு கூடச் சொன்னாரே! உன் பிரச்சனை சீக்கிரமா முடியப் போகுதுன்னு தானே நான் இத்தனை நாளாய் பாரினில் நிம்மதியா இருந்தேன்.''

''ப்ச்சு...'' என்று பிருந்தா சலித்துக் கொள்ளவும்,

''எப்படி பிருந்தா வெறும் பேரை மட்டும் வைச்சு ஒருத்தனை நம்பினே?''

''பேர்... அது தான் ப்ரியா இத்தனைப் பிரச்சனைக்கும் காரணம். எங்கப்பா என்னிடம் சொல்லியிருந்த என் வருங்காலக் கணவரோட பேர் விஷ்ணு... அதில் தான் நான் மதி மயங்கிப் போனேன். என்னைப் பெத்தவங்களே இந்த மாப்பிள்ளையை அனுப்பி இருப்பதா நம்பிட்டேன். அவரும் ஜோசியம் எல்லாம் சரியாச் சொன்னார் தெரியுமா!'' என்று சிறு குழந்தை போல் சொல்பவளைப் பார்த்து அழுவதா, திட்டுவதா என்று தெரியாமல் ப்ரியா விழித்தாள்.

''அப்படி என்ன ஜோசியம் சொன்னான்?'' என்று ப்ரியா கேட்டவுடன் பிருந்தா அவனது ஜோசியத்தை ஒன்றுவிடாது எடுத்துக் கூறினாள்.

''வெயிட்... வெயிட்... நீ இப்ப சொன்ன எல்லாமே நாம அன்னைக்குப் பீச்சிலே பேசின விஷயமா இல்ல

இருக்கு. அப்படின்னா நாம பேசினதை படகுக்குப் பின்னாலே இருந்து எவனோ ஒட்டுக் கேட்டு விட்டானோ? ஓ மை காட்!'' என்று சொல்லி ப்ரியா தன் தலையில் அடித்துக் கொண்டாள்.

'அப்படியும் இருக்குமோ?' என்று பிருந்தா சிந்தித்துப் பார்த்து மனம் நொந்தாள்.

'பகலில் பக்கம் பார்த்துப் பேசு' என்று சொன்ன நம் பெரியவர்கள் பொது இடத்தில் பொதுவான விஷயம் மட்டும் பேசு என்றும் சொல்லி வைத்திருக்க வேண்டுமோ?

படகின் மறைவில் இருந்து கொண்டு விஷ்ணு இவர்கள் பேசியதைக் கேட்டதால் தான் பிருந்தா வாழ்க்கை சோதனையாகிப் போனதோ?!

''சரி பிருந்தா அவன் போன் நம்பரைக் கொடு. போலீஸில் சொல்லி ஆளை டிரேஸ் பண்ணுவோம்.''

''கண்டுபிடிச்சு என்ன செய்யப் போறே?''

''ஒருத்தன் உன்னை ரேப் பண்ணிட்டு கண்காணாமல் மறைஞ்சு போயிருக்கான். அவனை அப்படியே விடச் சொல்லுறியா?''

''என்னது ரேப்பா?''

''பின்ன பேருக்கு ஒரு மஞ்சக் கயிற்றைக் கட்டி பாலிஷ்டா அவன் செஞ்ச வேலைக்கு பேரு என்ன? அன் நம்பரைத் தா'' என்று கொதித்துப் போய் கேட்ட ப்ரியா விடம்,

''அவனை மாட்டி வைக்க என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை ப்ரியா. இதை வெளியே சொன்னால் என் பேர் தான் கெட்டுப் போகும். எல்லோரும் சேர்ந்து என்னை



தினம் தினம் சாகடிப்பாங்க. எங்க சித்தி அந்த விஷ்ணுக்கு மூர்த்தியே மேல்ன்னு சொல்லுவாங்க. மொத்தத்தில் இந்த விஷயம் வெளியே தெரிஞ்சால் நான் சாவது உறுதி'' என்றாள்.

''ஒருவேளை உன்னை அந்த விஷ்ணு சம்மதிச்சி ஏத்துக்கிட்டால்...'' என்று சந்தேகமாகப் ப்ரியா கேட்க,

''அப்படி ஏத்துக்கிறவன் தான்... நான் தான் உன்னைக் கட் பண்ணுறேனே! உனக்கு அதுக்கு அர்த்தம் புரியாதா என்று கேட்கிறானா? நான் அதுக்கு அப்புறமும் அந்த நம்பரை விடாது முயற்சித்துப் பார்த்தேன். வேலை செய்யலை. இதிலே இருந்து உனக்கும் புரியலையா?! நீ தான் எப்பவும் சொல்லுவியே. என்னை ஏமாத்துறது ரொம்ப ஈஸின்னு.

அது உண்மையாகிடுச்சு பார்த்தியா! ப்ச்சு... விடு ப்ரியா. இப்போ நான் வாக்குக் கொடுத்தபடி இந்தச் சொத்தை எப்படி பிரகாஷ் பேரிலே மாற்றுவது?''

''என்னது வாக்கா? போடி பேக்கு!'' என்று ப்ரியா எகிறினாள்.

''செய்நன்றின்னு ஒண்ணு இருக்கே ப்ரியா?''

''இன்னைக்கு மூர்த்தி விஷயத்திலே உங்க சித்தி நடந்துகிட்டதுக்குப் பேரு பச்ச துரோகம். உன் செய்நன்றி அந்த துரோகத்துல கழிஞ்சிடுச்சு.''

''அவங்க வேணா நேரத்துக்கு ஒரு நிறம் மாறலாம். என்னால அப்படி மாற முடியாது ப்ரியா. நான் என் மனசாட்சிக்குப் பயப்படுறவள். நான் அவங்களுக்குக் கொடுத்த வாக்கு என் மனசாட்சிக்குத் தெரியுமே!

எங்கப்பா, அம்மா இறந்த பின்னாலே இந்த ஏழெட்டு வருஷமா அவங்க ரெண்டு பேரும் இல்லைன்னா நான் எப்பவோ தனிமை உணர்விலே செத்துப் போயிருப் பேன். எனக்குள் ஒரு வெறுமை உணர்வு ஏற்படாமல் பார்த்துக்கிட்டது அவங்க ரெண்டு பேரும் தான். அதுக்காகவாது நான் சொன்னபடி அந்தச் சொத்தை அவங்களுக்குத் தரணும்.''

இரண்டு நிமிடங்கள் அமைதியாக இருந்த ப்ரிய...

''அப்போ நீ எங்க ஆதியைக் கல்யாணம் பண்ணிக்கோ. அவங்களுக்கு உன் சொத்து ஒரு பொருட்டா இருக்காது. அதனால உன் கண்டிஷனுக்கு அவரும் அவரோட அம்மாவும் ஒத்துக்குவாங்க.''

''நான் எப்படிப் ப்ரியா அவரை...'' என்று தயங்கியவள் தன் தாலியை கொஞ்சம் வெளியே இழுத்துக் காட்டிக் கேட்க...

தனது கண்களை மூடி யோசித்த ப்ரியா,

''உனக்குப் பாரதியார் பாட்டு ரொம்பப் பிடிக்கும் தானே? அவர் காளியைப் பார்த்துக் கேட்டதையே நீயும் கேள்.

நின்னைச் சில வரங்கள் கேட்பேன் – அவை
நேரே இன்றெனக்குத் தருவாய் – என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் – இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் – இனி
என்னைப் புதியவுயிராக்கி – எனக்



கேதுங் கவலையறச் செய்து – மதி
தன்னை மிகத் தெளிவு செய்து – என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.

நான் பழைய கவலைகளை... வாழ்க்கையை மறந்து சந்தோஷத்துடன் வாழ எனக்குப் புது வாழ்வைத் தா! என்று கேள்'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் பிருந்தாவின் கழுத்தில் இருந்து தாலியைக் கழட்டி அவள் என்னவென்று உணரும் முன் உண்டியலில் காணிக்கையாக்கி விட்டாள்.

''என்ன காரியம் ப்ரியா இது!'' என்று அதிர்ந்து போய் பிருந்தா கேட்க,

''இத்தோடு... இந்த நிமிஷத்தோடு... இந்தத் தாலி யோடு விஷ்ணுவின் அத்தியாயம் உன் வாழ்க்கையில் முடிவு பெற்றது. அது உன்னோடும், என்னோடும் மறைந்து போகப் போகுது. வா போகலாம்'' என்று ஒவ்வொரு வார்த்தையாக அழுத்திச் சொன்னவள் அவளை அங் கிருந்து கூட்டிச் சென்றாள்.

செய்வதறியாது பிருந்தா அவள் பின்னே சென்றாள்.

''எங்க போறோம்? எங்க வீட்டுக்கு மட்டும் வேண் டாம்'' என்று சொன்னவளின் நிலையைக் கண்டு ப்ரியா விற்குப் பரிதாபம் தோன்றியது.

''உன்னை எங்க வீட்டிலே தான் என்னால் தங்க வைக்க முடியாது. சென்னையில் எங்க அத்தை ஒருத்தங்க தனியா இருக்காங்க தானே! உன்னை அவங்க வீட்டில் தங்க வைக்கப் போறேன். அதுக்கு உன் திங்ஸை எல்லாம் பேக் செய்ய நாம முதல்ல உன் வீட்டுக்குப் போறோம்'' எனச் சொல்லித் தனது காரில் ஏற்றிக் கூட்டிச் சென்றாள்.



# 8



தோழிகள் இருவரும் வீட்டிற்குப் போன பொழுது சாரதா வீட்டில் இல்லை. 'ரொம்ப நல்லதாப் போச்சு' என்று ப்ரியா நினைத்துக் கொண்டாள்.

வேலைக்காரியின் துணையுடன் அவர்கள் மூவரும் பெட்டிகளில் பிருந்தாவின் துணிமணிகளை அடுக்கினர். பிருந்தா முக்கியமான நகைகள், பேங்க் பாஸ்புக், பத்திரங்கள் முதலியவற்றைத் தனியாக அடுக்கினாள்.

''கொஞ்ச நாள் கழிச்சத் தான் பிருந்தா வருவாள்'' என்று வேலைக்காரியிடம் சொல்லிய ப்ரியா பிருந்தாவைக் கூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

காரில் செல்லும் பொழுதே ப்ரியா தனது தந்தைக்கு அழைத்துத் தான் சென்னையில் அத்தை வீட்டிற்குச் செல்வதாகவும் அதை அவரே அம்மாவிடம் தெரிவித்து விடும்படியும் கூறினாள்.

''பிருந்தா எங்கம்மாக்கு மட்டும் உன்னைப் பிடிச்சிருந்தால் என் வீட்டிலேயே உன்னைத் தங்க வைக்கலாம். ஏனோ அவங்களுக்கு உன்னைப் பிடிக்காமல் போயிடுச்சு. நான் நினைக்கிறேன்... நீ என்னை விட ரொம்ப அழகா இருக்கியா... அதனால எங்கம்மாக்கு உன்னை முதலில் இருந்தே பிடிக்காமல் போயிருக்கும். அந்தப் பொறாமையில் தான் எப்பப் பார்த்தாலும் உன்னிடம் முகம் திருப்பிக்கிட்டே இருக்காங்க'' என்று வருத்தப் பட்டாள்.



''நான் உன்னை விட அழகா? அழகுங்கிறது முகத் தோற்றத்திலா இருக்கு?! நம்ம மனசிலே... நாம திறமையா செய்யும் வேலையில இருக்கு. எனக்கு எல்லாம் எதையும் தனியா திறம்பட நடத்தத் தெரியாது. யாருக்குப் பின்னாலாவது ஒளிஞ்சுக்கத் தான் தெரியும். ஆனால் நீ அப்படிக் கிடையாதே. ப்சு... அதை விடு ப்ரியா. உனக்கு போட டிரஸ் எதுவும் வேண்டாமா ப்ரியா. இல்லை இன்னைக்கே நீ பாண்டி திரும்பி விடுவாயா?'' என்று பிருந்தா கேட்க,

''இல்லை பிருந்தா. என்னோட டிரஸ் சிலது அத்தை வீட்டிலும் இருக்கும். அதனால ஒண்ணும் பிரச்சனை இல்லை. நாம ரெண்டு பேரும் சேர்ந்து தான் அத்தை வீட்டில் இருக்கப் போறோம். நீ கவலைப்படாதே'' என்று கூறவும் பிருந்தா நிம்மதியாக உணர்ந்தாள். அந்த நிம்மதியில் காரில் உறங்கவும் செய்தாள்.

அவளது நிலையைக் கண்ட ப்ரியா இவளை எப்படியாவது ஆதிக்குக் கட்டி வைத்த ஆக வேண்டும் என்று எண்ணினாள்.

அவர்கள் அத்தை வீட்டிற்குச் சென்று சேரும் பொழுது மாலை ஆகி இருந்தது.

பிருந்தாவை அத்தை வீட்டில் விட்டுவிட்டு ப்ரியா அன்றே ஆதித்யாவின் தாயைப் பார்க்கச் சென்றாள். அவரிடம் நலன் விசாரித்துப் பின் பொதுவான விஷயங்களைப் பேசினாள். அதன் பின் அவரிடம் விஷ்ணு விவரம் தவிர்த்து பிருந்தா பற்றி அனைத்து விவரங்களையும் ப்ரியா எடுத்துக் கூறினாள்.

ஆதித்யாவின் தாய் கஸ்தூரி ப்ரியாவிடம், ''எனக்கோ என் பையனுக்கோ பொண்ணோட சொத்து தேவை

இல்லை மா. ஆதிக்குப் பொண்ணு பிடிக்கணும். அதே மாதிரி அந்தப் பொண்ணும் நம்ம ஆதியை கட்டிக்கச் சம்மதிக்கணும்'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

மறுநாள் காலை ஆதித்யாவைக் காண ப்ரியா பிருந்தாவை மருத்துவமனைக்கு காரில் அழைத்து வந்தாள்.

காரில் இருந்து கீழே இறங்காமல், ''இங்க எதுக்கு ப்ரியா வந்திருக்கோம்? யாரைப் பார்க்க?'' என்று பிருந்தாவின் கேள்விக்கு.

''நாம ஆதித்யாவைப் பார்க்க வந்திருக்கோம்'' என்று ப்ரியா பதில் சொன்னாள்.

''ஆதித்யாவையா? நான் எதுக்கு அவரைப் பார்க்கணும்?''

''ஹேய் பிருந்தா! ஆதிக்கு இருபத்தி எட்டு வயசாகுது. செம ஸ்மார்ட்டா இருப்பார். சொந்தமா பெரிய ஜவுளிக் கடை வச்சிருக்கார். சொத்து எல்லாம் நிறைய இருக்கு. அவருக்கு அப்பா கிடையாது. அவங்க அம்மா கஸ்தூரியும், அவரது தம்பி முகுந்தும் அவர் கூட இருக்காங்க.''

''இப்ப எதுக்கு அவரோட பயோ-டேட்டாவை என்னிடம் ஒப்பிக்கிறாய்? நான் தான் இப்போதைக்கு யாரையும் கல்யாணம் பண்ணும் மனநிலையில் இல்லைன்னு நேற்றே சொன்னேன் தானே!''

''சரி அப்போ உன்னோட நன்றிக் கடனை எப்படித் தீர்க்கப் போறே? அதான் சொத்தை எப்படி பிரகாஷ் பேருக்கு மாத்தப் போகிறாய் என்று கேட்கிறேன். அந்த மூர்த்தியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா?''

''மூ...ர்..த்..தி..யா?''

''முடியாது இல்லை! பேசாமல் என்னோட வா. ஆதிக்கு ஒரு ஆபரேஷன் பண்ணியிருக்காங்க. அவரைப்



பார்த்துக்க ஒரு ஆள் தேவைப்படுதுன்னு தான் அவங்களும் உடனே கல்யாணத்தை நடத்தி வைக்க முடிவு செஞ்சு இருக்காங்க. அவர் எழுந்து நடப்பாரா அப்படின்னு எல்லாம் நீயே டாக்டர் அங்கிள்கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கத்தான் உன்னையும் இழுத்துக்கிட்டு வந்திருக்கேன். வா!'' என்றாள்.

''எது எப்படின்னாலும் என்னால எப்படி ப்ரியா இன்னொரு கல்யாணம்...'' என்று இழுத்தவளிடம்,

''இந்தக் காலத்திலே பசங்க, பொண்ணுங்க ரெண்டு பேருமே குடும்ப உறவுகள் பற்றி எல்லாம் யோசிச்சுப் பார்க்காமலும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாததாலும் இன்னைக்குக் கல்யாணம்; நாளைக்கு டைவர்ஸ்; நாளான்னைக்கு இன்னொரு கல்யாணம்ன்னு ஃபாஸ்ட்டா போய்கிட்டு இருக்காங்க. நீ என்னடான்னா எந்தத் தப்பும் செய்யாமல் எவளோ செஞ்ச தப்புக்கு சிலுவை சுமக்கலாம்ன்னு பார்க்கிறாய்'' என்று பொரிந்தாள்.

''நான் இப்படியே உன் அத்தை வீட்டிலேயே இருந்து விடுறேனே ப்ரியா?''

''எத்தனை நாளைக்கு?''

''இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வது'' என்று விழித்துக் கொண்டிருந்த பிருந்தாவிடம்,

''அங்க மட்டும் வந்து அந்த மூர்த்தி தொல்லை பண்ண மாட்டானா? எப்படியும் நீ எங்கே இருக்கேனு தேடி வந்து தெல்லை கொடுக்கத் தான் செய்வான். ஏன்னா நீ பொன் முட்டை இடும் வாத்து. மூர்த்தி மாதிரி ஆளுங்க தொல்லை கொடுத்தால் அப்புறம் என் அத்தையே உன்னை வேற இடம் பார்த்துட்டுப் போயிடுமா என்று

சொல்லிடுவாங்க. அவங்க ஒரு அமைதி விரும்பி. வயசானவங்க வேறு. அதனால பிரச்சனை என்றால் ஒதுங்கத்தான் பார்ப்பாங்க.''

''அப்போ பேசாமல் நான் செத்துப் போறேன்.''

இதைக் கேட்டதும் ப்ரியாவிற்கு மிதமிஞ்சிய ஆத்திரம் வந்தது. ஒரு சில நொடிகள் தன் வாயிலிருந்து வெளி வரத் துடிக்கும் வார்த்தைகளுக்கு அணை போட்டாள். அதன் பின்,

''வா சேர்ந்தே சாவோம்'' என்று பிருந்தாவை உற்று நோக்கியவாறு கூறினாள்.

''நீ எதுக்கு?...'' என்று அதிர்ந்த பிருந்தாவிடம்,

''என் பிரண்டைக் காப்பாத்த முடியலைன்னு நானும் உன் கூடவே தற்கொலை பண்ணிக்கிறேன். வா போவோம்'' என்றதும் பிருந்தா அமைதியானாள்.

''இங்க பாரு பிருந்தா எல்லா பிரச்சனைக்கும் சாவு தீர்வாகாது. ஆதித்யா குடும்பத்திலே உள்ளவங்க எல்லோரும் நல்லவங்க. அவங்க விஷ்ணுவை ஒரு பொருட்டா எடுத்துக்க மாட்டாங்க. நான் ஏற்கனவே எங்க கஸ்தூரி ஆன்ட்டியிடம் விஷ்ணு பற்றி எல்லாம் சொல்லிவிட்டேன்'' என்று ப்ரியா பிருந்தாவிடம் பொய் சொன்னாள்.

'அப்படியா?' என்பதுபோல் பார்த்த பிருந்தாவிடம், ''நான் என்ன உன்னை இப்பவே கல்யாணம் பண்ணு என்றா சொல்லுறேன். உள்ளே வந்து எங்க ஆதியைப் பாரு என்று தானே சொல்லுறேன். அடிபட்டு நடக்க முடியாமல் இருக்கும் அவரைப் பார்த்துக் கொள்ள அவங்களுக்கு ஒரு ஆள் தேவைப்படுது. அதே மாதிரி உனக்கும் குடும்பம் என்ற ஒரு அமைப்புத் தேவைப்படுது.



அவ்வளவு தான். பேசாமல் என் பின்னோடு வா'' என்று இழுத்துச் சென்றாள்.

பிருந்தா மந்திரித்து விட்ட கோழி போல் அவள் பின்னோடு சென்றாள்.

அவர்கள் முதலில் ஆதித்யாவின் அறைக்குச் சென்று அவனைப் பார்த்தார்கள். பின் ப்ரியா அவனை இழுத்துக் கொண்டு டாக்டரின் தனி அறைக்குச் சென்றள்.

அங்கு ஆதித்யாவின் நிலை குறித்துப் பேசினார்கள். அவன் சீக்கிரமே எழுந்து நடமாடுவான் என்று மருத்துவர் உத்திரவாதம் கொடுத்தார். ப்ரியா பிருந்தாவின் குடும்ப வக்கீலிடம் பேசி பிருந்தா - ஆதித்யாவின் திருமணத்திற்குச் சம்மதம் வாங்கினாள்.

பிருந்தா தன் கையை மீறிக் காரியங்கள் நடப்பதாக உணர்ந்தாள். விதிப்படி நடக்கட்டும் என நடப்பவற்றை எல்லாம் வேடிக்கை பார்க்கலானாள்.

அதன் பின் கல்யாண வேலைகள் எல்லாம் துரித வேகத்தில் நடைபெற்றது. முதலில் பதிவுத் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை கவனித்தனர். அதன் பின் ஆவணி முதல் தேதியிலேயே கோவிலில் வைத்துத் திருமணம் என்று முடிவாகியது.

பதிவுத் திருமணம் முடிந்த பின், பிருந்தா சொல்லியிருந்தபடி பிரகாஷிற்கு அந்த வீட்டையும், கடையையும் ஆதித்யாவும், பிருந்தாவும் கையெழுத்துப் போட்டு மாற்றிக் கொடுத்தனர்.

கல்யாண நாளும் வந்தது. பிரகாஷ், சாரதா சித்தி, பிருந்தாவின் கல்லூரித் தோழிகள் சிலர், வக்கீலின் குடும்பம் என்று அனைவரும் சென்னை வந்திருந்தார்கள்.

சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டே ஆதித்யா பிருந்தாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

பிருந்தா இறைவனிடம், 'இந்த தாலியாவது என் கழுத்தில் நிலைக்க நீயே அருள் புரிய வேண்டும்!' என வேண்டினாள்.

திருமணம் முடிந்து வீடு வந்ததும் ஆதித்யாவின் தாய் கஸ்தூரி தன் வயதை ஒத்த ஒரு பெண்மணியை பிருந்தாவிற்கு அறிமுகப்படுத்தினார்.

''இவங்க பேரு சீதா. தூரத்துச் சொந்தம். எங்க வீட்டுக்காரருக்குத் தங்கச்சி முறையாகணும். தனி ஆள். அதனால எனக்குப் பேச்சுத் துணையாகவும் இங்க இருக்குற வேலைகளை மேற்பார்வை பார்த்துக் கொண்டும் நம்ம அவுட் ஹவுஸிலேயே குடியிருக்காங்க'' என்றார்.

''வணக்கம் மா!'' என்று தன் கைகளைக் குவித்துக் கும்பிட்ட பிருந்தாவை சீதாவிற்கு உடனே பிடித்துப் போனது. சீதா அன்றிலிருந்து அவளுக்குத் தேவையானவற்றை எல்லாம் குறிப்பறிந்து நடத்தி வைக்கும் ஒரு தாயாகிப் போனார்.

கஸ்தூரி... இயல்பிலேயே அமைதியான சுபாவம் கொண்டவர். அதனால் அமைதியின் இருப்பிடமான பிருந்தாவிடம் ரொம்பவே ஒத்துப் போனார்.

முகுந்த்... ஆதித்யாவின் தம்பி. இருபத்து நான்கு வயது இளைஞன். தன்னை விட ஒரு வயது தான் அதிகம் என்ற போதும் முகுந்தை எப்படிப் பேரைச் சொல்லிக் கூப்பிடுவது என்று பிருந்தா தயங்கினாள். ஆனால் முகுந்தோ சும்மா என்னைப் பேரைச் சொல்லியே கூப்பிடுங்க அண்ணி என்று பிருந்தாவை வற்புறுத்திக் கூப்பிட வைத்தான். அவளுக்கு ஒரு உடன் பிறப்பு இல்லாத குறையைத் தீர்த்து வைத்தான் என்று தான் சொல்ல வேண்டும்.



ஆதித்யா... மிக முக்கிய உறவான இவனைத் தான் பிருந்தாவால் கணிக்க முடியவில்லை. ஆபரேஷன் பண்ணி நடக்க முடியாத நிலையில் நடக்கத் தடுமாறுகிறானே என்று ஓடிச் சென்று பிடித்தால், ''நான் என்ன ரெண்டு காலும் இல்லாத நொண்டியா? இன்னொரு காலை வைத்து நின்று கொள்ள மாட்டேனா?'' என்று கேட்பான்.

சரி என்று அடுத்த முறை அமைதியாக வேடிக்கைப் பார்த்தால், ''கீழே விழுந்து நான் இன்னொரு காலையும் உடைத்துக் கொள்ளணும் என்று உனக்கு ஆசையா?'' என்பான்.

மொத்தத்தில் தீயாகக் காய்ந்தான். அவனது ஒவ்வொரு நடவடிக்கையும் இவனுக்கு ஏன் உடனடியாகக் கல்யாணம் பண்ணி வைத்தார்கள் என்று பிருந்தாவிற்கு நன்றாகப் புரியும்படியாக அமைந்து போனது.

'இவனது இயலாமை கோபமாக வெளிப்படுகிறது. அந்தக் கோபத்தைத் தாங்கிக் கொள்ளத் தான் ஆள் தேடி இருக்கிறார்கள் போல!' என பிருந்தா எண்ணிக் கொண்டாள்.

பகலில் தீயாய்க் காய்பவன் இரவில் அவள் உறங்கும் நேரத்தில் அவளது தலையை வருடிக் கொடுத்து ஆறுதல் அளிக்கவும் தவறுவதில்லை.

முதல் இரு நாட்கள் அவனது நடவடிக்கையால் மளுக்கென்று கண்ணீர் கரை கட்டி நிற்கும். ஆனால்

அடுத்து வந்த நாட்களில் அதுவே வாடிக்கையானதில் இப்பொழுதெல்லாம் கண்ணீர் வருவதில்லை.

வாழ்க்கை ஒருவித இயந்திர கதியுடன் சென்றது.



## 9



ஆதித்யா - பிருந்தா திருமணம் முடிந்த இரண்டாவது வாரத்தில் பிரகாஷ் தனது திருமணத்தை வைத்திருந்தான். சாரதாவும், பிரகாஷும் முறைப்படி பத்திரிகை வைத்துத் திருமணத்திற்கு வரும்படி அழைத்து விட்டுச் சென்றார்கள். ஆதித்யா அவர்களைப் பெரிதாக மதித்துப் பேசவில்லை. பிருந்தாவும் அதற்காக வருத்தப்படவில்லை.

ஆதித்யாவிற்கு ஆபரேஷன் முடிந்து ஒன்றரை மாதங்கள் ஆன நிலையில் தான் பிரகாஷின் திருமணம். ஊன்று கோலை ஊன்றிக் கொண்டு அவன் வீட்டின் உள்ளே மட்டும் தான் நடந்து கொண்டிருந்தான். இது வரை வெளியே எங்கேயும் செல்லவில்லை. அதனால் அவன் திருமணத்திற்கு வர மாட்டான் என்று பிருந்தா எண்ணினாள். தான் மட்டும் போய் வரலாம் என நினைத்திருந்தாள்.

நாளை பிரகாஷின் திருமணம் என்ற நிலையில் கஸ்தூரி தன் மருமகளிடம், ''ஏன்மா பிருந்தா உங்க அண்ணா கல்யாணத்துக்குக் காலையிலே போகப் போறியா? இல்லை இன்னைக்கே கிளம்பப் போறியா?'' என்று கேட்டார்.



''காலையிலே தான் அத்தை போகணும். இவர் இல்லாம போகணும் இல்லையா... அதனால காலையிலே போய் தலையைக் காட்டிட்டு வந்திடலாம்ன்னு பார்க்கிறேன்'' என்று பிருந்தா சொல்லும்போதே அங்கே ஆதித்யா வந்தான்.

''ரெண்டு பேரும் எங்கே போறதைப் பற்றிப் பேசிக்கிட்டு இருக்கீங்க?'' என்று கேட்டவுடன்,

பிருந்தா உற்சாகமாக, ''எங்கண்ணா கல்யாணத்துக்குங்க'' என்றாள்.

''உங்க அண்ணனா? யாரு? உனக்குத் தான் கூடப் பொறந்தவங்க யாருமே இல்லையே!'' என்று நக்கலாக ஆதித்யா கேட்கவும்,

''பிரகாஷ் அண்ணா...'' என்று பிருந்தா இழுத்தாள்.

''அந்தக் கல்யாணத்துக்கு நீ ஒண்ணும் போகத் தேவையில்லை'' என்று மறுத்து விட்டான். ''இல்லைங்க நான் மட்டுமாவது போயிட்டு வரேன்'' என்று மெல்லிய குரலில் கேட்டவாறே கஸ்தூரியைப் பார்வையாலே தனக்கு உதவும்படி வேண்டினாள்.

கஸ்தூரியும், ''வீடு தேடி வந்து பத்திரிகை வைச்சுக் கூப்பிட்டாங்களே பா. போயிட்டு வரட்டும்'' என்று சொன்னதும்,

''யாரும் போக வேண்டாம்ன்னு நான் சொல்லுறது காதிலே விழலையா. நான் சொல்லுறதைச் சொல்லிட்டேன். அதுக்கு மேலே அவங்க அவங்க இஷ்டப்படி நடந்துக்கோங்க'' என்று கறார் குரலில் கூறி விட்டுச் சென்றான்.

''சாரி மா. என்னால உனக்கு உதவ முடியலை'' என்று வருத்தத்துடன் சொல்லிவிட்டு கஸ்தூரியும் போய்விட்டார்.

'இதற்கு மேலும் அந்தக் கல்யாணத்திற்கு எப்படிப் போவது? ஏன் வரலை என்று கேட்டால் என்ன சொல்வது என்ற ஒரு நிமிடம் காரணம் தேடினாள். அடுத்த நிமிடம் அவர்களாவது இவளை எதிர்பார்ப்பதாவது. ஏதோ கொடுக்கணுமே என்று பத்திரிகை கொடுத்து இருப்பார்கள். அவர்களுக்குத் தேவை அந்தச் சொத்து. அது தான் கிடைத்து விட்டதே' என நினைத்து பிருந்தா பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

ஆதித்யா மெல்ல மெல்ல ஒரு ஊன்று கோள் உதவியுடன் நடக்க ஆரம்பித்ததும் கடைக்குச் செல்ல விருப்பப்பட்டான். இரண்டு மாதங்களாக வீட்டிலேயே இருந்து அவனுக்கு போர் அடித்து விட்டது.

அதற்காக அவன் காலையிலேயே எழுந்துத் தயாராகிக் கிளம்பினான்.

தனது தம்பியுடன் கடைக்குச் செல்வதற்காக வெளி வாயிலை நோக்கி நடந்தவனின் பின்னால் நின்று கொண்டிருந்த பிருந்தா முகுந்திடம், ''ரொம்ப நடக்க விடாதீங்க!'' என்று சைகை செய்து காண்பித்தாள்.

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாததால் முகுந்த், ''என்ன அண்ணி சொல்லுறீங்க?'' என்று சைகையிலேயே கேட்க,

''என்னடா முகுந்த் கடைக்கு வரப் போகிறாயா? இல்ல உங்க அண்ணி கூடச் சேர்ந்துக்கிட்டு dumb sheradesக்கு பிராக்டீஸ் பண்ணப் போகிறாயா?'' என்று ஆதித்யா கேட்கவும்,

'இவருக்கு முதுகிலே கூடக் கண்ணு இருக்கோ?' என பிருந்தா திகைத்துப் போனாள்!



''உங்க அண்ணிக்கு வீட்டிலே பொழுது போகலைன்னா கலாஷேத்ராவிலே சேர்ந்து டான்ஸ் கத்துக்கச் சொல்லு. எதுக்கு வீட்டுக்குள்ளே நின்னுக்கிட்டு அபிநயம் பிடிச்சுக்கிட்டு இருக்காள்?'' என்று ஆதித்யா நக்கல் பண்ண,

''நானா? டான்ஸா? இப்போ அதைக் கத்துக்கிட்டு என்ன செய்யப் போறேன்?'' என்று பிருந்தா கூறவும்,

''என்ன செய்யவா? அண்ணி, ஆதி சொல்லுற மாதிரி நீங்க டான்ஸ் கத்துக்கப் போங்க. அவன் பாட்டுக் கத்துக்கப் போகட்டும். ஜிப்பா போட்டுக்கிட்டு வந்து மேடையில் அவன் பாட... நீங்க ஆட... ஒரு அரங்கேற்றம் பண்ணிடலாம். ஆடல்: பிருந்தா; பாடல்: ஆதித்யா. ஆனா ரைமிங்கா இல்லையே. ஆதி, நீ பேசாமல் டான்ஸ் கத்துக்கோ. அண்ணி பாட்டுக் கத்துக்கட்டும். அப்போ தான் ஆடல்: ஆதித்யா; பாடல்: பிருந்தான்னு ரைமிங்கா சொல்லிக்கலாம்'' என்று முகுந்த் சொன்னவுடன்,

''என்னால நடக்கவே முடியலை. இந்த லட்சணத்திலே டான்ஸா? என்ன... என்னைக் கிண்டல் பண்ணுறியா?'' என்று ஆதித்யா தம்பியை முறைத்துக் கொண்டே கேட்டான்.

''ப்சு. நீ இப்பவே நல்லா நடக்கத் தானே செய்கிறாய். நீ தான் எப்பப் பார்த்தாலும் உனக்கு நடக்க முடியாமல் போச்சுன்னு உன்னை நீயே தாழ்வா நினைச்சுக்கிறாய். நாங்க யாரும் அப்படி நினைக்கலை'' என்று முகுந்த் சொன்ன அடுத்த நொடி.

''பிரச்சனை எனக்குத் தானே. அதனால அதோட வலியும் வேதனையும் கூட எனக்கு மட்டும் தானே. உங்க எல்லோருக்கும் அதோட நினைவு எப்படி வரும்'' என்றான்.

'தனக்குள்ள பிரச்சனையைப் பெருசா நினைச்சு வருத்தப்படுறானே என்று நினைத்து இதெல்லாம் ஒண்ணுமே இல்லைன்னு நான் சொன்னால்... ஆமா உங்களுக்கு என்ன வந்துச்சு. நான் தானே கஷ்டப் படுறேன் அப்படிங்கிறான். இப்படின்னா அப்படிங்கிறான்.. அப்படின்னால் இப்படிங்கிறான். இவனை எப்படிச் சமளிப்பது?' என்பது மாதிரி முகுந்த் விழித்துக் கொண்டு நிற்க...

சற்று முன் எதுவுமே நடக்காத மாதிரி, ''என்னடா கடைக்கு வருகிறாயா இல்லையா?'' என்று ஆதித்யா கேட்கவும்,

''இதோ வந்திட்டேண்ணா...'' என்று சொல்லிக் கொண்டே முகுந்த் அவனுடன் நடக்க ஆரம்பித்தான்.

பிருந்தா இப்பொழுது வெளிப்படையாகவே, ''முகுந்த் அவரை ரொம்ப நடக்க விடாதீங்க. பார்த்துக்கோங்க'' என்று தன் கோரிக்கையை முன் வைத்தாள்.

ஓ! இது தானா நீங்க சைகை செய்து சொன்ன விஷயம் என நினைத்தவனாக, ''சரிங்க அண்ணி. நான் பார்த்துக் கிறேன்'' என்று முகுந்த் தன் அண்ணிக்கு நம்பிக்கை அளித்து விட்டு தன் அண்ணனை அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்றான்.

பிருந்தா அரை மணி நேரத்திற்கு ஒரு முறை தன் கணவன் அல்லது முகுந்தின் கைப்பேசிக்கு மாறி மாறி அழைத்து கணவனது நலத்தை விசாரித்த வண்ணம் இருந்தாள்.

ஆதித்யா இவளது போன் காலுக்கு பதில் சொல்லி அலுத்துப் போனானோ, உடல் சோர்வால் அலுத்துப்



போனானோ இரவு வரை கடையில் நீடிக்காமல் மாலையே வீடு திரும்பி விட்டான்.

திருமணம் ஆகி நாற்பது நாட்கள் கடந்த போது பிருந்தா பெண் மருத்துவரைச் சந்திக்க விரும்பினாள்.

சீதாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு மருத்துவ மனைக்குச் சென்றாள். அங்கே மருத்துவரின் அறைக்குள் நுழைந்த பொழுது சீதா வெளியே காத்திருப்போர் இருக்கையில் அமர்ந்து தனக்குத் தெரிந்த கடவுள்களை எல்லாம் வேண்டிக் கொண்டு அமர்ந்திருந்தார்.

வெளியே வந்த பிருந்தாவை ஆவலே உருவாக நோக்க பிருந்தா அவரைப் பார்த்துப் புன்னகைத்ததும், அவளுக்குத் தனது கைகளால் திருஷ்டி கழித்தவாறே, ''என் ராசாத்தி! எனக்கு அப்பவே தெரியும். விஷயம் இப்படித் தான் இருக்குமின்னு. அதான் உன் முகமே காட் டிக் கொடுத்திடுச்சே! இனிமேல் உன்னைப் பார்த்துக் கிறது தான் என் வேலையே!'' என்று குதூகலித்தார்.

அவரது பாசத்திலும், பரிவிலும் கட்டுண்டவளாக அவரது கூற்றை ஆமோதித்தவாறே அவரை அழைத்துக் கொண்டு வீடு நோக்கிப் பயணப்பட்டாள்.

தெரிந்தவர் வீட்டு விசேஷத்திற்குச் செல்ல வேண்டிய தேவை இருந்ததால் கஸ்தூரி மருத்துவமனைக்குச் செல் லாது சீதாவை அனுப்பி வைத்தார். ஆனால் அவரால் அந்த விசேஷ வீட்டில் அதிக நேரம் உட்கார்ந்து இருக்க முடியாமல் சீக்கிரமே வீடு திரும்பினார்.

வீடு திரும்பிய கஸ்தூரிக்கு சீதாவின் முகத்தில் தெரிந்த அதிகப்படியான சந்தோஷமே விஷயத்தைப் பறை சாற்றியது. அவர் பூஜை அறைக்குச் சென்று தனது நன்றியைத் தெரிவிக்க ஆரம்பித்தார்.

சீதா பிருந்தாவிடம், ''நீ எல்லாம் அதிகம் படிச்சவ. இங்கிலீசு மருந்து சாப்பிடுறவ... எங்க கிராமப்புறத்துல எல்லாம் சுகப் பிரசவம் ஆகுறதுக்கு சில வகை நாட்டு மருந்து எல்லாம் சாப்பிடுவோம். எங்க கிராமத்திலே இருந்த வரைக்கும் என் கையால எத்தனையோ பெண்களுக்கு பக்குவம் பார்த்து இருக்கேன். நீ சரின்னு சொன்னால் உனக்கும் பக்குவம் பார்க்கிறேன். உணவே மருந்துன்னு கேள்விப்பட்டு இருக்கியா? அது மாதிரி சாப்பாட்டை யுமே பக்குவமா சாப்பிடணும். நீ என்ன சொல்லுற?'' என்று கூறித் தயக்கத்துடன் பிருந்தாவின் முகம் பார்க்க,

''எனக்கு மாத்திரை எதுவும் அவங்க தரலைமா. வெறும் இரும்புச் சத்துக்கு மட்டும் தான் மாத்திரை கொடுத்து இருக்காங்க. அதனால நீங்க சொல்லுறபடியே நான் பக்குவமா சாப்பிடுறேன். என் பிரசவம் உங்க பொறுப்பு. என்ன ஓ.கே. வா?'' என்று கேட்டதும் சீதா மகிழ்ந்து போனார்.

பிருந்தா சீதாவிடம் பேசிவிட்டுத் தனது படுக்கையறைக் குள் சென்றாள். அறையினுள் சென்றவள் கண் மூடி அமர்ந்து யோசிக்க ஆரம்பித்தாள்.

'யாரும் அருகில் இல்லாமல் அவசர அவசரமாய் ஒரு திருமணம். ஏறிய வேகத்தில் அந்த தாலி இறங்கியும் விட்டது. முதல் திருமணத்தை விட அவசரமாய் சூழ் நிலைக் கைதியாகி அடுத்த திருமணம். இப்போ இந்தக் குழந்தைப் பேறு.

எதிர்காலம் எனக்கு எதைப் பரிசளிக்கப் போகிறது? விஷ்ணு பற்றி அத்தையிடம் மட்டும் சொன்னதாக முதலில் சொன்ன ப்ரியா, நான் கல்யாணத்திற்குச் சம் மதம் தெரிவித்த பின் அதைப் பொய் என்று சொல்லி



விட்டாள். நானும் விஷ்ணு பற்றி இதுவரை இவர்கள் யாரிடமும் சொல்லாமல் மறைத்து வைத்து நடமாடிக் கொண்டிருக்கிறேன். அது ஏதும் பிரச்சனை ஆகுமோ என்ற பயமும் அப்பப்போ எழுகிறது.

இந்தக் கல்யாணத்திற்கு நாம் உடனே சம்மதிக்காமல் விஷ்ணு பற்றி இவர்கள் எல்லோரிடம் சொல்லி இருக்க வேண்டுமோ? ஒரு வேளை அப்படிச் சொல்லி இருந் தால் இந்தக் கல்யாணம் நடக்காமல் போயிருக்குமோ?

இந்த ப்ரியா வேறு அந்த விஷ்ணு அயோக்கியன். அவன் கட்டிய தாலி இனி உன் கழுத்திற்கு வேண்டாம் என்று கழட்டி விட்டாள். அதோடு விட்டாளா? இந்த ஆதி நல்லவன் என்று சொல்லி அடுத்த தாலியை இவன் கையால் வாங்கிக் கொள் என்று சொல்லி விட் டாள்.

இவர் நல்லவரா? கெட்டவரா? என்று என்னால் இப்போ... இந்த நொடி வரை கணிக்க முடியவில் லையே!' என மனதிற்குள் புலம்பியவள் தான் குழந்தை உண்டான விஷயத்தைக் கணவனிடம் தெரிவிக்க அவனது வருகைக்காகக் காத்திருக்கலானாள்.

ஆனால் அங்கே கடையிலோ...

கால் குணமாகிக் கொண்டிருக்கும் வேளை என்பதால் ஆதத்யா அதிகம் சுற்றாமல் வேலைகளை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

வட இந்தியர்கள் இருவர் அவனை துணி ஆர்டர் எடுப்பது விஷயமாக அணுகினர்.

''நமஸ்தே ஆதித்யா சாப். உடம்பு எப்படி இருக்கு?'' என்று நலன் விசாரித்த பின் அவர்கள் தாங்கள் கொண்டு

வந்திருந்த சாம்பிள் பீஸ்களை காட்டித் துணி ஆர்டர் தருமாறு கேட்டனர்.

ஆதித்யாவோ தற்பொழுது ஆர்டர் தேவையில்லை எனவும் பிறகு தேவை ஏற்படும் பொழுது தொடர்பு கொள்வதாகவும் சொல்லி அவர்களைத் திருப்பி அனுப்பினான்.

அவர்கள் சும்மா இருக்காமல் நேரே முகுந்திடம் சென்று, ''முகுந்த் சாப் உங்க அண்ணா ரெண்டு மாசமா கடைக்கு வராததால் ஸ்டாக் எவ்வளவு இருக்கு என்பது போன்ற விவரங்கள் சரியாத் தெரியலை என்று நினைக்கிறோம். நாங்க ரெண்டு மூணு மாசத்துக்கு முன்னாடி தான் உங்களுக்கு சப்ளை பண்ணினோம். இப்போ ஆர்டர் கேட்டு வந்தால் வேணாம்ன்னு சொல்லுறார்'' என்று ஆதித்யா பற்றி அவனது தம்பியிடம் குறைபட்டனர்.

முகுந்தோ சற்றும் யோசிக்காமல், ''நீங்க எங்க ரெகுலர் சப்ளையர்ஸ் ஆச்சே! வாங்க. நான் ஆர்டர் தரேன்'' என்று சொல்லி அழைத்துக் கொண்டு வந்தான்.

அவர்கள் மூவரையும் ஒன்றாகப் பார்த்த ஆதித்யா புருவம் உயர்த்தினான்.

அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டே முகுந்திடம், ''என்ன விஷயம் முகுந்த்?'' என்றான்.

''ஒண்ணுமில்லை அண்ணா. இவங்களுக்கு ஆர்டர் கொடுக்கணும்'' என்றான்.

''நான் தான் அதை அப்பவே வேண்டாம்ன்னு சொல்லி அவங்களைத் திருப்பி அனுப்பிட்டேனே!''



''இல்லைண்ணா உனக்குத் தெரியாது...'' என்று முகுந்த் மறுத்துக் கூறத் தொடங்கியதுமே,

''எனக்கு ஒண்ணும் தெரியாது என்றால் நாளையில் இருந்து நான் கடைக்கு வரலை. நீயே டீல் பண்ணிக்கோ'' என்று குரலைச் சற்றும் உயர்த்தாமல் முகுந்தின் கண்களைப் பார்த்துக் கொண்டே கூறினான்.

''சாரிண்ணா'' என்று சொல்லி முகுந்த் அவர்களை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

பதினைந்து நிமிடங்கள் கழித்து வந்த முகுந்த் தன்னிலை விளக்கம் கூறி மீண்டும் தன் மன்னிப்பை வேண்டினான். அவன் கூறியதைக் கேட்டு ஆதித்யா ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது மட்டும் இல்லை, அன்று முழுவதும்... வீட்டிற்கு அவர்கள் காரில் பயணிக்கும்போதுகூட அவர்களிடையே மௌனமே ஆட்சி செய்தது.

முகுந்த் ஆதித்யாவின் முகத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே வந்தான். அவன் முகம் பாறையாக இறுகி இருந்தது. முகுந்த் தனது நிலையை எண்ணி நொந்து போனான்.

அவர்கள் வீட்டை அடைந்ததும் கஸ்தூரி ஆவலே உருவாய் அவர்களை எதிர்கொண்டார். ஆனால் பெரிய மகனின் இறுகிய முகமும், சின்னவனின் கசங்கிய முகமும் அவர்களுக்குள் எதுவோ சரியில்லை என்பதை அவருக்கு எடுத்துக் காட்டியது.

''சாப்பிடலாம் வாங்க'' என்று கஸ்தூரி இருவரையும் பார்த்துப் பொதுவாக அழைத்தார். ஒன்றும் பதிலளிக்காது

ஆதித்யா தனது அறைக்குள் சென்று மறைந்தான். கஸ்தூரி முகுந்திடம் நடந்ததைக் கேட்டறிந்தார்.

''ரொம்பத் திட்டினானாடா முகுந்த்?''

''திட்டினால் கூடப் பரவாயில்லையேம்ம. ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டேங்கிறான். அதுதான் ரொம்பக் கஷ்டமா இருக்கு'' என்று பரிதவித்தான்.

''நீ கவலைப்படாதேடா. இன்னும் அஞ்சே நிமிஷத்திலே அவன் சிரிச்சுக்கிட்டே வெளியே வருவான் பாரு'' என்று கஸ்தூரி இளைய மகனைச் சமாதானப்படுத்தினார்.

''அவன் ரூம் என்ன மேஜிக்கல் ரூமா? கோபமாய் போறவன் சிரிச்சுக்கிட்டே வெளியே வருவதற்கு'' என்று முகுந்த் அலுத்துக் கொள்ளவும்,

''அவன் மூடை மாத்துற மந்திரக் கோல் உங்க அண்ணிகிட்டே இருக்குடா. அதுவுமில்லாமல் இன்னைக்கு அவன் லைஃபில் ரொம்பவே ஸ்பெஷல் நாள்'' என்று முகம் கொள்ளாப் பூரிப்புடன் கஸ்தூரி சொல்ல,

''அப்படி என்னம்மா ஸ்பெஷல்?'' என்று முகுந்த் ஆர்வமும், குழப்பமுமாகக் கேட்கவும்,

கஸ்தூரி பிருந்தா தாயாகப் போகும் விஷயத்தை மிகுந்த சந்தோஷத்துடன் தெரிவித்தார். அவரது சந்தோஷம் அவனையும் தொற்றிக் கொண்டது.

''ஹே! இது உண்மையிலேயே ரொம்ப சந்தோஷமான நியூஸ் மா. ஐம் சோ ஹாப்பி!'' என்று தன் தாயைப் பிடித்துச் சுற்றினான்.





# 10



அங்கே ஆதித்யாவின் படுக்கை அறைக்குள்...

அறைக்குள் நுழைந்த ஆதித்யா வழியில் ஆர்வமாக நின்று கொண்டிருந்த பிருந்தாவைக் கடந்து சென்று கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

பிருந்தா அவனருகில் சென்று, ''சாப்பிடலாம? டிரஸ் மாத்திட்டு வரீங்களா? சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?'' என்று வினவினாள்.

அவன் பதிலொன்றும் சொல்லாமல் அமைதி காத்தான்.

காலையில் இருந்து பிருந்தா தனது கணவனுக்கு விஷயத்தை எப்படிச் சொல்லலாம் என பலவாறு ஒத்திகை பார்த்துக் கொண்டு காத்திருக்க... விஷயத்தைக் கேட்டு சந்தோஷப் பட வேண்டியவனோ இப்படி அடைத்துப் போய் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் பிருந்தாவிற்கு வியர்க்க ஆரம்பித்தது.

இருப்பினும் விஷயத்தைச் சொல்லி ஆக வேண்டிய கட்டாயத்தில் தான் இருப்பதால் அவள் மெதுவான குரலில், ''என்னங்க உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்...'' என்று ஆரம்பித்தாள்.

ஒரு 'ம்' கூட பதிலாகக் கிடைக்கவில்லை.

ஆதித்யா தனது அறைக்குள் சென்று மறைந்தான். கஸ்தூரி முகுந்திடம் நடந்ததைக் கேட்டறிந்தார்.

''ரொம்பத் திட்டினானாடா முகுந்த்?''

''திட்டினால் கூடப் பரவாயில்லையேம்ம. ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டேங்கிறான். அதுதான் ரொம்பக் கஷ்டமா இருக்கு'' என்று பரிதவித்தான்.

''நீ கவலைப்படாதேடா. இன்னும் அஞ்சே நிமிஷத்திலே அவன் சிரிச்சுக்கிட்டே வெளியே வருவான் பாரு'' என்று கஸ்தூரி இளைய மகனைச் சமாதானப்படுத்தினார்.

''அவன் ரூம் என்ன மேஜிக்கல் ரூமா? கோபமாய் போறவன் சிரிச்சுக்கிட்டே வெளியே வருவதற்கு'' என்று முகுந்த் அலுத்துக் கொள்ளவும்,

''அவன் மூடை மாத்துற மந்திரக் கோல் உங்க அண்ணிகிட்டே இருக்குடா. அதுவுமில்லாமல் இன்னைக்கு அவன் லைஃபில் ரொம்பவே ஸ்பெஷல் நாள்'' என்று முகம் கொள்ளாப் பூரிப்புடன் கஸ்தூரி சொல்ல,

''அப்படி என்னம்மா ஸ்பெஷல்?'' என்று முகுந்த் ஆர்வமும், குழப்பமுமாகக் கேட்கவும்,

கஸ்தூரி பிருந்தா தாயாகப் போகும் விஷயத்தை மிகுந்த சந்தோஷத்துடன் தெரிவித்தார். அவரது சந்தோஷம் அவனையும் தொற்றிக் கொண்டது.

''ஹே! இது உண்மையிலேயே ரொம்ப சந்தோஷமான நியூஸ் மா. ஐம் சோ ஹாப்பி!'' என்று தன் தாயைப் பிடித்துச் சுற்றினான்.





# 10



அங்கே ஆதித்யாவின் படுக்கை அறைக்குள்...

அறைக்குள் நுழைந்த ஆதித்யா வழியில் ஆர்வமாக நின்று கொண்டிருந்த பிருந்தாவைக் கடந்து சென்று கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

பிருந்தா அவனருகில் சென்று, ''சாப்பிடலாம? டிரஸ் மாத்திட்டு வரீங்களா? சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?'' என்று வினவினாள்.

அவன் பதிலொன்றும் சொல்லாமல் அமைதி காத்தான்.

காலையில் இருந்து பிருந்தா தனது கணவனுக்கு விஷயத்தை எப்படிச் சொல்லலாம் என பலவாறு ஒத்திகை பார்த்துக் கொண்டு காத்திருக்க... விஷயத்தைக் கேட்டு சந்தோஷப் பட வேண்டியவனோ இப்படி அடைத்துப் போய் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் பிருந்தாவிற்கு வியர்க்க ஆரம்பித்தது.

இருப்பினும் விஷயத்தைச் சொல்லி ஆக வேண்டிய கட்டாயத்தில் தான் இருப்பதால் அவள் மெதுவான குரலில், ''என்னங்க உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்...'' என்று ஆரம்பித்தாள்.

ஒரு 'ம்' கூட பதிலாகக் கிடைக்கவில்லை.

சொல்ல வந்ததைப் பாதியில் நிறுத்த மனம் இல்லாததாலும், ஒரு வேளை விஷயத்தைச் சொன்னாலாவது அவனது மனநிலையில் மாற்றம் வருமோ என்ற எதிர்பார்ப்பினாலும் அவள் விஷயத்தை இப்பொழுதே சொல்லி விடுவது என்று முடிவெடுத்தாள்.

''நான் காலையில் ஹாஸ்பிட்டல் போனேன்...'' என்று சொல்ல ஆரம்பித்ததும் ஆதித்யா தனது கண்களைத் திறந்து பார்த்தான்.

அதையே அவன் தனது பேச்சைக் கேட்பதற்கான அறிகுறியென எண்ணியவளாய், ''டாக்டர் செக் பண்ணிப் பார்த்துவிட்டு கன்பர்ம் பண்ணிட்டாங்க. நான் அம்மாவாகப் போகிறேன்'' என்று முகம் பிரகாசிக்க, கண்கள் மின்னக் கூறி முடித்தாள்.

சந்தோஷம் கொள்ள வேண்டியவனோ, ''சோ வாட்?'' என்ற இரண்டு வார்த்தையை உதிர்த்தான்.

பிருந்தாவின் இதயம் ஒரு நொடி நின்று பின் துடித்தது போல் தோன்றியது. அவனிடமிருந்து 'அதனால் என்ன?' என்ற பதிலை எதிர்பார்க்காததால் அடுத்தது என்ன என்று கூடச் சிந்திக்க மறுத்தது அவளது மூளை.

உடலில் உள்ள அனைத்து பாகங்களுமே தனது இயக்கத்தை ஒரு சில நொடிகள் நிறுத்திவிட்டுப் பின் இயங்கியது போல் இருந்தது. புலன்கள் எல்லாம் தன் வசப்பட்டதும் அவள் அறையை விட்டு வெளியேறினாள்.

கஸ்தூரியும், முகுந்தும் சந்தோஷ முகத்துடன் ஆதித்யா வெளியே வருவான் என்று அவன் அறை



வாயிலையே பார்த்துக் கொண்டிருக்க... உயிரற்ற பார்வையுடன், ஒடுங்கிப் போனவளாய் பிருந்தா வெளியே வந்தாள்.

அவளது தோற்றமே உள்ளே என்ன நடந்திருக்கும் என்பதை அவர்கள் இருவருக்கும் தெளிவாகப் புரிய வைத்தது.

கஸ்தூரி மருமகளுக்காகப் பரிதாபப்பட்டார் என்றால், முகுந்தோ தான் செய்த தவறு அண்ணியைச் சென்று தாக்கிவிட்டதே என்ற குற்ற உணர்வில் தவித்தான்.

கஸ்தூரி மருமகளிடம் அவர்களது அறையில் நடந்தது என்று கேட்காமல் கடையில் என்ன நடந்தது என்பதை மட்டும் விவரித்தார்.

பிருந்தாவின் இதழ்களில் ஒரு விரக்திப் புன்னகை உதயமானது.

தனது மாமியாரிடம் ஒன்றும் சொல்லாது பொம்மை போல் நடந்து சென்று பூஜையறையில் அமர்ந்தாள். தனது இஷ்ட தெய்வமான பெருமாளிடம் மனதுக்குள் கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

'நீ எனக்கு எதைப் பரிசளிக்க விரும்புகிறாய்? என்னைச் சோதித்தது போதாதா? இன்னுமா உனக்குத் திருப்தி ஏற்படவில்லை? பேசாமல் என் அம்மா, அப்பா உயிரைப் பறித்தபோதே என் உயிரையும் பறித்து இருக்கலாமே! ஏன் இப்படி கொஞ்சம் கொஞ்சமாய் என் உயிரைப் பறிக்க நினைக்கிறாய்?' எனத் திட்டினாள்.

விஷ்ணு தன்னை ஏமாற்றி விட்டான் என்று தெரிந்த அன்று அவள் இதே மாதிரி தான் கடவுளைத் திட்டினாள்.

அதன் பின் ஆதித்யா அவள் வாழ்வில் நுழைந்த பிறகு ஒரு நாளும் கடவுளைத் திட்டியது கிடையாது.

ஆதித்யா தீயாய் காய்ந்தான் தான்! ஆனால் அதையெல்லாம் ஒரு நோயாளியின் இயலாமை என்று ஒதுக்க முடிந்தவளால் கணவனது இன்றைய அலட்சியத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கண்களை மூடிக் கொண்டு மௌனமாகக் கண்ணீர் வடிக்க அவளது கண்ணீரை ஒரு கரம் துடைத்தது.

கண் திறந்து பார்த்தவள்... பார்த்த விழி பார்த்தபடியே இருந்தாள். எதிரே இருந்தவன் ஆதித்யா தான்!

அவனைப் பார்த்ததும் அவளது உதடுகள் அழுகையில் பிதுங்கின. கண்களில் புதிதாக நீர் சுரந்து சூடான கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடியது. மீண்டும் தனது கரத்தால் அதைத் துடைத்தவன், ''ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி சாரி!'' என்றான்.

அவனது குரலில் மிதமிஞ்சிய வருத்தம் தென்பட்டது.

அவள் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்திருக்க....

''ப்ளீஸ்... சாப்பிடலாம் வா. சாரி'' என்று அவன் கெஞ்சிக் கொண்டே அவளைக் கைப்பிடித்து எழுப்ப முயற்சித்தான். அவளும் எழுந்து அவன் பின்னே சென்று உணவருந்த அமர்ந்தாள்.

தனக்காக இல்லை என்றாலும் தன் குழந்தைக்காகவாது சாப்பிட்டுத் தானே ஆக வேண்டும்.

யாரையும் நிமிர்ந்து பார்க்காமல் சாப்பிட்டு விட்டுத் தனது அறைக்குள் சென்று படுத்து விட்டாள்.



நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது யாரோ பேசும் சப்தம் கேட்டு அவளது துயில் கலைந்தது. கண் திறந்து யாரென்று பார்த்தவளுக்கு கணவன் தான் பேசிக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தது.

என்னருகில் உட்கார்ந்து கொண்டு கையில் செல்போன் கூட இல்லாமல் யாரிடம் பேசுகிறார் என்று உற்று கவனித்தாள்.

அவன் பிருந்தாவின் வயிற்றைப் பார்த்துக் கொண்டே உள்ளிருக்கும் தனது குழந்தையோடு பேசிக் கொண்டிருந்தான். பிருந்தா கண்களை மூடிக் கொண்டு அவனது பேச்சைக் கேட்கலானாள்.

''அப்பா வேற ஒரு கோபத்திலே இருக்கேன்டா குட்டி. உன்னைப் போய் நான் வேணாம்ன்னு சொல்லுவேனா? நான் செஞ்சது தப்பு தான். யார் மேலயோ உள்ள கோபத்தை உன் மீது காண்பித்தது தப்பு தான். இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்.

சாரிடா குட்டி. அப்பா தான் சரி கேட்குறேனே! என்னை இந்த ஒரு தடவை மன்னிச்சிடுங்கடா. ஹை மன்னிச்சுட்டீங்களா?''

ஒரு குழந்தையாக மறித் தன் குழந்தையிடம் பேசும் கணவனை இழுத்துத் தன் வயிற்றோடு அழுத்திக் கொள்ள வேண்டும் என்று பிருந்தாவிற்கு ஆசையாக இருந்தது. ஆனால் கணவனது மனநிலை தெரியாது தான் எதுவும் செய்யக் கூடாது என்று பேசாமல் இருந்தாள்.

ஆதித்யா தொடர்ந்து பேசிக் கொண்டு இருந்தான்.

''இனிமேல் நாம ரெண்டு பேரும் பிரண்ட்ஸ். அப்பா டெய்லி அம்மா தூங்கினவுடன் உங்ககிட்டே பேசுறேன். சரியா?'' என்று அவன் தன் குழந்தையிடம் கொஞ்சிக் கொண்டு இருந்தான்.

கேட்டுக் கொண்டிருந்த பிருந்தா, 'அது சரி... நான் வேண்டாம். ஆனா என் பிள்ளை மட்டும் வேண்டு மாக்கும்!' என்று மனதுக்குள் நொடித்துக் கொண்டாள்.

'என்னைத் தூங்க வைச்சிட்டுப் பேசப் போறீங்களா? தூங்குற மாதிரி பாவ்லா பண்ணி உங்க பேச்சைத் தினமும் ஒட்டுக் கேட்டால் போச்சு. தனிக் கூட்டணியா அமைக்கப் பார்க்குறீங்க!' என நினைத்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

'மாமியார் சொன்னது போல் கடையில் சண்டை போட்டு அதை நம்மிடம் காட்டி விட்டார் போல! ஏன் கொஞ்ச நேரம் முன்பு அவரும் அதைத் தானே தன் குழந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அதனால் மறப்போம்! மன்னிப்போம்!' என நினைத்துக் கொண் டாள்.

மறுநாள் காலையில் பிருந்தா அறையை விட்டு வெளியே வரவும் அதற்கென்றே காத்துக் கொண்டிருந்த முகுந்த் வேகமாக அவளருகில் வந்து, ''சாரி அண்ணி. தப்பு பண்ணினது நான். ஆனால் உங்களுக்குத் தண் டனை கிடைச்சிடுச்சு. முக்கியமான தருணம் என்னாலே தானே பாழாகிடுச்சு. என்னால நேற்று தூங்கவே முடி யலை. வெரி சாரி'' என்று முகத்தைத் தொங்கப் போட் டுக் கொண்டு சொன்னான்.



''ஐயோ என்ன முகுந்த். இப்படி எல்லாம் பேசி என்னைச் சங்கடத்தில் ஆழ்த்துறீங்க. இதுல உங்க பங்கு எதுவும் இல்லைங்க. இப்படித் தான் நடக்கணும்ன்னு விதி இருந்தா நீங்களோ நானோ அதை மாத்தவா முடியும். விடுங்க முகுந்த். அதையே நினைச் மனசைப் போட்டுக் குழப்பிக்காமல் வேற வேலையைப் பாருங்கள்'' என்று கூறி அவனைச் சமாதானப்படுத்தி னாள்.

இரு மாதங்கள் கழிந்த பின்...

மருத்துவர் பிருந்தாவிற்கு அடுத்த முறை செக்-அப் பின் போது ஸ்கேன் செய்ய வேண்டும் என்று கூறி இருந்தார். அதற்காக கஸ்தூரியும், பிருந்தாவும் மருத்துவ மனைக்கு வந்திருந்தார்கள்.

அவர்கள் வெளியே காத்திருப்போர் இருக்கையில் அமர்ந்து காத்திருக்க... அவர்களுக்கு எதிரே ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவள் தனது மடியில் மூன்று அல்லது நான்கு மாதக் குழந்தை ஒன்றை வைத்திருந்தாள். அவளது அருகில் மூன்று வயது மதிக்கத் தக்க ஒரு சிறுவன். அது அவளின் பெரிய மகன் போலும். அவன் விடாமல் தன் தாயிடம் கேள்வி கேட்டுக் குடைந்து கொண்டிருந்தான்.

பிருந்தா அந்தச் சிறுவனை ரசித்துக் கொண்டிருந் தாள்.

தாயைக் கேள்விகள் கேட்டுப் போர் அடித்துப் போன அந்தச் சிறுவன் பிருந்தாவிடம் தன் கேள்விகளைத் தொடர விரும்பி அவள் அருகில் வந்தான்.

வந்தவன் பிருந்தாவிடம், ''நீங்களும் பேபி வாங்கப் போறீங்களா?'' என்றான்.

பிருந்தா ஆமாம் என்று தலையாட்டிச் சொன்னவுடன், ''என்ன பேபி? கேர்ள் ஆர் பாய்?'' என்றான்.

''அது தெரியாதே'' என்று பிருந்தா சொன்னவுடன்,

''நாப்கின்னைக் கழட்டிட்டுப் பார்த்தால் தெரிந்து விடுமே!'' என்று பிருந்தாவைப் பார்த்துச் சொன்னவன் தன் தாயிடம் திரும்பி, ''அப்படித் தானே மா?'' என்று கேட்டான்.

அந்தத் தாய் பிருந்தாவைப் பார்த்து ஒரு சங்கடமான புன்முறுவலை உதிர்த்தாள். பின் தன் மகனை அருகே அழைத்துக் கொண்டாள்.

பிருந்தாவும், கஸ்தூரியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். அடுத்த நிமிடத்தில் பிருந்தாவை ஸ்கேன் அறைக்குள் அழைத்துச் சென்றார்கள்.

அங்கே அவளுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அவளது வயிற்றில் இரு குழந்தைகள் இருப்பதாகக் கண்டறிந்தார்கள். இரு குழந்தைகளும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

பிருந்தா சந்தோஷத்துடன் வெளியே வந்து கஸ்தூரியிடம் விஷயம் கூற அவரும் மகிழ்ந்து போனார்.

வீட்டை அடைந்ததும் கஸ்தூரி பிருந்தாவிடம், ''இப்பவே இரட்டைக் குழந்தைன்னு வெளியே சொல்ல வேண்டாம்மா. கண்ணு பட்டுடும்'' என்று சொன்னார்.

அவரது பேச்சுக்கு மறுப்புத் தெரிவிக்காது அவரது கூற்றை ஆமோதித்தவள் மிகுந்த தயக்கத்துடன், ''அத்தை, நீங்களே இந்த விஷயத்தை அவர்கிட்டே சொல்லிடுறீங்களா?'' என்று கேட்டாள்.



முதல் முறை போல் எதுவும் சொல்லி விடுவானோ என்று அவள் பயப்படுவது அவருக்குப் புரிந்தது. தன் மகனை நினைக்கும்பொழுது கஸ்தூரியின் மனதில் ஒரு சங்கடம் பரவியது.

தன்னை ஒரு எதிர்பார்ப்போடு பார்த்துக் கொண்டிருந்த மருமகளிடம், ''சரி பிருந்தா. நானே ஆதிகிட்டே விஷயம் சொல்லுறேன்'' என்றார்.

இரவு வீடு வந்து சேர்ந்த மகன்களின் முகத்தை ஆராய்ந்தார்.

''போய் டிரஸ் மாத்திட்டு வாங்கப்பா. சாப்பிடலாம்'' என்று இருவரையும் பார்த்துச் சொன்னார்.

முதலில் முகுந்த் வந்தான். அவனிடம் கஸ்தூரி மெல்லிய குரலில், ''அண்ணன் என்ன மூடில் இருக்கான்?'' என்று கேட்டார்.

''எதுக்கும்மா அவன் மூடைப் பத்திக் கேக்குறீங்க?''

''அவனிடம் ஒரு விஷயம் சொல்லணும். அதான்...''

''நல்லா தான்ம்மா இருக்கான். நீங்க தாராளமாச் சொல்லுங்க. ஆமா என்ன விஷயம்?'' என்று கேட்டதற்கு பதில் ஒன்றும் சொல்லாமல் கஸ்தூரி அடுக்களைக்குள் சென்றார்.

இவர்கள் இருவரும் மெதுவாக ரகசியம் பேசியதைப் பார்த்துக் கொண்டே ஆதித்யா முகுந்த் அருகில் வந்து அமர்ந்தான்.

ஆதித்யா முகுந்திடம், ''என்னடா விஷயம். அவ்வளவு ரகசியமா அம்மா என்ன சொல்லிட்டுப் போறாங்க?'' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்லை ஆதி.''

''அப்போ நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு. நான் தான் இந்த வீட்டில் தனி ஆள். அப்படித் தானே?'' என்று வருத்தப்படுவது போன்ற பாவனையுடன் ஆதித்யா கேட்டதும்,

''உன்னிடம் ஏதோ சொல்லணுமாம். நீ நல்ல மூடிலே இருக்கியான்னு கேட்டுவிட்டுப் போறாங்க... அவங்க என்னடான்னா என்ன விஷயம் என்று நான் கேட்ட கேள்வி காதிலே விழாத தினுசில் போறாங்க. நீ என்னடான்னா... நீயாச்சு அம்மாவாச்சு. என்னை ஆளை விடுங்க'' என்று முகுந்த் கை எடுத்துக் கும்பிட்டான்.

''இப்படி ஏதாச்சும் பிட்டைப் போட்டாத் தானேடா உன்னிடம் இருந்து விஷயத்தை வாங்க முடியுது'' என்று ஆதித்யா ஒரு புன்முறுவலுடன் சொல்ல...

''ஹையடா!'' என்று முகுந்த் அவனைக் கேலி செய்து கொண்டிருக்க... கஸ்தூரி அவர்கள் அருகில் வந்து ஆதித்யாவின் முகம் பார்த்தபடியே,

''ஆதி, இன்னைக்கு பிருந்தாக்கு ஸ்கேன் பண்ணப் போனோம். டாக்டர் சந்தோஷமான நியூஸ் சொல்லி இருக்காங்க. அவ வயித்திலே இரட்டைக் குழந்தை இருக்காம்'' என்று சொன்னதும்...

ஆதித்யா முகம் எல்லாம் பிரகாசிக்க கண் மூடி அந்த சந்தோஷத்தை அனுபவித்தான் என்றால்... முகுந்தோ யாஹூ என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்து தனது மகிழ்ச்சியினைத் தெரியப்படுத்தினான்.

''கங்கிராட்ஸ் ஆதி!'' என்று தன் அண்ணனின் கையைப் பிடித்துக் குலுக்கி தனது வாழ்த்தினைத் தெரிவித்தான்.



''தாங்க்ஸ்டா'' என்று தம்பியைப் பார்த்துக் கூறியவன், தனது தாயிடம் மனைவியின் உடல்நிலை குறித்துப் பேசலானான்.

சாப்பிட்டு முடித்துத் தனது அறைக்குள் சென்றவன் வழக்கம் போல் தனது குழந்தையிடம்... இல்லை யில்லை... குழந்தைகளிடம் பேச ஆரம்பித்தான்.

''ஹேய் குட்டீஸ்! நீங்க ரெண்டு பேராமே? ஏன் அப்பாகிட்டே இத்தனை நாளா சொல்லலை. அம்மாகூட சேர்ந்து நீங்களும் மக்காகிட்டீங்களா?

அவ கூட ரொம்ப சேராதீங்க. ஆனா இப்போதைக்கு அவ வயிறு தானே உங்களுக்கு சேஃபான இடம். அதனாலே அங்கேயே பத்திரமா இருங்க. வெளியே வந்ததும் அப்பா மாதிரி ஸ்மார்ட்டா ஆகிடலாம். சரியா?

இன்னைக்கு அப்பா ரொம்ப சந்தோஷமா இருக் கேன்டா குட்டீஸ். எல்லாம் உங்களால தான். உங் களுக்கு என்ன வேணும்? நீங்க வெளியே வந்ததும் நீங்க கேட்குற எல்லாத்தையும் அப்பா வாங்கித் தரேன். அப்பாக்காக இவ்வளவு நேரம் முழிச்சது போதும். போய் சமர்த்தா தூங்குங்க'' என்று கொஞ்சி விட்டுத் தான் படுத்துத் தூங்க ஆரம்பித்தான்.

அவன் கடையில் இருந்து வந்ததில் இருந்து தூங்குவ தாகப் பேர் பண்ணிக் கொண்டு தனது கண்களை மூடி நடப்பவற்றை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பிருந்தா கணவனது பேச்சினைக் கேட்டதும்,

'நான் மக்கா? இதை இவர் தன் பிள்ளைங்களுக்கும் இல்ல சொல்லித் தருகிறார். இருக்கட்டும். எல்லாத்

தையும் சேர்த்து வைச்சு ஒரு நாள் கேள்வி கேட்கலாம்'' என்று மனதிற்குள் முடிவெடுத்தாள்.



## 11



நாட்கள் வேகமாக விரைந்தோடியது. ஆதித்யாவிற்கு மார்கழி மாதக் குளிரில் காலையில் எழுந்து கொள்ளவே பிடிப்பதில்லை. அவன் கீழே விழுந்து அடிபட்டதில் இருந்து ஜாகிங் செல்வதை எல்லாம் நிறுத்தி விட்டான். இப்பொழுது முகுந்துடன் சேர்ந்து வெளியே வாக்கிங் செல்கிறான்.

முகுந்தை தனியே ஜாகிங் செல்ல வற்புறுத்தியும் கூட, முகுந்த் அண்ணனை விட்டுச் செல்வதில்லை. ஆதித்யாவிற்காக முகுந்தும் வாக்கிங் தான் செல்கிறான். தேவை என்றால் வாக்கிங் முடித்து வீடு வந்ததும், தான் மட்டும் தனியே வீட்டைச் சுற்றி ஓடிக் கொள்வதாக முகுந்த் ஆதித்யாவிடம் சொல்லி விட்டான்.

தம்பியுடன் சேர்ந்து நடப்பதற்காக காலையில் கண் விழித்த ஆதித்யா பிருந்தாவை அறையில் காணது ஹாலுக்கு வந்தான்.

கஸ்தூரி சமையலறையில் இருந்து வெளிப்பட்டார்.

''ஆதி காபி கொண்டு வரவா? பிருந்தா எழுந்துட்டாளா? அவளுக்கு பூஸ்ட் ரெடி பண்ணட்டுமா?'' என்று கேட்டார்.



''பிருந்தா ரூமிலே இல்லையேம்மா! கிட்சனிலே இருப்பாள்ன்னு நினைச்சேன். ஒரு வேளை தோட்டத்திலே இருக்காளா?'' என்று சொல்லிக் கொண்டே அங்கே சென்று பார்க்க அவள் அங்கும் இல்லை.

அவன் தேடிக் கொண்டிருக்கும் போதே குளித்து முடித்துத் தலையைத் துவட்டிக் கொண்டே முகுந்தும் அங்கு வந்து சேர்ந்தான். வாக்கிங் போகும் முன்னாடி இவன் எதற்குக் குளித்தான் என ஆதித்யா அவனை ஆச்சரியமாகப் பார்த்தான். முகுந்தும் ஒரு முறை வீடு முழுவதும் சுற்றி வந்தான்.

அப்பொழுது தான் அவர்களது கார் இல்லாததைக் கவனித்த முகுந்த், ''ஆதி காரைக் காணோம். அண்ணி எங்கேயோ வெளியே போயிருக்காங்க போல'' என்றான்.

காலங்கார்த்தாலே இந்த மார்கழி மாதக் குளிரிலே எங்கே போனாள்? அதுவும் யாரிடமும் சொல்லாமல் என்ற கடுப்புடன் தன் தாயைப் பார்த்து, ''உங்ககிட்டே ஏதாச்சும் சொன்னாளா?'' என்று ஆதித்யா கேட்டுக் கொண்டிருக்கும் போதே, அவள் சென்ற கார் அவர்களது வீட்டிற்குள் நுழைந்தது.

கையில் பூஜைக் கூடையுடன் உள்ளே நுழைந்தவளைப் பார்த்தவுடனே அவள் விவரம் தெரிவிக்காமலே அவள் எங்கு சென்றிருப்பாள் என்று மூவருக்கும் புரிந்தது.

கணவனின் கடுகடுத்த முகத்தைப் பார்த்தவள், 'காலையிலேயே இவர் எதுக்கு இவ்வளவு கோபமா இருக்கார்?' என்று யோசித்துக் கொண்டே,

''கோவிலுக்குப் போனேன்ங்க. நீங்க நைட் லேட்டா தானே வந்தீங்க. அதான் சொல்ல முடியலை.

காலையிலே தூங்குறவரை எழுப்பிச் சொல்ல வேணா மேன்னு பார்த்தேன். அத்தைகிட்டே சொல்லிட்டுப் போனேன்'' என்று அவள் சொல்லவும்,

''நீ காலையிலே கோவிலுக்குப் போகணும் என்று சொன்னாய் பிருந்தா. ஆனால் நான் அதிகாலையிலே என்று நினைக்கலை. அதான் உன்னைக் காணோம்ன்னு குழம்பிப் போயிட்டேன்'' என்று கஸ்தூரி சொன்ன வுடன்,

''ஓ! சாரி அத்தை. நான் தெளிவா சொல்லலையா?'' என்று கேட்டுக் கொண்டே அறைக்குள் சென்றாள். அடுத்த சில நொடிகளில் திரும்பியவளின் கைகளில் ஒரு கவர் இருந்தது.

நேரே முகுந்திடம் சென்று கோவில் பிரசாதத்தை நீட்டியவள், அந்தக் கவரை அவனது கைகளில் கொடுத்து, ''ஹேப்பி பெர்த் டே முகுந்த்'' என்று வாழ்த் தினாள்.

''ஓ அண்ணி! தாங்க்ஸ்... தாங்க்ஸ். எனக்காகவா காலையிலே கோயிலுக்குப் போனீங்க'' என்று சொல்லி அதை வாங்கிக் கொண்டவன் அதைப் பிரித்துப் பார்த்து,

''ஓ! ஷர்ட்டா... தாங்க்ஸ் அண்ணி. ரொம்ப சந் தோஷமா இருக்கு'' என்று சொன்னான்.

''நான் என்ன முகுந்த் பெருசா செஞ்சுட்டேன். இந்த ஷர்ட்டை நம்ம கடையிலே தான் வாங்கினேன். பில் கூட நான் பே பண்ணலை.''

''ஒரு பரிசுப் பொருளோட மதிப்பு அதன் விலை யிலே இல்லை அண்ணி. அதைக் கொடுக்கணும் அப்



படிங்கிற நினைப்பிலே தான் இருக்கு. எனக்குக் கொடுக்கணும் அப்படின்னு உங்களுக்குத் தோணியிருக் குல்ல... அதுக்கும் மேல காலையிலே எழுந்து கோயி லுக்குப் போய் அர்ச்சனை எல்லாம் பண்ணி...'' என்று சொன்னவன், ''அண்ணன் பக்கத்திலே நில்லுங்க!'' என்று சொல்லி அவள் ஆதித்யாவின் அருகில் சென்று நிற்கவும், அவர்கள் இருவரின் காலிலும் விழுந்து, ''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க!'' என்றான்.

அவனைத் தூக்கி நிறுத்திய ஆதித்யா, ''ஹேப்பி பர்த் டே!'' என்று வாழ்த்துச் சொல்ல,

பிருந்தா, ''என்ன முகுந்த் இப்படிப் பண்ணிட்டீங்க. நான் உங்களை விடச் சின்னப் பொண்ணு. என் காலிலே போய்...'' என்று சங்கோஜப்பட,

''அண்ணின்னா அம்மான்னு சொல்லுவாங்க. அத னால உங்க காலிலே விழுந்தா தப்பில்லை அண்ணி'' என்று சொன்னவன், தன் தாய் காலிலும் விழுந்து ஆசிர் வாதம் வாங்கிக் கொண்டான்.

ஆதித்யா வாக்கிங் எல்லாம் முடித்து வந்து குளித்துச் சாப்பிட்டுக் கடைக்குக் கிளம்பும் பொழுது, ''இது உங் களுக்கு'' என்று ஒரு புது ஷர்ட்டை அவனிடம் நீட்டி னாள்.

''எங்க கடையிலே ஒண்ணு வாங்கினால் ஒண்ணு ஃப்ரீன்னு அனொன்ஸ் பண்ணியிருக்கோமா என்ன? அவனுக்குத் தானே பிறந்த நாள்'' என்று சொல்லி அவள் நீட்டியதை வாங்காமலே வேறு சட்டையை அணிந்து சென்று விட்டான்.

'இவருக்கு என்ன தான் கோபம்? இவரைப் புரிஞ்சுக்க என்னால இந்த ஜென்மத்திலே முடியாது போலவே!' என்று மனதில் அலுத்துக் கொண்டாள்.

வேகமாக அவனின் பின்னே வெளியேறியவள் கடைக்குக் கிளம்பிக் கொண்டிருந்த அண்ணன், தம்பி இருவரையும் பார்த்து, ''இன்னைக்கு மதியம் வீட்டுக்குச் சாப்பிட வாங்க. நாங்க ஸ்பெஷல் சமையல் பண்ணி வைக்கிறோம்'' என்றாள்.

முகுந்த் சரி என்று மண்டையை ஆட்டினான். ஆதித்யா ஒன்றும் சொல்லவில்லை.

தானே அனைத்துச் சமையலையும் வேலையாட்களின் உதவியுடன் செய்தாள். கஸ்தூரியையும், சீதாவையும் அவள் சமையலறையில் நுழைய விடவில்லை.

காலையில் சற்றுக் கோபமாகப் பேசிவிட்டுச் சென்றதால் கணவன் மதியம் சாப்பிட வருவானோ மாட்டானோ என்று பிருந்தா கவலைப்பட்டாள். ஆனால் பிருந்தா சந்தோஷம் கொள்ளும் விதமாக ஆதித்யா தம்பியுடன் சேர்ந்து சாப்பிட வந்தான்.

கஸ்தூரி, ஆதித்யா, முகுந்த் மூவரையும் உட்கார வைத்து பிருந்தா தானே பரிமாற ஆரம்பித்தாள்.

''நீ உட்காரும்மா. கர்ப்பமா இருக்கிற பொண்ணு... நீ தான் முதல்ல சாப்பிடணும். நான் பரிமாறுகிறேன்'' என்று கஸ்தூரி வற்புறுத்தியும் கூட,

''இல்லை அத்தை. எப்பவும் நீங்களோ சீதாம்மாவோ தானே சமைப்பீங்க. இன்னைக்கு நானே சமைச்சிருக்... இதுக்கு முன்னே நான் சமைச்சதும் இல்லை. நான்



சமைச்சதைச் சாப்பிட ஆட்களும் இல்லை. அதனால இந்த சந்தோஷத்தை என்னை அனுபவிக்க விடுங்க. ப்ளீஸ்..'' என்று சொன்னதும் மூவருமே மௌனமாகிவிட்டனர்.

அவள் சொன்ன 'சமைச்சதைச் சாப்பிட ஆட்களும் இல்லை' என்ற வாக்கியத்தில் பொதிந்திருந்த அவளது தனிமை உணர்வு அவர்களை ஊமையாக்கியது. தங்களது வீட்டில் அந்தத் தனிமை உணர்வு ஏற்படா வண்ணம் தங்களது நடவடிக்கை இருக்க வேண்டும் என மூவருமே மனதில் தீர்மானித்துக் கொண்டனர்.

''முதல்ல ஸ்வீட் வைக்கிறேன்'' என்று சொல்லி அனைவருக்கும் தன் கையால் கிண்டிய அல்வாவைப் பரிமாறினாள்.

அவள் ஆதித்யாவின் தட்டில் அல்வாவை முடிக்க முற்படும் பொழுது முகுந்த், ''அண்ணி ஆதிக்கு அல்வா பிடிக்காது'' என்று சொல்லி அவளைத் தடுத்தான்.

ஆனால் அவன் தடுக்கும் முன்பே அவனது தட்டில் சிறிது அல்வா விழுந்து விட்டது.

'ஓ' என்று முகம் சுருங்கியவளிடம், ''என்ன அண்ணி ஆச்சு?'' என்று முகுந்த் காரணம் கேட்டான்.

''ஒண்ணுமில்லை. அல்வான்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதன்... வேற ஒண்ணுமில்லை'' என்று சொன்னபோது லேசான வருத்தம் அவளது குரலில் இழையோடியது.

''என் பெர்த்டேக்குத் தானே ஸ்பெஷலா செஞ்சீங்க. நான் சாப்பிடுறேன். யூ டோன்ட் வொரி'' என்று சொன்னான்.

'இவருக்கு என்ன தான் கோபம்? இவரைப் புரிஞ்சுக்க என்னால இந்த ஜென்மத்திலே முடியாது போலவே!' என்று மனதில் அலுத்துக் கொண்டாள்.

வேகமாக அவனின் பின்னே வெளியேறியவள் கடைக்குக் கிளம்பிக் கொண்டிருந்த அண்ணன், தம்பி இருவரையும் பார்த்து, ''இன்னைக்கு மதியம் வீட்டுக்குச் சாப்பிட வாங்க. நாங்க ஸ்பெஷல் சமையல் பண்ணி வைக்கிறோம்'' என்றாள்.

முகுந்த் சரி என்று மண்டையை ஆட்டினான். ஆதித்யா ஒன்றும் சொல்லவில்லை.

தானே அனைத்துச் சமையலையும் வேலையாட்களின் உதவியுடன் செய்தாள். கஸ்தூரியையும், சீதாவையும் அவள் சமையலறையில் நுழைய விடவில்லை.

காலையில் சற்றுக் கோபமாகப் பேசிவிட்டுச் சென்றதால் கணவன் மதியம் சாப்பிட வருவானோ மாட்டானோ என்று பிருந்தா கவலைப்பட்டாள். ஆனால் பிருந்தா சந்தோஷம் கொள்ளும் விதமாக ஆதித்யா தம்பியுடன் சேர்ந்து சாப்பிட வந்தான்.

கஸ்தூரி, ஆதித்யா, முகுந்த் மூவரையும் உட்கார வைத்து பிருந்தா தானே பரிமாற ஆரம்பித்தாள்.

''நீ உட்காரும்மா. கர்ப்பமா இருக்கிற பொண்ணு... நீ தான் முதல்ல சாப்பிடணும். நான் பரிமாறுகிறேன்'' என்று கஸ்தூரி வற்புறுத்தியும் கூட,

''இல்லை அத்தை. எப்பவும் நீங்களோ சீதாம்மாவோ தானே சமைப்பீங்க. இன்னைக்கு நானே சமைச்சிருக்கேன். இதுக்கு முன்னே நான் சமைச்சதும் இல்லை. நான் சமைச்சதைச் சாப்பிட ஆட்களும் இல்லை. அதனால இந்த சந்தோஷத்தை என்னை அனுபவிக்க விடுங்க. ப்ளீஸ்..'' என்று சொன்னதும் மூவருமே மௌனமாகிவிட்டனர்.



அவள் சொன்ன 'சமைச்சதைச் சாப்பிட ஆட்களும் இல்லை' என்ற வாக்கியத்தில் பொதிந்திருந்த அவளது தனிமை உணர்வு அவர்களை ஊமையாக்கியது. தங்களது வீட்டில் அந்தத் தனிமை உணர்வு ஏற்படா வண்ணம் தங்களது நடவடிக்கை இருக்க வேண்டும் என மூவருமே மனதில் தீர்மானித்துக் கொண்டனர்.

''முதல்ல ஸ்வீட் வைக்கிறேன்'' என்று சொல்லி அனைவருக்கும் தன் கையால் கிண்டிய அல்வாவைப் பரிமாறினாள்.

அவள் ஆதித்யாவின் தட்டில் அல்வாவை முடிக்க முற்படும் பொழுது முகுந்த், ''அண்ணி ஆதிக்கு அல்வா பிடிக்காது'' என்று சொல்லி அவளைத் தடுத்தான்.

ஆனால் அவன் தடுக்கும் முன்பே அவனது தட்டில் சிறிது அல்வா விழுந்து விட்டது.

'ஓ' என்று முகம் சுருங்கியவளிடம், ''என்ன அண்ணி ஆச்சு?'' என்று முகுந்த் காரணம் கேட்டான்.

''ஒண்ணுமில்லை. அல்வான்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதன்... வேற ஒண்ணுமில்லை'' என்று சொன்னபோது லேசான வருத்தம் அவளது குரலில் இழையோடியது.

''என் பெர்த்டேக்குத் தானே ஸ்பெஷலா செஞ்சீங்க. நான் சாப்பிடுறேன். யூ டோன்ட் வொரி'' என்று சொன்னான்.

அவள் மீதி உள்ள உணவுகளைப் பரிமாற ஆரம்பித்தாள்.

''இதையெல்லாம் நீங்க தைரியமாச் சாப்பிடலாம்'' என்று சொன்னவுடன்,

''ஏன் அண்ணி இதை நீங்க செய்யலையா? கடையிலே வாங்கினீங்களா? அல்வா மட்டும் தான் கிண்டினீங்களா?'' என்று முகுந்த் கேட்டான்.

''அப்படி இல்லைங்க முகுந்த். இன்னைக்கு நீங்க சாப்பிடப் போற எல்லாத்தையுமே நான் தான் சமைச்சேன். இதை எல்லாம் அப்பவே நம்ம சீதாம்மாவை சோதனை எலி ஆக்கி பரிசோதிச்சுப் பார்த்துட்டேன். சீதாம்மாக்கு டயரியா ஆகலை. இப்ப வரைக்கும் தெம்பாத் தான் நடமாடிக்கிட்டு இருக்காங்க. அதனால தான் உங்களைத் தைரியமாச் சாப்பிடச் சொன்னேன். அல்வாவைத் தான் கடைசியில் கிண்டினேன். அவங்களுக்குச் சாப்பிடக் கொடுக்கலை'' என்று விளக்கம் அளிக்க அனைவரும் புன்னகைத்தனர்.

முகுந்த் முதலில் அல்வாவைச் சாப்பிட்டான். அவன் அல்வாவைச் சாப்பிட்டு முடித்ததும் பிருந்தா ஆவலுடன், ''முகுந்த் இன்னும் கொஞ்சம் அல்வா வைக்கட்டுமா?'' என்று கேள்வி எழுப்பினாள்.

அவனை முந்திக் கொண்டு ஆதித்யா, ''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். என்ன தான் அவனுக்கு பெர்த்டே என்றாலும் ஸ்வீட் எல்லாம் கொஞ்சமாத் தான் சாப்பிடணும். நீ ஏற்கனவே வைச்சதே போதும்'' என்று சொன்னதும் பிருந்தாவின் முகம் சுருங்கிப் போயிற்று.

'இவருக்கு என்ன கோபம்? நான் முகுந்துடன் பேசிப் பழகுவது இவருக்குப் பிடிக்கலையா? எங்களைச் சந்தேகப்படுகிறாரா? சே சே! அப்படி இருக்காது. இன்னைக்கு காலையிலே கூட இவர் முன்னால் தானே முகுந்த் என்னிடம் அண்ணி என்றால் அம்மான்னு சொன்னார். ம்ம்ம்... இவரோட இயல்பே இது தான் போல!' என்று எண்ணிக் கொண்டாள்.



அண்ணியின் முக வாட்டத்தைப் போக்கும் பொருட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த முகுந்த், ''அண்ணி நான் என் பிரண்டு கூட அவங்க ஊர் திருவிழாவிற்குப் போயிருந்தேன். அப்போ அங்கே பட்டிமன்றம் எல்லாம் நடந்துச்சு. அதிலே பேசினவர் சூப்பருக்கும் ஆஃபருக்கும் என்ன வித்தியாசம்ன்னு கேட்டார். உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியலைங்க முகுந்த்'' என்று சொன்னதும்,

''வைஃப் அழகா இருந்தா அது சூப்பராம். அதுவே வைஃபோட தங்கச்சி அழகா இருந்தா அது ஆஃபராம்'' என்று சொன்னதும்,

''ஏன் முகுந்த் அப்போ உங்களுக்கு ஆஃபர் உள்ள பொண்ணு தான் வேணுமா?'' என்று கேட்டாள்.

''ஏன் அண்ணி என் அடிமடியிலே கை வைக்குறீங்க. நான் ஏதோ ஜோக் சொன்னேன். இப்பத் தான் எங்க அண்ணனுக்கே கல்யாணம் ஆகியிருக்கு. நான் சின்னப் பையன் அண்ணி'' என்று ஜகா வாங்கினான்.

ஆதித்யா சாப்பிட்டுவிட்டு எழுந்து சென்றதும் பிருந்தா முகுந்தைப் பார்த்து, ''முகுந்த், எனக்கு ஒரு சந்தேகம்... உங்க கடையிலே எல்லாம் ஆஃபர் போடுவீங்களே... அதுக்கு என்ன அர்த்தம்?'' என்று கிண்டலாகக் கேட்க,

''ஆகா அண்ணி. நான் இன்னைக்கு வசமா சிக்கிட் டேனா? வேணும்ன்னா நான் ஆதிகிட்டே கேட்டுச் சொல்லவா?'' என்று அவன் கேட்ட வினாடி.

''ஐயோ!'' என்று பிருந்தா அலறினாள்.

அதைப் பார்த்து முகுந்த் முகம் வாடினான். திடீரென்று முகுந்திடம் இருந்து சத்தம் இல்லாமல் போகவும் சாப்பாடு மேஜையை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந் தவள் நிமிர்ந்து என்னவென்று பார்க்க...

''உங்களை ஆதி ரொம்ப திட்டுறானா அண்ணி? அவ னைப் பார்த்து இப்படி பயப்படுறீங்க'' என்று வருத்தத் துடன் முகுந்த் கேட்டான்.

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லைங்க முகுந்த்'' என்று பிருந்தா சொல்லியும் அவன் சமாதானம் அடைய வில்லை.

தன் கணவனைப் பார்த்துத் தனக்கொன்றும் பயமில்லை என்று காட்டுவதற்காக சாப்பிடும் இடம் நோக்கி வந்த ஆதித்யாவிடம் பிருந்தா சற்று முன் முகுந்திடம் கேட்ட அதே கேள்வியைக் கேட்டாள்.

ஆதித்யா அவளைப் பார்த்து முறைக்கவும்...

''இல்லைங்க... சும்மா கிண்டலுக்கு...'' என்று அவள் தயங்கி இழுக்கவும்,

''கிண்டலுக்குத் தான்னா கூட என்ன வேணும்ன் னாலும் கேட்பியா? முதலில் இந்த ஜோக்கே அபத்தமா இருக்கு. அவனைச் சொல்லணும். ஜோக் சொல்லுறா னாம் ஜோக். வைஃபோட பொண்டாட்டி ஆஃபராம்'' என்று சொல்லிக் கொண்டே அந்த இடம் விட்டு அகன் றான்.



அவன் சென்றதும் பிருந்தா வாய் பொத்தி களுக் கென்று சிரித்தாள்.

''இப்போ எதுக்கு அண்ணி சிரிக்குறீங்க?'' என்று கேட்ட முகுந்திடம்,

''ரெண்டு விஷயத்துக்காக முகுந்த்'' என்று பிருந்தா சொன்னதும்,

''உங்க ரெண்டு காரணத்தைச் சொல்லுங்க. நானும் கேட்கிறேன்'' என்றான்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீங்க என்னமோ என்னை மட்டும் தான் உங்க அண்ணன் திட்டுற மாதிரி ஃபீல் பண்ணீங்க இல்லையா? ஆனா அவர் பாரபட்சம் இல்லாமல் உங்களையும் தானே திட்டிட்டுப் போறார். அப்புறம் கோபத்திலே என்ன சொல்லுறோம்ன்னு தெரி யாமல் வைஃபோட தங்கச்சின்னு சொல்லுறதுக்குப் பதிலா வைஃபோட பொண்டாட்டின்னு சொல்லிட்டுப் போறார்'' என்று சொல்லிச் சிரித்தாள்.

''ம்ம்ம்.. நீங்க ஆதி கூடச் சேர்ந்து சூரியன் மாதிரி பிரகாசமா ஆகிட்டீங்க. ஆனா ஆதி தான்...'' என்று தான் சொல்ல வந்ததைச் சொல்லாமல் முகுந்த் பாதியிலே நிறுத்த,

''உங்க அண்ணன் தான் எங்கூடச் சேர்ந்து மக்காகிட்டாரா? அதானே சொல்ல வந்தீங்க?'' என்று கேட்டாள்.

''ஐயோ! நான் எதுவுமே என் வாயால் சொல்ல லைப்பா'' என்று முகுந்த் சொல்லிச் சிரிக்கவும், பிருந் தாவும் இணைந்து நகைத்தாள்.

''சாப்பிடாமல் அங்க என்ன வெட்டிப் பேச்சு?'' என்று ஆதித்யா இவர்களைப் பார்த்துக் குரல் கொடுத்தான்.

''ஐயோ அண்ணி. தி திட்டுறான்...'' என்று முகுந்த் சொல்லத் தொடங்கவும்,

''இல்லைங்க முகுந்த். நேரமாச்சு. சாப்பிடுன்னு அக்கறையாச் சொல்லுறார்'' என்று பிருந்தா தன் கணவனுக்காகப் பரிந்து பேசினாள்.

''அது எப்படி அண்ணி எல்லா விஷயத்திலும் ஒரு பாசிட்டிவ் பாயிண்டைப் பிடிக்குறீங்க?'' என்று முகுந்த் அவளிடம் சந்தேகம் கேட்கவும், பிருந்தா கண் மூடி சில நொடிகள் அமைதியாக இருந்தாள்.

''என் வாழ்க்கையிலே சோகம் மட்டும் தன் முகுந்த் தொடர்ந்து நடந்துட்டு வந்துச்சு. அதை எல்லாம் பார்த்துப் பார்த்து வெறுத்துப் போகாமல் இருக்கணும் என்றால் இது மாதிரி கெட்டதிலும் ஒரு நல்லதைத் தேடிக் கண்டுபிடிக்க ஆரம்பிச்சேன். அப்புறம் அதுவே பழக்கமாகிடுச்சு. அவ்வளவுதான்'' என்று சாதாரணமாகச் சொன்னவளை பிரமிப்புடன் பார்த்தவன்,

''கிரேட் அண்ணி. சரி... நீங்க சாப்பிடுங்க'' என்று சொல்லி அகன்றான்.

முகுந்த் அந்த இடம் விட்டுச் சென்றதும் அவள் சாப்பிட அமர்ந்தாள். முதலில் தான் கிண்டிய அல்வாவை ருசிக்க ஆசைப்பட்டு அந்த கிண்ணத்தைத் தேடினாள். அது டைனிங் டேபிளில் காணவில்லை. ஒரு வேளை அடுக்களையில் வைத்து விட்டோமோ என்று எண்ணியவளாய் அங்கே சென்று பார்க்க...



ஆதித்யா அந்த அல்வாவைக் குப்பைக் கூடையில் கொட்டிக் கொண்டு இருந்தான்.

அதைப் பார்த்து அதிர்ந்தவள் ஒன்றும் சொல்லாது திரும்பி வந்து சாப்பிடுவது போல் பாவனை செய்ய ஆரம்பித்தாள்.

'இப்போ எதுக்கு அதைக் கொட்டுறார்? அவருக்குப் பிடிக்காத அல்வாவைக் கிண்டியதற்கா? இல்லை நான் எனக்குப் பிடித்ததை செய்ததாலா? இல்லை நான் சாப்பிடுறேன் அண்ணி என்று முகுந்த் சாப்பிட்டதாலா? பொறமையா? அதனால் தான் முகுந்திற்கு இரண்டாவது முறை வைக்க விடாமல் செய்தாரா?

ஹூம். இவரும், இவர் கோபமும். சரியான உம்மணாம் மூஞ்சி. என்ன நினைக்கிறார்ன்னு வெளியே சொல்ல மாட்டார்' என்று மனதில் திட்டியவாறே சாப்பிட ஆரம்பித்தாள்.



## 12



கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் என்று அடுத்தடுத்து பண்டிகைகள் தொடர்ந்து வந்ததால் கடையில் கூட்டம் அதிகரித்தது. ஆதித்யாவும், முகுந்தும் கடுமையாக உழைத்தார்கள். அவர்கள் வீட்டிற்கு நேரம் கழித்துத் தான் வந்தார்கள். பொங்கலும் முடிந்த பின்பு தான் அவர்களுக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது.

தை மாதத்தில் பிருந்தாவின் குடும்ப வக்கீல் தனது மகனுக்குப் பாண்டிச்சேரியில் கல்யாணம் வைத்திருந்

தார். அவர் பிருந்தாவையும், ஆதித்யாவையும் நேரில் சந்தித்து பத்திரிகை வைத்து விட்டுச் சென்றர்.

ஆனால் அந்தக் கல்யாணத்திற்குத் தான் போவதா வேண்டாமா என்று பிருந்தா குழப்பத்தில் இருந்தாள்.

''என்னம்மா நாளைக்கு உங்க லாயர் அங்கிள் பையன் கல்யாணம் தானே! எப்போ போகப் போகிறாய்?'' என்று கஸ்தூரி கேட்டதும்,

பிரகாஷ் கல்யாணத்தின் போது கணவன் சொன்னதை நினைவு கூர்ந்த பிருந்தா, ''இல்லை அத்தை. நான் போகலை'' என்றாள்.

''ஏன் மா? அப்புறம் தப்பா நினைச்சுக்கப் போறார். உனக்கு எவ்வளவோ ஹெல்ப் பண்ணி இருக்கார் தானே?!''

''ப்ச்சு. நான் அங்கிள் கிட்டே சொல்லிக்கிறேன் அத்தை. நான் போகப் போறதில்லை...'' என்று பிருந்தா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அன்று போல் இன்றும் ஆதி அவர்களருகில் வந்தான்.

''எங்கே போகப் போறதில்லை?'' என்று கேட்டான்.

பிருந்தா அமைதி காக்க, கஸ்தூரி விஷயம் சொன்னவுடன்,

''ஏன் போகப் போறதில்லை? நாளைக்குக் காலையிலே போறோம். சீக்கிரமா எழுந்துக்கணும். அதனால சீக்கிரமா போய்த் தூங்கு'' என்று பிருந்தாவைப் பார்த்துச் சொன்னவன் தாயிடம் வேறு விஷயங்களைப் பேச ஆரம்பித்தான்.

'அன்னைக்குப் போகக் கூடாதுன்னு சொன்னார் என்று நாம போக வேண்டாம்ன்னு முடிவு பண்ணினால்,



இன்னைக்கு தானும் சேர்ந்து வருவதா சொல்லுறார். ஒண்ணும் புரியலை. ஒருவேளை அன்னைக்கு அவராலே நடக்க முடியாமல் இருந்ததாலே நம்மையும் போக வேண்டாம்ன்னு சொன்னாரோ?' என நினைத்துக் கொண்டே பிருந்தா தூங்கப் போனாள்.

காலையிலே எழுந்து பிருந்தா குளிக்கச் சென்றாள். அவள் குளித்து முடித்து வந்ததும்,

''சிம்பிளா சாரி கட்டு!'' என்று ஆதித்யா சொன்னான்.

'ஆமா நான் யார் கல்யாணத்துக்குப் போகணும். போகக் கூடாதுங்கிறதை மட்டும் தான் முடிவு பண்ணுவார்ன்னு பார்த்தேன். இப்பல்ல தெரியது நான் எப்படி புடவை கட்டணும் என்பதைக் கூட இவர் தான் முடிவு செய்வார் போல! எனக்குன்னு எந்த ஆசையும் இருக்கக் கூடாதா?' என மனதுக்குள் கணவனைத் திட்டியவள் இருப்பதிலேயே பெரிய பட்டுப் புடவையை எடுத்துக் கட்டினாள்.

அவளைப் பார்த்தவன், ''நான் உன்னை சிம்பிளா தானே புடவை கட்டச் சொன்னேன்...'' என்று கேட்டதும்,

''எல்லாத்துக்கும் உங்க பேச்சைத் தான் நான் கேட்டாகணுமா?'' என்று எதிர்த்துக் கேட்டவள் மடமட வென்று அறையை விட்டு வெளியேறினாள்.

மிக மெல்லிய குரலில் என்றாலும் அவள் அவனை எதிர்த்துக் கேள்வி கேட்பது இதுவே முதல் முறை. அவன் அவளை விசித்திரமாகப் பார்த்தானே ஒழிய ஒன்றும் சொல்லவில்லை.

தார். அவர் பிருந்தாவையும், ஆதித்யாவையும் நேரில் சந்தித்து பத்திரிகை வைத்து விட்டுச் சென்றார்.

ஆனால் அந்தக் கல்யாணத்திற்குத் தான் போவதா வேண்டாமா என்று பிருந்தா குழப்பத்தில் இருந்தாள்.

''என்னம்மா நாளைக்கு உங்க லாயர் அங்கிள் பையன் கல்யாணம் தானே! எப்போ போகப் போகிறாய்?'' என்று கஸ்தூரி கேட்டதும்,

பிரகாஷ் கல்யாணத்தின் போது கணவன் சொன்னதை நினைவு கூர்ந்த பிருந்தா, ''இல்லை அத்தை. நான் போகலை'' என்றாள்.

''ஏன் மா? அப்புறம் தப்பா நினைச்சுக்கப் போறார். உனக்கு எவ்வளவோ ஹெல்ப் பண்ணி இருக்கார் தானே?!''

''ப்ச்சு. நான் அங்கிள் கிட்டே சொல்லிக்கிறேன் அத்தை. நான் போகப் போறதில்லை...'' என்று பிருந்தா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அன்று போல் இன்றும் ஆதி அவர்களருகில் வந்தான்.

''எங்கே போகப் போறதில்லை?'' என்று கேட்டான்.

பிருந்தா அமைதி காக்க, கஸ்தூரி விஷயம் சொன்னவுடன்,

''ஏன் போகப் போறதில்லை? நாளைக்குக் காலையிலே போறோம். சீக்கிரமா எழுந்துக்கணும். அதனால சீக்கிரமா போய்த் தூங்கு'' என்று பிருந்தாவைப் பார்த்துச் சொன்னவன் தாயிடம் வேறு விஷயங்களைப் பேச ஆரம்பித்தான்.

'அன்னைக்குப் போகக் கூடாதுன்னு சொன்னார் என்று நாம போக வேண்டாம்ன்னு முடிவு பண்ணினால்,



இன்னைக்கு தானும் சேர்ந்து வருவதா சொல்லுறார். ஒண்ணும் புரியலை. ஒருவேளை அன்னைக்கு அவரால நடக்க முடியாமல் இருந்ததாலே நம்மையும் போக வேண்டாம்ன்னு சொன்னாரோ?' என நினைத்துக் கொண்டே பிருந்தா தூங்கப் போனாள்.

காலையிலே எழுந்து பிருந்தா குளிக்கச் சென்றாள். அவள் குளித்து முடித்து வந்ததும்,

''சிம்பிளா சாரி கட்டு!'' என்று ஆதித்யா சொன்னான்.

'ஆமா நான் யார் கல்யாணத்துக்குப் போகணும். போகக் கூடாதுங்கிறதை மட்டும் தான் முடிவு பண்ணுவார்ன்னு பார்த்தேன். இப்பல்ல தெரியது நான் எப்படி புடவை கட்டணும் என்பதைக் கூட இவர் தான் முடிவு செய்வார் போல! எனக்குன்னு எந்த ஆசையும் இருக்கக் கூடாதா?' என மனதுக்குள் கணவனைத் திட்டியவள் இருப்பதிலேயே பெரிய பட்டுப் புடவையை எடுத்துக் கட்டினாள்.

அவளைப் பார்த்தவன், ''நான் உன்னை சிம்பிளா தானே புடவை கட்டச் சொன்னேன்...'' என்று கேட்டதும்,

''எல்லாத்துக்கும் உங்க பேச்சைத் தான் நான் கேட்டாகணுமா?'' என்று எதிர்த்துக் கேட்டவள் மடமடவென்று அறையை விட்டு வெளியேறினாள்.

மிக மெல்லிய குரலில் என்றாலும் அவள் அவனை எதிர்த்துக் கேள்வி கேட்பது இதுவே முதல் முறை. அவன் அவளை விசித்திரமாகப் பார்த்தானே ஒழிய ஒன்றும் சொல்லவில்லை.

அவள் கஸ்தூரியின் அறைக்குச் சென்று தலை வாரி, பூ வைத்து, நகை அணிந்து தயாராகி வரவும்... ஆதித்யா ரெடியாகி வரவும் சரியாக இருந்தது.

நன்றாக அலங்கரித்துக் கொண்டு இருவரும் ஒன்றாக வெளியே கிளம்புவதைப் பார்த்த கஸ்தூரி சந்தோஷப் பட்டுக் கொண்டார்.

பிருந்தாவிற்கும் கணவனுடன் ஒன்றாகக் கிளம்பிச் செல்வது ஆனந்தத்தை அளித்தது.

டிரைவர் வண்டியை ஓட்ட ஆதித்யாவும், பிருந் தாவும் பின்னிருக்கையில் அமர்ந்து கொண்டனர்.

பிருந்தாவிற்குக் கணவனின் தோள் சாய வேண்டும் போல் ஆசையாக இருந்தது. ஏதாவது திட்டி விடுவானோ என்று பயமாகவும் இருந்தது.

கல்யாணத்திற்கு ப்ரியாவும் வந்திருந்தாள். பிருந்தா அவளிடம் தனியாகப் பேசிக் கொண்டிருந்தாள். பிருந்தா விற்குத் தெரிந்த அனைவரும் அவளருகே வந்து அவளது மேடிட்ட வயிற்றைப் பார்த்து எத்தனை மாதம் என்று நலன் விசாரித்தார்கள்.

பிருந்தாவிற்குப் பெரிய பட்டுப் புடவையைக் கட்டி வந்தது இம்சையாக இருந்தது. காற்றுப் போகாதது ஒரு பக்கம் கசகசப்பாக இருந்தது என்றால் மற்றொரு புறம் அதன் அகல ஜரிகை உடலில்... முக்கியமாக வயிற்றுப் பகுதியின் மீது உராய்வதால் அந்த இடம் அரிக்க ஆரம் பித்தது.

முஹூர்த்தம் முடிந்து பரிசைக் கொடுத்த பின் சாப் பிட்டுக் கிளம்பும் போது அவளையும் அறியாமல் ஒரு சலிப்புக் குரல் அவளிடமிருந்து வெளிப்பட்டது.



ஆதித்யா அவளைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த் தான்.

ஆதித்யா ஒன்றும் சொல்லாமல் அவளைக் காரில் ஏறச் சொன்னான். டிரைவரிடம் ஏதோ பேசிவிட்டுப் பின்னிருக்கையில் சென்று அமர்ந்தான்.

கார் பாண்டிச்சேரியில் உள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்று நின்றது.

ஆதித்யா பிருந்தாவைப் பார்த்து, ''நீ இங்கேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு. வரேன்'' என்று சொல்லி உள்ளே சென்றவன் ஐந்தே நிமிடத்தில் திரும்பி வந்து,

''வெளியே வா'' என்று சொல்லி அவன் காலையில் கொண்டு வந்திருந்த சிறு பையை எடுத்துக் கொண்டு அவளுடன் ஹோட்டலினுள் சென்றான்.

ஹோட்டல் ரிஷப்ஷனில் சாவியைப் பெற்றுக் கொண்டு அவளுடன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தான்.

உள்ளே நுழைந்ததும் கையில் இருந்த பையில் இருந்து அவளுடைய காட்டன் சேலை ஒன்றையும், அதற்குரிய ரவிக்கையையும் தந்து மாற்றிக் கொள்ளச் சொன்னான்.

கண்கள் பளிச்சிட, ''தாங்க்ஸ்'' என்று சொல்லி வாங் கிக் கொண்டாள்.

இவர் இப்போ வெளியே போனால் தானே நான் டிரஸ் மாற்ற முடியும் என்று நினைத்தவள் அவனைப் பார்க்க... அவனோ அவளுக்கு முதுகு காட்டி கட்டிலில் சென்று அமர்ந்து கொண்டான். சரி நாமளும் முதுகு காட்டி

புடவையை மாற்றுவோம் எனத் திரும்பி நின்று புடவையை மாற்ற ஆரம்பித்தாள்.

அவன் வாய்விட்டுப் பொரிய ஆரம்பித்தான்.

''ஒருத்தன் நம்மை எதுக்கு சிம்பிளா சேலை கட்டச் சொல்லுறான் அப்படின்னு யோசிக்கிறது கிடையாது. இவன் என்ன சொல்லுறது நாம என்ன கேட்குறதுன்னு நினைப்பு! இப்ப யாரு அவஸ்தைப்படறது?'' என்று சொல்லவும் பிருந்தா அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''இப்போ திரும்பி என்ன லுக்கு வேண்டிக் கிடக்கு?'' என்று அவன் சொன்னதும்,

'இவருக்கு முதுகில் கூடக் கண்ணு இருக்கா?' என்று வழக்கம் போல் வியந்தாள்.

அவன் தனது பொருமலைத் தொடர்ந்தான்.

''சரி கஷ்டமா இருக்குன்னாவது வெளியே சொல்லுறியா? அதுவும் கிடையாது. உஷ் புஷ்ன்னு முனகுற?'' என்றான்.

சேலையைக் கட்டி முடித்தவன் அவனைத் திரும்பிப் பார்க்க அப்பொழுது தான் கணவனின் முன்னால் இருந்த கண்ணாடியைக் கவனித்தாள். ஆகா! இவ்வளவு நேரமும் இது வழியாத் தான் நம்மைப் பார்த்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தாரா என்று நினைத்து வெட்கம் அடைந்தாள்.

அவன் கண்ணாடியில் தெரிந்த உருவத்திடம் என்னவென்று புருவம் உயர்த்திக் கேட்க ஒண்ணுமில்லை என்று தலையசைத்து மறுத்தாள்.

அவன் படுக்கையில் இருந்து எழுந்து கொண்டே அவள் புறம் திரும்பி, ''சரி கிளம்புவோமா? இல்லை ரெஸ்ட் எடுக்கிறாயா?'' என்றான்.



ஹையா! ஜாலி! ஊர் சுற்றிப் பார்க்கப் போகிறோம் போல என உற்சாகம் அடைந்தவளாய், ''ரெஸ்ட் எல்லாம் வேண்டாம். நாம கிளம்பலாம். முதல்ல எங்கே போறோம்?'' என்றாள்.

அவளது கேள்வியில் குழப்பம் அடைந்தவனாய், ''முதல்ல எங்கே போறோமா? நம்ம வீட்டுக்குப் போலாமான்னு கேட்டேன்'' என்றான்.

''வீட்டுக்கா?'' என்று காற்றுப் போன பலூனாய் உற்சாகம் இழந்தாள்.

''அப்புறம் ஏன் ஹோட்டலில் ரூம் போட்டீங்க?'' என்று கேட்டவுடன்,

''அப்புறம் காரிலே வைச்சா டிரஸ் மாற்ற முடியும்?'' என்று அவன் இடக்காகக் கேட்க,

''அப்படிச் சொல்ல வரலை. ப்ரியா வீட்டுக்குப் போய் மாற்றி இருக்கலாமே! எனக்காகவா இவ்வளவு செலவு பண்ணீங்க?'' என்று கண்கள் ஜொலி ஜொலிக்கக் கேட்டாள்.

''நீ என் வைஃப் தானே? உனக்குச் செலவு செய்யாமல் வேற யாருக்குச் செய்யப் போறேன்?'' என்று அவன் கேட்டதும்,

''நான் தான் உங்க வைஃபுன்னு உங்களுக்குத் தான் அப்பப்போ மறந்து போயிடுது'' என்று முணுமுணுத்தாள்.

''என்ன முணுமுணுக்குறே?'' என்று கேட்டதும்,

''ஒண்ணுமில்லை. நாம வீட்டுக்கே போகலாம். அங்க போயே நான் ரெஸ்ட் எடுத்துக்கிறேன்'' என்று சொன்னாள்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அவர்கள் அறையைக் காலி பண்ணிவிட்டு காரில் ஏறிச் சென்னையை நோக்கிப் பயணம் செய்தார்கள்.

பிருந்தாவிற்கு உடுத்தி இருந்த பருத்தி ஆடை உடலுக்கு இதம் அளித்தாலும் ஏற்கனவே தோன்றியிருந்த அரிப்புணர்ச்சி மறையவில்லை. கைகளை வைத்து அந்த இடத்தைத் தேய்க்க ஆரம்பித்தாள். ஆதித்யா அவளது கைகளைத் தட்டி விட்டான்.

''ரொம்ப அரிக்குதுங்க'' என்று கணவனைப் பார்த்துப் பரிதாபமாகச் சொன்னாள்.

'நீயாக இழுத்துக் கொண்டது தானே!' என்று சொல்லியிருப்பான். ஆனால் டிரைவரின் முன்னிலையில் அவன் அவளை எதுவும் திட்ட விரும்பவில்லை.

ஒரு ஐந்து நிமிடம் பொறுத்துப் பார்த்தவள், மீண்டும் ஒரு முறை கையை வயிறு நோக்கிக் கொண்டு போக... இம்முறை ஆதித்யா அவளது இரு கைகளையும் தனது கைக்குள் சிறைப் பிடித்தான்.

அது அவளுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வையும், கூடவே ஒரு துணிச்சலையும் தந்து அவன் தோள் மீது தன் தலையைச் சாய வைத்தது. அவன் ஆட்சேபணை தெரிவிக்காததால் அப்படியே கண் மூடியவள், அயர்ந்து தூங்கியும் போனாள்.

வீடு வந்ததும் பவுடரை எடுத்து அவள் வயிற்றுப் பகுதியில் தடவியவன், ''சொறிஞ்சு வைச்சிடாதே. அரிப்பது போல் இருந்தால் பவுடரைப் போட்டுக் கொள். நான் கடைக்குப் போயிட்டு வரேன்'' என்று சொல்லிக் கிளம்பினான்.



அவனது கண்டிப்பு கலந்த அக்கறை மனதிற்கு உவப்பைத் தந்தது.

அவன் இரவு வர வெகு நேரமாகியது. சாதாரணமாக அவனுக்காகக் காத்திருக்காமல் சாப்பிட்டுத் தூங்கி விடுவாள். வயிற்றுப் பிள்ளைக்காரி என்று சொல்லியே இந்த இரண்டையும் சீதாவும், கஸ்தூரியும் பிருந்தாவை செய்ய வைத்து விடுவார்கள்.

ஆனால் இன்று அவர்களின் பேச்சைக் கேட்டு நேரத்தோடு சாப்பிட்டவள் கணவனைப் பாராது தூங்கச் செல்ல மனமின்றி அவனுக்காக விழித்திருந்தாள்.

அவன் வீட்டினுள் நுழைந்ததும், ''என்ன இன்னும் தூங்கலையா?'' என்று தான் பிருந்தாவைப் பார்த்துக் கேட்டான்.

அவன் சாப்பிட்டு முடித்து அறைக்குச் சென்ற பின் சீதா கொடுத்த பாலை வாங்கிக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

அவன் தனது லேப்டாப்பில் எதையோ நோண்டிக் கொண்டிருந்தான். அவள் அவனுக்குப் பாலைக் கொடுக்க அவன் அதை வாங்கி மேஜை மேல் வைத்தான். அவன் நிமிர்ந்து அவளைப் பார்க்கவில்லை.

அவள் படுக்கையின் ஓரத்தில் அமர்ந்து கொண்டு அவனுக்காகக் காத்திருக்க...

ஐந்து நிமிடங்கள் கழித்து நிமிர்ந்தவன், ''எதுக்கு உட்கார்ந்து இருக்கே? போய் தூங்கு'' என்றான்.

காலையில் இருந்து கணவன் தன் மீது காட்டிய அக்கறை தந்த துணிவில், ''இல்லை... நீங்க வாங்க. நீங்க

வந்ததும் படுத்துக்கிறேன். அது வரைக்கும் உட்கார்ந்து இருக்கேன்'' என்றாள்.

''இருபத்தி மூணு வருஷமா நான் வந்த பின்னாடியா தூங்கினே? தனியாத் தானே தூங்கினே? இப்ப மட்டும் புதுசா என்ன வந்துச்சு. போய் படு'' என்று கடுமையான குரலில் கூறினான்.

'அதானே பார்த்தேன். என்னடா காலையில் இருந்து அக்கறையைப் பொழியுறாரேன்னு! மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறிடுச்சா? இனி இப்போதைக்கு இறங்க மாட்டாரே!

எப்பவும் லிப்ட்டிலே ஏறிடுவார். இன்னைக்கு பவர் கட் போல். அதுதான் ஏணி வைச்சு பொறுமையா ஏறி இருக்கார். இது தெரியாமல் நான் தான் திருந்திட்டாருன்னு நினைச்சேன். ஹூக்கும்... இவராவது திருந்துறதாது. இவருக்கு என்ன தான் பிரச்சனை? ஒரு நிலையா இருக்க மாட்டாரா?' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு தூங்கச் சென்றாள்.

## 13

கஸ்தூரி பிருந்தாவிற்கு வளைகாப்பு செய்யத் தீர்மானித்தார். அது குறித்து அவர் தனது மகனிடம் பேசினார். அவனும் வளைகாப்பை நல்ல முறையில் செய்துவிடலாம் எனக் கூறினான்.

அதிக ஆடம்பரம் இல்லாமல் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தார்கள். மிக நெருங்கிய



உறவுகள் மற்றும் நண்பர்களை மட்டுமே அழைத்தார்கள்.

இன்று வளைகாப்பு. பிருந்தா காலையில் மிக உற்சாகமாகக் குளித்து எழுந்து தயாராகினாள். வளைக் காப்பை வீட்டிலேயே நடத்த முடிவு செய்திருந்தபடியால் வீடே விழாக்கோலம் பூண்டிருந்தது.

காலை உணவை முடித்துக் கொண்டவள், கணவன் தனக்காகத் தேர்ந்தெடுத்திருந்த ஜரிகை இல்லாத மெல்லிய பட்டுப் புடவையை ஆசையுடன் உடுத்தினாள். கண்ணாடி முன் நின்று அழகு பார்த்தாள். அந்தப் புடவை அவளுக்கு மிகவும் அழகாக இருப்பதாகத் தோன்றியது.

'ஜரிகை உள்ள புடவை நமக்கு ஒத்துக்கலைன்னு தெரிஞ்சு ஜரிகை இல்லாத இந்தப் புடவையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்திருக்காரே... ரொம்பவும் சிம்பிளா இருக்கேன்னு நினைச்சேன். ஆனால் உடுத்தின பின்னாடி ரொம்பவே கிராண்ட்-ஆ தெரியுது. சூப்பராத் தான் தேர்வு செஞ்சிருக்கார்!' என்று கணவனை மனதுக்குள் மெச்சிக் கொண்டாள்.

ஆதித்யாவிடம் காட்டுவதற்காக அவனைத் தேடி ஹாலுக்குள் சென்றாள். அப்பொழுது அவர்களின் வீட்டு காம்பவுண்டுக்குள் பிரகாஷின் கார் நுழைவதைக் கண்டாள். அப்பொழுது தான் அவளுக்கு பிரகாஷை வளைகாப்பிற்கு அழைத்த நினைவே வந்தது.

போன வாரத்தில் ஒரு நாள் கஸ்தூரியுடன் கடைக்குச் சென்றிருந்த போது அவள் பிரகாஷைச் சந்தித்தாள்.

நேருக்கு நேர் பார்த்த பின் முகம் திருப்ப அவளால் முடியவில்லை.

அவன் பிருந்தா மீது பாசத்தைப் பொழியாது போனாலும் சாரதா அளவிற்குப் பிடிக்காத திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்தவும் இல்லையே!

அதனால் அவனிடம் அவனது திருமண வாழ்வு குறித்து நலன் விசாரித்து விட்டுத் தனக்கு அடுத்த வாரம் வளைகாப்பு என்றும் அதற்கு வருமாறும் அழைத்தாள்.

சென்னைக்கு வந்த இடத்தில்... அதுவும் பொது இடத்தில் வைத்துக் கூப்பிட்டதால் அவன் வரமாட்டான் என்று பிருந்தா எண்ணியதால் கணவனிடம் இது பற்றித் தெரிவிக்காமல் இருக்க... அவனோ தன் மனைவி மற்றும் தாயுடன் வந்து இறங்கி விட்டான்.

'அச்சச்சோ! இவர் என்னைக் கேள்வி கேட்டால் எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? என ஒரு நொடி எண்ணினாள். பிருந்தா அது அப்புறமா செய்ய வேண்டிய வேலை. முதலில் வந்தவர்களை உன் கணவன் அவமானப்படுத்தி விடக் கூடாதே! போய் சமாளி!' என்று உள்மனம் கட்டளை பிறப்பித்தது.

வீட்டினுள்ளே நுழைந்த பிரகாஷின் குடும்பத்தை வரவேற்றவாறே ஆதித்யாவின் அருகில் சென்றாள். ஆனால் பிருந்தா ஆதித்யாவின் அருகே செல்லும் முன்பே அவன் பிரகாஷைப் பார்த்து இறுக்கமான குரலில், ''வாங்க!'' என்று வரவேற்று முடித்திருந்தான்.

'அப்பாடா! பிரச்சனை முடிந்தது' என்று பிருந்தா ஆசுவாசப்பட்டாள்.



''நல்லா இருக்கீங்களா சித்தி? சாரி... நேரிலே வந்து கூப்பிட முடியலை'' என்று பிருந்தா சொன்னாள்.

''அதனால என்னம்மா! இது நாங்க எடுத்து நடத்த வேண்டிய பங்ஷன் தானே?'' என்று சாரதா சொன்னதும், பிருந்தாவிற்கு ஆச்சரியமாகிப் போயிற்று.

பிரகாஷிற்குத் தான் வாழ்கின்ற வாழ்க்கை பிருந்தாவினால் பரிசளிக்கப்பட்டது என்ற எண்ணம் மனதின் ஓரத்தில் எப்போதும் இருக்கும். அதனால் தான் அவன் பிருந்தா பேரளவிற்குக் கூப்பிட்டும் கூட, குடும்பத்தோடு வந்து விட்டான்.

கஸ்தூரி வந்தவர்களை வரவேற்று அமர வைத்தார். ''பிருந்தா நீ போய் தலை பின்னி, பூ வைத்து ரெடியாகுமா'' என்று சொல்லி அவளைக் கிளப்பினார்.

பிருந்தாவிற்கு வெளிவாயிலில் மூர்த்தி நிற்பது போல் தோன்றியது. ஆனால் அடுத்த நொடி பார்த்த பொழுது அங்கு யாருமே இல்லை. 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல பிரகாஷ் குடும்பத்தைப் பார்த்ததும் இந்த மூர்த்தியும் கூடவே வந்தது போல் தெரியுது போல! என நினைத்தாள்.

'ம்ம்ம்... இவர்களை எல்லாம் பார்த்ததில் சந்தோஷத்திற்குப் பதிலாக நமக்கு படபடப்பு தான் அதிகமாகுது' என்று பிருந்தா எண்ணிக் கொண்டாள்.

பிருந்தா தனது அறைக்குச் சென்று தலையை வாரி மல்லிகைப் பூவைத் தலையில் வைக்கப் போகும்போது ஆதித்யா அறைக்குள் நுழைந்தான்.

அவளது கையில் இருந்த பூவைப் பறித்தான். பறித்ததோடு நில்லாமல் அதைக் கசக்கி உதிர்த்துத் தள்ளிக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டுக் கோபமாக வெளியேறினான்.

'பிரகாஷைக் கூப்பிட்டதற்கா இவ்வளவு கோபம்? ஏழெட்டு வருடமா இவர்கள் தானே என்னைப் பார்த்துக் கொண்டார்கள். அவர்களை எனது வளைகாப்பிற்குக் கூப்பிட எனக்கு உரிமை இல்லையா? இவர் கோபத் திற்குப் பதில் சொல்லியே என் ஆயுள் முடிந்து விடும் போலவே!'

கட்டிலில் சாய்ந்து அமர்ந்து அவள் இவ்வாறெல்லாம் யோசித்துக் கொண்டிருக்க... அவளது கன்னங்களில் இரு பெரும் கண்ணீர்த் துளிகள் உருண்டோடின.

அதை ஒரு கரம் துடைக்க... அன்று மாதிரி கணவனோ என நினைத்து பிருந்தா கண் விழித்துப் பார்த்தாள். ப்ரியா நின்று கொண்டிருந்தாள். பிருந்தாவின் அகமும், முகமும் சேர்ந்தே மலர்ந்தது.

''ஹே ப்ரியா! வந்திட்டியா? உன்னைப் பார்த்து எவ் வளவு நாளாச்சு! உனக்குக் கல்யாணம் பேசி முடிச்சதில் இருந்தே நீ ரொம்ப பிசியா இருக்கே போல! என்னை எல்லாம் ஞாபகம் இருக்கா இல்லையா?'' என்று கேட்ட வளை ப்ரியா முறைத்துக் கொண்டே,

''ஏன் சொல்ல மாட்டே? என்னைக்காவது பாண்டிக்கு வந்து என்னைப் பார்த்து இருக்கியா? நான் தான் உன்னை வந்து மாசம் ஒரு முறை பார்க்கிறேன். இந்தக் குட்டீஸுக்காகத் தான் போனால் போகிறாய்னு உன்னை மன்னிச்சு விட்டு வைச்சிருக்கேன்'' என்று சொன்னவள்



பிருந்தாவின் வயிற்றில் தனது இரு கைகளையும் வைத்துப் பின் தன் இதழ்களுக்குக் கொண்டு சென்று முத்தம் பதித்தாள்.

பின் பிருந்தாவிடம், ''மாசம் ஒரு முறை நேரிலே வரேன். தினமும் போனிலே மொக்கை போடுறேன். என்னைப் பார்த்து 'என்னை மறந்ததேன் தென்றலே...' அப்படின்னு பாடுகிறாய். நானும் பதிலுக்கு 'எங்கிருந்த போதும் உனை மறக்க முடியுமா?' அப்படின்னு எசப் பாட்டு பாடட்டுமா? இருஇரு.. உன் டெலிவரி முடியட் டும். அப்புறமா உன்னைக் கவனிச்சுக்கிறேன்'' என்று போலியாக மிரட்டினாள்.

''எனக்கு நீ எசப்பாட்டு பாடுவது இருக்கட்டும். நேற்று சாந்தி போன் பண்ணினாள். இப்போ எல்லாம் நீ 'ஆஹா காதல்! கொஞ்சிக் கொஞ்சிப் பேசுதே...' அப்படின்னு தான் பாடிக்கிட்டு இருக்கியாம். ஒரேடியா உன் வருங் காலக் கணவரிடம் விழுந்திட்டியாம்'' என்று தோழியைக் கிண்டல் பண்ண,

ப்ரியா வெட்கம் அடைந்து பேசாமல் புன்னகைக்க...

''எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு ப்ரியா'' என்று தோழிக்காக பிருந்தா ஆனந்தப்பட்டாள்.

அப்பொழுது ப்ரியாவின் தாய் அங்கே வந்து பிருந் தாவை அன்பு சொட்டும் குரலில் நலன் விசாரித்து விட்டுப் போனார். பிருந்தா திறந்த வாய் மூடாது வெளியே செல்லும் அவரைப் பார்த்துக் கொண்டிருந் தாள்.

''பார்த்து பிருந்தா... வாயை மூடு. ஸ்கேன் பண்ணா மலே உன் வாய் வழியாவே உன் பிள்ளைங்களைப்

பார்த்திடலாம் போல!'' என்று சொல்லி ப்ரியா அவளது கீழ் தாடையைத் தன் விரல் மூலம் மேல் தாடையோடு ஒட்ட வைத்தாள்.

பிருந்தாவின் அதிர்ச்சி தெளியாததைக் கண்ட ப்ரியா, ''என்ன பிருந்தா பூமி இடவலமா சுத்தாமல் மேலும் கீழுமா சுத்துதா?'' என்று கேட்டாள்.

''எப்படி ப்ரியா, ஆன்ட்டி இப்படி மாறினங்க?'' என்று ஆச்சரியப்பட்ட பிருந்தாவிடம்,

''அவங்க ஒண்ணும் என் பிரண்ட் பிருந்தாவை விசாரிக்கலை'' என்று ப்ரியா சொன்னதும், 'லூசா நீ!' என்பது போல் ப்ரியாவை பிருந்தா ஏறிட்டாள்.

''நான் ஒண்ணும் லூசு கிடையாது. அவங்க இப்போ வந்து விசாரிச்சுட்டுப் போனது மிசஸ். ஆதித்யாவை. இப்போ புரியுதா?'' என்று ஒரு இகழ்ச்சிப் புன்முறுவலுடன் சொன்னவளை,

''ஓ! சரி விடு ப்ரியா. எப்படியோ ஆன்ட்டி என்னிடம் சகஜமாப் பேசுறாங்களே! எனக்கு அதுவே போதும்'' என்று கூறித் தோழியைச் சமாதானப்படுத்தினாள்.

''சரி இப்போ என்ன பிரச்சனை? நல்ல நாளும் அதுவுமா எதுக்கு அழுதுக்கிட்டு இருந்தாய்?'' என்று ப்ரியா பரிவுடன் கேட்டவுடன்,

பிருந்தா நடந்தது அனைத்தையும் கூறி வருத்தப்பட்டாள்.

அப்பொழுது முகுந்த் கதவைத் தட்டி அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

''அண்ணி உங்களை அம்மா மனையிலே உட்காரச் சொன்னாங்க'' என்றான்.



''இதோ வரேங்க... உங்க அண்ணா எங்கே?'' என்று பிருந்தா கேட்டதற்கு,

''அண்ணா பைக்கிலே வெளியே போய் இருக்கான் அண்ணி'' என்று தயங்கிக் கொண்டே முகுந்த் சொன்னான்.

''பைக்கிலாஆஆஆ?'' என்று பிருந்தா ஆதிரவும்,

''நான் வேணாம்ன்னு சொன்னேன் அண்ணி. அவன் கேட்டுக்கலை. நான் இப்போ நல்லாத் தானே நடக்கிறேன். ஒண்ணும் ஆகாதுன்னு சொல்லிட்டுப் போயிட்டான். நீங்க பயப்படாதீங்க. இப்ப வந்திடுவான். நீங்க வாங்க...'' என்று தன் அண்ணிக்குத் தைரியம் சொன்னான்.

''இல்லைங்க... அவர் வரட்டும். அதுக்கு அப்புறமா தான் நான் மனையிலே வந்து உட்காருவேன்'' என்று பிருந்தா உறுதி படக் கூறியதால் முகுந்த் அவ்விடம் விட்டு அகன்றான்.

ப்ரியா, ''என்ன பிருந்தா, கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷனா?'' என்று கேலியாகக் கேட்டாள்.

''எனக்குக் கெடுதல் செய்ய நினைச்ச சித்தியவே ஏத்துக்கிட்டவள் நான். என் ஆதிகிட்டவா என்னால கோபத்தைக் காட்ட முடியும்ன்னு நீ நினைக்கிறே?! கொஞ்சம் கோபக்காரர். அவ்வளவுதான். எனக்குன்னு இந்த உலகத்திலே இருக்கும் ஒரே உறவு அவர் தான். அவரை என்னால விட்டுக் கொடுக்க முடியாது ப்ரியா'' என்று அழுத்தமாகத் தன் கருத்தை எடுத்துரைக்கும் தோழியைப் பார்த்து ப்ரியா பெருமூச்சு விட்டாள்.

''ம்ம்ம்... எல்லாம் சீக்கிரமே சரியாகிடும்'' என்று ப்ரியா சொல்லிக் கொண்டு இருக்கும் போதே கதவைத் தட்டிக் கொண்டு ஆதித்யா உள்ளே நுழைந்தான். அவன் வந்தவுடன் அவர்கள் இருவரிடமும் விடைபெற்றுப் ப்ரியா வெளியேறினாள்.

பிருந்தா சற்று முன்பு ஆதித்யா பூவைக் கசக்கி எறிந்ததை எல்லாம் மறந்து போனவளாய், ''பைக்கை எடுத்துட்டுப் போனீங்களாம்? ஏங்க... இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு பைக் ஒட்டலாம் தானே?!'' என்று அக்கறையும், வருத்தமுமாய் கேட்டாள்.

''ம்ம்ம்...'' என்று மட்டும் முனகியவன் தன் கையில் இருந்த பூவை, ''வைச்சுக்கோ'' என்று சொல்லி அவளிடம் கொடுத்தான்.

கை நீட்டி வாங்கியவள் அதிலிருந்த முல்லைப் பூவைப் பார்த்து, ''முல்லைப் பூவா? எனக்கு வேண்டாம். அதோட வாசனைக்கு எனக்குத் தலைவலி வரும்'' என்றாள்.

''இதுதான் இருக்கு. இதையே வை'' என்று ஆதித்யா சொன்னதும்,

''அத்தைகிட்டே கேட்டு மல்லிகைப் பூ வாங்கிட்டு வாங்க'' என்று பிருந்தா சொன்னாள்.

''ஒண்ணு இந்த முல்லைப் பூவை வைச்சிட்டு வா. இல்லைன்னா நீ பூவை வைக்க வேண்டாம்'' என்று கடுமையான குரலில் சொன்னான்.

அவனை எதிர்த்துப் பேசிச் சண்டை போடுவதற்கான நேரம் இதுவல்ல என்று பிருந்தாவிற்குப் புரிந்தது. வேறு வழியின்றி அந்த முல்லைப் பூவையே தலையில்



வைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள். வரிசைத் தட்டுக்களின் நடுவே அவளுக்கென்று போடப்பட்டிருந்த சேரில் சென்று அமர்ந்தாள்.

நிமிர்ந்து பார்த்த பொழுது மூர்த்தி கண்ணில் பட்டான். 'ஐயோ! இந்தப் பொறுக்கி நிஜமாவே வந்து இருக்கானா?' என்று நினைத்தவளின் மனமும், முகமும் சுருங்கிப் போயிற்று. அவன் அவளைப் பார்த்த பார்வையில் அருவறுத்துப் போனாள்.

'பொறுக்கி... கல்யாணமானவள்... குழந்தைக்கு தாயாகப் போகிறவள் என்ற எண்ணம் கூட இல்லாமல் எப்படிப் பார்க்கிறான் பாரு!' என்று மனதுக்குள் பொருமினாள்.

விருந்தினர் ஒவ்வொருவராக வந்து நலுங்கு வைத்து வளையல் அணிவித்து விட்டுச் சென்றனர். மதிய உணவிற்குப் பின் வந்தவர்கள் கலைந்து செல்ல ஆரம்பித்தார்கள்.

சாப்பிட்டு முடித்த உடனே பிரகாஷ் குடும்பமும் கிளம்பியது. மூர்த்தியைக் காணவில்லை. மனையில் வந்து உட்கார்ந்த பொழுது பார்த்தது தான். அதன் பின்பு காணவில்லை. 'ஒழிஞ்சான் சைத்தான்' என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

வந்தவர்கள் அனைவரும் சென்ற பிறகு, அறைக்குச் சென்றவள் உடை மாற்றும் முன் முதலில் தலையில் இருந்து பூவை அகற்றினாள்.

கணவன் கடுப்படித்தது, முல்லைப் பூவின் வாசனை, மூர்த்தியின் வருகை என்று அனைத்தும் ஒன்று சேர்ந்து பிருந்தாவிற்கு தலைவலியை உண்டு பண்ணியது.

உடையை மாற்றி முடிக்கவும், கதவு தட்டவும் சரியாக இருந்தது. பிருந்தா சென்று கதவைத் திறக்க... ஆதித்யா உள்ளே வந்தான். கதவைத் திறந்து விட்டவள் ஒன்றும் சொல்லாது கட்டிலில் சென்று அமர...

அவளது வாடிய முகத்தைக் கண்டவன், ''என்ன பிருந்தா தலைவலிக்குதா?'' என்று அக்கறையுடன் கேட்டான்.

அவள் பதில் சொல்லாமல் மௌனம் காக்க... ஆதித்யா மீண்டும் ஒரு முறை அதே கேள்வியை அழுத்திக் கேட்க...

''நான் தான் அப்பவே எனக்கு தலைவலி வரும்ன்னு சொன்னேன் தானே! நீங்க தான் கேட்கலை. இப்போ சந்தோஷமா?'' என்று கோபமாக வெடித்தாள்.

முதல் முறையாக பிருந்தா குரல் உயர்த்திக் கத்தியதை ஆதித்யா ஆச்சரியமாகப் பார்த்தான்!

ஒன்றும் சொல்லாது அவன் திரும்பி நடந்தவுடன்... அவன் கோபித்துக் கொண்டு போகிறானோ என்று பயந்தவளாக, ''சாரி... கோபத்தில் தெரியாமல் சொல்லிட்டேன்'' என்றாள்.

நடந்து கொண்டிருந்தவன் நின்று அவளைத் திரும்பிப் பார்த்தான். பதிலொன்றும் சொல்லாது தனது நடையைத் தொடர்ந்தான். அதைக் கண்டு பிருந்தா கவலையடைந்தாள்.

ஆனால் அவன் அறையை விட்டு வெளியே செல்லாமல் அந்த அறையின் மூலையில் இருந்த அலமாரியைத் திறந்து அதிலிருந்த தலைவலித் தைலத்தை எடுத்து வந்தான்.



மனைவியின் அருகே வந்தவன், ''படுத்துக்கோ!'' என்று சொல்லி அவளைப் படுக்க வைத்து அவளது நெற்றியில் அந்தத் தைலத்தைத் தடவினான்.

பிருந்தா அவனிடம், ''சாரி... முக்கியமான விசேஷத்தின் போது அம்மாவும், அப்பாவும் எங்கூட இல்லையேன்னு காலையில் இருந்தே வருத்தமா இருந்தேனா... நீங்க வேற தலைவலி வரும்ன்னு நான் சொன்னதை நம்பலையா... நான் சொன்ன மாதிரியே தலைவலியும் வந்திடுச்சா... அதான் என்னை மீறி கோபப்பட்டுக் கத்திட்டேன்'' என்று தன்னிலை விளக்கம் கொடுத்தாள்.

''பரவாயில்லை விடு. இப்போ பேசாமல் தூங்கு'' என்று சொல்லி அவளது நெற்றியை மென்மையாகப் பிடித்து விட்டான்.

அந்த இதமும், காலையில் இருந்து ஓய்வின்றி நடமாடியதும் பிருந்தாவைச் சீக்கிரமே கண்ணயர வைத்தது.

பிருந்தா கண்ணயர்ந்ததும் ஆதித்யா தன் குழந்தைகளிடம் பேச ஆரம்பித்தான்.

''ஏன்டா குட்டீஸ் அம்மாவை ரொம்ப படுத்துறீங்களா? பாருங்க... என்னைக்குமே அமைதியா இருக்கிற அம்மா இன்னைக்கு சத்தமா குரல் உயர்த்திப் பேசுறா! பாவம்.

அவளை படுத்தாதீங்கடா. உங்க சேட்டைகளை எல்லாம் வெளியே வந்த பிறகு அப்பாகிட்டே வைச்சுக்கோங்க.

என்னது நீங்க ஒண்ணுமே செய்யாமல் சமத்தா தான் இருக்கீங்களா? அம்மாவா தான் டென்ஷன் ஆகிக்

கத்தினாளா? அதானே பார்த்தேன். நீங்க தான் சமத்துக் குட்டிங்களாச்சே!'' என்று கொஞ்சிக் கொண்டான்.

அறையை விட்டு ஓசை எழுப்பாமல் வெளியே வந்தவனிடம் கஸ்தூரி, ''ஆதி உன்னிடம் கொஞ்சம் பேசலாமா?'' என்று முஸ்தீபுடன் ஆரம்பித்தார்.

''என்ன?'' என்பது போல் ஏறிட்டவனிடம், ''இனிமேல் நீ கொஞ்சம் அடிக்கடி வீட்டுப் பக்கம் எட்டிப் பாருப்பா. பிருந்தா கூட அதிக நேரம் செலவு பண்ணு. அவ தாய், தகப்பன் இல்லாத பொண்ணு. இந்த மாதிரி நேரத்திலே அவளால முன்ன மாதிரி நடக்கவோ, ஓடியாடி வேலை செய்யவோ... ஏன் சாதாரணமாப் படுத்துத் தூங்கக் கூட முடியாது. பொண்ணுங்களுக்குத் தங்களோட இயலாமை கோபமாய் வெளிப்படும். அதை அவள் தன் ரத்த சொந்தங்களிடம் தான் காட்டுவள்.

அதுக்குத் தான் பொண்ணுங்களுக்கு பிரசவத்துக்கு ரெண்டு மாசம் முன்பே சடங்கு செஞ்சு, வளையல் அடுக்கி அவங்க அம்மா வீட்டுக்கு அனுப்பி வைக்கும் வழக்கத்தை நம்ம பெரியவங்க கடைபிடிக்குறாங்க. நம்ம பிருந்தா விஷயத்திலே நாம தான் அவளோட பிறந்த வீட்டு மனுஷங்களா இருந்து அனுசரணையா நடந்துக் கணும்.

நான் ஏன் இவ்வளவையும் சொல்லுறேன்னா... வளைகாப்பு ஒரு பொண்ணுக்குத் தன் தாய்மையைக் கொண்டாடும் நாள். அவ மனசெல்லாம் பூரித்துப் போகும் நாள். ஆனா அப்படிப்பட்ட நாளில் கூட நம்ம பிருந்தா சந்தோஷமா இல்லை.

காலையிலே எழுந்தப்போ அவ முகத்திலே தெரிஞ்ச சந்தோஷம் அதற்கு அப்புறம் காணாமல் போச்சு. அது



மட்டும் இல்ல... அவ உன்னைப் பார்க்கும் போது அவ கண்ணில் பயமும், கவலையும் தான் அதிகம் இருந்துச்சு. உன் கோபம் எதுவாக இருந்தாலும் அவளிடம் காட்டாதே. எந்த விஷயமா இருந்தாலும் மெதுவாச் சொல்லிப் புரிய வை'' என்று சொல்லி முடித்தார்.

மகனிடம் சொல்லி விட்டாரே தவிர அவருக்கு உள்ளூர பயமே! ஏதாவது கோபப்பட்டு தன்னையும் கடிந்து கொள்வானோ என்று.

ஆனால் ஆதியோ அவரைத் திட்டாமல், ''சரிம்மா'' என்று சொல்லோடு அந்த இடம் விட்டு அகன்று கடைக்குக் கிளம்பினான்.

# 14

வளைகாப்பு நிகழ்ச்சியினால் சோர்ந்து போன பிருந்தா தூங்கி எழுந்ததும் மனம் நிம்மதியாய் உணர்ந்தாள். காலையில் இருந்து ஒருவித பயமும், கவலையும் தன்னை ஆக்கிரமித்த நிலை மாறி... கணவன் தனக்காக இருக்கிறான் என்ற நினைப்பினால் மனம் அமைதி அடையப் பெற்றாள்.

முகம் கழுவித் தலையைச் சீர் செய்து புன்முறுவலுடன் வெளியே வந்தவளை முகம் கொள்ளா சந்தோசத்துடன் அவர்கள் வீட்டு வேலைக்காரி எதிர்கொண்டு பிருந்தாவின் புன்னகை மறையக் காரணமாய் இருந்தாள்.

அவள் நேரே பிருந்தாவிடம் வந்து, ''அம்ம ரொம்ப தாங்க்சுமா. உனக்கு ரொம்பப் பெரிய மனசு மா. உன்

வளைகாப்புக்கு எனக்குப் பட்டுப் புடவை எடுத்து வைச்சிருந்தியாமே. ஐயா கொடுத்தார்'' என்று சொல்லி பிருந்தாவைக் குழப்பம் கொள்ளச் செய்தாள்.

'நாம் எப்போ புடவை வாங்கினோம்?! அவரிடம் எப்போ கொடுத்தோம்? எதுக்குப் பொய் சொல்லி இருக்கார்? இதை இவளிடம் என்னவென்று கேட்பது?' என்று குழம்பிப் போய் நின்றவளிடம்...

அந்த வேலைக்காரி தனது பையில் வைத்திருந்த புடவையை வெளியே எடுத்துக் காட்ட., பிருந்தாவின் குழப்பம் ஒரு முடிவுக்கு வந்து அங்கு கவலை இடம் பெற்றது. ஏனெனில் அந்தப் புடவையை அன்று காலையில் தான் பிரகாஷ் சீர் தட்டில் வைத்து பிருந்தவிற்குக் கொடுத்திருந்தான்!

ஆனால் தன் கவலையை முகத்தில் இருந்து உடனே மறைத்தவள் அந்த வேலைக்காரியிடம் நல்ல விதமாய் பேசி அனுப்பி வைத்தாள்.

'இப்போ எதுக்காக பிரகாஷ் அண்ணன் கொடுத்த புடவையை வேலைக்காரியிடம் கொடுத்திருக்கிறார்? அதுவும் நான் கொடுத்ததாச் சொல்லி... இல்லாவிட்டால் நான் திருப்பி வாங்கி விடுவேன் என்று நினைத்தாரோ? காலையில் வந்த புடவையை மதியம் அண்ணன் இந்தப் பக்கம் போன உடனே கொடுக்கும் அளவுக்கு அவர் மேல் கோபமா?

இவருக்கு என்ன தான் பிரச்சனை? ஒரு நேரம் இயல்பாய் பேசுகிறார் என்று பார்த்தால் அடுத்த கணம் கோபப் படுகிறார்? அந்தக் கோபத்திற்கான காரணம் தெரிந்தாலாவது இன்ன காரணத்துக்காகக் கோபப்படுகிறார்...



அவர் பக்கம் நியாயம் இருக்கிறது என்றோ, அவருக்குப் பிடிக்காத விஷயத்தை நாம் செய்து விட்டோம் அதனால் தான் கோபம் என்றோ மனதைச் சமாதானப்படுத்திக் கொள்ளலாம். எதுக்குமே வழி இல்லாமல் இப்படி மாறி மாறி நடந்து கொண்டால் என்னவென்று நினைப்பது?

இன்றைக்குக் கடையில் இருந்து வந்த உடனே ஏன் என்று கேட்டுச் சண்டை போடுவோமா? ஆனால் நமக்குத் தான் சண்டை போடத் தெரியாதே! மதியம் குரல் உயர்த்திப் பேசியதற்கே மனசெல்லாம் சங்கடமா இருந்துச்சு. அவர் தலை பிடித்து விட்டதும் தான் மனசு சமாதானம் ஆச்சு. இந்த லட்சணத்திலே நாமளாவது சண்டை போடு:வதாவது?!

இப்போ நாம பாட்டுக்கு ஏதாச்சும் கேட்கப் போய் கோபப்பட்டு நம்மோடு பேசாமல் இருந்து விட்டால் என்ன செய்வது? ப்ச்சு... ஒண்ணும் கேட்க வேண்டாம் போ...' என்று மனதுக்குள் முடிவெடுத்தாள்.

வளைகாப்பினால் மதியத்துக்கு மேல் தான் ஆதித்யா கடைக்குச் சென்றதால் அவன் இரவு வீடு திரும்ப வெகு நேரம் ஆனது. அதற்குள் பிருந்தா படுத்துத் தூங்கி விட்டாள்.

மறுநாள் காலை தூங்கி எழுந்து பார்த்த பொழுது ஆதித்யா படுக்கையில் இல்லை. சரி எழுந்து வாக்கிங் போயிருக்கார் போல என்று எண்ணிக் கொண்டே பல் துலக்கி முடித்து அவள் வெளியே வரவும் சீதா அவள் குடிப்பதற்கென்று பால் கொண்டு வந்து தந்தார்.

அவள் குடித்து முடித்த பொழுது மாடியில் இருந்து முகுந்த், ''குட் மார்னிங் அண்ணி!'' என்று சொல்லிக் கொண்டே இறங்கி வந்தான்.

''என்ன முகுந்த் இனிமேல் தான் ஜாகிங் போறீங்களா? உங்க அண்ணா மட்டும் தனியா போய் விட்டாரா?'' என்று பிருந்தா கேட்டவுடன்,

''வெளியே வராண்டாவில் பாருங்க. பேப்பர் படிச்சிக்கிட்டு இருக்கான்'' என்று முகுந்த் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஆதித்யா வீட்டிற்குள் நுழைந்தான்.

''முகுந்த் நான் வாக்கிங் வரலை. அண்ணியை வீட்டைச் சுற்றி வாக்கிங் கூட்டிட்டுப் போகப் போறேன். அதனால நீ மட்டும் போ'' என்று சொல்லிக் கொண்டே தனது அறைக்கள் சென்று மறைந்தான்.

பிருந்தா ஆச்சரியமாகப் பார்த்தாள்!

முகுந்தோ பிருந்தாவின் காதில், ''நல்லதா போச்சு. அண்ணி. நேற்று வாக்கிங் போன பொழுது ஒரு புது ஃபிகரைப் பார்த்தேன். சைட் அடிக்கலாம்னு பார்த்தால் என் பக்கத்தில் நம்ம வீட்டு சூரியன்... உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?! நம்ம ஆதிக்கு பொண்ணுங்களைக் கிண்டல் பண்ணுவது, சைட் அடிப்பது, ஜொள்ளு விடுவது எல்லாம் பிடிக்காது. திட்டுவான். அன்னைக்குக் கூட அந்த ஆஃபர் ஜோக்குக்கு எப்படித் திட்டினான். பார்த்தீங்க தானே?!'' என்றான்.

''அப்புறம் ஏன் அதைச் செய்யுறீங்க?'' என்று புன்னகைத்துக் கொண்டே பிருந்தா வினவ,

''நீங்க வேற அண்ணி... நான் என்ன கிண்டல் பண்ணுறேனா? இல்லை ஜொள்ளு விட்டுக் கொண்டு பின்னாடியே அலையுறேனா? ஜஸ்ட் ஒரு பார்வை. அதுக்குக் கூட சூரியன் சுட்டெரிச்சால் எப்படி அண்ணி? சின்னப் பையன் போயிட்டுப் போறான் என்று கண்டுக்காமல்



போகலாம் தானே! இவன் சாமியார் மாதிரி இருந்தால் நானும் அப்படியே இருக்கணுமா என்ன?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே ஆதித்யா அவர்கள் அருகில் வர முகுந்த் இருவரிடமும் விடைபெற்று ஜாகிங் சென்றான்.

முகுந்த் சென்றதும் ஆதித்யா பிருந்தாவை அழைத்துக் கொண்டு வீட்டைச் சுற்றி நடக்க ஆரம்பித்தான்.

''முகுந்த் என்ன சொன்னான்?'' என்று ஆதித்யா பிருந்தாவைக் கேட்கவும் என்னவென்று சொல்வது என்று தெரியாமல் பிருந்தா விழிக்க,

''என்ன? என்னைப் பற்றித் தான் நக்கல் பண்ணிட்டுப் போறானா? அதைக் கேட்டு நீயும் சிரிக்கிறாயா? நல்ல தம்பி! நல்ல மனைவி!'' என்றான்.

கோபத்தில் சொல்கிறானோ என நினைத்துப் பயந்து போய் அவனைப் பார்க்க அவன் முகம் சாதாரணமகவே இருந்து பிருந்தாவின் வயிற்றில் பால் வார்த்தது.

அரை மணி நேரம் வீட்டைச் சுற்றி நடந்தார்கள். ஆதித்யா அவளது நடைக்கு ஈடு கொடுத்து நடந்து வந்து அவளுக்கு மகிழ்வூட்டினான். அவளுக்கு அன்றைய காலைப் பொழுது நல்ல தொடக்கமாய் அமைந்து போனது.

வளைகாப்பு நிகழ்ச்சிக்கு வர முடியாத கஸ்தூரியின் உறவினர் ஒருவர் தன் குடும்பத்துடன் வந்திருந்தார். அவர்களுடன் அவர்களின் ஆறு வயது பேரன் விஷாலும் வந்திருந்தான். அவன் துருதுரு என்று இங்கும் அங்கும் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கப் பார்க்க பிருந்தாவிற்கு வருங்காலத்தில் தனது குழந்தைகளும் இப்படித் தானே இருப்பார்கள் என்று தோன்றியது. ஆசையோடும், முகம் கொள்ளா சந்தோஷத்தோடும் அவனைப் பார்த்துக் கொண்டு சோபாவில் அமர்ந்திருந்தாள்.

வந்தவர்களுக்கு மரியாதை கொடுக்கும் பொருட்டு ஆதித்யா கடைக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்தான்.

ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த விஷால் எங்கே பிருந்தாவின் மேல் விழுந்து விடுவானோ என்று பயந்து போன ஆதித்யா அவளைக் காக்கும் வண்ணம் அவளுக்கு அருகே சென்று அமர்ந்து கொண்டு விஷால் மீதே கண் பதித்திருந்தான்.

அப்பொழுது அந்தக் குட்டிப் பையன் பிருந்தாவின் அருகே வந்து தனது கண்களை உருட்டிக் கொண்டு, ''நான் இப்போ உங்களை ஒண்ணு கேட்பேன். ஆனால் நீங்கள் சிரிக்கக் கூடாது'' என்று நிபந்தனை விதித்தான்.

அவன் அவ்வாறு சொல்லிய விதமே பிருந்தாவிற்குச் சிரிப்பை வாவழைத்த போதும் அவள் கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''சிரிக்க மாட்டேன். நீ சொல்லு'' என்றாள்.

''நீங்க உங்க வயித்திலே இருக்கும் பேபியை வெளியே எடுத்து டெய்லி குளிக்க வைப்பீங்களா?'' என்று அவன் தன் முதல் கேள்வியைக் கேட்க,

இப்போ எதற்கு இந்தக் கேள்வி என்று புரியாத போதும் பிருந்தா அவனது கேள்விக்கான பதிலாய், ''இல்லையே பாப்பாவை எடுக்க முடியாதே!'' என்றாள்.



''ஆஸ்பிட்டலுக்குப் போய்... டாக்டர் தானே பாப்பாவை எடுத்துத் தருவாங்க?'' என்று அவன் அடுத்த கேள்வியைக் கேட்க,

''ஆமா விஷால். யூ ஆர் சோ கிளவர். உனக்கேத் தெரிஞ்சிருக்கே! அப்புறம் ஏன் இப்படிக் கேட்குறீங்க?'' என்று பிருந்தா புரியாத பாவனையோடு கேட்க,

''இல்ல... இப்போ நீங்க டெய்லி சாப்பிட்டுக்கிட்டே இருக்கீங்க தானே? அது எல்லாம் வயித்துக்குள்ள இருக்கிற பாப்பா மேலே தானே விழும்? அப்போ பாப்பா அழுக்காகிடாது?'' என்று அவன் தன் சந்தேகத்தை முன் வைக்க...

கேட்டுக் கொண்டிருந்த பிருந்தா அசந்து போனாள்! இந்தக் காலத்துப் பசங்க என்னமா சிந்திக்குறாங்க என்று!

அருகில் இருந்த ஆதித்யாவோ, ''பிருந்தா பதில் சொல்லி சமாளி பார்ப்போம். நாளைக்கு உன் பிள்ளைகளுக்குப் பதில் சொல்ல இப்பவே டிரைனிங் எடுத்த மாதிரி இருக்கும்'' என்று சொல்லி பிருந்தாவைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

கணவனின் புன்னகைத்த முகத்தை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளிடம், ''என்னை அப்புறம் பார்த்து ரசிக்கலாம். முதல்ல அவனுக்குப் பதில் சொல்லு'' என்று கூறித் தனது கையால் அவளது முகத்தை விஷாலை நோக்கித் திருப்பினான்.

பிருந்தா விஷாலிடம், ''உன் பாடிக்குள்ளே ஹார்ட், லங்க்ஸ் எல்லாம் இருக்கு தானே?'' என்று கேட்டள்.

''யெஸ் யெஸ்... ஒன் ஹார்ட், டூ லங்ஸ் இருக்கு. எனக்குத் தெரியும். எங்க மிஸ் சொல்லி இருக்காங்க'' என்று அவன் ஆர்வமாக பதிலளிக்க,

''அப்படின்னா நீ டெய்லி சாப்பிடும் சாப்பாடு எல்லாம் அது மேலே தானே போய் விழும். அப்போ அது எல்லாம் அழுக்காகி விடுமா என்ன?'' என்று கேட்டதும் பையன் திருதிருவென விழித்தான்.

அவனது முகத்தைக் கண்டு தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டவள், ''சாப்பாடு போகும் பாதை வேற... லங்க்ஸ் எல்லாம் இருக்கும் இடம் வேற! அதே மாதிரி என் பாப்பாக்களும் வேற இடத்திலே அழுக்காகாமல் பத்திரமா இருப்பாங்க'' என்று கூறினாள்.

'எப்படி என் பதில்?' என்பது கணவனைப் பார்க்க,

''வெரி ஸ்மார்ட்!'' என்று அவனோ வாய் விட்டுப் பாராட்டி மனைவியை மகிழ்ச்சி கொள்ளச் செய்தான்.

பிருந்தாவின் பதிலில் சமாதானம் அடைந்த விஷால் தனது அடுத்த கேள்வியாக, ''பிருந்தான்னா என்ன அர்த்தம்?'' என்று கேட்டான்.

அவனது கேள்விக்கு பதில் தெரியாததால் விழித்த பிருந்தா கணவனை ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொண்டே விஷாலிடம் அவனது கேள்வியை அவனுக்கே திருப்பிப் படித்தாள்.

''விஷால்ன்னா என்ன அர்த்தம்?'' என்று பிருந்தா கேட்டவுடன்,

''எனக்குத் தெரியுமே. விஷால்ன்னா தி கிரேட், பாப்புலர் அப்படின்னு எல்லாம் அர்த்தம்'' என்று சொன்னவன் அவளது பதிலுக்காய் அவளது முகத்தை ஆர்வமாய் பார்த்திருக்க...

என்ன சொல்வதென்று தெரியாமல் பிருந்தா விழித்துக் கொண்டிருக்க...



அவளைக் காப்பாற்றுவது போல் விஷாலின் தாத்தாவும், பாட்டியும் அவனைக் கூட்டிக் கொண்டு அவர்களிடம் இருந்து விடைபெற்றுக் கிளம்பினார்கள். விஷாலிடம் தன் மருமகள் விழி பிதுங்கி நிற்பதைப் பார்த்த கஸ்தூரி புன்னகைத்துக் கொண்டார்.

'தப்பிச்சோம்டா சாமி!' என்று பிருந்தா மனதுக்குள் ஆனந்தப்பட்டுக் கொண்டாள்.

வந்தவர்கள் சென்றதும் ஆதித்யாவும் கடைக்குக் கிளம்பிச் சென்றான்.



## 15



ஆதித்யா கிளம்பிச் சென்றதும் கஸ்தூரி பிருந்தாவிடம், ''உனக்கு உன் பேருக்கான விளக்கம் தெரியாதா?'' என்று கேள்வி எழுப்பினார்.

''தெரியாதே அத்தை. உங்களுக்குத் தெரியுமா? தெரிஞ்சா சொல்லுங்களேன்'' என பிருந்தா ஆர்வமாக வினவ,

''தெரியும். சொல்லுறேன் கேளு. ஜலந்தர் அப்படிங்குற அசுரனோட மனைவி பேரு தான் பிருந்தா'' என்று சொல்ல ஆரம்பித்தவரை இடை மறித்தவள்,

''என்னது அசுரனோட மனைவி பேரா? அதையா எங்க அம்மாவும், அப்பாவும் எனக்கு வைச்சு இருக்காங்க?!'' என்று அவள் தன் முகத்தில் அதிருப்தி காட்ட...

''அவசரப்படக் கூடாது. முழுக் கதையும் கேட்டு விட்டு அப்புறமா முடிவு பண்ணு'' என்று கஸ்தூரி கறார் குரலில் கூறவும்,

''சரிங்க அத்தை. நீங்க சொல்லி முடிங்க'' என்றாள்.

''பிருந்தா ஒரு விஷ்ணு பக்தை! அந்த ஜலந்தர் தேவர்களுக்குத் தொல்லைக் கொடுத்தான். வழக்கம் போல் அவர்கள் சிவனிடம் சென்று முறையிட, அவராலும் அவனை அழிக்க முடியலை. என்ன காரணம்ன்னு பார்க்கும் போது தான் அவனோட மனைவியின் பதிவிரதை தன்மை தான் அவனைக் காக்குது என்று தெரிஞ்சது. அதனால் விஷ்ணு ஜலந்தர் உருவில் சென்று அவளுடன் கலந்து அவளது பதிவிரதை தன்மையைக் குலைத்து விடுவார். அதன் பின் சிவன் ஜலந்தரை மிக எளிதாக வீழ்த்தி விடுவார். விஷயம் அறிந்த பிருந்தா கடவுளே ஆனாலும் நீ செய்தது மன்னிக்க முடியாத குற்றம்ன்னு சொல்லி சாபம் இட்டு விஷ்ணுவைக் கருங் கல்லாய் மாற்றியதாகவும், அவள் சாபத்தினால் தான் ராம அவதாரத்தில் அவர் சீதையைப் பிரிஞ்சு வாடிய தாகவும் புராணம் சொல்லுது.''

''விஷ்ணுவா இப்படிச் செஞ்சார்?'' என பிருந்தா ஆச் சரியப்பட,

''ஆமாம். அது மட்டும் இல்லை. பிருந்தா தன் உயிரை மாய்த்துக் கொள்ள விஷ்ணு அவளைச் செடியாக மாற்றினார். அது தான் துளசி செடி! இன்னைக்கு எல்லாப் பெண்களாலும் கும்பிடப் படும் துளசிச் செடி தான் பிருந்தா. பிருந்தான்னா கற்புக்கரசின்னு அர்த்தம்'' என்று



சொல்லிக் கொண்டிருந்தவர் சமையலறையில் இருந்து வேலையாள் அழைக்கவும் எழுந்து போனார்.

பிருந்தாவின் கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது. அவள் பூஜை அறைக்குச் சென்று அமர்ந்து மௌனமாகக் கண்ணீர் விட... அதைப் பார்த்த கஸ்தூரி குழம்பினார்.

'இப்போ ஏன் இந்தப் பொண்ணு அழுகிறாள்? ஒரு வேளை அவளுக்கு இப்படி ஒரு நல்ல பேரை வைச்ச அவங்க அம்மா, அப்பா ஞாபகம் வந்திடுச்சோ?' என நினைத்துக் கொண்டார்.

அவளிடம் என்னவென்று கேட்டு மேலும் அவளைச் சங்கடப்படுத்திவிடக் கூடாது என்று எண்ணிப் பேசாமல் சென்று விட்டார்.

அன்று மாலை பிருந்தா கஸ்தூரியிடம் அருகில் இருக்கும் சிறுவர்கள் பூங்கா வரை சென்று வருவதாகக் கூறினாள். இது அவ்வப்பொழுது நடக்கும் விஷயம் தான். ஆனால் அவளுடன் கஸ்தூரியோ, சீதாவோ செல் வார்கள்.

இன்று சீதா வெளியே வேலையாக சென்று இருப்ப தால் பிருந்தா தனியாகச் செல்ல முடிவெடுத்தாள்.

கஸ்தூரி, ''யாராவது வீட்டுக்கு வந்துக்கிட்டே இருப் பாங்கமா. அதனால என்னால வீட்டைப் பூட்டிக் கொண்டு உன்னோடு வர முடியாது. நீ தனியாகப் போக வேண்டாம். கொஞ்சம் பொறு. சீதா வரட்டும். அதுக்கு அப்புறமா போகலாம்'' என்றார்.

''உங்களால வர முடியாதுன்னு எனக்குத் தெரியும் அத்தை. அதனால தான் நானே போகலாம்ன்னு முடிவு

செஞ்சேன். நான் என்ன தூர தேசமா போகப் போகிறேன். இதோ இருக்கும் அடுத்த தெரு பூங்கா தானே அத்தை. என் கையில் செல்போன் இருக்கு. எதுவும் தேவை என்றால் போன் செய்யப் போறேன். ஒண்ணும் பிரச்சனை இல்லை அத்தை'' என்றாள்.

அப்பொழுது அவர்கள் வீட்டுக் கார் உள்ளே நுழைந்தது. வந்தது ஆதித்யா தான்.

வாசலில் நின்று கொண்டு என்ன பேசிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று அவன் தன் தாயிடம் விசாரிக்க கஸ்தூரி நிலைமையை அவனிடம் விளக்கினார்.

பிருந்தாவிடம் திரும்பியவன், ''அஞ்சு நிமிஷம் சோபாவில் உட்காரு. நானே கூட்டிட்டுப் போறேன்'' என்று சொல்லி அவர்களது அறைக்குள் சென்று மறைந்தான்.

பிருந்தாவிற்கு மயக்கமே வந்தது. 'இது கனவா? இல்லை நிஜமா?' என்று தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

ஆதித்யா மாறிக் கொண்டு வருகிறான் தான்! ஆனால் வேலைக்கு நடுவே வீட்டிற்கு சாப்பிட அழைத்தால் கூட பிகு செய்து கொண்டு வர மறுப்பவன் இன்று மாலை நேரத்தில் அவளைப் பூங்காவிற்கு அழைத்துச் செல்கிறேன் என்று செனன்னால் மயக்கம் வராதா என்ன?!

ஆதித்யா சொன்னபடி ஐந்தே நிமிடத்தில் அவள் முன் வந்து நின்றான்.

பிருந்தா அவனிடம், ''வேற வேலையா வந்தீங்களா? உங்களுக்கு டைம் ஆகலையா?'' என்று கேட்டாள்.



எதற்காக இந்நேரம் வீட்டிற்கு வந்து இருக்கிறீர்கள் என்பதை மறைமுகமாக அவள் கேள்வி வெளிப்படுத்திய போதும்...

ஆதித்யாவோ, ''உன் துணைவிக்கு துணை தேவைன்னு பட்சி சொல்லுச்சு. அதான் வந்தேன். வா என் வேலையை நான் அப்புறம் பார்த்துக்கிறேன்'' என்று சொன்னதும், பிருந்தா சந்தோஷமாகவே கணவனுடன் கிளம்பிச் சென்றாள்.

கணவன் உடன் வந்ததால் அடுத்த தெருவில் இருக்கும் பூங்காவிற்கு காரிலேயே சென்றாள். பூங்காவில் ஒரு ஓரமாய் இருந்த கல் பெஞ்சில் சென்று அமர்ந்து கொண்டு அங்கு விளையாடும் குழந்தைகளை வழக்கம் போல் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

அங்கு விளையாடிக் கொண்டிருந்த பெண் குழந்தைகளை ரசித்தவள் ஆதித்யாவிடம், ''பெண் குழந்தைங்க தான் அழகு இல்லே! அவங்களுக்குத் தான் விதவிதமா டிரஸ் பண்ணி அழகு பார்க்கலாம். அவங்க தான் நம்ம கிட்டே பாசமா இருப்பாங்க. எனக்கு ரெண்டுமே பொண்ணா பிறக்கணும்ன்னு ஆசையா இருக்கு. அட்லீஸ்ட் ஒண்ணாவது பொண்ணா பிறக்கணும்...'' என்று சொல்லிக் கொண்டே போனவள் தனது பேச்சை நிறுத்திவிட்டுக் கணவனின் முகம் பார்த்துத் தயக்கத்துடன், ''உங்களுக்கு பெண் குழந்தைன்னா பிடிக்கும் தானே?!'' என்றாள்.

அவளது பயத்தைப் போக்கும் விதமாய் ஒரு மெல்லிய புன்னகையுடனே, ''எப்பவும் பொண்ணுங்க தான் அப்பாகிட்டே அட்டாச்ட்டா இருப்பாங்க.

அதனால எனக்கு ரெண்டுமே பொண்ணா பிறந்தால் டபுள் சந்தோஷம் தான்'' என்றான்.

அவனது பதிலைக் கேட்டு 'அப்பாடா!' என்ற உணர்வே அவளுக்கு மேலோங்கி இருந்தது.

கணவன் கடைக்குச் செல்ல நேரம் ஆகிறதே என்ற எண்ணம் தோன்ற பிருந்தா அன்று விரைவிலேயே பூங்காவை விட்டுக் கிளம்பினாள்.

அவள் வெளியேறும் போது பூங்காவின் வாசலில் நின்று கொண்டிருந்த அருண் ஐஸ்க்ரீம் வண்டியைப் பார்த்ததும் ஆதித்யாவின் புறம் திரும்பி, ''எனக்கு ஐஸ்க்ரீம் வாங்கித் தாங்க'' என்றாள்.

''வாட்???'' என்று அவன் அதிர்ந்து போய் கேட்க,

'இதுக்கு எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி?' என்பது போல் பார்த்தவள், ''ஐ..ஸ்..க்..ரீ..ம்'' என்று ஒவ்வொரு எழுத்தாக உச்சரித்தாள்.

''அது தெரியுது'' என்று அவளைக் கேலி செய்தவன், ''இப்போ எப்படி உன்னால சாப்பிட முடியும்?!'' என்று அவளது மேடான வயிற்றில் பார்வையைப் பதித்தவன் அவளது பதிலை எதிர்பாராது நடக்கத் தொடங்கினான்.

பத்தடி தூரம் நடந்த பின்பே பிருந்தா தன்னைப் பின் தொடரவில்லை என்பதை உணர்ந்தவன் திரும்பிப் பார்க்க... அவள் அதே இடத்திலேயே நின்று கொண்டிருந்தாள்.

ஒரு பிடிவாதக் குழந்தையைப் போல் காட்சியளித்த மனைவியின் தோற்றத்தை ரசித்தவன், அவளருகே சென்று அவளது கையைப் பிடித்து, ''வா பிருந்தா,



போகலாம்'' என்று அழைத்துச் சென்றான். ஒன்றும் சொல்லாது அவனுடன் இணைந்து சென்றாள்.

மறுநாள் காலை வாக்கிங் எல்லாம் முடித்துச் சாப்பிட்டு முடித்ததும் பிருந்தா தனது படுக்கையறைக்குள் நுழைய ஆதித்யா அவள் பின்னோடு வந்தான்.

அவன் கையில் இருந்த கிளாஸ் நிறையப் பாலைப் பார்த்தவள், ''பாலாங்க? எனக்கா? நான் காலையிலேயே குடிச்சுட்டேன். ஆமா எதுக்குப் பாலுக்கு ஸ்ட்ரா?'' என்று கேட்டாள்.

பதிலொன்றும் சொல்லாமல் ஆதித்யா அதை அவள் புறமாக நீட்ட அருகிலிருந்து அதை நுகரும் போது வந்த வாசனையால், ''வெனிலா மில்க் ஷேக்கா?'' என்று கேட்டுக் கொண்டே அதை அவனிடம் இருந்து வாங்கினாள்.

வாங்கியவள், ''என்னங்க சுத்தமா சில்னெஸ் இல்லை'' என்றதும்,

ஆதித்யா முதன் முறையாக வாய் திறந்து, ''இது வெனிலா மில்க் ஷேக் இல்லை. வெனிலா ஐஸ்க்ரீம்'' என்றான்.

''என்னது ஐஸ்க்ரீமா? டம்ளரிலா? ஸ்ட்ரா போட்டுக் குடிக்கணுமா? அதுவும் சுத்தமா சில்னெஸ் இல்லாததை?'' என்று கேட்டாள்.

ஒவ்வொரு கேள்விக்கும் அவளது முகத்தில் ஆச்சரியமும், சந்தேகமும் கூடிக் கொண்டே போனது.

''ஆமா நீ தானே நேற்றுப் பூங்காவில் வைச்சு ஐஸ்க்ரீம் வேணுமின்னு உருண்டு பிரண்டு அழுதாய்.''

''யாரு நானு? உருண்டு பிரண்டு? அதுவும் இந்த வயிறோட?'' என்று அவள் கேலியாகக் கேட்கவும்,

''சரி உருளலை. ஆனா வாங்கிக் கொடுத்தால் தான் இந்த இடத்தை விட்டு நகருவேன் என்று அடம் பிடிச்சாய் தானே!''

''அது...'' என்று இழுத்தவள், ''சரி அப்படியே பார்த்தாலும் நான் கேட்டது ஐஸ்க்ரீம், ஐஸ் தண்ணி இல்லை. இதை ஐஸ் தண்ணின்னு கூட சொல்ல முடியாது. ஏன்னா இது தான் ஜில்லுன்னு இல்லையே'' என்று சலித்துக் கொண்டாள்.

''என்ன செய்வது இன்னும் ஒரு வருஷத்துக்கு உன்னால ஐஸ்க்ரீம் சாப்பிட முடியாது. நீ ஆசைப்பட்டுக் கேட்டியேன்னு தான் நான் நைட்டே வாங்கிட்டு வந்து ஃபிரிஜ்ஜிலே வைச்சிருந்தேன். காலையிலே ஆறு மணிக்குத்தான் ஃபிரிஜ்ஜில் இருந்து வெளியே எடுத்து வைச்சேன்'' என்றான்.

'இரண்டு மணி நேரத்துக்கு முன்னாலேயே வெளியே எடுத்து வெச்சிட்டு ஏதோ இப்பத்தான் அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி எடுத்து வைச்ச மாதிரியே பில்டப் கொடுக்கிறார் பாரு!'' என்று மனதில் கணவனைத் திட்டிக் கொண்டிருந்தவளுக்கு அப்பொழுது தான் கணவன் கூறிய ஒரு வருடக் கணக்கு மனதில் பதிய,

''என்னது ஒரு வருஷத்துக்கு ஐஸ்க்ரீம் சாப்பிடக் கூடாதா?'' என்று அதிர்ந்து போய் கேட்டாள்.

''ஆமா குழந்தை பிறந்து அவங்களுக்கு தாய்ப்பால் கொடுக்கிற வரைக்கும் உன்னால ஜில்லுன்னு எல்லாம்



சாப்பிட முடியாது இல்ல... உனக்குச் சளி பிடிச்சா அவங்களுக்குக் கஷ்டம். அதான் ஒரு வருஷம்னு சொல்லுறேன்'' என்று அவன் விளக்கிக் கூறினான்.

''ஒரு வருஷமா...'' என்று அவள் முணுமுணுக்க,

''ம்ம்... இப்படி எல்லாம் நீ தியாகம் செய்தால் தான் அம்மா. இல்லைன்னா நீ சும்மா!'' என்று ரைமிங்கா அவளைப் போட்டுத் தாக்கினான்.

அவன் இவ்வளவு தூரம் சொன்ன பிறகு மறுத்துப் பேசாது அவள் அந்த வெனிலாத் தண்ணீரை ஒரு வாய் பருகினாள்.

பின் அவனை நிமிர்ந்து பார்த்து, ''ப்ளீஸ் ஒரு பத்தே பத்து நிமிஷம் மட்டும் ஃபிரிஜ்ஜிலே வைச்சு எடுத்துத் தரீங்களா?'' என்று கேட்டாள்.

அவன் மறுப்பாய் தலை அசைததான்.

''சரி அஞ்சு நிமிஷம்... ரெண்டு நிமிஷம்'' என்று அவள் படிப்படியாக இறங்கி தன் பேரத்தைத் தொடர,

அவன் தனது பிடியில் இருந்து சற்றும் தளராதவனாய் தனது உதட்டைப் பிதுக்கிக் காண்பித்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

அவள் தனது வாய் அருகே எடுத்துச் செல்வதும் ஒரு சொட்டுகூடக் குடிக்காமல் தனது கையை கீழே இறக்குவதுமாய் மீண்டும் மீண்டும் அது மாதிரியே செய்து கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்தவன், ''பிருந்தா மனுஷன் குட் கண்டக்டர் ஆஃப் ஹீட்டா இல்லையா?'' என்று கேட்கவும் பிருந்தா திருதிருத்தாள்.

''அதான் மா வெப்பத்தைக் கடத்துவானா இல்லையான்னு கேட்கிறேன்'' என்று தமிழில் தனது கேள்வியை மொழி பெயர்த்தான்.

''எனக்கும் இங்கிலீஷ் தெரியும். ஆனா மெட்டல் தானே வெப்பம் கடத்துமா இல்லையான்னு படிப்போம். நீங்க பாட்டுக்கு மனுசனுக்குக் கேட்குறீங்களேன்னு தான் முழிக்குறேன்'' என்றதும்,

''ஒரு நிமிஷம் இரு வரேன்'' என்று சொல்லி வெளியேறிவன் அடுத்த நிமிடம் ஒரு கிண்ணம் நிறைய ஐஸ் கட்டிகளோடு வந்தான்.

அந்த ஐஸ் கட்டிகளில் தனது வலது கையை சில நொடிகள் வைத்தான். பின் தனது வலது கையை அவளது கையில் வைத்து, ''இப்போ உனக்கு ஜில்லுன்னு இருக்கு தானே?'' என்றான்.

அவன் சொல்ல வருவது ஒன்றும் புரியாது போனாலும் ஆமாம் எனும் விதமாய் தலையை மட்டும் ஆட்டினாள்.

அவனோ சற்றும் சிரிக்காமல், ''இதிலிருந்து என்ன தெரியுது? மனுஷனால சூட்டையோ குளிரையோ கடத்த முடியும்ன்னு. இப்போ நான் என் வலது கையை இந்தக் கிண்ணத்துல இருக்கிற ஐஸ் கட்டிகள் மேலே வைச்சிக்கிறேன். நீ என் இடது கையைப் பிடிச்சிக்கோ. இப்போ உனக்கு சில்னெஸ் கிடைக்கும். நீயும் அந்த ஐஸ்-க்ரீமைக் குடிச்சிடலாம்ன்னு சொன்னதும்,

ஒன்றும் சொல்லாது மடமடவென்று அதைக் குடித்து முடித்துக் காலி டம்ளரை அவனிடம் நீட்டினாள்.



''அதுக்குள்ளே சில்னெஸ் பரவிடுச்சா?'' என்று அவன் நக்கலாகக் கேட்க,

''இல்லை... இன்னும் நான் இதைக் குடிக்காது தாமதிச்சால் இன்னும் உங்க கிட்டே இருந்து எத்தனை அறிவுப்பூர்வமான ஐடியாவெல்லாம் பிறக்குமோன்னு பயந்து போய் தான் குடிச்சேன். நான் ஒரு வருஷம் பொறுமையாக் காத்திருந்தே குடிச்சுக்கிறேன்.. சாரி ஐஸ்-க்ரீம் சாப்பிட்டுக்கிறேன். என்னை ஆளை விடுங்க'' என்று கை எடுத்துக் கும்பிடாத குறையாகக் கேட்டுக் கொண்டாள்.

ஒரு சிரிப்புடனே அவன் அந்த டம்ளரோடு அந்த இடம் விட்டு அகன்றான்.



# 16



அடுத்த நாள் காலையில் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்திருந்த பிருந்தாவிடம் ஆதித்யா ஒரு ஸ்வீட் டப்பாவை நீட்டினான்.

''எனக்கா? என்ன இது?'' என்று ஆவலாகக் கேட்ட பிருந்தாவிடம்,

''ம்ம்ம் உனக்குத் தான் அல்வா. நேற்றுக் கடையில் ஒருத்தர் கொண்டு வந்து கொடுத்தார்.'' என்றான்.

கணவன் தான் தனக்காக வாங்கிக் கொண்டு வந்து தருகிறான் போல என்று ஒரு நிமிடம் சந்தோஷம் அடைந்தவள் அடுத்த நிமிடம், 'அது தானே பார்த்தேன்.

இவராவது வாங்கித் தருவதாவது? நானே கிண்டினால் கூட குப்பைக் கூடையில் கொட்ட அல்லவா செய்வார்!' என நினைத்துக் கொண்டாள்.

இதை அடுக்களை வாயிலில் நின்றுக் கேட்டுக் கொண்டிருந்த முகுந்த் தன் தாயிடம், ''உன் பையன் குப்பரா புளுகுறான் மா. நேற்று நாங்க நைட் வீட்டுக்கு வரும் வழியில் கதவை மூடப் போன கடைக்காரனிடம் கெஞ்சிக் கதவைத் திறக்க வைச்சு இந்த அல்வாவை வாங்கிட்டு வந்தான். இப்ப என்னம்மா கதை அளக்கு றான் பாருங்க...'' என்று வியந்தான்.

''நான் தான்டா பிருந்தாவை நல்லாப் பார்த்துக்கோன்னு சொன்னேன். அதான்...'' என்று கஸ்தூரி சொன்ன வுடன்,

''ஆனா எனக்கு என்னமோ அவன் அண்ணிக்கு ஸ்வீட் கொடுக்கிற மாதிரி தெரியலை. அல்வாக் கொடுக் கிற மாதிரி தெரியுது.''

''என்னடா முகுந்த் உளறுகிறாய். ரெண்டும் ஒண்ணு தானேடா!''

''அதான்மா அவன் அண்ணியைக் கலாய்க்கத் தயாரா இருக்கற மாதிரி இருக்கு. பொய் சொல்லாதவன் வாயிலே இருந்து பொய் வருது. எனக்குத் தெரியாதா என் அண் ணனை... நீங்க வேணாப் பாருங்க... இப்ப அது தான் நடக்கப் போகுது'' என்று சொல்லிவிட்டுத் தன் அண் ணன் அருகே சென்று அமர்ந்தான்.

''ஹே முகுந்த்! வா வா. உன்னைத் தான் தேடினேன்'' என்று ஆதித்யா அவனை உற்சாகமாக வரவேற்றதும்,



'ஆகா! நானா வலிய வந்து மாட்டிக்கிட்டேன் போலவே! என்ன செய்யக் காத்து இருக்கான் என்று தெரியலையே?!' என்று மனதில் புலம்பிய முகுந்த், ''என்ன அண்ணா. சொல்லு'' என்றான்.

''நம்ம வீட்டுல நம்ம அம்மா புத்திசாலியா இல்லை...'' என்று தன் கேள்வியைத் தொடராது பாதியில் நிறுத்தி முகுந்தை ஏறிட்டுப் பார்க்க...

இப்ப எதுக்கு இந்தக் கேள்வி என்று விழித்துக் கொண்டே முகுந்த், ''ம்ம்ம் அம்மா ஒவர் புத்திசாலி எல் லாம் கிடையாது'' என்றுத் தன் தாயை ஒரக் கண்ணில் பார்த்துக் கொண்டே கூறினான்.

''நம்ம அப்பா?''

''அப்பா நல்ல அறிவாளி.''

''நான்?''

முகுந்துடன் சேர்ந்து அருகில் இருந்த கஸ்தூரியும், பிருந்தாவுமே குழம்பிப் போயினர். திடீரென்று இந்தக் கேள்விகள் எல்லாம் எதற்காகக் கேட்கிறான் என யோசிக்க ஆரம்பித்தனர்,

''நீ சூப்பர் புத்திசாலி'' என்று முகுந்த் சொன்னதும்,

''அப்பாடா!'' என்று சொன்ன ஆதித்யா அவன் பாட் டுக்குச் சாப்பிட ஆரம்பித்தான்.

என்னடா அவன் பாட்டுக்குக் கேள்வியாக் கேட்டான். இப்ப என்னடான்னா இட்லியும், சாம்பாரும் சாப்பிட ஆரம்பித்து விட்டான். என்ன விஷயம் என்று மூவருமே ஒருவரைப் பார்த்து ஒருவர் உதட்டைப் பிதுக்கிக் கொண்டனர்.

பின் முகுந்த் ஆதித்யாவைப் பார்த்து, ''இப்போ எதுக்கு இந்த அறிவாளி டெஸ்ட். ஏதாச்சும் குவிஸ் ஃப்ரோகிராமுக்கு அம்மாவைக் கூட்டிட்டுப் போகப் போறியா? அப்படிப் பார்த்தால் உயிரோடு இல்லாத நம்ம அப்பாவோட புத்திசாலித்தனத்தைப் பற்றி எல்லாம் எதுக்கு விசாரிச்ச? எனக்கு ஒண்ணும் புரியலையே.'' என்று கேட்டான்.

''குவிஸ் எல்லாம் இல்லைடா. எனக்குப் பொறக்கப் போற புள்ளைங்க அறிவாளியா இருக்குமா இல்லையான்னு தெரிஞ்சுக்கத் தான் கேட்டேன்'' என்ற ஆதித்யாவின் பதில் முகந்த் முகத்தில் எந்த தெளிவையும் ஏற்படுத்தவில்லை.

''ஹேய்! குழப்பாமல் நேரா பதில் சொல்லு ஆதி!'' என்று அவன் செல்லமாக மிரட்டவும்,

''வேற ஒண்ணும் இல்லைடா. இப்போ நம்ம அம்மாக்கு அறிவு கம்மி. ஆனாலும் நான் அப்பா மாதிரி புத்திசாலியாப் பிறந்திட்டேன் இல்லையா. அதே மாதிரி நாளைக்கு என் பிள்ளைங்க பிருந்தா மாதிரி இல்லாமல் என்னை மாதிரி புத்திசாலியா பிறந்திடுவாங்கன்னு ஒரு சின்ன கணக்கு. அவ்வளவுதான்'' என்று சிரிக்காமல் சொல்ல...

கேட்டுக் கொண்டிருந்த பிருந்தா கடுப்பாகி அவனை முறைக்க...

'நான் அப்பவே சொல்லலை இவன் அண்ணிக்கு அல்வா தான் கொடுக்கப் போகிறான் என்று!' என்பது போல் முகுந்த் தன் தாயிடம் ஜாடை காட்ட...



''நான் என்ன மக்கா?'' என்று பிருந்தா சிலிர்த்துக் கொண்டு கேட்க,

''இல்லையா பின்னே? இதக் கேளுடா முகுந்த்... நேற்று நான் பாலில் நாலஞ்சு சொட்டு வெனிலா எசன்ஸ் விட்டு எக் பீட்டர் வைச்சு அடிச்சு நுரையோடு கொண்டு போய் கொடுத்து இது நீர்த்துப் போன வெனிலா ஐஸ்-க்ரீம் என்று சொல்லுறேன். அப்படியான்னு வாங்கிக் குடிக்குறாடா உங்க அண்ணி!'' என்று பிருந்தாவைக் கேலி பண்ண...

ஆதித்யா தந்த அல்வாவைச் சுவைத்துக் கொண்டிருந்த பிருந்தாவிற்குத், தான் நேற்றுக் குடித்தது பாலா இல்லை ஐஸ்-க்ரீமா என்ற சந்தேகம் இப்போது வந்தது.

''உங்களை நம்பித் தானேங்க குடிச்சேன்'' என்று பிருந்தா பரிதாபமாகச் சொல்ல...

''உனக்கு டேஸ்ட் பண்ணத் தெரியாதா? நான் சொல்லுற எல்லாத்தையும் நம்பிடுவியா? நான் என்ன அவ்வளவு நம்பகமானவனா?'' என்று அவன் கிண்டல் பண்ண...

சுற்றி எல்லோரையும் வைத்துக் கொண்டு இப்படி ஒரு கேள்வி கேட்டால் நான் என்ன பதில் சொல்வது என்பது போல் பிருந்தா பார்த்துக் கொண்டிருக்க....

''நான் கூட நேற்று தான் ஏமாந்தாள். இன்னைக்குத் தெளிவா இருப்பாள்ன்னு பார்த்தேன்டா முகுந்த். ஊகும்... கொஞ்சம் கூட முன்னேற்றம் இல்லை. பாரு மைதா மாவிலே கலர் பொடி கலந்து அல்வான்னு கொடுக்கிறேன். ஆசையாச் சாப்பிடுறாள். இவ மக்கு இல்லையா?'' என்று கேட்டதும்,

வாயில் சுவைத்துக் கொண்டிருந்த அல்வாவுடன் அவள் வாய் பிளந்து பார்க்க...

''பார்த்து... வாயை மூடு பிருந்தா. இல்லைன்னா வாயில இருக்குற அல்வாவில் நாலு கொசு போய் உட்கார்ந்திட போகுது. அப்புறம் இப்ப வெஜிடேரியனா இருக்கிற அல்வா நான்-வெஜிடேரியனா மாறிடப் போகுது'' என்று விடாமல் மனைவியை அவன் நக்கல் பண்ண,

முகுந்த், ''நம்பாதீங்க அண்ணி. பொய் சொல்லுறான். நேற்றுக் கடையிலே இவன் அல்வா வாங்கும் போது நானும் இவன் கூட தான் இருந்தேன். தைரியமாச் சாப்பிடுங்க'' என்று பிருந்தாவிற்குத் தெளிவுப்படுத்தியவன் தன் அண்ணனைப் பார்த்து,

''போதும் ஆதி. நான் அப்பவே அம்மாகிட்டே சொன்னேன். அண்ணன் இன்னைக்கு ஃபுல் பார்மிலே இருக்கான் என்று. அண்ணி பாவம். விட்டுவிடு'' என்றான்.

'அன்னைக்கு அல்வாவைக் கொட்டினது இவருக்கு மூணு மாசம் கழிச்சு உருத்திடுச்சு போல! அதான் தானே கடைக்குப் போய் அல்வாவை வாங்கிட்டு வந்து இருக்கார். அப்போ கூட அதை அவர் தான் வாங்கியதா ஒத்துக்கிறாரா? ஹூம்... பொய் சொல்லுறதோடு என்னை நக்கல் வேற பண்ணிக்கிட்டு இருக்கார்.

என்னைக்கும் இல்லாமல் இன்னைக்கு என்ன புதுசா நக்கல் எல்லாம் பண்ணுறார். இவரோட உண்மையான குணம் தான் என்ன? பெருமாளே! நான் பாடத்திலே வாங்காத P.hd இவரது குணாதிசயத்தை ஆராய்ச்சி



செஞ்சு வாங்கிடுவேன் போல!' என்று நினைத்துக் கொண்டே பிருந்தா சாப்பிடாமல் கணவனை முறைத்துக் கொண்டே எழுந்து சென்றுவிட்டாள்.

அவள் சென்றதும் கஸ்தூரி, ''ஏன் ஆதி, அவளைக் காலங்கார்த்தாலே வெறுப்பேத்துகிறாய்?'' என்று தன் பெரிய மகனைக் கண்டித்தார்.

கோபித்துக் கொண்டு போகும் தன் மனைவியைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டே, ''நீங்க தானேமா அவளை நல்லாப் பார்த்துக்கச் சொன்னீங்க'' என்றான்.

''இப்படியா உன்னைப் பார்த்துக்கச் சொன்னேன். அல்வாவைக் கொடுத்திட்டு மைதாக் களின்னு நானா சொல்லச் சொன்னேன்?''

''களியா? நான் எப்பமா அப்படிச் சொன்னேன்? பாருங்க அவ சாப்பிட்டது மைதாக் களின்னு இப்ப நீங்க தான் உங்க மருமகளைக் கிண்டல் பண்ணுறீங்க'' என்று அவரைக் குற்றம் சொல்ல,

''ஆதி, இன்னைக்கு இது போதும். நீ சாப்பிட்டு முடிச்சிட்டியா? போய் பிருந்தாவைச் சமாதானப்படுத்தி சாப்பிட வை.'' என்று சொல்லித் தட்டில் இட்லியை வைத்து நீட்ட...

அவன் சாப்பிட்டு முடித்துக் கை கழுவிவிட்டு வந்து அந்தத் தட்டை வாங்கிக் கொண்டு தனது படுக்கையறைக்குள் நுழைந்தான். அந்தத் தட்டை பிருந்தாவிடம் நீட்ட... அவள் அதை வாங்கவில்லை.

அருகில் இருந்த மேஜையில் தட்டை வைத்தவன் பிருந்தாவிடம் எதுவும் பேசாது தனது குழந்தைகளிடம் பேச ஆரம்பித்தான்.

''ஹேய் குட்டீஸ்! நேற்று அப்பாகிட்டே என்ன சொன்னீங்க? அம்மா ஒண்ணும் மக்கு கிடையாதுன்னு சொன்னீங்க தானே? நான் இன்னைக்கு அவ மக்கு தான் என்று நிருபிக்கிறேன் என்று சொன்னது போல செஞ்சுட்டேன் பார்த்தீங்களா!

பாருங்க அவ குடிச்சது ஐஸ்-க்ரீமா... சாப்பிட்டது அல்வா தானான்னு சாப்பிட்ட அவளுக்கே டவுட்டு வந்திடுச்சு. சரி டேஸ்ட் பண்ணத் தெரியலைன்னாக் கூடப் பரவாயில்லை. அவ சாப்பிடுற சாப்பாடு உங்களுக்கானது. அதிலே போய் அப்பா ரிஸ்க் எடுப்பேனான்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தாளா உங்க அம்மா? இல்லையே!

எப்படி யோசிப்பாள்? அதுக்குக் கொஞ்சமாவது புத்தி வேணும் இல்லையா?'' என்று அவள் வயிற்றைப் பார்த்துப் பேசியவன் நிமிர்ந்து அவள் கண்களைப் பார்த்துக் கொண்டே 'என்ன நான் சொன்னது சரி தானே?' என்பது போல் புருவம் உயர்த்திக் கேட்டுப் புன்னகைக்க...

கணவனின் புன்னகைத்த முகத்தைப் பார்த்தவளால் தனது முறைப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது போக மெலிதாகப் புன்னகைத்தாள்.

அவன் உடனே அவளது சாப்பாட்டை எடுத்து நீட்ட அதை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தாள்.

சற்று நேரத்தில் சிரித்துக் கொண்டே வந்த மகனையும் மருமகளையும் பார்த்துக் கஸ்தூரி நிம்மதி அடைந்தார்.

முகுந்த் தன் தாயிடம், ''அண்ணா அண்ணியைச் சமாளிச்சுட்டான் போல!'' என்று பெருமையாகக் கூற,

கஸ்தூரியோ, ''என் மருமகள் சாது. அதனால போனாப் போகுதுன்னு உங்க அண்ணனை மன்னிச்சு இருப்பாள்'' என்று கூறினார்.



# 17

வளைக்காப்பு முடிந்து பத்து நாட்கள் ஆன போது...

இரவு சீக்கிரமே தூங்கச் சென்ற பிருந்தா இரவு பன்னிரெண்டு மணி போல் பாத்ரூம் போக எழுந்த போது கூட ஆதித்யா வீடு வந்து சேர்ந்திருக்கவில்லை.

கணவனுக்காகச் சிறிது நேரம் காத்திருக்கலாமா என்று கூட யோசித்தாள். ம்ஹூம் நாம முழிச்சிருப்பதைப் பார்த்தால் கண்டிப்பாகக் கோபப்பட்டுத் திட்டுவார். பேசாமல் படுத்துத் தூங்குவோம் என நினைத்துப் படுத்தவள் அடுத்த நொடியே தூங்கியும் போனாள்.

அவள் அடுத்து விழித்த போது மணி நான்கு!

கடிகாரத்தில் மணி பார்த்தவள், 'நாலு மணி தான் ஆகுதா? இன்னும் இரண்டு மணி நேரம் கடத்தணுமா? ப்ச்சு தூக்கமே வர மாட்டேங்குது. எப்படி வரும்? இது நாள் வரை மதியம் தூங்கி நமக்குப் பழக்கமே கிடையாது. ஆனால் கர்ப்பமான நாள் தொடங்கி ரெஸ்ட் எடுன்னு சொல்லிச் சொல்லியே அத்தையும், சீதாம்மாவும் தினமும் நம்மைத் தூங்க வைச்சிடுறாங்க.

சாதாரணமாகவே பகலில் தூங்கினால் இரவு தூக்கம் வராது. இப்ப வயிறு வேறு பெருசா ஆகிடுச்சு. சடார்ன்னு திரும்பிப் படுக்க முடியலை. அடுத்த பக்கம் திரும்பிப் படுக்கணும்ன்னா கொஞ்சம் கொஞ்சமா திரும்ப வேண்டியிருக்கு. அதிலேயே தூக்கம் போயிடுது' என அலுத்துக் கொண்டாள்.

பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள். அங்கே ஆதித்யா உறங்கிக் கொண்டிருந்தான்.

'அப்பாடா! வந்துட்டாரா? எப்பொழுது வந்தார்? சாதாரணமா பிள்ளைங்களிடம் பேசிட்டுத் தானே தூங்குவார். இன்னைக்கு அலுப்பா இருக்குன்னு பேசாமலே தூங்கி விட்டாரா? இல்லை நாம தான் கவனிக்காமல் அயர்ந்து தூங்கிவிட்டோமோ?' எனக் குழம்பினாள்.

கணவனின் முடி கோதிக் கொடுத்து அவனது நெற்றியில் முத்தமிட வேண்டும் என்று ஆசையாக இருந்தது. கணவன் விழித்திருக்கும் போது எப்படியும் இதைச் செய்ய முடியாது. தூங்கும் போதாவது செய்வோமே என நினைத்தாள்.

'ஒருவேளை முழிச்சுக்குவாரோ? ப்ச்சு என்ன ஆனாலும் சரி இன்னைக்கு முத்தம் வைத்தே தீரணும்' என எண்ணியவள் தன் எண்ணத்தைச் செயலாற்றும் பொருட்டு கணவன் புறம் நகர முயற்சிக்க அவளது பெரிய வயிறு அவளை நகரவிடாமல் தடுத்தது.

சரி எழுந்து உட்கார்ந்த பின் அவர் புறம் நகர்வோம் என நினைத்தவள் எழும் பொழுது வயிற்றிலே மின்னலென ஒரு வலி வந்து மறைந்தது!

நிஜமாகவே இப்போ வலித்ததா? இல்லை பிரமையா? என்று அவள் யோசிக்கும் வண்ணம் அந்த வலி வந்த வேகத்திலேயே மறைந்தது. முத்தமிட நினைத்த நினைப்பு கூட மறந்து போயிற்று.

'பாத்ரூம் சென்று வருவோம்!' என நினைத்து அங்கு சென்று அவள் நிதானமாகப் பல் துலக்கி காலைக் கடன்களை முடித்துத் திரும்பும் பொழுது பதினைந்து நிமிடங்கள் கடந்திருந்தன.



இப்பொழுது மீண்டும் ஒரு வலி வந்தது! 'கணவனை எழுப்பிச் சொல்லலாமா' என ஒரு நொடி யோசித்தாள்.

'அயர்ந்து தூங்குகிறார். மேலும் அவரிடம் சொன்னால் அவரும் அத்தையைத் தானே எழுப்பிக் கேட்பார். அதற்கு நாமே இவரைத் தொந்தரவு செய்யாமல் அத்தையை எழுப்பிக் கேட்போம்' எனத் தீர்மானித்து அறையை விட்டு வெளியேறி கஸ்தூரியின் அறைக் கதவைத் தட்டினாள்.

இரண்டாவது தட்டிலேயே கஸ்தூரி, ''யாரு?'' என்று கேள்வி எழுப்பினார்.

''நான் தான் அத்தை.'' என்று பிருந்தா சொன்னவுடன்,

''என்னம்மா பிருந்தா? இதோ வரேன்'' என்று சொல்லிக் கதவைத் திறந்து வேகமாக வெளியே வந்தார்.

''என்னம்மா இந்த நேரத்திலே...'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே,

பிருந்தா, ''ரெண்டு முறை வலி வந்துச்சு அத்தை... அதான் உங்களை எழுப்பிக் கேட்கலாம்ன்னு பார்த்தேன்'' என்று சொன்னாள்.

''சூட்டு வலியா இருக்கும்மா. இப்பவே எப்படி வலி வரும்? பிரசவத்துக்கு இன்னும் நாள் இருக்கும்மா. இரு...'' என்று சொன்னவர் அடுக்களைக்குள் சென்று சீரகத்தைப் பொறித்து அதில் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைத்து வடிகட்டி ஆற்றிக் கொண்டு வந்து மருமகளிடம் கொடுத்தார்.

ஆனால் அவர் இதையெல்லாம் செய்து முடிக்கும் முன்பே இன்னொரு வலி வந்து மறைந்திருந்தது!

''இதைக் குடிம்மா சரியாகிடும்'' என்று சொல்லி கஸ்தூரி டம்ளரை நீட்ட,

அதை வாங்கி அந்த நீரைப் பருகிய பிருந்தா, ''சரிங்க அத்தை. நீங்க போய் தூங்குங்க. வீணா உங்களை வேற எழுப்பிக் கஷ்டம் கொடுத்திட்டேன்'' என்று சொன்னாள்.

''இதுல என்னம்மா இருக்கு. இதெல்லாம் ஒரு கஷ்டமா? சரி நீ போய் தூங்கு'' என்று சொல்லி அவளை அனுப்பி வைத்தார்.

பிருந்தா தனது அறைக்குள் சென்று படுக்கையில் அமர்ந்த போது மணி 4.30 ஆகி இருந்தது. அவளுக்குத் தூங்க வேண்டும் போல் தோன்றாததால் படுக்கையில் நன்றாக உள்ளே தள்ளி, கால்களை நீட்டிக் கொண்டு அமர்ந்தாள். அவளுக்கு ஏனோ மனக்கலக்கம் அதிகரித்தது. முதுகைக் கட்டிலில் சாய்த்துக் கொண்டு உடலைத் தளர்த்தி கண்களை மூடிக் கடவுளையும், தன் தாய், தந்தையரையும் பிரார்த்தனை செய்தாள்.

பத்து நிமிடங்கள் இந்த நிலை நீடிக்க.. இந்தப் பத்து நிமிட இடைவெளியில் வலி எதுவும் வரவில்லை.

அவளது நீண்ட பிரார்த்தனைக்குப் பின் அவளது மனம் சற்று நிம்மதி அடைந்தது. மெதுவாகக் கண்களைத் திறந்தாள்.

குனிந்துத் தன் கணவனைப் பார்த்தாள். அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். மீண்டும் அவனை முத்தமிட ஆவல் பிறந்தது. இம்முறை ஆதிக்கு வெகு அருகில் அமர்ந்திருந்ததால் எளிதாகவே தனது ஆசையைப் பூர்த்தி செய்துவிட முடியும் என்று எண்ணியவளாய் குனிந்து அவன் புறம் நெருங்க ஒரு பெரு வலி வந்து தாக்கியது.



முன்னவற்றைப் போல் இல்லாமல் வலியின் தாக்கம் அதிகமாக இருக்க பிருந்தா தன் உதடுகளைப் பற்களால் அழுத்தியும், தனது இரு கைகளையும் படுக்கை மேல் அழுத்தியும் அந்த வலியைப் பொறுத்துக் கொண்டாள்.

படுக்கையின் மேல் வைத்து அழுத்தியதாகத் தான் அவள் எண்ணிக் கொண்டாள். ஆனால் அவளது ஒரு கை மட்டுமே படுக்கை மேல் இருந்தது. இன்னொரு கையோ கணவனின் புஜத்தை அழுத்தியிருந்தது.

அதில் தூக்கம் கலைக்கப்பட்டு கண்விழித்துப் பார்த்த ஆதித்யாவிற்கு மனைவியின் கலங்கிய முகமே விஷயத்தை எடுத்துச் சொல்ல... சடாரெனப் படுக்கையில் எழுந்து அமர்ந்தான்.

''என்னம்மா? என்ன ஆச்சு? வலிக்குதா?'' என்று கேட்டுக் கொண்டே அவளைத் தன் மார்பு மீது சாய்த்து அணைத்துக் கொண்டு அவளது முதுகை ஆறுதலாக வருடிக் கொடுத்தான்.

கணவனின் இந்தச் செயல் அவளுக்கு எல்லையில்லா ஆறுதல் அளித்தது. தன் தாயின் அணைப்பில் கிடைக்கக் கூடிய ஒரு பாதுகாப்பு உணர்வினை அவள் மனம் உணர, அவனிடம் மேலும் ஒண்ட முயற்சித்தாள். அவளது பெரிய வயிறு அதற்குத் தடை விதித்தது.

''நாலு மணியிலே இருந்து வலிக்குதுங்க'' என்று மெதுவான குரலில் கூறினாள்.

''என்னை எழுப்பி இருக்கலாமேமா? சரி இரு. நான் போய் அம்மாவை எழுப்பி...'' என்று அவன் சொல்லத் தொடங்கியவுடன்,

''நான் அப்பவே அத்தையை எழுப்பினேன். சூட்டு வலின்னு சொல்லி சீரகத் தண்ணி எல்லாம் கொடுத்தாங்க'' என்றாள்.

''ஓ! அப்போ இது சாதாரண வலி தானா?'' என்று ஆதித்யா கேட்கவும்,

நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே, ''எனக்காக ஒண்ணு செய்வீங்களா?'' என்று கேட்டாள்.

அவளது குரலில் ஏக்கமும், வலியும் சம அளவில் கலந்திருந்தது.

'மனைவி இந்த நேரத்தில் தன்னிடம் என்ன வேண்டப் போகிறாளோ!' என்று சில நொடிகள் கலங்கினான். பின் அவளிடம், ''நீ சொல்லும்மா. கண்டிப்பாச் செய்யுறேன்.'' என்றான்.

அவன் அவ்வாறு சொன்னவுடன், ''என்னை ஆஸ்பிட்டலுக்குக் கூட்டிக்கிட்டுப் போறீங்களா?'' என்று பரிதாபமாகக் கேட்டாள்.

''இதுக்கு எதுக்குமா இவ்வளவு தயங்குறே? வா உடனே கிளம்பலாம்'' என்று சொன்னவன் அடுத்த நொடி அவளை விட்டு விலகி அந்த அறையை விட்டு வெளியேறினான்.

கணவன் தன்னை விட்டு விலகியதும் இதுவரை கிடைத்துக் கொண்டிருந்த பாதுகாப்பு உணர்வும் சேர்ந்தே அகலுவதை உணர்ந்தாள். அவளின் பயம் அதிகரிக்க ஆரம்பித்தது.

வெளியே சென்றவன், ''அம்மாஆஆஆ...'' என்று போட்ட கூச்சலில் கஸ்தூரி வெளியே வருமுன் மாடியில் இருந்து முகுந்த் எட்டிப் பார்த்தான்.



இன்னும் தூக்கத்தின் பிடியில் முழுவதுமாகச் சென்றிராத கஸ்தூரியும் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தார்.

இருவரையும் பொதுவாக ஒரு பார்வை பார்த்த ஆதித்யா, ''பிருந்தாவைக் கூட்டிக்கிட்டு ஆஸ்பிட்டல் போகணும். சீக்கிரமாகக் கிளம்புங்க'' என்றான்.

முகுந்த் மின்னலெனத் தன் அறைக்குள் மறைந்து அதே வேகத்தில் உடை மாற்றிக் கீழே இறங்கி வந்தான்.

ஆதித்யாவும் விரைந்து சென்று உடை மாற்றினான். அவன் உடை மாற்றும் வேளையில் மனைவிக்குத் தைரியம் சொல்லவும் தவறவில்லை.

கஸ்தூரி முகத்தைக் கழுவிக் கொண்டு பூஜை அறைக்குச் சென்று கடவுளிடம் வேண்டிக் கொண்டு விபூதியுடன் வந்து மருமகளின் நெற்றியில் பூசிவிட்டார்.

அவுட் ஹவுஸ் சென்று சீதாவை எழுப்பி விஷயம் சொல்லி அவரது பொறுப்பில் வீட்டை ஒப்படைத்து விட்டுக் கிளம்பினர்.

முகுந்த் டிரைவர் சீட்டில் அமர அவனுக்கு அருகில் ஆதித்யா அமர்ந்து கொண்டான். கஸ்தூரியும், பிருந்தாவும் பின்னிருக்கையில் அமர்ந்து கொண்டார்கள்.

பிருந்தாவிற்குத் தன் கணவன் அருகில் அமர்ந்து ஆறுதல் அளித்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது. ஆனால் தனது விருப்பத்தை வெளியே சொல்ல முடியாமல் அமைதி காத்தாள்.

பிருந்தா தன் பார்வையை வேறு புறம் திருப்பாமல் ஒரே நேர்கோடாகத் தன் கணவனையே பார்த்துக கொண்டு வந்தாள்.

பின்பக்கம் திரும்பி மனைவியைப் பார்த்த ஆதித்யா விற்கு அவளது பார்வையின் பொருள் சரியாக விளங்க வில்லை என்றாலும்... அதற்கு மேல் அவனால் முன்பக்கம் பார்த்துக் கொண்டு அமர முடியாமல் பின்பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தான்.

இவர்களது நிலையைப் பார்த்த கஸ்தூரி, ''முகுந்த், காரை ஓரமாக நிறுத்துப்பா!'' என்றார்.

எதற்கென்று காரணம் தெரியாவிட்டாலும் முகுந்த் தாயின் வேண்டுகோளுக்கு இணங்கிக் காரை ஓரமாக நிறுத்தினான்.

''ஆதி நீ பின்னாலே வந்து பிருந்தா பக்கத்திலே உட்காரு. நான் முன் சீட்டிலே உட்கார்ந்துக்கிறேன்'' என்று சொல்லிக் கதவைத் திறந்து வெளியேறினார்.

''தாங்க்ஸ் அத்தை'' என்று பிருந்தா மெதுவாக முணு முணுத்தாள்.

அர்த்தபுஷ்டியுடன் அவளைப் பார்த்துப் புன்னகைத்த கஸ்தூரி முன்னிருக்கையில் சென்று அமர்ந்தார்.

ஆதித்யா பின்பக்கம் ஏறி அமர்ந்து அவளது இரு கைகளையும் தனது கைகளுக்குள் புதைத்து அழுத்திக் கொடுத்தான். அவள் கணவனின் தோள் சாய்ந்து கொண்டாள். மீண்டும் தாயின் பாதுகாப்பு உணர்வினை அடையப் பெற்றாள்.

அவன் அவளது காதுக்குள், ஒண்ணும் இருக்காது. பயப் படக் கூடாது. சரியாகிடும்... இந்த மூன்றையுமே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே வந்தான்.

அவர்கள் மருத்துவமனையை அடைந்த பொழுது மணி ஐந்தைக் கடந்திருந்தது.



அவளை மருத்துவரின் அறைக்குள் அனுப்பி வைத்து விட்டு இவர்கள் மூவரும் வெளியேக் காத்திருந்தார்கள்.

பிருந்தாவின் நல்ல நேரம் அவளை இது நாள் வரைப் பரிசோதித்த பெண் மருத்துவரே அன்று டியூட்டியில் இருந்தார்.

''இந்த மாசம் இந்த பேஷண்ட்டுக்குப் பண்ணிய ஸ்கேன் ரிப்போர்ட் எடுத்துட்டு வாங்க'' என்று நர்ஸிடம் சொன்னார்.

பிருந்தாவும் தன் கையோடு கொண்டு வந்திருந்த தனது மெடிக்கல் ஃபைலை அவரிடம் கொடுத்தாள்.

அந்தப் பெண் மருத்துவர் நர்ஸ் தந்த ஸ்கேன் ரிப் போர்ட்டை வாங்கிப் பார்வையிட்ட பின் பிருந்தாவை உள்ளே உள்ள பரிசோதனை அறைக்குள் அழைத்துச் சென்றார். அவளைப் பரிசோதித்துப் பார்த்தவர் அங்கிருந்த நர்ஸிடம், ''உடனே சிசேரியன் செய்யணும். ஆபரேஷன் தியேட்டர் ரெடி பண்ணுங்க!'' என்றார்.

இங்கே வெளியே மூவரும் ஆளுக்கொரு சிந்தனையில் மூழ்கிப் போய் காத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது வெளியே வந்த நர்ஸிடம் கஸ்தூரி தன் மருமகளைப் பற்றி விசாரிக்க,

''இன்னும் கொஞ்ச நேரத்திலே குழந்தை பிறந்திடும்மா'' என்று மட்டும் சொல்லிவிட்டுத் தனது பணியினைத் தொடர அந்த நர்ஸ் விரைந்தாள்.

''அப்போ அது பிரசவ வலி தானா? இன்னும் ஒரு மாசம் இருக்கே? குறைப் பிரசவமா? இரட்டைக் குழந்தைகள் வேற! பெருமாளே! அந்த மூன்று உயிரையும் நீ தான் நல்லபடியா காப்பாத்தித் தரணும்!'' என்று வாய்விட்டுச்

சத்தமாக கஸ்தூரி புலம்பி அருகிலிருந்த இருவரையும் பீதிக்குள்ளாக்கினார்.

போன நொடி வரை மனைவியின் பயத்தைப் போக்க மருத்துவமனை வந்து இருக்கிறோம் என்று மட்டுமே நினைத்துக் கொண்டு இருந்ததால் ஆதித்யா தைரியமாகவே இருந்தான். ஆனால் நர்ஸின் கூற்றும், தாயின் புலம்பலும் அவனைக் கலங்கச் செய்தது.

அந்தப் பெண் மருத்துவர் மற்றொரு நர்ஸிடம், ''பேஷண்ட்டோட ஹஸ்பண்டை உள்ளே வரச் சொல்லுங்க'' என்று தனது அடுத்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ஆதித்யா மருத்துவரின் அறைக்குள் நுழைந்ததும், ''மிஸ்டர் ஆதித்யா, இன்னைக்கே குழந்தை பிறந்திடும். குழந்தைங்க பொசிஷன் நல்லா இருக்கு. ஒரு குழந்தையா இருந்தால் நான் நார்மல் டெலிவரிக்காக வெயிட் பண்ணுவேன். ஆனால் டிவின்ஸ் என்பதால் நாங்க பொதுவாக குழந்தைகளோட உயிருக்கு எந்த ஆபத்தும் வந்திடக் கூடாதுன்னு நார்மல் டெலிவரிக்கு வெயிட் பண்ணுவதே கிடையாது. சிசேரியன் பண்ணிடுவோம்...'' என்று சாதாரணமான குரலில் சொல்லிக் கொண்டே போனார்.

கேட்டுக் கொண்டிருந்த ஆதித்யாவிற்குத் தான் அந்த ஏ.சி. அறையிலும் வியர்த்து வழிந்தது.

அவனது முகத்தில் ஓடிய பயரேகையைச் (இது நாள் வரை அவரது அனுபவத்தில் இது மாதிரி எத்தனை பேரைப் பார்த்திருப்பார்!) சரியாகப் படித்த அந்த பெண் மருத்துவர், ''ஒண்ணும் பயமில்லை மிஸ்டர் ஆதித்யா. எவ்ரிதிங் வில் பீ ஓ.கே. பார்மாலிட்டிக்காக நீங்க இந்த பேப்பரில் சைன் பண்ணுங்க'' என்றார்.



வழிகின்ற வியர்வையைத் தன் கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டே அவர் நீட்டிய இடத்தில் கையெழுத்திட்டான்.

அப்பொழுது அங்கு வந்த நர்ஸ், ''டாக்டர், ஆபரேஷன் தியேட்டர் போகும் முன்னாடி பேஷண்ட் அவங்க ஹஸ்பண்டைப் பார்க்க விரும்புறாங்க'' என்றாள்.

மருத்துவர் ஆதித்யாவிடம், ''இந்த ரூமுக்குள்ளே போய் பாருங்க'' என்று அந்த பரிசோதனை அறைப் பக்கம் கை காட்டினார்.

ஆதித்யா அந்த அறைக்குள் நுழைந்தவுடன் அங்கிருந்த வேறொரு நர்ஸ், ''சீக்கிரமா... ரெண்டே நிமிஷத்திலே பேசிட்டு வெளியே வந்திடுங்க!'' என்று சொல்லியவாறே வெளியேறினாள்.

பிருந்தா கணவன் தனக்கு ஆறுதல் சொல்லுவான் என்று எண்ணியே அவனைப் பார்க்க விரும்பினாள். ஆனால் அங்கு நடந்ததோ வேறாகிப் போனது.

இதுவரைக் கோபமாகவோ, சீரியஸாகவோ மட்டுமே காட்சி அளித்துக் கொண்டிருந்த ஆதித்யாவின் முகத்தில் மிதமிஞ்சிய பயத்தையும், கலக்கத்தையும் கண்ட பிருந்தா திகைத்தாள்!

அவள் அருகே வந்தவன், ''நல்லபடியா திரும்பி வந்திடுமா. எனக்கு நீ மட்டும் போதும்'' என்று தழுதழுத்தான்.

இதுநாள் வரை மனைவி தூங்கிய பின் குழந்தைகளை மட்டுமே கொஞ்சிக் கொண்டிருந்தவனின் வாயில் இருந்து இப்படி ஒரு வார்த்தையை பிருந்தா எதிர்பார்க்கவில்லை.

தன் கணவனுக்குத் தான் ஒரு பொருட்டே அல்ல... குழந்தைகள் மட்டுமே அவருக்கு முக்கியம் என்று அவள் எண்ணிக் கொண்டிருக்க... அவனது இந்தக் கூற்று அவளது எண்ணத்தைத் தவிடு பொடியாக்கியது.

கணவன் தனக்கு ஆறுதல் அளிக்கும் நிலையில் இல்லை. நாம் தான் அவருக்கு ஆறுதல் அளிக்க வேண் டிய நிலையில் உள்ளோம் என்று பிருந்தா புரிந்து கொண்டாள்.

பெண் என்பவள் மகா சக்தி! அவள் பார்ப்பதற்கு பலவீனம் ஆனவள் போல் காட்சி அளிப்பாள். ஆனால் தேவையான பொழுது அவளது பலம் உள்ளிருந்து வீறு கொண்டு எழும்.

பிருந்தா அந்த நிலையில் தான் இருந்தாள்!

முந்தின நிமிடம் வரைக் கணவனின் ஆறுதல் வார்த்தைகளை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தவள், கணவனே குழந்தையாய் மாறித் தன்னிடம் ஆறுதல் வேண்டி நிற்க ஆரம்பித்த நொடி, தனது சக்தியை ஒன்று திரட்டி தனது மனோபலத்தை அதிகரித்துக் கொண்டாள்.

கணவனைத் தேற்றும் விதமாக அவனது கைகளைத் தன் பலங்கொண்ட மட்டும் அழுத்தியவாறே, ''எனக்கு ஒண்ணும் ஆகாதுங்க. நம்ம குழந்தைகளுக்கும் எதுவும் ஆகாது. நாங்க மூணு பேரும் நல்லபடியா உங்ககிட்டே வருவோம். நீங்க பயப்படாதீங்க. பெருமாள் நம்மைக் கைவிட மாட்டார்'' என்றாள்.

ஆதித்யா குனிந்து அவளது நெற்றியில் முத்தம் பதிக்க... அவனது கண்களில் இருந்து ஒரு துளி நீர் அவளது கண்களில் கலந்தது. அது அவளது கண்ணீர் துளியோடு வெளியேறியது. அதுவே அவளது கடைசி துளி கண்ணீராகவும் இருக்க வேண்டும் என்று பிருந்தா மனதில் உறுதி பூண்டாள்.



அந்த சமயம் கதவைத் தட்டிக் கொண்டு நர்ஸ் உள்ளே நுழைந்து பிருந்தா படுத்திருந்த ஸ்டெரச்சரைத் தள்ளிக் கொண்டு ஆபரேஷன் தியேட்டர் நோக்கிச் சென்றாள். பிருந்தா ஒரு தலையசைவுடன் தன் கணவனிடம் இருந்து விடைபெற்றாள்.

கணவன் தந்த ஒற்றை முத்தம் ஆயிரம் வார்த்தைகளுக்கு ஈடாக மாறிய விந்தையை எண்ணி வியந்து கொண்டே பிருந்தா தனது ஆபரேஷனை எதிர்கொள்ளத் தயாரானாள்.

இவர்கள் அனைவரும் சிசேரியனுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்க... கடவுளின் கணக்கோ வேறு மாதிரி இருந்தது!

அவள் ஆபரேஷன் தியேட்டர் சென்ற இரண்டாவது நிமிடமே அவளது வலி அதிகரிக்க... இயற்கையான வழியிலேயே... சுகப் பிரசவத்திலேயே பிருந்தா தனது இரு மகன்களையும் பெற்றெடுத்தாள்.

''அட வாண்டு பசங்களா! உங்க அம்மாவுக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாதுன்னு நீங்களே வெளியே வந்துட்டீங்களா? சமத்துப் பசங்க!'' என்று அந்த பெண் மருத்துவர் அவளது மகன்களைக் கொஞ்சிக் கொண்டதைக் கண்டவள் தனது வலியையும் மீறிப் புன்முறுவல் புரிந்தாள்.

இரண்டில் ஒன்று கூடப் பெண்ணாகப் பிறக்கவில்லை என்ற வருத்தம் பிருந்தாவிற்கு ஒரு கணம் தோன்றியது என்னவோ உண்மை தான். ஆனால் அடுத்த நிமிடமே தன் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

குழந்தைகளைக் குளிப்பாட்டுவதற்காக வெளியே அழைத்து வந்த நர்ஸ்கள் வெளியே நின்று கொண்டிருந்த உறவினர்களிடம் காட்ட....

முகுந்தும், கஸ்தூரியும் குழந்தைகளை ஆர்வத்துடனே பார்வையிட்டனர். அவர்கள் காண்பித்த ஆர்வத்தைக் கூட ஆதித்யா காட்டவில்லை.

அந்த நர்ஸிடமே, ''என் வைஃப் எப்படி இருக்காள்?'' என்று தழுதழுத்த குரலில் விசாரித்தான்.

''ஒண்ணும் பிரச்சனை இல்லை சார். நல்லபடியா இருக்காங்க. அதான் அம்மாக்கு எந்தக் கஷ்டமும் கொடுக்காமல் உங்க பசங்க பிறந்துட்டாங்களே! இன்னும் கொஞ்ச நேரத்திலே உங்க வைஃபை ரூமுக்கு மாத்திடுவோம். பசங்களை இன்குபேட்டரில் வைச்சிடுவோம். அதனால பசங்களை இப்பவே பார்த்துக்கோங்க!'' என்றதும் ஆதித்யா தன் இரு மகன்களையும் ஆசை தீரப் பார்த்துப் பூரித்துப் போனான்.

குழந்தைகளைக் குளிப்பாட்டி நர்ஸ்கள் தூக்கிக் கொண்டு வர...

மருத்துவர் நர்ஸ்களைப் பார்த்து, ''ரெண்டு பேபியையும் அவங்க அம்மாவிடம் காட்டிவிட்டு இன்குபேட்டரில் வைங்க!'' என்று கூறினார்.

இரு நர்ஸ்களும் பிருந்தாவின் இரு புறமும் நின்று கொண்டு குழந்தையின் கையை எடுத்து அவளது கன்னத்தைத் தடவுமாறு செய்தனர்.

அந்த மென்மை... அந்த வருடல்... அந்த ஸ்பரிசம்... அவளுக்குத் தலை முதல் கால் வரை ஒரு சிலிர்ப்பை உண்டாக்கியது!

அந்த வருடல்... தாய் தந்தையின் மறைவிற்குப் பின் பிருந்தாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட அத்தனைத் துயரத்தையும் துடைத்து எறியும் ஒரு வருடலாய் இருந்தது.



அந்த ஸ்பரிசம்... இனி நீ தனி ஆள் இல்லை. இரு சிங்கங்கள் என நாங்கள் உனக்குத் துணை நிற்போம் என்று ஆறுதல் அளிக்கும் ஸ்பரிசமாய் இருந்தது.

பிருந்தா தனது கைகளால் அவர்களைத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்தாள். அவ்விரு நர்ஸ்களும் அவர்களை இன்குபேட்டரில் வைக்க அவர்களைத் தூக்கிச் சென்றனர்.

ஒரு மணி நேரத்திற்குப் பின்பு பிருந்தாவை அறைக்கு மாற்றினார்கள். ஆதித்யா, முகுந்த், கஸ்தூரி மூவரும் அறைக்குள் நுழைந்தார்கள்.

பிருந்தா மிகுந்த சோர்வுடன் காணப்பட்டாள். அவர்களைப் பார்த்து அலுப்புடனே ஒரு புன்னகை புரிந்தாள்.

''பசங்களைப் பார்த்தீங்களா?'' என்று பிருந்தா மெதுவாகக் கேட்க,

''ஓ! மூணு பேருமே பார்த்தோம். சூப்பரா இருக்காங்க அண்ணி'' என்று முகுந்த் உற்சாகமாக பதில் அளித்தான்.

''எப்படிம்மா இருக்கே?'' என்று நலன் விசாரித்த கஸ்தூரி ஆதித்யாவைப் பார்த்து, ''ஆதி, நீ பிருந்தா கூட இரு. நானும் முகுந்தும் அவளுக்கு சாப்பிட என்ன கொடுக்கலாம்ன்னு கேட்டுட்டுப் போய் சீதாவிடம் கொடுத்தனுப்புறோம். நான் வந்த பின்னாலே நீ வீட்டுக்குப் போனால் போதும்'' என்றார்.

அவன் சரி என்று தலையாட்டியதும் பிருந்தா புறம் திரும்பி, ''நான் போய் உனக்கு மதியத்துக்கு பத்தியச் சாப்பாடு எல்லாம் செஞ்சு எடுத்திட்டு வரேன்மா. அது வரைக்கும் பெண் துணைக்கு சீதாவை அனுப்பி வைக்குறேன். நீ ரெஸ்ட் எடு'' என்று சொல்லி விடைபெற்றார்.

''வரேன் ஆதி.. வரேன் அண்ணி'' என்று சொல்லி முகுந்தும் விடைபெற்றான்.

அவர்கள் இருவரும் கதவை அடைத்து விட்டுச் சென்றதும் பிருந்தா கணவன் புறம் தன் பார்வையைத் திருப்பினாள். அவன் அவளையே தான் பார்த்துக் கொண்டிருந்தான். இந்த அறைக்குள் அவள் நுழைந்ததில் இருந்தே ஆதித்யா ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை.

அவளுக்கு அருகே தனது நாற்காலியை நகர்த்தியவன் அவளது இடது கையை எடுத்துத் தனது இடது கைக்குள் புதைத்து வைத்துக் கொண்டான். தனது வலது கையால் அவளது தலையை வருடிக் கொடுத்தான். அவள் கண் மூடி அந்த சுகத்தை அனுபவித்தாள். இருவருமே பேச முயற்சி செய்யவில்லை.

மௌனம்...

சண்டை போடும் சமயங்களில்

அது மிகப் பெரிய ஆயுதம்!

ஸ்பரிசம்...

பலவீனமாய் உணரும் நேரத்தில்

அது மிகச் சிறந்த உற்சாக பானம்!

ஸ்பரிசத்துடன் கூடிய மௌனம்...

ஆறுதல் தேடும் தருணத்தில்

அவை மிகப் பெரிய வலிநிவாரணி!

வார்த்தைகளற்ற அந்தத் தொடு உணர்ச்சி பிருந்தாவிற்கு சக்தி கொடுத்தது என்றால், ஆதித்யாவிற்கு தான் இழந்த மன தைரியத்தை மீட்டுத் தந்தது.

காலைச் சாப்பாடு கொண்டு வந்த சீதாவிடம் பிருந்தா, ''அம்மா நீங்க எனக்குப் பார்த்துப் பார்த்துப் பக்குவமா



சமையல் செஞ்சு மருந்து எல்லாம் தந்ததால தான் எனக்கு இன்னைக்கு இயற்கையான முறையிலே பிள்ளைங்க பிறந்திட்டாங்க. ரொம்ப தாங்க்ஸ் மா'' என்று தனது நன்றியைக் கூறினாள்.

அவரோ, ''நான் செஞ்சது கொஞ்சம் தான். நீ தான் சொன்னதை எல்லாம் கேட்டாய்... அதுவும் இல்லாமல் உனக்கு மெல்லிய உடல் வாகு வேற... இது எல்லாம் சேர்ந்து தான் உனக்கு சுகப் பிரசவம் ஆகிடுச்சு. நான் பெருசா ஒன்றும் செய்யலை'' என்று தனது உதவியை மட்டுப்படுத்திக் கூறினார்.

# 18

கிட்டத்தட்ட ஒன்பது மாதங்களாக ஆதித்யாவின் வீட்டுப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்காத கஸ்தூரியின் ஒன்று விட்ட அண்ணன் சுந்தரேசன் அன்றைக்கு கஸ்தூரியைத் தேடி வந்தார். வீட்டின் ஹாலில் முகுந்தும், கஸ்தூரியும் மட்டுமே இருந்தனர். ஆதித்யா மாடியில் உள்ள அவனது பழைய அறையில் இருந்தான். அவனுக்கு அடிபட்டதினால் அவன் கீழ் அறைக்கு மாறி இருந்தான். மேலும் பிருந்தா கருவுறவும், அதுவே அவர்களுக்கு நிரந்தர அறையாகிப் போனது.

''வாங்கண்ணே. நல்லா இருக்கீங்களா? என்ன இந்தப் பக்கம் இப்படி எட்டிக் கூடப் பார்க்காமல் இருந்துட்டீங்க. உங்க பொண்ணு கல்யாணத்திலே பார்த்தது'' என்று கஸ்தூரி அவரிடம் நலன் விசாரித்தார்.

''ஆமா கஸ்தூரி. நானும் என் பொண்ணு கூடவே அமெரிக்காவில் செட்டில் ஆகிட்டேன். அதான் இந்தப் பக்கம் என்னால வர முடியலை. என்ன ஊரு தெரியுமா? என்ன ஒரு வாழ்க்கை தெரியுமா? என்னோட சொத்து ஒண்ணை விற்க வேண்டிய வேலையா தான் இங்க வந்தேன்'' என்று அவர் தன் வெளிநாட்டு வாசம் பற்றி பெருமை பாடினார்.

முகுந்த் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

அவனுக்குச் சாதாரணமாகவே அவரையும் பிடிக்காது. அவர் தன் அம்மாவிடம் ஒட்டி உறவாடுவதும் பிடிக்காது. தன் தாய்க்காகத் தான் பொறுத்துப் போவான். ஆதித்யா அடிபட்டவுடன் மாயமாய் மறைந்த பின்பு அவரைச் சுத்தமாகப் பிடிக்காமல் போனது. இப்பொழுதும் தன் தாய்க்காகத் தான் பொறுமை காத்தான். இந்த லட்சணத்தில் அவர் வெளிநாட்டுப் பெருமை வேறு பேச அவனுக்குப் பொறுமை பறந்தது.

ஆனால் அவரோ அவனைப் பார்த்து, ''என்ன முகுந்த் அமைதியா இருக்க? நீ இப்படி அமைதியா இருந்தால் பார்க்கவே நல்லா இல்லை'' எனச் சொல்ல,

முகுந்த் கடித்த பற்களிடையே, ''நல்லா இல்லைன்னா பார்க்காதீங்க'' என்றான்.

''உனக்கு என் மீது கோபம் போலிருக்கு. உங்க அண்ணனுக்கு என் பொண்ணைக் கட்டி வைக்கலைன்னு'' என்று அவர் கூற,

முகுந்துக்குப் பொறுமை பறந்தது. இதை என்றாவது ஒரு நாள் அவரிடம் பேசித் தான் தீர வேண்டும் என நினைத்தவனாய்,



''நாங்க ஒண்ணும் உங்க பொண்ணை எங்க ஆதிக்குக் கட்டித் தாங்கன்னு கேட்கலையே. நீங்களே தான் உங்க பொண்ணை இந்த வீட்டில் வாழ வைச்சே தீருவேன்னு பிடிவாதம் பிடிச்சீங்க. ஆதிக்கு விருப்பம் இல்லைன்னு தெரிஞ்சும் கூட அவன் மனசை எப்படியாவது மாத்திடலாம்ன்னு எங்க அம்மாவைப் பிடிச்சுத் தொங்கிக்கிட்டு இருந்தீங்க. எங்க அம்மாவும் மனுஷங்களைப் புரிஞ்சுக்கத் தெரியாமல் நீங்க சொன்னதுக்குத் தலையாட்டிக்கிட்டு இருந்தாங்க.

ஆனா பாருங்க எங்க அண்ணனுக்கு அடிபட்டு இப்படி ஒரு நிலைமை வந்தவுடனே நீங்க இருந்த இடம் தெரியாமல் மறைஞ்சுட்டீங்க. அப்பவாது எங்க அம்மா புரிஞ்சுக்கிட்டாங்களா? இல்லையே! 'அண்ணன் அல்லல் தீர்ப்பார்'ன்னு டயலாக் பேசினாங்க.'' என்று சொல்லிக் கொண்டே தன் தாயின் புறம் ஒரு கண்டனப் பார்வையை செலுத்தியவன், தனது பேச்சினை விடாது தொடர்ந்தான்.

''என் பையனுக்கு உங்க பொண்ணைக் கட்டி வைங்க அண்ணான்னு எங்கம்மா உங்ககிட்டே வந்து கேட்டாங்க. பதிலுக்கு நீங்க உங்க பொண்ணு கல்யாணப் பத்திரிகையை நீட்டி எங்கம்மா முகத்துல கரியைப் பூசிட்டீங்க. ஆனா நீங்க ஓடிப் போனதும் ஒரு வகையிலே நல்லதா தான் போச்சு. நீங்க போனதால தானே எங்கண்ணி எங்களுக்குக் கிடைச்சிருக்காங்க'' என்று அவன் ஏளனமும், எகத்தாளமுமாகக் கூறினான்.

சுந்தரேசனுக்குக் கோபம் வந்தது. ஆனால் அவர் விற்க வேண்டிய சொத்தை வெளியே அடிமாட்டு விலைக்குத் தான் கேட்கிறார்கள். ஏனென்றால் சொத்தில் வில்லங்கம்

இருக்கிறது. அதனால் அதை விற்பதற்கு கால தாமதமாகும்.

ஆனால் அவரது மாப்பிள்ளையோ பிசினஸ் பண்ணுவதற்கு உடனே பணம் தரச் சொல்லி நச்சரித்துக் கொண்டிருக்கிறார். அதனால் எப்படியாவது கஸ்தூரியைத் தாஜா பண்ணி சொத்தை ஆதித்யா பேரிலாவது முகுந்த் பேரிலாவது தள்ளி விட்டுவிடலாம் என்று திட்டம் போட்டுத் தான் அவர் வந்ததே.

அதனால் முகுந்தை இப்போது எதிர்த்தால் அது தனக்குத் தான் நஷ்டம் என எண்ணியவராய், ''உனக்குச் சின்ன வயசுங்குறதால விவரம் தெரியாமல் பேசுகிறாய். நீ ஒரு பொண்ணைப் பெத்தா அப்புறமா தெரியும் என் கஷ்டம் என்னவென்று. என் பொண்ணை ஆதிக்குத் தான் கட்டி வைக்கணும் என்று நினைச்சேன். ஆனால் இப்படி ஒரு குறை வந்ததால ஏற்கனவே என் பொண்ணை விரும்பிக் கேட்ட என் மாப்பிள்ளைக்குக் கட்டி வைச்சுட்டேன். இதிலே என்ன தப்பு இருக்கு?'' என்று சொல்ல,

பழசைக் கிளறுவதால் என்ன பயன் என நினைத்த கஸ்தூரி அவர்களது சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு, ''முகுந்த் ஆஸ்பிட்டலுக்கு நேரமாச்சே. கிளம்பலாமா? என் கூட நீ வரப் போறியா இல்லை ஆதி வரப் போறானா?'' என்று கேட்டார்.

முகுந்த் பதில் கூறும் முன்பு சுந்தரேசன் கஸ்தூரியிடம், ''ஆஸ்பிட்டலுக்கா? எதுக்கு கஸ்தூரி? என்ன ஆச்சு?'' என்று அக்கறை உள்ளவர் போல் வினவ,

''அச்சச்சோ சொல்லவே மறந்துட்டேன் பாருங்க. நம்ம ஆதிக்கு குழந்தைங்க பொறந்து இருக்காங்கண்ணா. இரட்டை... ரெண்டு பசங்க.'' என்று அளவில்லாத ஆனந்தத்துடன் கஸ்தூரி சொல்ல,



''என்னதுதுது குழந்தையாஆஆஆ? அதுவும் ஆதிக்காஆஆஆ?'' என்று கேட்டுக் கொண்டே அவர் இருக்கையை விட்டு எழுந்தார்.

முகுந்த் அவரது அதிர்ச்சியையும், செய்கையையும் ஒரு புரியாத பார்வை பார்த்துக் கொண்டு இருக்க...

''ஆமாண்ணா. இதுக்கு எதுக்கு இவ்வளவு ஆச்சரியப் படுறீங்க?'' என்று கஸ்தூரி அவரையே கேள்வி கேட்க,

''அந்த ஆக்ஸிடென்ட்டிலே ஆதிக்கு அப்பா ஆகும் பாக்கியமே இல்லைன்னு டாக்டர் சொல்லிட்டாரே. பின்னே எப்படிக் குழந்தை பிறந்திச்சு?'' என்று சுந்தரேசன் அலுங்காமல் ஒரு குண்டைத் தூக்கிப் போட,

''என்ன உளறிக்கிட்டு இருக்கீங்க?'' என்று முகுந்த் அதட்ட,

''என்ன அண்ணா சொல்லுறீங்க?'' என்று கேட்டுக் கொண்டே கஸ்தூரி சோபாவில் சாய்ந்தார்.

முகுந்த் விரைந்து சென்று தாயைக் கவனிக்க, சுந்தரேசனோ கோபத்தின் உச்சிக்குச் சென்றார்.

ஒரு சின்னப் பையன் என்னை வந்ததில் இருந்து அவமானப்படுத்துகிறான். முதலில் என்னடான்னா எகத்தாளமா கேள்வி கேட்டான். இப்ப என்னடான்னா நான் உண்மையைச் சொன்னால் உளறுகிறேன் என்று சொல்லுகிறான் எனக் கோபம் அடைந்தவராய்,

''என்னது நான் உளறுகிறேனா? அவன் நடக்க முடியாமல் போயிடுவான் என்று நினைச்சா நான் என் பொண்ணைத் தர மறுத்தேன். அவனுக்கு இப்படி ஒரு குறை இருக்குன்னு தெரிஞ்சு தானே என் பொண்ணுக்கு அவசர அவசரமா வேற மாப்பிள்ளை பார்த்தேன். அப்பக்

கூட என் பெண்ணிடம் முகுந்தைக் கட்டிக்கிறியா... ஆதிக்கு வாரிசு இல்லாததால் மொத்த சொத்தும் உனக்கும் முகுந்துக்கும் பொறக்கப் போற பிள்ளைங்களுக்கு வந்திடும்ன்னு சொல்லிப் பார்த்தேன். ஆனா அவ தான் இந்தக் கருப்பனை யார் கட்டிக்குவா என்று சொல்லிட்டாள்'' என்றார்.

சுந்தரேசன் மிதமிஞ்சிய கோபத்தில் இருந்ததால் அவர் இது நாள் வரை மனதில் மறைத்து வைத்த எண்ணமெல்லாம் வார்த்தை வடிவம் பெற்று வெளியே வந்து விழுந்தன.

கேட்டுக் கொண்டிருந்த முகுந்திற்குத் தான் அருவறுத்துப் போயிற்று. சே! இப்படியும் ஒரு மனிதனா? என்று. எந்த நேரமும் இவருக்குப் பணக் கணக்கு தானா என்று முதலில் நினைத்தான்.

அதன் பின் அவன் மனமோ, 'முகுந்த் இதுவல்ல இப்போதைய பிரச்சனை. அவர் சொல்லும் குற்றச்சாட்டு உன் அண்ணனுக்கு வருத்தம் அளிக்கக் கூடியது. அதை விட உன் அண்ணியின் நடத்தை சம்பந்தப்பட்டது. அதனால் முதலில் அதைத் தவிடு பொடியாக்கு!' என்று ஆணையிட்டது.

தாயைக் கவனிப்பதையும் கை விட்டுத் தாயை போன்ற அண்ணியைக் காக்க எண்ணியவனாய், ''யாரோ ஏதோ சொன்னாங்க என்று நம்பி எங்க வீட்டில் நீங்க பொண்ணு கொடுக்காததற்கு நாங்க அந்தப் பெருமாளுக்குத் தான் நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறோம். நீங்க சொல்லுவது பொய் என்பதை எங்க அண்ணன் பசங்களே நிரூபிச்சுட்டாங்க. உங்க உளறலை இத்தோட நிறுத்திட்டு வெளியே போங்க'' என்று வாசலை நோக்கி அவன் கை காட்ட,



சுந்தரேசன் மேலும் உஷ்ணமானார்.

''உன் அண்ணனுக்குக் கல்யாணம் ஆகி எத்தனை மாசம் ஆகுது? எட்டு மாசம் தானே ஆகுது! அதுக்குள்ளே உங்க அண்ணிக்குக் குழந்தைகள் பிறந்திட்டாங்களா?'' என்று அவர் படு நக்கலாகக் கேட்க,

''நீங்க சொல்லுற கணக்கெல்லாம் சரி தான். ஆனால் எங்க வீட்டு குட்டீஸ் குறைப் பிரசவத்திலே பிறந்துட்டாங்க. அதனால உங்க பேச்சை இத்தோட முடிங்க'' என்றான்.

தன் மகனும், அண்ணனும் விவாதம் பண்ணிக் கொண்டிருக்க ஒரு கையாலாகாத தனத்துடன் நடப்பவற்றை கஸ்தூரி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். தன் மகனுக்கா இப்படி ஒரு குறை என்பதிலேயே அவர் சக்தி எல்லாம் வடிந்தது. அதனால் ஓய்ந்து போய் அமர்ந்திருந்தார்.

''நான் சொல்லறதுக்கு ஆதாரமா அந்த டாக்டரைப் பேச வைக்கலாம்ன்னா அவர் எங்கேயோ வெளிநாட்டிலே போய் உட்கார்ந்துக்கிட்டார். அதனால அவரை நம்பி பிரயோஜனம் இல்லை'' என்று சுந்தரேசன் வாய் விட்டுப் புலம்பினார்.

அவர் டாக்டர் என்று சொன்னவுடன் முகுந்தின் முகம் பிரகாசமானது. அவன் தன் மாமாவைப் பார்த்து, ''எங்ககிட்டே எல்லாம் எங்க அண்ணனுக்கு பிரச்சனை என்று சொல்லாத டாக்டர் உங்ககிட்டே மட்டும் வந்து சொன்னாராக்கும்?'' என்று எகத்தாளமாகக் கேட்டான்.

''அந்த டாக்டர் எங்சே சொன்னார்? நான் தான் அங்கு வேலைப் பார்த்தவங்ககிட்டே சம்திங் எல்லாம் தள்ளி

அவன் கேஸ் ஃபைலை வாங்கித் தெரிஞ்சுக்கிட்டேன். ஒரு வீட்டிலே பொண்ணைக் கட்டிக் கொடுக்க நினைக்குறவன் நாலையும் தெரிஞ்சுக்க மாட்டானா?'' என்று பதில் கொடுத்தார்.

இதற்கு என்ன பதில் தருவது என்று முகுந்திற்குத் தெரியவில்லை.

எப்படியும் தனது கூற்றை நிரூபித்தே தீர வேண்டும் எனத் தனது தலையைத் தட்டி யோசித்தவர் திடீரென்று ஞாபகம் வந்தவராய், ''ஹேய்! அவனது மெடிக்கல் ஃபைல் உன்கிட்டே தானே இருக்கு. அதை எடுத்திட்டு வா. நான் நிரூபிக்கிறேன்'' என்று ஆணித்தரமாய் சொல்ல,

'ஓ காட்! இவர் அடங்கமாட்டார் போல இருக்கே! வேற வழியே இல்லை. இவருக்கு அதை எடுத்துத் தந்து தான் இவரை அடக்க வேண்டும்' என நினைத்துக் கொண்டு தாயின் அறைக்குள் சென்ற முகுந்த் அந்த ஃபைலை எடுத்து வந்து அவர் முன் வீசினான்.

கத்தை கத்தையாய் தாள்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டு இருக்க அதை வேக வேகமாகப் புரட்டியவர் ஒரு பக்கத்தில் நிறுத்தி,

''உனக்கு இங்கிலீஷ் வாசிக்கத் தெரியும் தானே? இந்தா... இதை வாசித்துப் பார்'' என்று நீட்டினார்.

முகுந்த் ஒரு தெனாவட்டான பார்வையுடனும், அலட்சியத்துடனும் அதை வாங்கிப் பார்வையிட்டான்.

படிக்க ஆரம்பித்தவனின் முகம் மெல்ல மெல்ல மாறியது. வியர்வை ஆறாகப் பெருகியது. கைகள் நடுங்க ஆரம்பித்தன.

அதில் ஆதித்யாவிற்குத் தாம்பத்ய வாழ்க்கையில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டு



இருந்தது. அதே சமயத்தில் அவனுக்குத் தகப்பனாகும் தகுதி இல்லை என்றும் தெளிவாக விளக்கி இருந்தது.

இளைய மகனின் தடுமாற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கஸ்தூரியின் அடி வயிற்றில் பயபந்து உருண்டது.

''மு...கு..ந்..த்..'' என்ற நான்கு எழுத்துக்களை கஸ்தூரி கஷ்டப்பட்டு உச்சரிக்க,

தாயை ஏறெடுத்துப் பார்க்க முடியாமல் முகுந்த் தவித்தான். தாயின் கேள்வி என்ன என்று தெரிந்ததினாலே அவன் அவரை நிமிர்ந்து பார்க்க மறுத்தான். தன்னால் எப்படி அவரின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும் என்று அஞ்சியே அவரது பார்வையைத் தவிர்த்தான்.

ஆனால் எவ்வளவு நேரம் அப்படியே இருந்துவிட முடியும்?

அவனின் தடுமாற்றம் சுந்தரேசனை களிப்படையச் செய்தது.

குரலில் மிதமிஞ்சிய ஆனந்தம் கொப்பளிக்க, ''என்ன நான் சொன்னது சரி தானே? ஆதிக்குத் தகப்பனாகும் தகுதி இல்லை தானே? இப்போ சொல்லு.. உன் அண்ணிக்கு எப்படிக் குழந்தை பிறந்தது? அவளுக்கு வேற ஆணோட விந்தணுவைச் செலுத்தினீங்களா? இல்லை கர்ப்பமாக இருந்த பொண்ணைத் தான் உங்க அண்ணனுக்குக் கட்டி வைச்சீங்களா?'' எனக் கேட்டார்.

அவரது கேள்வியில் அதிர்ந்து அவரை எதிர்த்துப் பேசக் கூடத் தோன்றாது முகுந்த் சிலையாய் நின்றுவிட்டான். முகுந்தின் நிலையே இப்படி என்றால் கஸ்தூரியின் நிலையைக் கேட்கவும் வேண்டுமோ?

சுந்தரேசன் கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்த முடிவு செய்தவராய், ''இதெல்லாம் உங்களுக்குத்

தெரிஞ்சு நடந்ததா? இல்லை தெரியாமல் நடந்ததா? தெரிஞ்சு நடந்திருக்க வாய்ப்பு இல்லைன்னு உங்க ரெண்டு பேரோட அதிர்ச்சியே காட்டிக் கொடுக்குது. அப்போ உங்க எல்லோரையும் ஒரு பொண்ணு ஏமாத்திக் கிட்டு இருந்து இருக்காள். அவளைப் போய் நல்லவள் வல்லவள்ன்னு புகழ்ந்துக்கிட்டு இருக்கீங்க...'' என்று அவர் கேலிக் குரலில் சொல்லிக் கொண்டிருக்க,

முகுந்த் மெடிக்கல் பைல் எடுத்துக் கொண்டு வந்து தந்ததில் இருந்து நடப்பவற்றை எல்லாம் மேல் படியில் நின்று கேட்டும், பார்த்தும் கொண்டிருந்த ஆதித்யா மித மிஞ்சிய ஆத்திரத்தில், ''நிறுத்துங்க!'' என்று கத்தினான்.

கத்தியவன் அத்தோடு நில்லாமல் மிக விரைவாகக் கீழே இறங்கி வர நினைத்தது தான் தவறாகிப் போனது. கோபத்தில் நிலை தடுமாறியவன் படிகளில் இருந்து உருண்டு விழ ஆரம்பித்தான்.

''அம்மா'' என்ற அலறலோடு அவன் உருள... அவனது தாய்க்கு உயிர் போய் உயிர் வந்தது.

''ஐயோ ஆதி!'' என்று கூவிக் கொண்டே அவர் சோபாவில் இருந்து எழ...

''அண்ணா...'' என்று கூவிக் கொண்டே மாடிப் படியை நோக்கி முகுந்த் விரைந்து வந்து கீழே விழுந் திருந்த ஆதியைத் தட்டி எழுப்ப முயற்சித்தான்.

ஆனால் ஆதியிடம் இருந்து எந்தவொரு அசைவும் இல்லாது போக முகுந்திற்கு அச்சம் பரவியது.

தானும் மாமாவும் சண்டை போடுவதைப் பார்க்க வீட்டில் எந்த வேலைக்காரர்களும் இல்லாதது நல்லதாகப் போயிற்று என்று சற்று முன்பு நினைத்த அதே முகுந்த்



இப்பொழுது தனக்கு உதவி செய்ய ஆள் யாரும் இல் லையே என்று வருந்தும்படி ஆனது.

மடியில் கிடத்தியிருந்த அண்ணனைக் கீழே படுக்க வைத்தவன் விரைந்து சென்று தண்ணீர் எடுத்து வந்தான். அவன் தண்ணீர் எடுக்கச் சென்ற நேரத்தில் கஸ்தூரி மகனின் அருகே சென்று அவனை உலுக்கி எழுப்ப முயற்சித்தார்.



## 19



முகுந்த் தண்ணீரை ஆதித்யாவின் முகத்தில் அடித்துப் பார்த்தும் ஆதித்யாவிற்கு மயக்கம் தெளியவில்லை. உடனடியாகத் தன் அண்ணனை மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்ல வேண்டிய அவசியத்தை உணர்ந்த முகுந்த்,

''அம்மா நான் அண்ணனைக் கூட்டிக்கிட்டு ஆஸ்பிட் டல் போகிறேன்'' என்று சொல் அவனைத் தூக்க முயல... அவன் ஒருவனால் அவனைத் தூக்க முடியாது போக சுந்தரேசன் ஒரு கை கொடுத்துத் தூக்கிக் காரில் ஏற்ற உதவி புரிந்தார்.

முகுந்த் மறக்காமல் தன் அண்ணனின் மெடிக்கல் ஃபைலை எடுத்துக் கொண்டான். அதில் சர்ச்சைக்குரிய அந்த பக்கத்தை அவன் கிழிக்கவும் மறக்கவில்லை.

சுந்தரேசன் முகுந்தைப் பார்த்து, ''நீ ரொம்பப் பதட் டத்தில் இருக்கே. அதனால நீ வண்டி ஓட்ட வேண்டாம். நானே ஓட்டுறேன். எந்த ஆஸ்பிட்டல் போகணும் என்று

மட்டும் சொல்லு!'' என்று கூறிக் கொண்டே டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்தார்.

ஆனால் முகுந்திற்கு பதில் சொல்ல வாய்ப்பு அளிக்காமல் அவரே, ''உன் அண்ணி இருக்கும் அதே ஆஸ்பிட்டலுக்குப் போயிடுவோம்'' என்று சொல்லி அவனிடமிருந்து விலாசத்தை அறிந்து கொண்டு காரை அந்த மருத்துவமனையை நோக்கிச் செலுத்தினார்.

முகுந்த் ஆபத்துக் காலத்தில் அவர் செய்த இந்த உதவிக்கான நன்றியை உடனே தெரிவித்தான்.

ஆனால் 'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்ற பழமொழிக்கு இணங்க அவர் ஒரு காரியமாகத் தான் தங்களுக்கு உதவி செய்கிறாரோ என்று முகுந்த் தன் மாமாவை சந்தேகப்படாமல் போனது அவன் செய்த தவறானது.

காரில் செல்லும் பொழுது முகுந்திற்கு அண்ணனின் கால் குறித்து அடுத்த கவலை ஆரம்பம் ஆனது.

'மயக்கம் கூட உடனே தெளிந்து விடலாம். ஆனால் அறுவை சிகிச்சை நடந்த காலுக்கு ஏதேனும் அடிபட்டிருக்குமோ?' என்று அஞ்சினான்.

முகுந்த் காரில் பயணிக்கும் பொழுதே ஆஸ்பிட்டலுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து இருந்தான். அதனால் இவர்கள் சென்று இறங்கும் போதே ஸ்ட்ரெச்சரோடு மருத்துவமனை ஊழியர்கள் தயார் நிலையில் இருந்தனர்.

அவர்கள் ஆதித்யாவை உள்ளே அழைத்து சென்றனர். ஆதித்யாவைப் பரிசோதித்த மருத்துவர்களின் கூற்று முகுந்த் எதிர்பார்த்ததிற்கு முற்றிலும் நேர்மாறாக இருந்தது.



மருத்துவர் ஆதித்யாவின் காலுக்கு எந்த சேதாரமும் இல்லை என்று தெரிவித்தார். ஆனால் மயக்கத்திற்கான காரணத்தைத் தான் ஆராய வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

'பெருமாளே! ஏன் எங்களுக்கு இப்படிச் சோதனைக்கு மேல் சோதனையாகக் கொடுக்கிறாய்? போதும். இதற்கு மேல் தாங்கிக் கொள்ள எங்களுக்கு சக்தி இல்லை. இனி ஒரு துன்பம் எங்களை அணுகாதாவாறு நீயே அருள் புரிய வேண்டும்!' என முகுந்த் கண் மூடி வேண்ட ஆரம்பித்தான்.

வீட்டை அடைத்துவிட்டு ஒரு ஆட்டோ பிடித்து கஸ்தூரி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார்.

மருத்துவர் தன்னிடம் கூறியதை முகுந்த் அன்னையிடம் பகிர்ந்தான்.

இவர்கள் இருவரும் ரிஷப்ஷனில் நின்று பேசிக் கொண்டிருக்க... அங்கே சீதா வந்தார்.

''வந்துட்டீங்களா? இந்த ஃபிளாஸ்கில் பால் இருக்கு. மேலே பிருந்தாகிட்டே கொடுத்திடுங்க. நான் கொஞ்சம் வீடு வரைக்கும் போயிட்டு வரேன்'' என்று சொல்லி அவர்களிடம் பாலைக் கொடுத்துவிட்டுக் கிளம்பினார்.

முகுந்த் அவரிடம் எதுவும் கூறாமல்... கூற முடியாமல், அவர் சொன்னதற்கு மட்டும் தலையாட்டித் தன் சம்மதத்தைத் தெரிவித்தான். அதனால் விஷயம் ஏதும் அறியாதவராய் சீதா அங்கிருந்து சென்றார்.

அண்ணனைப் பரிசோதிக்கும் அறைக்கு வெளியே தன் தாயை நிற்கச் சொல்லிய முகுந்த் ஃபிளாஸ்கை எடுத்துக் கொண்டு தன் அண்ணியைக் காணச்

சென்றான். சுந்தரேசனும் அவனுடன் நடந்தார். முகுந்த் அவரைத் தடுக்கவில்லை.

சுந்தரேசன் மிகவும் நயந்த குரலில், ''முகுந்த் முதலில் பிள்ளைகளைப் பார்ப்போமா?'' என்று கேட்டார்.

''சரி...'' என்று சொல்லியவன் அவரை இன்குபேட்டர் இருக்கும் அறைக்கு அழைத்துச் செல்ல...

அங்கிருந்த மருத்துவர் இவனைப் பார்த்ததும், ''உங்க அண்ணா பசங்களைப் பார்க்க வந்தீங்களா? அவங்களை ரூமுக்கு மாத்திட்டோமே. நீங்க அங்க போய் பாருங்க'' என்று சொன்னார்.

''சரி டாக்டர்'' என்று சொல்லி முகுந்த் திரும்ப எத்தனிக்க,

சுந்தரேசனோ, ''இன்குபேட்டரில் இருப்பது தானே பாதுகாப்பு. ஏன் அதுக்குள்ளே ரூமுக்கு அனுப்பிட்டீங்க?'' என்றார்.

''தாயின் கையணைப்பை விடவா இன்குபேட்டர் ஒரு குழந்தைக்கு பாதுகாப்பு அளிக்கப் போகுது? ஒரு ரொட்டீன் செக்க-அப்பிற்காகத் தான் நாங்க நேத்து வரை இங்க வைச்சிருந்தோம். ஆரோக்கியமா இருக்குற பிள்ளைங்களுக்கு இதுக்கு மேலே இன்குபேட்டர் தேவை இல்லை சார்'' என அவர் விளக்கம் அளித்தார்.

''குறைப்பிரசவத்திலே பிறந்த குழந்தைகளை எப்படி அதுக்குள்ளே ரூமுக்கு அனுப்புனீங்க?'' என்று சுந்தரேசன் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

''குறைப் பிரசவமா? அப்படின்னு யார் சொன்னது? அவங்க முழு வளர்ச்சி அடைந்த குட்டீஸ் சார்'' என்று



சொல்லி டாக்டர் தன் பங்கிற்கு ஒரு திரியைக் கொளுத்திப் போட்டார்.

அது மிகச் சரியாக முகுந்தின் நெஞ்சில் வெடித்தது.

சுந்தரேசன் தனது குரலில் தேன் தடவி, ''தாங்க்ஸ் டாக்டர்'' என்று டாக்டரைப் பார்த்து மொழிந்தவர், முகுந்தைப் பார்த்த பார்வையில் எள்ளல் நிறையவே இருந்தது.

முகுந்திற்கு நடப்பவற்றை எல்லாம் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

அண்ணனும், அண்ணியும் அன்னியோன்யமாய்த் தானே குடும்பம் நடத்தினார்கள். அன்று கூட ஆதி எங்கள் எதிரேயே அண்ணியைக் கலாட்டா பண்ணிக் கொண்டு தானே இருந்தான். இவ்வளவு ஏன்... பிரசவத்திற்கு வரும் போது கூட காரில் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டு தானே வந்தார்கள். அப்புறம் என்ன தான் நடந்து இருக்கும்?

''என்ன நடந்தது?'' என்பதை இருவரால் மட்டுமே விளக்க முடியும். ஒன்று தன் அண்ணன். அவனோ சுயநினைவின்றி இருக்கிறான். இன்னொருவர் தன் அண்ணி. அவரிடம் சென்று விளக்கம் கேட்க முடியுமா?

ஒரு பெண்ணிடம்... அதுவும் அன்னைக்கு நிகராக விளங்கக் கூடியவரிடம் பேசும் விஷயமா இது! அவனுக்கு ஆயாசமாக வந்தது.

இந்தப் பிரச்சனைகளில் இருந்து தூர எங்காவது செல்ல மாட்டோமா என்று கூடத் தோன்ற ஆரம்பித்து விட்டது.

கையில் இருந்த ஃபிளாஸ்க் அவனைத் தன் அண்ணியின் அறை நோக்கிச் செல்ல வைத்தது.

கதவைத் தட்டி அனுமதியின் பேரில் உள்ளே நுழைந்த முகுந்தைப் பார்த்த பிருந்தா, ''என்ன முகுந்த்! சீதாம்மா ஃபிளாஸ்கை உங்ககிட்டே கொடுத்திட்டு வீட்டுக்குப் போயிட்டாங்களா?'' என்று கேட்டாள்.

''ஆமாங்க அண்ணி. பசங்க ரூமுக்கு வந்துட்டாங்களாமே?'' என்று கேட்டுக் கொண்டே தொட்டில் அருகே சென்று பார்வையிட்டான்.

முகுந்துடன் உள்ளே நுழைந்த சுந்தரேசனை யாரென்று தெரியாமல் பிருந்தா விழித்தாள். சுந்தரேசன் மீது கோபமாக இருந்த முகுந்த் அவரைத் தன் அண்ணன் கல்யாணத்திற்கு அழைக்கவில்லை. அதனால் பிருந்தா இதுவரை அவரைப் பார்த்ததே இல்லை.

''இவர் யாருங்க முகுந்த்?'' என்று அவள் மெல்லிய குரலில் முகுந்திடம் கேட்க,

அவரை அறிமுகப்படுத்தப் பிடிக்கவில்லை என்ற போதும் வேறு வழியில்லாததால்...

முகுந்த், ''இவர் எங்க அம்மாவோட ஒன்று விட்ட அண்ணன். பேரு சுந்தரேசன்'' என்று அறிமுகப்படுத்தினான்.

''ஓ அப்படியா?'' என்று முகுந்திடம் கூறியவள் சுந்தரேசனைப் பார்த்து, ''நல்லா இருக்கீங்களா? உங்க வீட்டில உள்ளவங்க எல்லோரும் சுகமா?'' என்று நலன் விசாரித்தாள்.

''நாங்க எல்லாம் நல்லாத் தான் இருக்கோம். ஆனால் என் தங்கச்சி வீட்டில் உள்ளவங்க தான் நல்லாவே இல்லை'' என்றார்.



யாரைச் சொல்கிறார் என்று பிருந்தா புரியாது விழிக்க... சுந்தரேசன் நேரடியாக விஷயத்திற்கே வந்தார்.

''ஆதிக்கு குழந்தையே பிறக்காது என்று டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார். உனக்குத் தெரியுமா?'' என்று சுந்தரேசன் கேட்டவுடன்,

பிருந்தா 'அப்படியா?' என்பது போல் முகுந்தைப் பார்க்க அவனது பதிலில்லா மௌனமே சுந்தரேசனின் கூற்றை மெய்ப்பிக்க...

பிருந்தா முகுந்தை நோக்கி, ''அச்சோ! அப்ப இவனுங்க ரெண்டு பேர் தானா? எனக்குப் பொண்ணு கிடையாதா? அடுத்த குழந்தையாவது பொண்ணா பிறக்கும் என்று நினைச்சேனே. அதுக்கு வாய்ப்பு இல்லையா?

சரி பரவாயில்லை. முகுந்த், உங்களுக்குப் பொண்ணு பொறக்கணும் என்று நான் ஆண்டவனை சின்சியரா வேண்டிக்கிறேன். என்ன இருந்தாலும் பொண்ணுங்க தான் அழகு இல்ல... அவங்களுக்குத் தான் விதவிதமா டிரஸ் பண்ணிப் பார்க்க முடியும்'' என்று முன்பு கணவனிடம் சொன்னதையே அவள் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க...

குழந்தைகளில் ஒன்று சரியாக அந்த நேரம் சிணுங்க...

''ஹேய் கண்ணா! அம்மா உங்களைக் குறையாச் சொல்லலைடா. நீங்களும் சமத்து குட்டீஸ் தான். நாம எல்லாம் சித்தப்பாக்கு பாப்பா பொறக்கணும்னு வேண்டிக்குவோம். அதுக்கு முதல்ல சித்தப்பாக்கு கல்யாணம் ஆகணும் இல்ல... பாட்டிகிட்டேயும், அப்பாகிட்டேயும் சொல்லி சீக்கிரமா சித்தியைக் கொண்டு வரச் சொல்வோமா?'' என்று பிறந்த குழந்தையிடம்

கொஞ்சிக் கொண்டிருந்த தன் அண்ணியைப் பார்த்த முகுந்த்,

'இந்த மாமா என்ன சொல்ல வருகிறார் என்று புரிந்து கொள்ளாது இவ்வளவு வெகுளியா இந்த அண்ணி இருக்காங்களே. மாமாவின் குற்றச்சாட்டு புரிந்தால் எப்படித் தாங்குவாங்க?'' என்று யோசிக்கத் தொடங்கி னான்.

நாகரீகம் கருதி முகுந்த் வேண்டுமென்றால் அமைதி காக்கலாம். ஆனால் சுந்தரேசன் எதற்காக நாகரீகம் பார்க்க வேண்டும்? அதனால் அவர் மீண்டும் பிருந்தா வின் மண்டையில் உறைக்கும் வண்ணம்,

''அம்மாடி! உன் கொழுந்தனுக்கு அப்புறமா கல் யாணம் பண்ணி வை. நான் சொன்னது உனக்குப் புரிஞ் சதா? ஆதிக்கு இப்படி ஒரு பிரச்சனை உன் கல்யாணத் துக்கு முன்னாடியே இருக்கு. அப்படின்னா இவங்க ரெண்டு பேரும் எப்படி வந்த பொறந்தாங்க?'' என்று குழந்தைகளைச் சுட்டிக் காட்டிக் கேட்க...

அப்பொழுது தான் அவர் சொல்ல வருவது என்ன வென்று நடுமண்டையில் ஆணி இறங்கியது போல் பிருந்தாவின் மூளைக்குள் இறங்கியது! தனது நிலை தெள்ளத் தெளிவாக விளங்கியது!! தனது நடத்தைக் கேள்விக்குறியாகி நின்று தன்னைப் பார்த்துச் சிரிப்பது புரிந்தது!!!

'ஓ காட்! விஷ்ணு பிரச்சனை முடிஞ்சது என்று நினைச் சேனே? இப்படி எல்லோர் முன்னாடியும் என்னை இக்காட்டில் வந்து மாட்டி விட்டுடுச்சே? என்ன செய்யப் போகிறேன்?' என்று பரிதவித்தாள்.



அவளால் நிமிர்ந்து அவ்விரு ஆண்களையும் ஏறெடுத் துப் பார்க்க முடியாமல் போனது. நாக்கு உலர்ந்தது. கைகள் நடுங்கின. கட்டிலில் அமர்ந்திருந்தவள் படுக் கையை அழுத்திப் பிடித்து தன்னை நிலைப்படுத்த முயற்சி செய்தாள்.

தன் அண்ணியின் தோற்றத்தைக் கண்ட முகுந்திற்கு தன்னால் அவர்களுக்கு என்ன ஆறுதல் வார்த்தைகள் சொல்ல முடியும் என்று நினைத்து மௌனம் காத்தான்.

தவறு யார் பக்கம் என்று தெரியாத நிலையில் தன் னால் என்ன பேச முடியும் என்று தோன்றியது.

ஆனால் தாயைப் போலப் பரிவு காட்டிய தன் அண்ணி யின் நிலையைப் பார்த்த அவன் ஆழ்மனமோ 'ஏதாவது செய்யேன்!' என்று கட்டளையிட்டது.

இதை ஒரு கேலிப் பார்வையுடன் சுந்தரேசன் பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர வேறெதும் செய்ய முனைய வில்லை.

## 20

ஐந்து நிமிடங்கள் அமைதியில் கடந்த பின் பிருந்தா தன் வாய் திறந்து முதல் முறையாக, ''உங்க அண்ணா எங்கே முகுந்த்?'' என்று கேட்டாள்.

அவனை முந்திக் கொண்டு சுந்தரேசனே பதில் அளித்தார்.

''பொண்டாட்டிக்கு பிள்ளை பிறந்திருக்கு. ஆனால் அந்தப் பிள்ளைக்கு அவன் தகப்பன் இல்லை. எந்த

ஆம்பிளையால் இப்படி ஒரு இழிநிலையைத் தாங்கிக்க முடியும்? அதான் பதட்டத்தில் மாடிப் படியில் உருண் டுட்டான். இதே ஆஸ்பிட்டலில் தான் அட்மிட் பண்ணி யிருக்கோம்'' என்றார்.

''ஐயோ! என்னாச்சுங்க முகுந்த்? இப்போ எப்படி இருக்கார்? இப்போ தானே நடக்கவே ஆரம்பிச்சார். மறு படியும் அடிபட்டிருக்கா?'' என்று அவள் பதற,

இதற்கு முன்பு பேசிய விஷயத்திற்குத் தன்னால் ஆறுதல் சொல்ல முடியாது போனாலும் இந்த விஷயத் தில் தன் அண்ணிக்கு ஆறுதல் அளிக்க முடியும் என எண்ணியவனாய், ''அடி எதுவும் படலை அண்ணி. ஆனால் இன்னும் மயக்கம் தெளியவில்லை. அம்மா பக்கத்தில் இருக்காங்க'' என்று சொன்னதும்,

''நீங்க இங்க இருந்து இந்தக் குட்டீஸைப் பார்த்துக் குறீங்களா? நான் போய் அவரைப் பார்த்திட்டு வந்திடு றேன்...'' என்று அவள் முகுந்தைப் பார்த்துக் கெஞ்ச,

''யார் பிள்ளைங்களுக்கு யாரை ஆயா வேலை பார்க்கச் சொல்கிறாய்? நீ ஏன் ஆதியைப் பார்க்க வேண்டும்?'' என்று சுந்தரேசன் எகத்தாளமாகக் கேள்வி கேட்டார்.

''இது எங்க வீட்டுப் பிரச்சனை. என்ன செய்யணும். என்ன செய்யக் கூடாதுன்னு நாங்க முடிவு பண்ணிக் கிறோம். நிங்க உங்க வேலையை மட்டும் பாருங்க'' என்று முகுந்த் சொன்னதும் விருட்டென்று சுந்தரேசன் வெளியேறினார்.

முகுந்த் பிருந்தாவின் புறம் திரும்பி, ''நீங்க இங்கேயே இருங்க. அவங்க எங்களையுமே உள்ளே விடலை. நீங்க அங்க வருவது வேஸ்ட் தான். டாக்டர் ஏதாச்சும்



சொன்னால் நான் போன் பண்ணிச் சொல்லுறேன்'' என்று சொல்லி வெளியேறினான்.

'ஒரே மருத்துவமனையில் இருந்து கொண்டு போன் செய்கிறாராமா? ம்ம்... உன்னை விலக்கி வைக்கிறேன் என்று சொல்லாமல் சொல்கிறாரா?' என எண்ணித் தவித் தாள்.

''நான் பிறந்த நேரம் தான் நல்லா இல்லை என்று நினைச்சிருந்தேன். என் குழந்தைகள் பிறந்த நேரமும் சரி இல்லையா? ஒரு வேளை இந்த துரதிருஷ்டசாலியின் வயிற்றில் பிறந்ததால் என் ராசி அவர்களுக்கும் தொற்றிக் கொண்டதா?' என நினைத்துக் கலங்கினாள்.

ஆதித்யாவைப் பரிசோதனை செய்த மருத்துவர், ''அவர் மயக்கத்தில் இருந்து விழித்து விட்டார். உணர்வு வருது. ஆனால் அவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கார். அவர் தூங்கி விழிக்கும் வரைக்கும் எங்க அப்சர் வேஷனில் இருக்கட்டும். தலையில அடிபட்டதால் நாளைக்கு ஒரு MRI ஸ்கேன் எடுத்துவிடலாம்'' என்று முகுந்திடம் தெரிவித்தார்.

முகுந்த் இந்தத் தகவலை போன் மூலம் பிருந்தா விற்குத் தெரிவித்தான்.

அடுத்த நாள் ஆதித்யா காலையில் ஒரு ஏழரை மணி போல் கண்விழித்தான். அவனைப் பரிசோதித்த மருத்து வர்கள் அவனுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று முடிவு செய்தார்கள்.

அப்பொழுது கவலையே உருவாக முகுந்த் உள்ளே வந்தான்.

அவனைப் பார்த்த ஆதித்யா, ''ஹேய் முகுந்த்! வந்திட்டியா வா வா! ஏன்டா இவ்வளவு சோகமா

இருக்கே? எனக்கு ஒண்ணுமில்லைடா. கவலைப் படாதே'' என்று உற்சாகமாகச் சொன்னான்.

ஆதித்யாவின் பேச்சில் ஒரு வித்தியாசம் தென்படுவது போல் முகுந்திற்குத் தோன்றியது.

''என்னை விட அம்மாவும், அண்ணியும் தான் கவலைப்படுறாங்க'' என்று முகுந்த் சொன்னதும்,

''அண்ணியா? அது யாரு?'' என்று ஆதித்யா கேட்டதும் முகுந்த் அதிர்ந்தான்!

''என்ன இவன் இப்படிக் கேட்கிறான்? மாமா சொன்னதை வைச்சு விசாரிக்காமலே தீர்ப்பு வழங்குகிறானா?'' என்று முகுந்திற்கு ஆதித்யாவின் மேல் ஒரு எரிச்சல் மூண்டது.

ஆதித்யா டாக்டரைப் பார்த்து, ''எனக்கு கை காலில் ஏதும் அடிபடலையா? நான் சர்ஜரி பண்ண வேண்டியதாய் இருக்குமோன்னு பயந்து போனேன். அப்போ டாக்டர் நான் கிளம்பலாமா? எனக்கு வேலை வேற நிறைய இருக்கு. நான் எங்க கடையைக் கோவையிலும் விரிவுபடுத்தும் ஐடியாவில் இருக்கேன். எங்க கடையிலே இப்போ அனிவர்ஸரி சேல் என்பதால் ஏகப்பட்ட சேல்ஸ் நடக்கும். நான் பாட்டுக்கு படுத்துக் கிடந்தால் என்ன வேலையாகும்?'' என அவன் பேசப் பேச முகுந்த் கலவரமானான்.

அங்கே இருந்த மருத்துவர்களை ஒரு பயப் பார்வை பார்த்துக் கொண்டே முகுந்த் மெதுவாக, ''ஆதி, இது மார்ச் மாதம்'' என்றான்.

''என்னடா முகுந்த் உளறுகிறாய். இது ஜூலை மாசம் தானே!'' என்று ஆதித்யா சொன்னவுடன் அவனைச் சுற்றி இருந்த அனைவரும் கலவரமானார்கள்.



மருத்துவர்கள் தங்களுக்குள் அவனது கேசை அலச ஆரம்பித்தார்கள்.

முகுந்த் ஆதித்யாவிடம், ''உனக்கு அடிபட்டு ஜூலை மாதம் தான் சர்ஜரி பண்ணினோம். கொஞ்ச நாள் நடக்க முடியாமல் இருந்தாய். ஆகஸ்ட் மாசத்திலே கல்யாணம் பண்ணினோம். அப்புறமாத் தான் நீ கொஞ்சம் கொஞ்சமா நடக்க ஆரம்பித்தாய். நேற்று நீ மாடிப் படியில் இருந்து உருண்டு விழுந்து விட்டாய்!'' என்று எடுத்துச் சொன்னதும்,

''வாட்ட்ட்ட் எனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சீங்களா? எப்போ?'' என்று ஆதித்யா தன் நெற்றியைத் தடவ...

கேட்டுக் கொண்டிருந்த முகுந்த், 'ஐயையோ! இதுனால இன்னும் என்ன புதுப் பிரச்சனைகள் வரப் போகுதோ?' என்று பயந்து போனான்.

மருத்துவர்கள் முகுந்தை வெளியே அனுப்பிவிட்டு ஆதித்யாவை பரிசோதிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் முதலில் கூறி இருந்தபடி MRI ஸ்கேனும் எடுத்துப் பார்த்தார்கள்.

அதே சமயம் பிருந்தாவை வீட்டிற்கு அனுப்ப மருத்துவர்கள் முடிவு செய்திருந்தபடியால் சீதா அவளை நல்ல நேரம் பார்த்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

பிருந்தாவிற்கு வீட்டிற்குச் செல்லவே பிடிக்கவில்லை. நேற்றிலிருந்து சீதா தவிர யாருமே அவளை வந்து பார்க்கவில்லை. கணவனையும் பார்க்க மருத்துவர்கள் அனுமதிக்கவில்லை.

வீட்டில் யார் யார் இருக்கக் கூடுமோ? ஏற்கனவே தன்னை நேரில் பார்ப்பதை முகுந்த் தவிர்க்கிறார். அத்தையும் இதுவரை எட்டிப் பார்க்கவில்லை. இப்பொழுது அவர்களை நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு உண்டாகுமே? என்ன சொல்லி சமாளிப்பது? என்று பலவாறு எண்ணிக் குழம்பினாள்.

கஸ்தூரி அவளுக்கு தர்ம சங்கடத்தை உண்டு பண்ணவில்லை. ஏனெனில் அவர் அவள் கண்ணில் படவே இல்லை.

ஆதித்யாவிற்கு எல்லா பரிசோதனைகளும் செய்து முடித்து பின் மருத்துவர்கள் முகுந்தை அழைத்து விரிவாகப் பேசினார்கள்.

''சாரி மிஸ்டர். முகுந்த். நேற்று தலையில் பட்ட அடியில் உங்க அண்ணனுக்கு கடந்த சில மாதங்கள் நடந்த எதுவும் அவர் நினைவில் இல்லை. மற்றபடி அவருக்கு வேறு எந்தப் பிரச்சனையும் இல்லை. நீங்க அவரை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகலாம்'' என்றனர்.

மாலை நான்கு மணி அளவில் தன் அண்ணனைக் கூட்டிக் கொண்டு முகுந்த் வீடு நோக்கி பயணமானான். தாங்கள் வர இருப்பதை வீட்டிற்குப் போன் செய்து தெரிவித்தான். மற்றபடி ஆதித்யாவின் பிரச்சனை பற்றி எதுவும் சொல்லவில்லை. நேரில் சொல்லிக் கொள்ளலாம் என நினைத்தான்.

டிரைவர் காரை ஓட்ட பின்னிருக்கையில் சகோதரர் இருவரும் அமைதியாக பிரயாணம் செய்தனர்.

ஆதித்யா ஏதோ தீவிர சிந்தனையில் இருந்தான்.



முகுந்த் 'தான் அடுத்து என்ன செய்ய வேண்டும்?' என்று சிந்திக்க ஆரம்பித்தான்.

'கல்யாணம் ஆனதே இவனக்கு தெரியலை என்றால் நேற்று நடந்த பிரச்சனையும் தெரிந்திருக்காது தானே? அப்படி என்றால் இவனிடம் சொல்லாமல் மறைத்துவிடுவோமா? உனக்கு குழந்தை பாக்கியம் இல்லை. ஆனால் உன் மனைவிக்குக் குழந்தை பிறந்திருக்கு என்று எப்படி இப்படி ஒரு சூழ்நிலையில் சொல்ல முடியும்? கொஞ்ச நாட்கள்... அல்லது மாதங்கள் கழித்துச் சொல்லிக் கொள்வோமா?

விஷயம் தெரிஞ்ச ஒரே ஆள் சுந்தரேசன் மாமா தான். பேசாமல் அவர் காலில் விழுந்து இந்த விஷயத்தை வெளியே சொல்லாதீங்க என்று கேட்டுக் கொள்வோமா? சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்று பழமொழியே இருக்கே!' என்று முகுந்த் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டு காரில் பயணம் செய்து கொண்டிருந்தான்.

அங்கே வீட்டில்...

அவனது வரவிற்காகக் கஸ்தூரியும், பிருந்தாவும் காத்திருந்தார்கள். இருவரும் அடுத்தவரிடம் எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ளவில்லை.

முகுந்தும், ஆதித்யாவும் வீடு வந்து சேர்வதற்கு முன்பே சுந்தரேசன் ஆதித்யாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

பிருந்தா தன் கணவன் தன்னைப் பார்த்து என்ன கேள்விகள் எல்லாம் கேட்கப் போகிறானோ என்றும், அதற்குத் தான் என்ன சொல்லி சமாளிப்பது என்றும் யோசனையில் இருந்தாள்.

'வீட்டில் உள்ள மூவருக்கும் பதில் சொல்ல வேண்டி இருக்கும் என்று பார்த்தால் சரியாக இந்த சுந்தரேசன் வேறு வந்து நிற்கிறார். என்னால் இவர்கள் நால்வரையும் ஒரு சேரச் சமாளிக்க முடியுமா? பேசாமல் ஆதியை உள்ளே கூட்டிச் சென்று அவரிடம் உண்மை எல்லாம் சொல்லி அதன் பின் இவர்களுக்கு எல்லாம் விளக்கம் சொல்லுவோமா? இதனால் வேற புதுப் பிரச்சனைகள் எதுவும் கிளம்புமா?' என்று மண்டை குழம்பிப் போய் நின்றாள்.

கஸ்தூரியோ, 'இந்த அண்ணன் நேற்று வந்து என் பையனைக் கோபம் கொள்ளச் செய்து... அவன் மாடியில் இருந்து உருளக் காரணமானார். இப்போ அவன் வந்து அவன் பொண்டாட்டிகிட்டே என்ன கேட்கப் போகிறானோ? இந்த அண்ணன் வேறு குறுக்க புகுந்து புதுசா என்ன கலகம் செய்யக் காத்திருக்கிறாரோ? அவங்க பிரச்சனையை அவங்களே பார்த்துக்கட்டும் என்று ஒதுங்கிப் போகாமல் சரியாய் இந்த நேரம் வந்து நிற்கிறார். அவரை வராதீங்க என்றோ அப்புறமா வாங்கறேன் என்று சொல்லிக் கிளப்பவோ என்னால முடியலையே!' என்று நினைத்துப் புலம்பிக் கொண்டிருந்தார்.

அங்கே ஒருத்தன் நடந்த கல்யாணத்தைக் கூட மறந்தவனாய் வீடு வரப் போகிறான் என்று அறியாதவர்களாய் மாமியாரும், மருமகளும் தங்களுக்குள் புலம்பிக் கொண்டிருந்தனர்.

வாயிலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டதும் பிருந்தாவின் உடல் விறைத்தது. கஸ்தூரியின் உடல் மெலிதாக நடுங்கியது. காத்திருந்தவர்களில் சுந்தரேசன் தான் தெளிவுடனும், தெம்புடனும் காணப்பட்டார். கஸ்தூரி



வேலை ஆட்கள் அனைவரையும் (*சீதா உட்பட*) அவரவர் வீட்டிற்கு அனுப்பி வைத்திருந்தார்.

முதலில் முகுந்த் உள்ளே நுழைந்தான். அவனைத் தொடர்ந்து ஆதித்யா வந்தான். அவன் முகம் மிகவும் சோர்வாகவும் , சிந்தனை வயப்பட்டும் இருந்தது.

உள்ளே நுழைந்த ஆதித்யா அங்கிருந்த பிருந்தாவைப் பார்த்ததும் ஒரு கணம் அதிர்ந்தான்.

பின் அவளருமே விரைவாக ஓடியவன், ''பிந்துதுது...'' என்று அழைக்க...

பிருந்தாவிற்கு உலகம் தட்டாமலை சுற்றியது.

அவளைத் தாங்கிப் பிடித்தவன், ''நீ எங்கடா இங்கே? என்னைக் காணாமல் தவிச்சிட்டியா? உன்கிட்டே சொல்லாமல் நான் ஊருக்கு வரும் வழியில் எனக்கு ஆக்ஸிடென்ட் ஆகிடுச்சுடா. இந்த ஒன்பது மாசமா நான் அம்னீசியாவில் இருந்து இருக்கேன். நமக்குக் கல்யாணம் ஆனது தெரியாமல் நான் அம்னீசியாவில் இருந்த போது இவங்க எனக்கு இன்னொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணி வைச்சிருக்காங்க. இப்ப நாம என்னடா செய்யலாம்?'' என்று பிருந்தாவைப் பார்த்துக் கேள்வி கேட்டான் விஷ்ணு என்கின்ற ஆதித்யா.

விஷ்ணுவாய் அவளைக் காதலித்துக் கல்யாணம் செய்து ஒரு நாள் மட்டும் குடும்பம் நடத்திக் காணாமல் போனவன் இன்று தான் தன் அம்னீசியா என்னும் நோயில் இருந்து மீண்டு வந்திருக்கிறான்.

ஆனால் இப்பொழுது அவனுக்கு இடைப்பட்ட இந்த ஒன்பது மாதத்தில் நடந்தது தான் மறந்துவிட்டது.

அதுவரை கண்ணீர் மட்டும் வடித்துக் கொண்டிருந்த பிருந்தா ஆதித்யா அவளைப் பார்த்துக் கேள்வி கேட்ட வுடன்... அவனது கேள்வியில் அவனை இறுக அணைத் துக் கொண்டு வெடித்து அழுதாள்.



# 21



கஸ்தூரிக்கும், முகுந்திற்கும் ஆதித்யாவின் பேச்சு மிக முக்கியமான புதிரை விடுவித்தது.

பிருந்தாவின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொடி பொடியானதில் அவளை விட அவர்கள் அதிக ஆனந்தம் அடைந்தார்கள்.

கஸ்தூரி கடவுளுக்கு நன்றி செலுத்த ஆரம்பித்தார். கடந்த சில பல மணி நேரமாக அவர் அடைந்திருந்த குழப்பமும், வருத்தமும் ஒரு முடிவிற்கு வந்தது. பெரு மாள் தன் குடும்பத்தைக் கைவிடவில்லை என்று பரவசம் அடைந்தார்.

முகுந்த் தன் கண்களில் வடிந்த கண்ணீரைக் கூடத் துடைக்கத் தோன்றாமல் சில நொடிகள் அப்படியே உறைந்து நின்றுவிட்டான்.

ஆதித்யாவின் பேச்சில் அவனுக்கு சில குழப்பங்கள் ஏற்பட்டது. அதற்கு ஆதித்யாவிடம் இருந்த விளக்கம் பெற வேண்டியிருந்தது. ஆனால் தன்னுடைய குழப்பம் விலகுவதைக் காட்டிலும் தன் அண்ணியின் மன நிலையைச் சரி பண்ணுவதே முக்கியமானது என நினைத் தான்.



தன் அண்ணனுக்கும் நடந்ததை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை தனக்கு இருப்பதாக நினைத்தான். தன் அண்ணியால் ஒரு வார்த்தை கூட இப்பொழுது பேச இயலாது என்பதை உணர்ந்தவன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அண்ணனின் அருகில் வந்து, ''ஆதி, அண்ணியைக் கூட்டிக் கொண்டு உள்ளே போ!'' என்று சொல்ல,

''அண்ணியா? என் பிந்துவா?'' என்று ஆதித்யா சந்தேகமாகத் தன் தம்பிளைப் பார்த்துக் கேட்க,

முகுந்த் தன் தலையை ஆட்டி அவனது கூற்றை ஆமோதிக்க... காலையில் இருந்து ஆதித்யா அனு பவித்து வந்த வேதனை நொடியில் பறந்தோட அவன் மனம் லேசானது.

தனக்கும், பிருந்தாவிற்கும் ஏற்கனவே வீட்டிற்குத் தெரியாமல் திருமணம் ஆனது தெரியாமல் இன்னொரு பொண்ணை என் தலையில் கட்டி வைத்திருக்கிறார் களே! இந்தச் சிக்கலில் இருந்து எவ்வாறு விடுபடுவது என்று குழம்பித் தவித்தவனின் குழப்பம் ஒரே நொடி யில் காணாமல் போனது.

''ஹேய் முகுந்த்! அப்படின்னா என் வைஃபைத் தான் எனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சீங்களா?'' என்று மிக உற்சாகமாய்க் கேட்டவன், ''இத்தனை நாளா பிந்து எதுவும் சொல்லலையா?'' என்று ஆச்சரியத்துடன் தனது அடுத்த கேள்வியைத் தொடுக்க,

அண்ணனது முதல் கேள்விக்கு 'ஆமாம்' எனும் வித மாய் தலை அசைத்த முகுந்த் அவனது அடுத்த கேள் விக்கு 'இல்லை' என்று தலை அசைத்து மறுத்தவன், ''அண்ணியை முதலில் சமாதானம் பண்ணு!'' என்றான்.

''ஜூலை மாசம் அம்மாக்கு ரொம்ப உடம்புக்கு முடியலை என்று தானேடா வரச் சொன்னீங்க. அம்மாக்கு என்ன ஆச்சு?'' என்று அழும் தன் மனைவியை அழைத்துக் கொண்டுத் தாயின் அருகில் சென்றான்.

''ஆதி...'' என்று அவர் அவன் மீது சாய்ந்து கொண்டு அழ...

''அம்மா நான் தான் நல்லா ஆகிட்டேனே. போதும்மா. இனி நீங்க அழாதீங்க. உங்க பையன் தான் திரும்ப வந்துட்டேனே?'' என்று அவன் சொல்லச் சொல்ல அவர் அழுகை கூடியதே தவிரக் குறையவில்லை.

''ஆஹா! ரெண்டு பேரும் அழுதே வீட்டுக்குள்ளே வெள்ளம் வர வைச்சிருவாங்க போலிருக்கே!'' என்று சத்தமாகப் புலம்பியவன், முகுந்தைப் பார்த்து,

''டேய் குட்டா! உனக்குக் கல்யாணத்துக்குப் பொண்ணு பார்க்கும் போது அந்தப் பொண்ணுக்கு அழுகத் தெரியுமான்னு முதல்ல கேளு. அழுகத் தெரியும்ன்னு சொன்ணால் அந்தப் பொண்ணை ரிஜக்ட் பண்ணிடு. இல்லைன்னா நம்ம வீட்டுக்குள்ளேயே நாம போட் ஓட்ட வேண்டிய நிலைமை வந்திடும்'' என்று சொன்னவுடன் இப்போது அழுவது முகுந்தின் முறையானது.

தனது இருபக்கமும் அணைத்திருந்த மனைவி மற்றும் தாயை அருகிருந்த சோபாவில் அமர வைத்தவன் தன் தம்பியின் அருகே விரைந்து செல்ல முகுந்த் அவனைக் கட்டிக் கொண்டு கதறினான்.

''என்ன ஆச்சுடா? ஆம்பளைப் பிள்ளை அழக் கூடாதுடா. நான் இதையா உனக்குச் சொல்லிக் கொடுத்தேன்.



நிமிர்ந்து என்னைப் பாருடா!'' என்று ஆதித்யா தம்பியைத் தேற்ற முயல,

''நீ என்னைக் குட்டான்னு கூப்பிட்டு எத்தனை நாள் ஆச்சு தெரியுமா? என்கிட்டே பாசமா பேசி எத்தனை நாள் ஆச்சு தெரியுமா? ஏன்டா இத்தனை நாளா என்னை தவிக்கவிட்டே?'' என்று சொல்லிக் கொண்டே முகுந்த் தனது அண்ணனை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

தம்பியின் முதுகை ஆறுதலாக வருடிக் கொடுத்துக் கொண்டே, ''ஹேய் நான் ஒரு நாள் கூட உன்னிடம் பாசமா பேசலையாடா?'' என்று ஆச்சரியத்தோடு ஆதித்யா வினவ,

முகுந்தை முந்திக் கொண்டு தனது கண்களைத் துடைத்தவாறே பிருந்தா பதில் சொன்னாள்.

''பாசமாவா? உர்ராங்குட்டான் மாதிரி எந்நேரமும் உர்ரன்னு இல்ல இருந்தீங்க! இதுல எங்கேயிருந்து குட்டான்னு செல்லப் பேரு எல்லாம் சொல்லப் போறீங்க?'' என்று நக்கல் பண்ண...

''ஒரு குரங்கு தன் இணையைக் குரங்கு என்கிறதே ஆச்சரியக் குறி'' என்று பார்த்திபன் ஸ்டைலில் ஆதித்யா ஹைக்கூ சொல்ல...

பிருந்தா சிணுங்க, முகுந்த் மற்றும் கஸ்தூரி புன்னகைத்தனர்.

''இதைத் தான் அண்ணா இத்தனை நாளா ரொம்ப மிஸ் பண்ணினேன்'' என்று முகுந்த் தழுதழுத்தான்.

''எதை மிஸ் பண்ணீங்க முகுந்த்? உங்க அண்ணன் என்னைக் குரங்குன்னு சொல்வதையா?'' என்று பிருந்தா கேட்க,

''ஐயோ அண்ணி! நான் உங்களைப் போய் அப்படிச் சொல்லுவேனா?'' என்று முகுந்த் பதற,

''ஓ! அப்படின்னா உர்ராங்குட்டன் பொண்டாட்டின்னு சொல்லுவியாடா?'' என்று ஆதித்யா கலாய்க்க, அனை வரும் நகைத்தனர்.

கஸ்தூரி தன் வாய் திறந்து பேச ஆரம்பித்தார்.

''ஆதி, முகுந்த் ரொம்பவும் கஷ்டப்பட்டுட்டான்டா. உன் அப்பாவும் நீயும் அவனைக் கடைக்குட்டின்னு சொல்லி இதுவரைக்கும் எந்த வேலையும் பெருசா செய்ய விட்டதில்லை. ஆனால் இந்த ஒன்பது மாசமா அவன் ரொம்ப பாரம் சுமந்துட்டான்டா. உனக்குப் பழச எதுவும் ஞாபகம் இல்லை. நடக்க முடியாததால் ரெண்டு மாசம் ரெஸ்ட் எடுக்குற மாதிரி ஆகிடுச்சு. அதனால பிசினஸை அவனே பார்த்துக்குற மாதிரி இருந்துச்சு.

நடக்க ஆரம்பிச்ச பிறகு நீ கடைக்குப் போனாலும் உனக்கு அம்னீசியா என்பதால் எல்லாமே அவன் பொறுப்பில் தான் நடக்கும் படியா இருந்தது. நீ உனக் குள்ளேயே உன் உணர்ச்சிகளை எல்லாம் மறைச்சு வைச் சுக்கிட்டு எங்ககிட்டே எதையுமே பகிராமல் எங்களை பேருக்கு அம்மா தாயின்னு கூப்பிட்டு... இந்த வீட்டிலே நடமாடிக்கிட்டு இருந்தாய். ஏதோ வளைகாப்புக்கு பின்னாலே தான் உன் நடத்தையில் கொஞ்சம் மாற்றம் தெரிஞ்சது. எங்க பழைய ஆதி திரும்புறான் என்று நானும் முகுந்தும் சந்தோஷப்பட்டோம்.

இது எல்லாமே என்னாலே தானேடா நடந்துச்சு. சாரிடா. நான் பொய் சொல்லி உன்னை வரச் சொன்ன தால தான் நாம எல்லோரும் இப்படி கஷ்டப்படும்படி ஆனது!'' என்று கஸ்தூரி புலம்பினார்.



''என்னது பொய் சொன்னீங்களா? ஏம்மா? உங் களுக்கு உடம்பு சரி இல்லைன்னு நான் இவளிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாது ஓடி வந்தேன் தெரியுமா? ஏம்மா? என்னாச்சு?'' என்று ஆதித்யா பரிதவிக்க...

''எல்லாம் இந்த சுந்தரேசன் அண்ணனால வந்தது. எங்கே அவர்?'' என்று தன் அருகில் நின்றிருந்த தமையனைத் தேட அவரைக் காணாது கஸ்தூரி விழித் தார்.

''நல்லவருக்கு அழகு சொல்லிக்காமல் போவது மா. நாம நிஜத்திலே தான் நல்லவரா இல்லை. அட்லீஸ்ட் பழமொழிபடியாவது நல்லவரா இருப்போம்ன்னு சொல் லிக்காமல் போயிட்டாரு போல. விடுங்கம்மா. வெடி குண்டுன்னு நினைச்சுத் திரியைக் கொளுத்திப் போட் டார். அது புஸ்வாணமாப் போயிடுச்சு. அதான் கிளம் பிட்டார்'' என்று முகுந்த் சொன்னான்.

''என்னது சுந்தரேசன் மாமா தான் பொய் சொல்லச் சொன்னாரா? எதுக்கு? நான் நினைக்கிறேன்... நான் தொடர்ந்து மூணு நாள் பாண்டிச்சேரிக்கும் சென்னைக் குமா வந்து வந்து போனதும் நான் லவ்விலே மாட்டி யிருப்பேன் என்று அவருக்குச் சந்தேகம் வந்திருக்கும். அதான் அம்மாவை விட்டு டிராமா பண்ணியிருப்பார்'' என்று தாயைப் பார்த்துச் சொன்ன ஆதித்யா,

''என்னடா வெடிகுண்டுன்னு ஏதோ சொல்கிறாய். என்னாச்சுடா முகுந்த்?'' என்று தம்பியைப் பார்த்துக் கேட்க,

''அவர் தன் பொண்ணை உன் தலையில் கட்டி வைக்க அம்மாவைக் கைக்குள்ளே போட்டுக்கிட்டு

கல்யாண ஏற்பாடு பண்ணினார்...'' என்று முகுந்த் சொல்லிக் கொண்டிருக்க...

அவனை இடைமறித்த ஆதித்யா, ''அதான் தெரிஞ்சதாச்சே! அம்மா, அதுனால தான்மா நான் உங்ககிட்டே கூடச் சொல்லாமல் பிந்து கழுத்திலே தாலி கட்டினேன். நேரில் வந்து சொல்லிக்கலாம்னு நினைச்சேன். ஆனால் அதுக்குள்ளே இப்படி ஆகிடுச்சு'' என்று விளக்கம் கூறினான்.

''உனக்கு ஆக்ஸிடென்ட் ஆனதும் தன் பொண்ணுக்கு வேற மாப்பிள்ளை பார்த்துக் கட்டி வைச்சுட்டார். திடீர்னு நேற்று நம்ம வீட்டுக்கு வந்தார். உனக்கு குழந்தை பாக்கியம் இல்லைன்னு மெடிக்கல் சர்ட்டிபிகேட் வைச்சு புரூவ் பண்ணினார்'' என்று முகுந்த் சொன்னதும் ஆதித்யாவின் முகம் மாறியது.

அவனது முகமாற்றத்தைக் கண்ட முகுந்த் தன் தாயை கண் ஜாடை காட்டி அழைத்துக் கொண்டு குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வரக் கிளம்பினான்.

அவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்றதும் ஆதித்யா மனைவியின் புறம் திரும்பி, ''பிந்து சாரிடா. எனக்கு இப்படி ஒரு குறை வந்தது தெரியாதே. தெரிஞ்சு இருந்தால் உன்னைக் கல்யாணம் பண்ணி இருக்க மாட்டேனே. அதுவும் ரெண்டு தடவை வேறு தாலி கட்டி வைச்சு இருக்கேன். இப்ப என்ன பண்ணுறது?'' என்று தன் தலையைக் கோதிக் கொண்டு யோசிக்க...

அவனது அருகில் வந்தவள் அவனது காதில், ''இப்போ எதுக்கு இவ்வளவு வருத்தப்படுறீங்க? முகுந்த் சொன்னதை நல்லா கவனிச்சீங்களா? பிரச்சனை ஆதித்யா



வுக்குத் தான். விஷ்ணுக்கு இல்லை'' என்று அவள் சொன்னதும்,

''என்ன சொல்ல வருகிறாய்?'' என்பது போல் அவன் பார்க்க...

''நான் டெலிவரி முடிஞ்சு இன்னைக்குக் காலையில் தான் வீட்டுக்கு டிஸ்சார்ஜ் ஆகி வந்திருக்கேன்'' என்று பிருந்தா சொன்னதும்,

''ஹேய்! நிஜமாடா பிந்து?!'' என்று கேட்டு அவளை இழுத்து அணைத்து அவளது கன்னத்தில் அவசரமாக ஒரு முத்தம் பதித்து நிமிர்ந்தான். அறைக்குள் சென்றவர்கள் எந்த நேரத்திலும் திரும்பி வருவார்கள் என்று நினைத்த பிருந்தா அவனது அணைப்பில் இருந்து விலகினாள்.

''காலையில் இருந்து ஒரே நல்லதா நடக்குது இல்ல...'' என்று ஆதித்யா சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே கையில் ஆளுக்கு ஒரு குழந்தையுடன் முகுந்தும், கஸ்தூரியும் வர...

''ஹேய் இரட்டையா? அட்ரா சக்கை... ஆதி கலக்கிட்டே போல!'' என்று அவன் சத்தமாகச் சொல்ல பிந்து வெட்கம் அடைந்தாள்.

''என்ன குழந்தைம்மா?'' என்று ஆதித்யா தாயைப் பார்த்துக் கேட்க,

''ரெண்டும் பசங்கடா ஆதி'' என்று கஸ்தூரியும்,

''உன்னைப் போல ரெண்டு வாலுங்க தான் பிறந்திருக்கு!'' என்று முகுந்தும் சொன்னார்கள்.

முகுந்த் தன் கையிலிருந்து குழந்தையை தன் அண்ணன் கைகளில் கொடுத்தான். கஸ்தூரி தன் கையில் இருந்த குழந்தையை மருமகள் கையில் கொடுத்தார்.

ஆதித்யா எதுவும் பேசாமல்... பேசத் தோன்றாமல் மாறி மாறி இரு குழந்தைகளையும் வருடிக் கொடுத்துக் கொண்டே இருந்தான்.

அவனது எண்ண ஓட்டத்தினைப் புரிந்து கொண்டவர்களாக அவர்கள் அவனை எந்தக் கேள்வியும் கேட்காது அமைதி காத்தனர்.

தங்களின் முதல் கல்யாணம் எப்படி நடந்தது என்பது பற்றித் தனது தாயிடம், தம்பியிடமும் எடுத்துரைத்தான்.

''அடப்பாவி ஆதி! என்னிடம் சாமியார் மாதிரி வேஷம் போடுவே! அந்தப் பக்கம் அண்ணியைக் கவுக்க அடுக்கடுக்கா பொய் சொல்லி இருக்கிறாய்'' என்று அண்ணனைப் பார்த்துக் கேட்டவன்,

''ஹூம்! இந்தக் காலத்திலே எவனையும் நம்பக் கூடாது'' என்று சத்தமாக வாய் விட்டுப் புலம்பினான். ஆதித்யா அவனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''அண்ணி இப்போ இவன் எங்ககிட்டே சொன்ன பொய் மட்டும் தான் அன்னைக்கு உங்களிடம் சொன்னானா? இல்லை வேற எதையாச்சும் எங்ககிட்டே இருந்து மறைக்குறானா?'' என்று பிருந்தாவைப் பார்த்துக் கேட்டவன், அவள் ஒன்றும் சொல்லாது புன்னகைக்கவும்,

தன் தாயிடம் திரும்பி, ''அம்மா இப்பவே நல்லா மனசிலே ஏத்திக்கோங்க. நான் நாளைக்கு யாரையாச்சும்



கல்யாணம் பண்ணி குழந்தையோட வந்தால் நீங்க ஒண்ணும் சொல்லக் கூடாது'' என்று சொல்லவும்,

ஆதித்யா வேகமாக, ''டேய் குட்டா! நான் எப்படா குழந்தையோட வந்தேன். கல்யாணம் மட்டும் தானேடா பண்ணினேன். அது கூட அடுத்த நாளே வந்து சொல்லலாம் என நினைச்சிருந்தேன்'' என்று கூறினான்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ எட்டடி பாய்ஞ்சால் நான் எண்பத்தி எட்டு அடி பாய வேண்டாமா?'' என்று முகுந்த் கேட்கவும்,

''அப்பக் கூட பதினாறு அடின்னு தானேடா சொல்லுவாங்க. நீ என்னடா எண்பத்தி எட்டுன்னு சொல்கிறாய்?'' என்று ஆதித்யா ஆச்சரியத்துடன் வினவவும்,

''அதெல்லாம் தாயுக்கும், குட்டிக்கும் சொன்ன பழமொழி தானே. இது அண்ணன் தம்பிக்கு இடையிலே அல்லவா போட்டி. அதனால நான் சொல்லுறது தான் சரி'' என்று தீர்ப்புக் கூறியவன் தன் அண்ணியிடம் குனிந்து,

''அண்ணி இனிமேல் காலையில் ஜாகிங் வரும் அந்தப் பொண்ணைப் பார்க்குறதிலே எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. இனி இவனை சமாளிக்கிறது தான் எனக்கு ஈஸி ஆச்சு!'' என்று மெதுவான குரலில் சொன்னான்.

அவனை விடக் கிசுகிசுப்பான குரலில், ''உங்களுக்கு அந்தப் பொண்ணை அவ்வளவு பிடிச்சிருக்கா முகுந்த்? அப்படின்னா அந்தப் பொண்ணையே உங்களுக்குப் பேசி முடிச்சிடலாம். ஆனால் உங்களுக்கு இன்னமும் வயசாகவில்லையே. அப்போ என்ன பண்ணுறது?''

என்று ஒரு தீவிரத்துடனும், தீர்மானத்துடனும் கேட்டாள்.

'பிரச்சனை இல்லாமல் சைட் அடிக்கலாம்ன்னு சொன்னால் அந்தப் பொண்ணையே எனக்குக் கட்டி வைக்கும் ரேஞ்சுக்கு இந்த அண்ணி திங்க் பண்ணுறாங்களே!'' என்று முகுந்த் பீதியில் உறைய...

தம்பியின் கலவர முகத்தைப் பார்த்துக் கொண்டே ஆதித்யா, ''என்னடா முகுந்த் என்னைக் கவுக்க ஏதோ உன் அண்ணி கூடச் சேர்ந்துக்கிட்டு சதித் திட்டம் தீட்டினாயா? நீ சொல்ல வருவது புரியாமல் அவ உன்னையே கவுத்துட்டாளா?'' என்று வினவ,

''ஆதி! டேய் அண்ணா! ஆயிரம் இருந்தாலும் நீயும் நானும் ஒண்ணுடா. நான் உன் கூடவே கூட்டணி வைச்சுக்கிறேன். அண்ணியைச் சமாளிக்க என்னால முடியாது'' என்று கூறிக் கொண்டே தமையன் அருகே சென்று அவனது தோளை அணைக்க,

''அப்படி வா என் வழிக்கு'' என்று ஆதித்யா புன்னகைத்தான்.

''நான் அவ்வளவு மக்கா இருக்கேனா?'' என்று பிருந்தா பரிதாபத்துடன் கேட்கவும்,

கஸ்தூரி, ''அவனுங்க கிடக்குறானுங்கம்மா. சுத்த அடாவடிங்க'' என்று தன் மருமகளுக்குப் பரிந்து பேச,

ஆதித்யா, ''டேய் முகுந்த், பார்த்தியாடா. இனம் இனத்தோட சேர்ந்திடுச்சு'' என்று சொல்லிச் சிரித்தான்.

''சரி அப்போ நீங்க ரெண்டு பேரும் வேற இனம் தானே? அப்போ இடத்தைக் காலி பண்ணுங்க. இனிமேல்



இந்த வீட்டுப் பக்கம் எட்டி கூடப் பார்க்கக் கூடாது'' என்று கஸ்தூரி கண்டிப்புடன் சொல்லவும் பிருந்தா புன்னகைத்தாள்.

''அம்மா... தாய்க்குலமே!'' என்று முகுந்த் அலற,

''அம்மா சாரி. பிந்து சாரி. நாம எல்லோரும் ஒரே கட்சி. சரியா? இப்படி டமால்ன்னு எல்லாம் அதிரடியா முடிவு எடுத்து எங்களை க்ளீன் போல்டாக்கக் கூடாதும்மா. எதா இருந்தாலும் சொல்லிட்டுச் செய்யுங்க!'' என்று ஆதித்யா கூறவும்,

''நீ மட்டும் எங்கிட்டே சொல்லிட்டாடா கல்யாணம் பண்ணினே?'' என்று கஸ்தூரி கேட்டார்.

அவர் என்னவோ மகனைக் கேலி செய்யும் நோக்கில் கிண்டலாகத் தான் கேட்டார்.

ஆனால் ஆதித்யாவோ ஒரு தீவிர முகபாவத்துடன் தன் தாயிடம், ''அம்மா நான் உங்ககிட்டே சொல்லாமல் கல்யாணம் பண்ணியதுக்கு எப்படி மன்னிப்புக் கேட்கப் போகிறேனோ என்று அன்னைக்கு யோசிச்சேன். ஆனால் இன்னைக்கு தோணுதுமா... இந்தக் குட்டீஸ் என் வாழ்க்கையில் வரணும் அப்படிங்கிறதுக்காகத் தான் நான் அன்னைக்கு அப்படி ஒரு காரியம் செய்யத் துணிஞ்சேன் போல!'' என்று கரகரப்பான குரலில் கூறினான்.

''விடுப்பா ஆதி. எல்லாம் நன்மைக்கே. பெருமாள் நம்ம எல்லோருக்கும் நல்லது தான் பண்ணி இருக்கார்'' என்று மகனிடம் சொன்னவர் மருமகளைப் பார்த்து,

''அன்னைக்கு உன் பேருக்கான விளக்கத்தை சொன்னப்போ நீ ஏன் அழுதாய் என்று எனக்கு இன்னைக்கு அர்த்தம் புரியுதுமா. புராணத்திலே இரு வேறு ஆண்கள்

ஒரே பேரிலே வந்து அந்த பிருந்தாவை சோதிச்சாங்க. விஷ்ணு பிருந்தாவின் சாபத்துக்கும் ஆளானார். அதனால் தானே என்னவே அந்தக் கடவுள் விஷ்ணு. இந்தக் கலியுகத்தில் அந்தத் தப்பு அதே பேருடைய அவரது பக்தையான உனக்கு நேராமல் காப்பாற்றியிருக்கார். ஒரே ஆணையே இரு வேறு பேர் சூட்டி உன்னிடம் அனுப்பி இருக்கார்'' என்றார்.

பிருந்தா அவரது பேச்சைக் கேட்டு அவரைப் பார்த்துப் புன்முறுவலுடன், ''நானும் இதையே தான் அத்தை அன்னைக்கு நினைச்சேன். என்னை இதுவரை கடவுள் சோதிக்கவில்லை. காப்பாற்றித் தான் வந்திருக்கிறார் என்று தெரிஞ்சதால் ஆனந்தத்தில் தான் கண்ணீர் விட்டேன். உடனே சென்று கடவுளுக்கு நன்றியும் சொன்னேன்'' என்றாள்.

என்ன கதை என்று புரியாது விழித்த தன் மகன்களுக்கு அந்தக் கதையைக் கஸ்தூரி மீண்டும் ஒரு முறை சொன்னார்.

''பிருந்தா, நீ பச்ச புள்ளைக்காரி. போய் ரெஸ்ட் எடு. உன் ரூமுக்குப் போ. மீதிக் கதையை நாம அப்புறம் பேசலாம்'' என்று சொல்லி அவளை உள்ளே அனுப்பி வைத்தார்.

அவள் பின்னோடு இன்னொரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆதித்யாவும் சென்றான்.



## 22



ஆதித்யா தன் கையில் இருந்த குழந்தையைக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டு மனைவியின் அருகே



செல்ல... அவள் குழந்தையைத் தொட்டிலில் படுக்க வைத்துவிட்டு நிமிர... ஆதித்யா அவளைப் பின்னோடு இறுக்கி அணைத்தான்.

அவன் எதிர்பாராமல் அணைத்ததால் பிருந்தா மெலிதாக அலறினாள்.

''பிந்து மெதுவாடா... நான் தான். உன் சத்தம் கேட்டு யாராச்சும் வந்திடப் போறாங்க'' என்று சொல்லிக் கொண்டே அவளை முன் பக்கமாகத் திருப்பினான். மனைவியின் மதிமுகத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னங்க அப்படிப் பார்க்குறீங்க?'' என்று குழைவான குரலில் அவள் கேட்க,

அவளை அருகே இழுத்தவன் அவளது காதருகே, ''என் பொண்டாட்டி... நான் பார்க்கிறேன். நானே ஒன்பது மாசம் கழிச்சு இப்பத் தான் பார்க்கிறேன். நீ என்ன கேட்கிறது'' என்று கிசுகிசுப்பாக மொழிய,

அவளது காதில் அவனது மீசையின் உராய்வும் அவனது குரலும் சேர்ந்து அவளைக் கிறங்க வைக்க 'ம்ம்ம்' என்று முனகினாள்.

''இதுக்கு மேல தாங்காது'' என்றவன் அவளை இழுத்து அணைத்தான்.

அவனது அணைப்பு இறுகிக் கொண்டே போனது. அவளுமே அவனிடம் மேலும் மேலும் ஒண்டினாள். வெகு நாட்களுக்குப் பின் கணவனிடம் உரிமையுடன் அவளால் நெருங்க முடிந்தது. அதனால் அந்த வாய்ப்பைத் தவறவிட அவளுக்குமே மனமில்லை. மனைவி

யும் தன்னிடம் நெருங்கவும் அவனது இறுக்கம் அதிகரித்தது.

அவள் மெதுவாக, ''வலிக்குதுங்க'' என்றாள்.

சற்றே தன் பிடியைத் தளர்த்தியவன், ''இப்போ?'' என்று கேட்டுக் கொண்டே அவளது முகத்தைப் பார்க்க, வலியின் மிச்சம் அவளது முகத்தில் பிரதிபலித்தது.

அப்பொழுது தான் நினைவிற்கு வந்தவனாக அவனது அணைப்பை முற்றிலும் தளர்த்தியவன், ''சாரிடா பிந்து. இப்போ தானே உனக்க டெலிவரி ஆனது. நான் அதை மறந்துட்டு முரட்டுத்தனமான பிடிச்சுட்டேன். என் கைக்குள்ளே மட்டும் வா. போதும்'' என்று கூறி அவளைத் தன் கை வளையத்துக்குள் கொண்டு வந்தான்.

''அப்பாடா நம்ம பிரச்சனை எல்லாம் முடிஞ்சு போச்சு. பக்கத்திலேயே தளதளன்னு பொண்டாட்டி நிற்கிறாள். நானே எப்படா தனியாத் தள்ளிக்கிட்டுப் போகலாம்ன்னு காத்திருக்கேன்... எங்கம்மா என்னடான்னா இனிமேல் வீட்டுப் பக்கம் வராதேன்னு சொல்லுறாங்க. அதைக் கேட்டு நீ சிரிக்கிறாய்! ம்ம்ம்...'' என்று அவன் கேட்கவும்,

''ஏன்... நீங்க கூடத் தான் என்னை இனம் இனத்தோட சேரும்ன்னு நக்கல் பண்ணுனீங்க'' என்றாள்.

''பிந்து நான் வெறுமனே இனம் என்று தானேடா சொன்னேன். நீ ஏன் அதை மக்குன்னு எடுத்துக்கிறாய்?'' என்று கேட்டதும்,

அவள் அவனைப் பார்த்து முறைக்க...

''சரிடா அப்படியே இருந்தாலும் நீ திருப்பிச் சொல்ல வேண்டியது தானே... நீ என் கூடச் சேர்ந்து தானேடா



ரெண்டு பிள்ளைங்களைப் பெத்திருக்க! அப்ப நீயும் என் இனம் தான் என்று'' என்று அவன் கேட்கவும்,

''அடக் கடவுளே! இது எனக்குத் தோணாமல் போச்சே! இனிமேல் யார் என்ன நக்கல் பண்ணினாலும் என் வீட்டுக்காரர்கிட்ட கேட்டே பதில் சொல்லுறேன்'' என்று அவள் தலையை ஆட்டிச் சொன்ன விதத்தில் கவரப்பட்டவனாய் அவளது கன்னத்தில் முத்தம் பதித்தான்.

சரியாக அந்த நேரம் கட்டிலில் படுத்திருந்த குழந்தை சிணுங்க...

''ஹேய் குட்டி! நோ நோ... அப்பாக்கே இப்பத் தான் சான்ஸ் கிடைச்சிருக்கு. அதைத் கெடுத்துடாதேடா. கொஞ்ச நேரத்துக்கு சமர்த்தா தூங்குங்க பார்ப்போம்'' என்று அவன் கூறியதும் குழந்தை சிணுங்கலை நிறுத்தியது.

''தட்ஸ் மை பாய்!'' என்று சொல்லிக் கொண்டே மனைவியின் புறம் திரும்பியவன் அவளது ஆச்சரியமான பாவனையைக் கண்டு அதற்கான காரணம் கேட்டான்.

''நீங்க எப்பவுமே அவங்க ரெண்டு பேரையும் இப்படித் தாங்க கொஞ்சுவீங்க. ஆனா நீங்க மூணு பேரும் தனிக் கூட்டணி அமைச்சுக்குவீங்க தெரியுமா?'' என்று குறைபட,

''நீயும் நானும் ஒண்ணு தானேடா. நீ எனக்குள்ளே தானேடா இருக்கே!'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஆதி என்று கஸ்தூரி அழைத்தார்.

''டேய் குட்டி! உங்க பாட்டிக்குப் பொறுக்கலைடா. என்னை என் பொண்டாட்டி கூடப் பேசவிட மாட்டேங்

குறாங்க. சரி கொஞ்ச நேரத்துக்கு அம்மாவை நீங்க ரெண்டு பேருமே வைச்சுக்கோங்க'' என்று தன் குழந்தையைப் பார்த்துச் சொல்லிவிட்டு, பிருந்தாவைப் பார்த்துத் தலையசைத்துவிட்டு, அறையில் இருந்து வெளியேறினான்.

குழந்தைகளைப் பசியாற்றித் தூங்க வைத்துக் கணவனும், மனைவியும் இரவு உணவை முடிக்கும் வரை அவர்களிடையே அமைதி நிலவியது.

மனைவிக்குச் சில விளக்கங்களைச் சொல்ல வேண்டிய கடமை இருப்பதை உணர்ந்த ஆதித்யா அவளை அழைத்தான். தன்னருகே வந்தவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டான். அவள் அவனை அணைத்துக் கொண்டு கண்ணீர் சொரிய ஆரம்பித்தாள்.

"என்னாச்சுடா பிந்து? ரொம்ப கஷ்டப்பட்டியா? உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேனா? ஏன்டா இப்படி அழுற? அதான் எனக்குச் சரி ஆகிடுச்சு இல்ல. இனிமேல் உனக்கு எந்தப் பிரச்சனையும் வராமல் நான் பார்த்துக்குவேன்டா!'' என்று மனைவியின் கண்ணீரைத் துடைத்துவிட்டு அவளது கண்களில் முத்தம் பதிக்க,

அவள் கண்மூடி அந்த சுகத்தை அனுபவித்தாள்.

முகுந்திற்கும், கஸ்தூரிக்கும் வெறும் ஒரு நாள் பிரச்சனை தான். ஆனால் பிருந்தாவிற்கோ கடந்த ஒன்பது மாத வருத்தம் அல்லவா? அது அவ்வளவு சீக்கிரத்தில் மறையுமா என்ன?

ஆதித்யா பிருந்தாவிடம், ''உன்னிடம் நிறைய விளக்கம் கேட்கவும், சொல்லவும் வேண்டியிருக்கு. ஆனால் அதுக்கு முன்னாடி ரொம்ப முக்கியமா ஒண்ணு கேட்கணும். நேற்று எங்க மாமா வந்து குட்டையைக் கிளப்பிட்டுப் போன பின்னாடி அம்மாவோ, முகுந்தே உன் மனசு வருந்தும்படியா ஏதாச்சும் உன்னைச் சொன்னாங்களாடா பிந்து?'' என்று அக்கறை தொனித்தக் குரலில் கேட்டான்.



அவன் அவ்வளவு அக்கறையுடன் கேட்ட விதமே அவர்கள் என்ன சொல்லியிருந்தாலும் கணவனுக்காகவே அவர்களை மன்னிக்கலாம் என்று பிருந்தாவிற்குத் தோன்றியது.

அவள் ஒன்றும் சொல்லாது அவனை நிமிர்ந்து பார்க்க...

''நான் மனசு வருத்தப்படுவேன் என்று எதையும் மறைக்காதேடா. எனக்குத் தெரிஞ்ச வரை அம்மா ரொம்ப சாது. அப்படி எல்லாம் பேசக் கூடிய ஆள் இல்லை தான். இருந்தாலும் இது கொஞ்சம் சிக்கலான பிரச்சனை. அதனால நிதானம் இழந்து ஏதாச்சும் சொன்னாங்களான்னு நான் தெரிஞ்சுக்கணும்டா. ப்ளீஸ் மறைக்காமல் சொல்லு.''

''அப்படி எதுவும் இல்லைங்க. ரெண்டு பேருமே என்னைப் பார்ப்பதைத் தவிர்த்தாங்க. அவ்வளவு தான். முகுந்த் மட்டும் ஒரு முறை ரூமுக்கு வந்தார். அப்பத் தான் உங்க மாமாவும் கூட வந்து விஷயம் சொன்னார். மற்றபடி தப்பா எதுவும் சொல்லலைங்க'' என்று அவள் சொன்னதும்,

''நிஜமாகத் தான் சொல்கிறாயா?'' என்பது போல் அவன் பார்க்க...

''நிஜமாத் தாங்க. நான் ஏங்க பொய் சொல்லப் போறேன்?'' என்றாள்.

''அப்படியில்லைமா. எனக்கு அம்மாவும் முக்கியம். நீயும் முக்கியம். ரெண்டு பேரிலே யார் தப்பு பண்ணி னாலும் அது மொதல்ல என்னை தான்மா பாதிக்கும். அவங்க உன்னைப் பார்க்காமல் தவிர்த்ததுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்டா. அதைக் கூட அவங்க செஞ்சு இருக்கக் கூடாது. ஆனால் அவங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அப்படி இருந்துட்டாங்கன்னு எனக்காக மன்னிச்சிடுடா'' என்றதும்,

''நீங்க எதுக்குங்க மன்னிப்பெல்லாம் கேட்குறீங்க! விடுங்க. நீங்க ஃபீல் பண்ணாதீங்க. நாம அதை மறந்திடலாம்.''

''சரி அதை விடு. இந்த எட்டு மாசத்திலே என்ன தான்டா நடந்துச்சு?'' என்று ஆதித்யா கேட்டவுடன் அவள் முதலில் இருந்து சொல்ல ஆரம்பித்தாள்.

''அன்னைக்கு ஹாஸ்பிட்டலில் உங்களைப் பற்றி விரிவா சொல்லி உங்க ரூமுக்கு என்னைப் ப்ரியா கூட்டி வந்தாள். அந்த அறைக்குள்ளே நுழைஞ்சு உங்களைப் பார்த்ததுமே எனக்கு ஹை வோல்ட் எலக்ட்ரிக் ஷாக் அடித்தது போல இருந்துச்சு. கதவைப் பிடித்துக் கொண்டு என்னை நானே நிலைப்படுத்திக் கொண்டேன்.

ப்ரியா உங்க கிட்டே வந்து, 'ஹாய் ஆதி! நான் தான் ப்ரியா. உங்க பேமிலி பிரண்டு' அப்படின்னு தன்னைத் தானே அறிமுகம் செய்து கொள்ளவும் என் அதிர்ச்சி மாறி அங்கே குழப்பம் சூழ்ந்தது.

நீங்க என்னை தீர்க்கமா ஒரு பார்வை பார்த்தீங்க. அந்த பார்வை என் உயிர் வரை சென்று தாக்கியது. உங்ககிட்டே இருந்து விடைபெற்றுப் ப்ரியா என்னை டாக்டரோட ரூமுக்கு அழைத்துச் சென்றாள்.



அங்கே...

* * *

''வாம்மா ப்ரியா? எப்படி இருக்கே? யாரிந்த பொண்ணு?'' என்று ஆதித்யாவிற்கு மருத்துவம் பார்க்கும் அந்த மருத்துவர் கேட்டார்.

''நான் நல்லா இருக்கேன் அங்கிள். இவ என் பிரண்டு பிருந்தா. இவளை நம்ம ஆதிக்குக் கல்யாணம் பண்ணலாம்ன்னு பார்க்கிறோம்'' என்று ப்ரியா சொன்னதும்,

''இஸ் இட்?'' என்று கேட்ட டாக்டர் பிருந்தாவைப் பார்வையிட்டார்.

''கஸ்தூரி ஆன்ட்டி ஆதிக்கு உடனே கல்யாணம் பண்ணனும் என்று நினைக்குறாங்க. அவரோட அம்னீசியாவால அவரோட குடும்பமே நிலைகுலைந்து போயிருக்கு'' என்று ப்ரியா சொன்னதும் பிருந்தா அதிர்ந்தாள்.

'அம்னீசியாவா? அது தான் ப்ரியா தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டாளா? நம்மையும் தெரியாதது போல் பார்த்தாரா? அன்னைக்குப் போனிலும் அப்படிப் பேசினாரா? ஆனால் விஷ்ணு, மெடிக்கல் ரெப், எனக்கு யாரும் இல்லை... நான் தனிக்காட்டு ராஜான்னு சொன்னது எல்லாம் ஏன்? எதுக்கு அடுக்கடுக்கா இத்தனைப் பொய்கள்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட பிருந்தா அமைதியாக நடப்பவற்றை வேடிக்கைப் பார்த்தாள்.

''ம்ம்ம் அவனுக்கு அம்னீசியா வந்ததில் இருந்து ரொம்ப கோபமா தான் நடந்துக்கிறான். அதுவும் இல்லாமல் நடக்க முடியாமல் இன்னொருத்தரைச் சார்ந்து

இருக்க வேண்டிய அவனோட இயலாமை கோபமா வெளிப்படுது. அவன் சீக்கிரமா நடக்க ஆரம்பிச்சிடுவான். அது ஒண்ணும் பிரச்சனை இல்லை'' என்றார்.

மருத்துவர் ஆதித்யா சீக்கிரமே நடந்து விடுவான் என்று உத்திரவாதம் அளித்ததும், ''ஆதி நடந்திட்டல் அதுவே போதும் அங்கிள். அவரோட அம்னீசியா எப்போ சரியாகும்? அதனால் ஏதாவது பிரச்சனை வருமா?'' என்று ப்ரியா சந்தேகம் கேட்டாள்.

''நாம பழைய நினைவுகளை போர்ஸ் பண்ணித் திணிக்கக் கூடாது. அது அவன் ஹெல்த்துக்கு நல்லது கிடையாது. அவனை ஒரு புது மனுஷனாவே நடத்தணும்.''

''என் பிரண்டு பற்றி நானே பெருமையா சொல்லக் கூடாது அங்கிள். ரொம்ப பொறுமைசாலி. அவ அவனை நல்லா ஹேண்டில் பண்ணுவாள்.''

''இப்படி ஒரு நிலையில் இருக்கிற ஆதியை ஏன் உன் பிரெண்டுக்குத் தேர்ந்தெடுக்கிறாய் ப்ரியா? உன் பிரண்டுக்கு ஏதாச்சும் பிரச்சனையா?''

''ஆமா அங்கிள். அவ சொத்தை உடனடியா மாத்த வேண்டியிருக்கு. Beggars are not choosers என்று சொல்லுவாங்க. அவ இப்போ அந்த நிலையிலே தான் இருக்காள்'' என்று ப்ரியா சொன்னதும் முதல் முறையாக பிருந்தா வாய் திறந்து,

''யார் பெக்கர்? நானா? இல்லை விஷ்ணுன்னு பொய் சொல்லி என்னைக் கல்யாணம் பண்ணிட்டுத் தான் யாருன்னே தெரியாமல் படுத்திருக்கும் ஆதியா?'' என்று எகத்தாளமாகக் கேட்க,

மருத்துவரும், ப்ரியாவும் ஒரு சேர அதிர்ந்தனர்!



''என்ன பிருந்தா சொல்லுறே? ஆதியா? நீ சொன்ன விஷ்ணு, ஆதியா?'' என்று அவளைப் பார்த்துக் கேட்ட ப்ரியா மருத்துவரிடம் திரும்பி நடந்தது அனைத்தையும் தெரிவித்தாள்.

அதன் பின் தான் காரியங்கள் வேகமாக நடந்தன.

மருத்துவரின் அறையை விட்டு வெளியே வந்த ப்ரியா, ''என்னாலே நம்பவே முடியலை பிருந்தா. நான் அன்னைக்கு பீச்சிலே உன்னைப் பார்க்க வந்த போது ஆதி பாண்டிச்சேரி வந்திருந்தார். நான் உன்னைப் பார்க்கப் போவதா அவரிடம் சொல்லிவிட்டுத் தான் வந்தேன். ஆனால் நான் அவரிடம் உன் பிரச்சனைப் பற்றி எதுவுமே சொல்லலை. நீ என்னை நம்பணும்'' என்றாள்.

''லூசு மாதிரி உளறாதே ப்ரியா. உன்னை நம்பலைன்னா நான் என்னையே நம்பலைன்னு அர்த்தம். நீ சொன்ன மாதிரி அன்னைக்கு அவர் அந்தப் படகின் மறைவிலே உட்கார்ந்து இருந்து நாம பேசினதைக் கேட்டு இருக்கலாம்.''

''ம்ம்ம் அதுக்கு வாய்ப்பு அதிகம் தான். ஆனா ஏன் இத்தனை பொய் சொன்னார்? எனக்குத் தெரிஞ்ச ஆதி நல்லவர்... ரொம்ப ரொம்ப நல்லவர். அவருக்கு அம்னீசியா சரியாகி அவரே வந்து காரணம் சொன்னால் தான் நமக்குப் புரியும்.''

''ஆமா ப்ரியா. அது வரைக்கும் இந்த விஷயம் நம்மோடவே இருக்கட்டும்.''

''நீ சொல்றதும் கரெக்ட் பிருந்தா. ஆனா நான் தான் கொஞ்சம் ஓவர் ரியாக்ட் பண்ணி உன் தாலியைக் கழட்டி

உண்டியலில் போட்டுட்டேன் இல்ல... சாரி பிருந்தா'' என்று ப்ரியா வருத்தம் தெரிவித்தாள்.

''பீல் பண்ணாதே ப்ரியா. அதுவும் நல்லதுக்குத் தான் என்று நினை. இப்போ என்னுடைய நட்பும், சுற்றமும் சூழ இருக்க அந்தத் தாலி அதே கையாலே தானே என் கழுதில் வந்து சேரப் போகுது!

அது மட்டும் இல்லாமல் கணவனுக்கு உடல் நிலை சரியில்லை என்றால் தன் தாலியைக் காணிக்கை செலுத்துவதா சில பெண்கள் வேண்டுவாங்கன்னு கேள்விப் பட்டு இருக்கேன். அது மாதிரி என் கணவரும் இந்த ஆக்ஸிடெண்ட்டுக்கு அப்புறம் குணமாகணும்ன்னு நான் கடவுளிடம் வேண்டி காணிக்கை செலுத்தியதா நினைச்சிக்குவோம்'' என்று சொல்லி தோழியைச் சமாதானப் படுத்தினள்.

''எல்லாம் சரி பிருந்தா. ஆனால் இப்பக்கூட என்னால நீ எப்படி வெறும் ரெண்டு நாள் பழக்கத்திலே எங்க யார்கிட்டேயும் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் இப்படி ஒரு கல்யாணம் பண்ணச் சம்மதித்தாய்ன்னு தான் ஆச்சரியமா இருக்கு'' என்று ப்ரியா வினவ,

''நான் அவரைப் பார்த்தவுடனே எல்லாம் எனக்குக் காதல் பூக்கலை ப்ரியா. இன்னும் சொல்லப் போனால் எனக்குள்ளே இருக்கும் அந்த உணர்வுக்குக் காதல்ன்னு நான் பேர் சூட்ட விரும்பலை. இது அதுக்கும் மேல!

அவர் என் பக்கத்திலே இருக்கும் போது என் மனசெல்லாம் ஒரு வகையான உணர்வு... எப்படிச் சொல்லுறது? ஒரு மன நிறைவு உண்டாகும். நிஜமாச் சொல்லுறேன் ப்ரியா உன் பக்கத்திலே கூட நான் அந்த மாதிரி நிம்மதியா ஃபீல் பண்ணியதில்லை.



இவ்வளவு ஏன்... இப்போ நீ என்னை அவர் ரூமுக்குக் கூட்டிட்டுப் போனே தானே. என்னை அவர் அந்நியப் பார்வை தான் பார்த்தார். என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசலை. ஆனால் என் மனசெல்லாம் நிறைஞ்சு... ஒரு அமைதி உண்டானது. நான் சொல்லுறதைக் கேட்குற உனக்கு பைத்தியக்காரத்தனமாத் தோணலாம். அதை பீல் பண்ணிப் பார்த்தால் தான் ப்ரியா புரியும்.

அதே மாதிரி ஏன் நான் உங்க யார்கிட்டேயும் கல்யாணத்துக்குச் சம்மதம் கேட்கலை...

நீ வெளிநாட்டுக்குப் போனாலும் என்னால உன்னைப் பிடிக்க முடியாதா என்ன?! நான் கேட்டு நீங்க சம்மதிக்கலைன்னா... அந்த பயம் தான். நான் அவரை மிஸ் பண்ண விரும்பலை ப்ரியா. நான் அப்பாவித் தனமா முடிவெடுக்கலை. ஒருவித உணர்வுப் பூர்வமா முடிவெடுத்தேன். அவ்வளவு தான்'' என்று சொல்லிய பிருந்தாவை ஆச்சரிய பாவனையுடன் பார்த்துக் கொண்டிருந்த ப்ரியா,

''கடவுள் எப்பவும் உனக்குத் துணை இருப்பார் பிருந்தா!'' என்றாள்.

* * *

''இது தாங்க அன்னைக்கு நடந்தது. நான் நினைக்கிறேன்... நான் ஏற்கனவே உங்க மனைவி தான் என்று தெரிஞ்சதால தான் டாக்டர் அன்னைக்கு உங்க குறையைப் பற்றி என்னிடம் எதுவும் சொல்லாமல் இருந்திருப்பாரா இருக்கும். குறையைப் பற்றிச் சொல்லி இவ மனசை எதுக்கு வருத்தப்பட வைக்கணும்ன்னு நினைச்சிருப்பாரோ? ஆனால் ஒரு டாக்டரா... தன்னோட கடமையை

நிறைவேற்ற அந்த மெடிக்கல் ஃபைலிலே அவர் கண்டு பிடிச்சதையும் குறிப்பிட்டு இருப்பார்ன்னு நினைக் கிறேன்'' என்று பிருந்தா தனது கணவனுக்கு விளக்கம் கூறினாள்.

''சரிடா, நான் வரலை என்றதும் நீ என்னை தப்பா நினைச்சதெல்லாம் சரி தான். உன் நிலைமையில் நான் இருந்தாலும் அது மாதிரி தான் நினைத்திருப்பேன். ஆனால் இங்க வந்து எனக்கு அம்னீசியா என்று தெரிஞ்ச பின்னால ஏன் முகுந்த் கிட்டே உண்மையைச் சொல் லலை?'' என்று கேட்டவுடன்,

முகத்தில் ஒரு தீவிரத்துடன், ''உங்க பேர் என்ன?'' என்று கேட்டாள்.

''ஆதித்யா. இதுல உனக்கு என்ன குழப்பம்?'' என்று கேட்க,

''அப்புறம் ஏன் என்னிடம் விஷ்ணு என்று பொய் சொல்லி அறிமுகமானீங்க?'' என்றதும், ''ஓ மை காட்! அது நான் உன்னை இம்ப்ரெஸ் பண்ண உங்கப்பா சொன்ன மாப்பிள்ளையின் பேரைச் சொன்னேன்டா. ஆதித்யா, விஷ்ணு எல்லாமே பெருமாளோட நூத்தி எட்டு பேரின் கீழ் வருபவை தானேடா. அதான் மாத்தி சொன்னேன். பேரை மாத்தி சொன்னதால என்னைக் கெட்டவன் என்று முடிவு செஞ்சியா?''

''வேற என்ன முடிவுக்கு என்னை வரச் சொல்லு றீங்க? உங்க பேரு தப்பு? உங்களுக் ஒரு பேமிலி இருப் பதா என்னிடம் நீங்க சொல்லலை. இங்கு வந்து பார்த் தால் உங்க பேரு ஆதின்னு சொல்லுறாங்க. உங்களுக்கு ஒரு அம்மா, தம்பி எல்லாம் இருக்காங்க. உண்மையிலே



என்னைக் காதலிச்சீங்களான்னு சொல்ல வேண்டிய நீங்களோ அம்னீசியாவிலே இருக்கீங்க. உங்களுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருந்த டாக்டரோ உங்களுக்கு பழசு எதையும் போர்ஸ் பண்ணி ஞாபகப் படுத்தக் கூடாதுன்னு சொல்லுறார். என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை. நீங்களும் நானும் சேர்ந்து எடுத்துக் கிட்ட எந்த போட்டோவும் என்கிட்ட இல்லை. அப்புறம் எதை வைச்சு நான் என்னை இவங்க கிட்ட எல்லாம் நிரூபிக்க?

எந்த ஆதாரமும் இல்லாத நிலையில், நான் போய் முகுந்திடம் நான் உங்க அண்ணாவோட மனைவின்னு சொன்னால்... உங்க அம்னீசியா விஷயம் தெரிஞ்சிக் கிட்டு வந்து நான் ஏதோ பொய் சொல்லறேன்னு தானே நினைப்பார். அவர் என்னைத் தப்பானவள் என்று நினைச்சு நமக்கு நடக்க இருக்கும் ரெண்டாம் கல்யாணத் தைத் தடுத்து விட்டால் என்ன செய்வது?

யாருக்கும் தெரியாமல் நடந்த முதல் கல்யாணத்துல நீங்க எனக்குக் கட்டின தாலியை ப்ரியா கோவில் உண் டியலில் போட்டு விட்டாள். அதுக்கு அப்புறம் உங்க குடும்பத்தார் முன்னிலையில் சொந்த பந்தம் சூழ அதே கையால் திரும்பத் தாலியை வாங்கிக்கிட்டேன். அதுக்கு அப்புறம் அவங்ககிட்டே எல்லாம் போய் புதுசா எதைச் சொல்லச் சொல்லுறீங்க?

நான் ஆதியோட பொண்டாட்டின்னு சொன்னா... அது தான் எங்களுக்குத் தெரியுமேன்னு காமெடி பண்ணிச் சிரிப்பாங்க. அதனால எனக்கு அவங்க யார் கிட்டவும் எதுவும் சொல்லணும் என்று தோணலை. ஆனால் நீங்க

உண்மையிலே எப்படிப்பட்டவர்ன்னு தான் சதா சர்வ காலமும் நான் தவியா தவிச்சிக்கிட்டு இருந்தேன்.

இப்போ சொல்லுங்க. எதுக்கு அடுக்கடுக்கா இத்தனை பொய் சொன்னீங்க?'' என்றாள்.

''பேர் மாற்றம் பற்றிய விளக்கம் சொல்லிட்டேன். அப்புறம் என் குடும்பம் பற்றிச் சொல்லாததுக்குக் காரணம்... அம்மா, தம்பி பற்றி எல்லாம் சொல்லியிருந்தால் நீ என்ன சொல்லியிருப்பாய்... அவங்க எல்லாம் சம்மதிச்ச பின்னாலே கல்யாணம் பண்ணலாம்ன்னு தானே சொல்வாய்! இங்க இந்த சுந்தரேச மாமா எங்கம்மாவை நல்லா பிரைன் வாஷ் பண்ணி வைச்சிருந்தார். அவர் பிடியில் இருந்து எங்கம்மாவை மீட்டு சம்மதம் வாங்குறதுக்குள்ளே உனக்கு அந்த மூர்த்தியாலே பிரச்சனை வருமோன்னு நினைச்சுத்தான் நான் தனிக் காட்டு ராஜான்னு பொய் சொன்னேன்.''

''சரி கல்யாணம் முடிஞ்ச உடனேயாவது நீங்க ப்ரியாக்குத் தெரிஞ்சவர்ன்னு சொல்லியிருக்கலாமே?''

''கண்டிப்பா காலையில் எழுந்ததும் உன்னிடம் உண்மையைச் சொல்லி சென்னைக்குக் கூட்டிட்டுப் போறதா தான்டா இருந்தேன். ஆனால் நம்ம கல்யாணத்துக்கு மறுநாள் எனக்குக் காலையிலேயே சுந்தரேச மாமா அம்மாக்கு சீரியஸ்ன்னு போன் பண்ணிச் சொன்னார்.

உன்னை எழுப்பி விளக்கம் சொல்ல நேரம் இல்லை. அம்மாவைப் பார்த்த பின்னாலே உனக்கு போன் பண்ணி விளக்கம் சொல்லிக்கலாம்ன்னு தான் அவசரமா இரண்டு வார்த்தையைக் கிறுக்கி வைச்சிட்டுக் கிளம்பினேன்.



நான் இருந்த டென்ஷனில் எனக்கு மூர்த்தி பற்றிய நினைவே வரலை. பாதி வழி போன போது தான் அவன் ஞாபகம் வந்தது. அவன் நினைவு வந்தவுடனே என் டென்ஷன் அதிகமாச்சு. அப்பத்தான் நிலை தடுமாறி அந்த ஆக்ஸிடென்ட் ஆனது.

எனக்கு ஆக்ஸிடென்ட் ஆனவுடனே நான் ரெண்டு விஷயத்துக்காகக் கவலைப்பட்டேன். ஒண்ணு ஐயோ என் பிந்து அந்த மூர்த்திக்கிட்டே மாட்டிக்கக் கூடாதேன்னு! ரெண்டாவது அட்லீஸ்ட் முகுந்திடமாவது நாம பிந்து பற்றிச் சொல்லாமல் போனோமேன்னு!

எனக்கு நினைவு போகும் முன்னாலே, பெருமாளே! என் பிந்துவைக் காப்பாத்துன்னு! தான் வேண்டினேன்'' என்று உருக்கமாகக் கூறினான்.

அவன் சொன்னதைக் கேட்ட பிருந்தா அவனை இறுக அணைத்துக் கொண்டாள். அவளின் மனநிலையைப் புரிந்தவனாய் அவளது உச்சியில் இதழ் பதித்து அவளது முதுகை ஆறுதலாய் வருடிக் கொடுத்து ஆறுதல் படுத்தினான்.

''என்னோட அடுத்த பொய் மெடிக்கல் ரெப். இதை நான் சொல்லலைடா பிந்து... நீ தான் சொன்னாய். கையிலே ரோலக்ஸ் வாட்ச்... டாப் டு பாட்டம் நான் போட்டிருந்த டிரஸில் இருந்து ஷூ வரை பணக்காரத் தனம் மிளிர்ந்தது. நான் ஏதோ மாத்திரைப் பேரை வரிசையாச் சொன்னேன் என்று நீ என்னைப் பார்த்து மெடிக்கல் ரெப்பான்னு கேட்கிறாய்.

நல்ல வேளை பிந்து நான் உனக்கு என்ன காய் பிடிக்கும்ன்னு கேட்டு காய்கறி லிஸ்டைச் சொல்லாது

போனேன். இல்லைன்னா என்னைக் காய்கறிக்காரன் என்று இல்ல சொல்லியிருப்பே!'' என்று சொன்னதும் அவன் மார்பில் முகம் புதைத்திருந்தவள் அவனது மார்பைத் தன் தலையால் செல்லமாக முட்டிக் கொண்டே சிணுங்கினாள்.

''அதுக்கு அப்புறமா நான் உன்னைப் பார்க்க வரும் போதெல்லாம் அதை எல்லாம் கழட்டி வைச்சிட்டுத் தான் வந்தேன். போடுற வேஷத்தைச் சரியா போடணும் தானே!'' என்று கண் சிமிட்டிக் கேட்டவன்,

''அப்புறம் இன்னொரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். நம்ம கல்யாணத்தன்னைக்கு உன் சேலையைப் பற்றிக் கேட்டதும் நீ விளக்கம் சொன்ன பாரு... நான் எப்படித் தெரியுமா கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கினேன்'' என்று சொல்லி ஹா ஹா என்று வாய்விட்டுச் சிரித்தவன்,

''என்கிட்டேயே... அதாவது புடவைக் கடை முதலாளி என்னிடமே இது சாப்ட் சில்க் வெரைட்டின்னு விளக்கம் சொல்லுற... அப்புறம் எப்படி எப்படி அந்தப் புடவையை நீ சீப்பா வாங்கினாயா? நான் ஒரு இளிச்ச வாயன் இருக்கும்போது உனக்குச் சீப்பா கிடைக்கிறதுக்கு என்னம்மா குறைச்சல்?'' என்று கேட்டவுடன்,

அவன் சொல்ல வருவது புரியாது அவனை நிமிர்ந்து பார்த்தவள், ''என்ன சொல்ல வரீங்க? புரியலை...'' என்றாள்.

''நீ அந்தப் புடவையை நம்ம கடையிலே தானே எடுத்தாய்?''

''ஆமா. நானும் ப்ரியாவும் நம்ம கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்னாடி சென்னை வந்த போது எடுத்தோம்.''



''ம்ம் கரெக்ட். ப்ரியா ஜீன்ஸும், டாப்ஸும் எடுக்கப் போனாள். நீ பட்டுப் பிரிவிற்குள் நுழைந்தாய். உனக்கு என்ன புடவை காட்டணும். என்ன கலரில் காட்டணும் என்றெல்லாம் நான் அந்த சேல்ஸ்மேனிடம் செல்போனில் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக்கிட்டே இருந்தேன்'' என்று சொன்னதும்,

அவள் தனது கண்களை அகல விரித்து ஒரு விரிந்த புன்னகையுடனும், ஒரு ஆர்வத்துடனும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''நீ பிங்க் புடவையை செலக்ட் பண்ணி பில் போட அனுப்பிய பின்னால் தான் விலையைப் பற்றிக் கேட்டாய். நான் அந்த சேல்ஸ்மேனிடம் பொய் சொல்லச் சொன்னேன். பதினாலாயிரம் புடவையை உன்னிடம் நாலாயிரம் என்று சொல்லி பிரைஸ் டேக் எல்லாம் மாற்றி உன்கிட்டே கொடுத்தோம். நீயும் சந்தோஷமா வாங்கிட்டுப் போனாய். பதினாலாயிரம் புடவையை நாலாயிரத்துக்கு வாங்கினால் சீப்பாத் தானே தெரியும்'' என்று கிண்டல் பண்ணினான்.

அவனது கிண்டலைச் சட்டை செய்யாது ஆர்வம் கொப்பளிக்க, ''அப்படின்னா நீங்க எப்போ என்னை முதன் முதலா பார்த்தீங்க? நானும் ப்ரியாவும் பீச்சிலே பேசினதைக் கேட்ட அன்னைக்கு என்னை பர்ஸ்ட் டைம்மா பார்க்கலையா? அதுக்கும் முன்னாடியே பார்த்து இருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

''யெஸ். அந்த பீச் விஷயத்துக்கு ஒரு மாசத்துக்கு முன்னாலேயே உன்னைப் பார்த்திட்டேன்டா. பார்த்த நிமிஷத்திலேயே நீ தான் என் வைஃப் என்று பிக்ஸ்

பண்ணிட்டேன். உன்னை நம்ம கடையிலே வச்சுப் பார்த்தது செகண்ட் டைம். பீச்சிலே பார்த்தது மூன்றாவது தடவை'' என்றான்.

''அப்போ பர்ஸ்ட் டைம் எங்கே பார்த்தீங்க?'' என்று ஆர்வத்துடன் கேட்டவளிடம்,

''உன் பிரண்டு பெர்த் டேக்கு நீங்க ஹோட்டல் வந்தீங்க இல்லை. அப்பத் தான் உன்னைப் பார்த்தேன். உன்னைப் பார்த்த உன்னோட இந்த சாந்தமான முகம் என் மனசிலே பதிஞ்சிடுச்சு. உன்கிட்டே வந்து பேச லாம்ன்னு நான் நினைச்சப்போ ப்ரியா உன் பக்கத்திலே வந்ததும், நான் மறைவா உட்கார்ந்து நீ பேசினதை... சாரி சாரி நீ கேக் வாங்கித் தானம் பண்ணிய எல்லாம் கேட்டேன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

''ஓ! அங்க வைச்சுப் பார்த்தீங்களா?!''

''ப்ரியா கைக் கழுவ எழுந்து போய் உடனே நான் சடார்ன்னு எழுந்து ஓடப் போனேன். அப்போ தான் உன் மேலே மோதினேன்.''

''ஹேய்! அது நீங்களா? ஏன் நின்னு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் போனீங்க?''

''எதுக்குமா? இல்ல எதுக்குன்னு கேட்கிறேன்?'' என்று கிண்டலாகக் கேட்டவன் தொடர்ந்து,

''ப்ரியா என்னைப் பார்த்தால் உன்னிடம் இவர் தான் ஆதி. எனக்கு அண்ணன் மாதிரி.அப்படின்னு அறிமுகப் படுத்துவாள். உடனே நீ என்ன செஞ்சு இருப்பாய்... ஹாய் அண்ணா! அப்படின்னு சொல்லி இருப்பாய். இது எனக்குத் தேவையா சொல்லு. அது தான் ப்ரியா கண்ணில் படாமல் ஓடிப் போனேன். நீ நம்ம கடைக்கு



வந்த போதும் ப்ரியாகிட்டே போனிலே பேசி அனுப்பி னேனே தவிர நேரிலே ஆஜர் ஆகலையே'' என்று அவன் தான் ஓடி ஒளிந்த கதையைச் சொல்ல பிருந்தா புன் னகைத்தாள்.

''சே மிஸ் பண்ணிட்டேன். அன்னைக்கே அந்த புடவையைக் காட்டி அதன் விலையையும் சொல்லி இருந்தால் உங்க பித்தலாட்டத்தை ப்ரியா அப்பவே கண்டு பிடிச்சுச் சொல்லி இருப்பாள்'' என்று பிருந்தா அவனைக் கிண்டல் பண்ண அவன் சிரித்துக் கொண்டே தொடர்ந்தான்.

''உன்னிடம் தனியா அறிமுகம் ஆகணும்ன்னு காத் திருந்தேன். முதல் ரெண்டு சந்திப்பிலும் ப்ரியா உன் கூட இருந்ததால நான் உன்னை நெருங்க முயற்சிக் கலை. மூணாவது முறையா பீச்சிலே வைச்சு உன் பிரச்சனைகளை எல்லாம் ஒட்டுக் கேட்டேன்.

அடுத்த நாள் தியேட்டரில் உனக்காகக் காத்திருந் தேன். உன் பிரண்டு வரக் கூடாதுன்னு வேண்டிக் கொண்டே இருந்தேன். என் பிரார்த்தனை வீண் போகலை.

அப்புறம் ஹோட்டலில் நீ சாப்பிட்டு முடிச்சு கை கழுவப் போகும் பொழுது நான் தான் உன் செல்போனை எடுத்து மறைச்சு வைச்சேன்...'' என்று சொன்னதும்,

''அடப் பாவி! செஞ்ச வேலை எல்லாம் பித்தலாட் டம்'' என்று பிருந்தா அவனைச் செல்லமாகத் திட்டி னாள்.

சிரித்துக் கொண்டே அவன் தனது விளக்கத்தைத் தொடர்ந்தான்.

''அடுத்த நாள் நீ ரிஸிஸ்டர் மேரேஜ் பண்ணிக்குவோமா என்று என்னிடம் கேட்டாய். நான் நிஜமாவே கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு சொல்லிட்டு சென்னைக்கு வந்திட்டேன். அப்போ தான் உங்க லாயர் அங்கிள் என்னை வந்து பார்த்தார். அவருக்கு என்னை ரொம்பப் பிடிச்சிருந்தது.

அவர் போன அரை மணி நேரத்துக்குள்ளே நீ போன் செஞ்சு மூர்த்தி விஷயம் சொல்லி அழுதாய். அது தான் நான் உடனே முடிவு எடுத்தேன். உனக்குன்னு இருக்குற உண்மையான ரெண்டு உறவு உன் லாயர் அங்கிளும், ப்ரியாவும் தான். அவங்களுக்கு என்னைப் பிடிச்சுப் போச்சு. அப்புறம் எதுக்காகக் காத்திருக்கணும். எல்லோரையும் பின்னாடி சமாளிச்சிக்கலாம்ன்னு துணிஞ் உன் கழுத்தில் தாலியைக் கட்டினேன்.

நான் சொன்ன எல்லா பொய்களுக்கும் பின்னாலே நான் உன் மேல வைச்ச காதல் இருந்துச்சுடா பிந்து!''

அவனை அண்ணாந்து பார்த்துக் கொண்டே, ''என்னை முதலில் பார்த்ததும் நீங்க என்ன நினைச்சீங்க?'' என்று ஆர்வம் மிகவுற பிருந்தா கேட்டதும்,

ஒரு புன்முறுவலுடனே, ''நீ சரியான பேக்குன்னு நினைச்சேன்டா!'' என்று ஆதித்யா சொன்னதும்,

அவள் அவனிடமிருந்து விலகி அவனை முறைத்தாள்.

''பின்னே நீயே சொல்லுடா பிந்து... இவ்வளவு நேரம் நான் சொன்ன எந்த விஷயத்திலாவது நீ புத்திசாலின்னு சொல்லுற மாதிரி நடந்துக்கிட்டு இருக்கியா?'' என்று ஆதித்யா அவளைப் பற்றி அவளிடமே அபிப்பிராயம் கேட்டான்.



''ஒகோ! உங்க ஊரிலே பேக்கைத் தான் எல்லோரும் கல்யாணம் பண்ணுவீங்களா?'' என்று அவள் நக்கலடிக்க,

''எனக்கு ஊரிலே உள்ளவங்களைப் பற்றி எல்லாம் தெரியாதுடா. ஆனால் நான் பேக்கைத் தான் கல்யாணம் பண்ணுவேன். நினைவோட ஒரு முறை. சுய நினைவு இல்லாமல் ஒரு முறைன்னு, ரெண்டு தடவை தாலி கட்டுவேன்'' என்று சொல்லி அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

''ஆதியா என் வாழ்க்கையிலே நுழைஞ்ச நீங்க என்கூட இணக்கமாவே இருக்கலை. எப்போதும் ஒரு இறுக்கத்துடனே தான் இருந்தீங்க?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

''யாருக்குடா தெரியும்? எனக்கு தான் இந்த ஒன்பது மாசத்துல நடந்த எதுவும் ஞாபகம் இல்லையே? ரொம்பக் கோபிச்சுக்கிட்டேனா?''

''கோபம் மட்டுமா? ஏன் இப்படி பண்ணுறீங்கன்னு காரணமும் புரியாமல் நான் எப்படி எல்லாம் தவிச்சேன் தெரியுமா?'' என்று பிருந்தா குறைபட்டாள்.

அவர்களது இரண்டாவது திருமணத்திற்குப் பின் அவர்கள் வாழ்வில் நடந்தது அனைத்தையும் அவனுக்கு விவரித்தாள்.

''இந்த எட்டு மாசமா உன்னிடம் சரியா பேசலைன்னு சொல்லுறே. ஆனால் குஷாலா மட்டும் இருந்தேனா?'' என்று கண் சிமிட்டிக் கேட்க,

இல்லை என்று தலையாட்டி மறுத்தவள், ''நீங்க பாசமா ஒரு முத்தம் கூடக் கொடுக்கலை தெரியுமா?'' என்றாள்.

''அப்போ தரலைன்னா என்னடா... நான் வேணா இப்போ தரவா?'' என்று அவன் உற்சாகமே உருவாகக் கேட்க,

''ப்ச்சு...'' என்று சலித்துக் கொண்டாள்.

ஒரு சில நொடிகள் சிந்தனையில் ஆழ்ந்தவன், ''அப்புறம் எப்படிடா நீ கர்ப்பம் என்பதை என்னை நம்பும்படி செய்தாய்?'' என்று கேட்டதும் அவள் முகம் வேதனையில் கசங்கியது.

''நீங்க எனக்கு ரெண்டாவது தாலி கட்டி முடிச்ச ஒரே வாரத்தில் நான் கர்ப்பமான நியூஸ் எனக்குத் தெரிஞ்சு போச்சு. ஒரு பக்கம் சந்தோஷமா இருந்துச்சு. இன்னொரு பக்கம் உங்களை எப்படி நம்ப வைக்கப் போறோம்ன்னு கவலையா இருந்துச்சு. நான் கர்ப்பம்ன்னு தெரிஞ்ச அன்னைக்கு நைட் அத்தையோட தூக்க மாத்திரையை உங்க பாலில் கலந்து கொடுத்து... நீங்க தூங்கியதும்... நீங்களும் நானும் நெருக்கமா இருந்த மாதிரி செட்-அப் செஞ்சு...'' சொல்லிக் கொண்டிருந்தவளின் வாயைப் பொத்தி கண்களில் வழியும் நீரைத் துடைத்து,

''சாரிடா. போதும்டா. நீ இதுக்கு மேல எதுவும் சொல்ல வேண்டாம். உன்னை அந்த மூர்த்தியிடம் இருந்துக் காப்பாத்தணும்ன்னு நான் எடுத்த அவசர நடவடிக்கை உன்னைப் பல சிக்கலுக்கு ஆளாக்கிடுச்சு. சாரிடா. வெரி சாரி'' என்று ஆத்மார்த்தமாக மன்னிப்புக் கேட்கத் தன்னோடு அணைத்துக் கொண்டு ஆறுதல் படுத்தினான்.

அவன் அதற்கு மேல் எதுவும் பேச வேண்டாம் என்று சொல்லியும் கேளாது அவள் தன் மனதில் அழுத்திக் கொண்டிருப்பதை வெளியே கொட்ட ஆரம்பித்தாள்.



''நான் டாக்டரிடம் செக் அப் போன அன்று அவர் நம் கல்யாண நாளைக் கேட்ட பொழுது முதல் திருமண நாளைச் சொன்னேன். அதனால ஹாஸ்பிட்டலில் இந்த மாசக் கணக்கு அவங்களைப் பொறுத்தவரை சரியாப் போச்சு. எனக்கு வாந்தியும் வந்ததே இல்லை. அதனால முதல் மாசம் இவங்க எல்லோர்கிட்டே இருந்தும் நான் கர்ப்பமான விஷயத்தை ரொம்ப சுலபமா மறைச்சிட்டேன். ஆனால் நம்ம வீட்டுக்கு யாராவது வந்து ஏன் வயிறு இவ்வளவு பெரிசாயிருக்கு என்று கேட்கும் போது டிவின்ஸ் என்பதால் தான் பெருசா இருக்குன்னு சொல்லி சமாளிச்சேன்.

பிரசவம் என்பது ஒரு பெண்ணிற்கு மறுஜென்மம்ன்னு சொல்லுவாங்க. அதனால நான் பிரசவ அறைக்குள்ளே போகும் முன்னாலே உங்களிடம் உண்மையைச் சொல்லணும் எனக்கு என்று ரொம்பவே தோன்றியது. ஆனால் அன்னைக்கு நீங்க இருந்த நிலைமையைப் பார்த்து நான் பழசை ஞாபகப்படுத்தும்படியா எதுவும் செய்ய வேண்டாம்ன்னு முடிவு பண்ணிப் பேசாமல் விட்டுட்டேன்.

உங்க மாமா வந்து என்னைத் தரக் குறைவா பேசின போது எனக்குப் பதட்டத்திலே எப்படிடா நம்மை நிருபிக்கப் போறோம்ன்னு பயம் தான் வந்துச்சே தவிர, ஒரு DNA டெஸ்ட் எடுத்தால் போதுமேன்னு யோசனை வரலை. நீங்க சொன்ன மாதிரி நான் பேக்கு தான் இல்லை?'' என்று கேட்டு கண்ணீர் வடித்தாள்.

சற்று முன்பு கூட அவளை பேக்கு என்று கிண்டல் செய்தவனால் இப்பொழுது அவளுடன் சேர்ந்து வேதனை படத்தான் முடிந்தது.

"விடுடா. பதட்டத்தில் நிதானம் இழப்பது சாதாரணமான விஷயம் தானே. அழாதே. பச்சப் புள்ளக்காரி. அவளை ஓவரா அழ விடாதேன்னு சொல்லித் தான் என்னை அம்மா ரூமுக்குள்ளே விட்டாங்க. அழாமல் தூங்கி ரெஸ்ட் எடு'' என்று சொல்லி அவளது கண்ணீரைத் துடைத்து, அவளை நேராகப் படுக்க வைத்து அவளுக்கு அருகில் அமர்ந்து கொண்டு அவளது தலையை வருடிக் கொடுத்துத் தூங்க வைத்தான்.

வெகு நாட்களுக்குப் பின்... இல்லையில்லை வெகு சில வருடங்களுக்குப் பிறகு... அதாவது தாய் தந்தை இழப்பிற்குப் பின் இன்று தான்... தன் குடும்பம் என்ற நிலை உருவானதில் எல்லையில்லா ஆறுதல் அடைந்தவள் கணவனின் கரம் பற்றியவாறே தூங்கிப் போனாள்.



# 23



ஆதித்யாவால் தூங்க முடியவில்லை. அவனது மனம் பிருந்தா சொன்னதையே சுற்றிச் சுற்றி வந்தது.

'ஒருத்தருக்கு அம்னீசியா என்றால் பழசை மறக்கலாம். அடிப்படை குணமுமா மறக்கும்? அல்லது மாறும்?! நான் எப்படிப் பூவைப் பிய்த்து, அல்வாவைக் கொட்டி முகுந்த் மேல் பொறாமைப்பட்டு... இதை எல்லாம் ஏன் செய்தேன்? அப்போ அடிப்படையில் நான் நல்லவன் இல்லையா? நல்லவன் போல் முகமூடி அணிந்து கொண்டு ஏமாற்றுகிறேனா? ஒரே குழப்பமா இருக்கே!' என்று சிந்தித்துக் கொண்டிருந்தவன் தன்னையும் அறியாது தூங்கிப் போனான்.



பிருந்தா காலையில் எழுந்து குழந்தைகளைக் கவனித்து குளித்துச் சாப்பிட்டு முடிக்கும்போது ஆதித்யா கடைக்குச் செல்லத் தயாராகி நின்றான்.

"இன்னைக்கே, இப்பவே கடைக்குப் போறீங்களா?'' என்று வருத்தத்துடன் பிருந்தா கேட்க,

"வீட்டிலே இருந்தால் மட்டும் என்னை நீ ஸ்பெஷலா கவனிக்கப் போகிறாயா என்ன?'' என்று கண் சிமிட்டிக் கேட்டான்.

அவள் அவனைப் பார்த்து முறைக்கவும்...

"அம்னீசியா சரி ஆகிடுச்சு இல்லையா. அதனால நான் போய் கடையிலே எல்லோரையும் ஒரு விசிட் அடிச்சிட்டு சீக்கிரமா வந்திடுவேன். நீ ரெஸ்ட் எடு'' என்று சொல்லி விடைபெற்றான்.

குழந்தைகள் இருவரும் தூங்கிக் கொண்டு இருந்தார்கள். கணவன் சென்ற பின் பொழுது போகாமல் அந்த அறையைக் குடைந்து கொண்டிருந்தாள்.

இதுநாள் வரை ஆதித்யாவின் அலமாரியைத் தொடும் துணிச்சல் பிருந்தாவிற்கு வந்ததில்லை. அதனால் இன்றாவது அவனது அலமாரியைத் திறந்த துணிகளை எல்லாம் அடுக்குவோம் என நினைத்து அதைத் திறந்து பார்த்தாள்.

ஆனால் அவனோ உடைகளை எல்லாம் சீராகவே அடுக்கி வைத்திருந்தான். உடைகளுக்குப் பின்னே ஒரு டைரி இருந்தது. அதை எடுத்துப் பார்ப்பதா வேண்டாமா என முதலில் குழம்பியவள் பின் என்ன தான் இருக்கு என்று பார்ப்போம் எனத் திறந்து பார்க்கலானாள்.

முதல் ஆறு மாதங்களுக்கு மேலாக அதில் எதுவுமே எழுப்பப்படவில்லை. ஜூலை மாதம் தான் எழுதத் தொடங்கி இருந்தான். பிருந்தா அதை வாசிக்கலானாள்.

**ஜூலை 25**

எனக்குப் பத்து நாள் முன்பே ஆக்ஸிடெண்ட் நடந்ததாம். அதிலே எனக்கு அம்னீசியாவாம். என் பேர் என்னவென்றே எனக்குத் தெரியலை. எனக்கு ஆக்ஸிடெண்ட் நடந்து, ஆபரேஷன் எல்லாம் முடிந்து கண் விழித்துப் பார்த்த பொழுது என் குடும்பம் என்று சொல்லிக் கொண்டு ஒரு அம்மாவும், பையனும் வந்தார்கள். என் பேர் ஆதித்யாவாம். அவர்கள் என் தாயும், தம்பியுமாம். எனக்கு என்னையே தெரியவில்லை. அவர்களையா தெரியப் போகிறது?

எனக்கு இதற்கு முன்பு டைரி எழுதும் பழக்கம் இருக்கிறதா என்று கூடத் தெரியவில்லை. ஆனால் என்னுடைய இந்த விநோத வாழ்க்கையில் நடப்பவற்றை இன்றிலிருந்து நான் இந்த டைரியில் பதிவு செய்யப் போகிறேன்

**ஜூலை 30**

இன்று முகுந்த் என்னுடைய உடைந்து போன செல் நம்பருக்குத் தான் ஒரு டூப்ளிகேட் சிம் கார்டு வாங்கியிருப்பதாகச் சொல்லி என்னிடம் சிம் கார்டு ஒன்றைக் கொடுத்தான்.

அதை நான் ஆன் செய்தவுடன் முதலில் அழைத்தது ஒரு ஆண். அவர் பாட்டுக்கு மடமடவென்று பேசிக் கொண்டே போகிறார். எனக்கு அவர் யார் என்றே தெரியவில்லை. அப்புறம் என்னால் எப்படி அவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியும்? டையர்டா இருக்கிறேன் என்று சொல்லி அவரது அழைப்பைத் துண்டித்து விட்டேன்.



அடுத்து அழைத்தது ஒரு பெண். யாரோ விஷ்ணு வேண்டுமாம். அப்படி யாரும் இல்லை என்று சொன்னால்... விளையாடாதீர்கள் என்கிறாள். ஆமாம் நானே கால் ஒடிந்து கிடக்கிறேன். இதிலே இவள் கூட தான் விளையாடுகிறேனாக்கும். அவள் அழைப்பைத் துண்டித்தவுடன் செல்போனை ஸ்விட்ச் ஆஃப் செய்து போட்டுவிட்டேன்.

முகுந்திடம் சொல்லி புது எண்ணை வாங்கித் தரச் சொன்னேன். எனக்கு இப்போதைக்கு நன்கு தெரிந்த அவனிடமும், அம்மாவிடமும் நான் பேசினால் போதும் என்று சொல்லிவிட்டேன்.

**ஆகஸ்ட் 10**

பிருந்தா... நல்ல பேர். அவள் தான் எனக்கு மனைவியாகப் போகிற பெண்ணாம். இவளை உனக்குப் பிடித்து இருக்கிறதா என்று அம்மா கேட்டார்கள். எனக்கு அவளைப் பார்த்த கணமே பிடித்துப் போனது. ஏதோ ஜென்ம ஜென்மமாய் அவளுடன் நான் வாழ்ந்தது போல் எனக்குத் தோன்றுகிறது.

இந்த ஜென்மத்தில் என்னையே எனக்கு யார் என்று தெரியவில்லையாம். இதில் அவளுடன் நான் பல ஜென்மங்கள் வாழ்ந்து இருக்கேனாம். எனது சிந்தனை வேடிக்கையாக இல்லை?!

அவனது ஜென்மாந்திர தொடர்பு பற்றிய வரிகளைப் படித்தவுடன் பிருந்தாவிற்கு மேனி சிலிர்த்தது.

**ஆகஸ்ட் 16**

இன்று எனக்குத் திருமணம். வீல் சேரில் அமர்ந்து கொண்டே தாலி கட்டுகிறேன். இப்படி ஒரு திருமணம்

தேவையா? என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். ஆனால் பிருந்தாவின் அருகில் இருந்தால் உன் மனம் [illegible] அடையும் என்று எனக்குள் ஒரு குரல் கேட்கிறதே! அதை அலட்சியப்படுத்த என்னால் முடியவில்லை. அதனால் எந்த நிலையில் என்றாலும் இந்த திருமணம் உடனே நடக்கட்டும் என்று சம்மதித்து விட்டேன்.

திருமணம் நல்லபடியாக முடிந்தது. மாலையில் முகுந்தின் செல்போனுக்கு அழைத்து என் நண்பன் ஒருவன் என்னிடம் பேசினான். அவனை எனக்கு யாரென்று தெரியவில்லை. திருமண வாழ்த்துக் கூறினான். அவன் அழைப்பைத் துண்டிக்கும் முன் உன் அம்மாவுக்குத் தெரியாமல் நீ காதலித்த பெண்ணைத் தானே கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டான்.

நான் காதலித்தேனா? யாரை என்று அவனிடமே கேட்டேன். அவன், தான் வாய் தவறி ஏதோ உளறி விட்டதாகச் சொன்னான். அவனை வற்புறுத்திக் கேட்ட பொழுது அதற்கு மேல் தனக்குச் சத்தியமாக எந்தத் தகவலும் தெரியாது என்று சொல்லி விட்டான்.

அப்படியென்றால் நான் இன்னொரு பெண்ணிற்குத் துரோகம் இழைத்து விட்டேனா? அன்றொரு நாள் எனது செல்போனிற்கு ஒரு பெண் அழைத்தாளே! அவளாக இருக்குமோ? இல்லை இல்லை... அவள் விஷ்ணு என்றல்லவா கேட்டாள். என்னைக் காதலித்தவள் என்றால் ஆதி என்று அழைத்துத்தானே பேசி இருப்பாள்.

இப்போ நான் யாருக்குத் துரோகம் செய்யப் போகிறேன்? காதலித்தவளுக்கா? இல்லை தாலி கட்டியவளுக்கா? ஒன்றும் புரியவில்லையே! பழசை நினைத்துப் பார்த்தாலே தலை எல்லாம் வலிக்கிறது.



செப்டம்பர் 1

நாளை பிரகாஷிற்குக் கல்யாணமாம். அதற்கு இவள் போக வேண்டுமாம். இவளுக்கு வேண்டுமென்றால் ரோஷம் இல்லாமல் போகலாம். ஆனால் எனக்கு இருக்கே! சொத்துக்கு ஆசைப்பட்டு இவளுக்கு நெருக்கடி கொடுத்தவர்கள் தானே இந்தப் பிரகாஷும், அவன் அம்மாவும்! அதை எப்படி அதற்குள் மறந்து போனாள்?

அப்புறம் அந்தப் பெண்ணோட அண்ணன் மூர்த்தி. ஏனென்று தெரியவில்லை அவனைப் பார்க்கும் போதே அவனது கழுத்தை நெரிக்க வேண்டும் என்று ஆத்திரமாக வருகிறது. அவனும் அவன் பார்வையும்! என்னால் துணைக்குப் போக முடியாத சூழலில் அவன் இருக்கும் இடத்திற்கு, இவளைத் தனியாக எப்படி என்னால் அனுப்ப முடியும்?

நான் அந்த மூர்த்தி பற்றி விஷ்ணுவிடம் நான் கூறி இருந்தேன். ஆதியிடம் எதுவும் சொன்னதில்லை. பழசை மறந்த நிலையிலும் அவன் மீது ஆத்திரம் வருது என்றால் உங்க ஆழ் மனசிலே அவன் மீது வெறுப் புணர்ச்சி பதிந்து போயிருக்கு என்று தானே அர்த்தம்! டூ யூ லவ் மீ தட் மச் ஆதி?! என்று பிருந்தா மானசீகமாகத் தன் கணவனைக் கேட்டுக் கொண்டாள்.

செப்டம்பர் 25

இன்று கடையில் இரண்டு பேர் என்னிடம் ஆர்டர் கேட்டு வந்தார்கள். அவர்கள் எங்களுக்குத் தொடர்ந்து சப்ளை செய்து வருவதாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது சரியா என்று நான் கம்ப்யூட்டரில் சரி பார்த்

தேன். ஆம். அவர்கள் எங்களுக்குத் தொடர்ந்து சப்ளை பண்ணிக் கொண்டு தான் இருந்திருக்கிறார்கள்.

நான் சரி பார்க்க எடுத்துக் கொண்ட ஐந்து நிமிடத்தில் அவர்கள் இருவருக்கும் ஏசி அறையையும் மீறி வியர்வை ஆறாகப் பெருகி ஓடியது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே வேறு இருந்தார்கள். அவர்களிடம் ஏதோ தவறு இருப்பதாக எனக்குப் பட்டது. அதனால் அவர்களிடம் தற்பொழுது எதுவும் தேவையில்லை என்று சொல்லி அனுப்பிவிட்டேன்.

முகுந்த் அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து, ''உனக்குத் தெரியாது அண்ணா. இவங்க நம்ம பழைய சப்ளையர்கள். அதனால ஆர்டர் தரணும்'' என்றான். முகுந்திடம் நான் கடுமையாகப் பேசி ஆர்டர் தரவிடாமல் செய்து விட்டேன்.

பத்து நிமிடங்கள் கழித்து முகுந்த் என்னை மீண்டும் வந்து சந்தித்தான். அந்த சப்ளையர்கள் இருவரும் பேசிக் கொண்டு இருந்ததை அவன் கேட்க நேர்ந்ததாகச் சொன்னான். அந்த சப்ளையர்கள் இருவரும் இரண்டு மாதத்திற்கு முன்பு... அதாவது என் ஆக்ஸிடெண்டுக்கு முன்பு தவறு செய்ததால், இனிமேல் நீங்கள் எங்கள் கடைக்குச் சப்ளை எதுவும் செய்யக் கூடாது என்று நான் அவர்கள் கணக்கை முடித்துத் திருப்பி அனுப்பி விட்டேனாம். இப்பொழுது எனக்கு அம்னீசியா என்று கேள்விப் பட்டு மீண்டும் ஆர்டர் பிடிக்கலாம் என்று வந்தார்களாம். ஆனால் ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை என்று தங்களுக்குள் புலம்பிக் கொண்டு சென்றதாக முகுந்த் சொன்னான்.



அம்னீசியாவில் நான் பழசை மறந்திருக்கலாம். ஆனால் எதிரே இருப்பவர்களை எடை போடும் திறமையுமா மறந்து போகும்? ஹூம்.

அப்படியும் சொல்வதற்கில்லை. இதோ என் கண் முன்னால் தினமும் நடமாடுகிறானே முகுந்த். இவன் எப்படிப்பட்டவன்? இவனுக்கும் எனக்குமான உறவு எவ்வளவு நெருக்கமானது? எதுவுமே எனக்கு நினைவில் லையே! எதையும் புரிந்து கொள்ளவும் முடியவில் லையே! என்னால் எடை போடவும் முடியவில்லையே!

என்னை ஒருமையில் அழைத்துப் பேசுகிறான். அது என் மீதான நெருக்கத்தைக் காட்டுகிறதா? இல்லை அலட்சியத்தையா? இல்லை இல்லை... கண்டிப்பாக அது அலட்சியம் கிடையாது.

யாரை நான் நம்பணும்? யாரை நம்பக் கூடாது. ஒன்றுமே புரியவில்லை. இனிமேல் கடைக்கு நான் போவதா வேண்டாமா? கடைக்குப் போகாமல்... சம்பாதிக்காமல் ஒரு ஆண் மகனால் எப்படிக் காலம் தள்ள முடியும்? என்னை நம்பி வேறு ஒருத்தி வந்து விட்டாள். ஓ மை காட்! ஹெல் வித் திஸ் அம்னீசியா என்று குரல் உயர்த்திக் கத்த வேண்டும் போல் இருக்கறது.

ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. அந்த ஆத்திரத்தில் தான் பிருந்தா தான் கருவுற்ற சேதி சொன்னபோது அலட்சியத்துடன் நடந்து கொண்டேன். பாவம் அவள்!

**டிசம்பர் 28**

இன்று முகுந்திற்குப் பிறந்த நாள். எனக்குத் தான் பழசு எதுவும் ஞாபகம் இல்லையே! நிலைமை அப்படி இருக்க

எனக்கு எப்படி அவன் பிறந்த நாள் ஞாபகம் வரும்? பிருந்தா சட்டை வாங்கிப் பரிசளித்தாள். கோவிலுக்குப் போய் பூஜை எல்லாம் செய்து திரும்பினாள். எல்லாவற்றையும் சரியாகச் செய்தவள் என்னிடம் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? அவள் பரிசு கொடுக்கிறாள். நான் சும்மா கை கட்டி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்த நிமிடம் எனக்கு எவ்வளவு சங்கடமாக இருந்தது. எல்லாவற்றையும் சொல்லி அவளிடம் சண்டை போட வேண்டும் என்று தான் நினைக்கிறேன். ஆனால் அவளைப் பார்த்ததும் ஒரு வாக்கியத்துக்கு மேலே என்னால் கடுமை காட்ட முடியவில்லையே!

அட மட்டி! அன்று அவர் கோபப்பட்டது நியாயம் தானே? சட்டையைக் கொடுக்கும் போது எங்களோட பரிசுன்னு சொல்லியிருக்கலாம். இல்லையென்றால்... அதை அவர் கையில் கொடுத்து முகுந்திடம் கொடுக்கச் சொல்லி இருக்கலாம். ஏன் எனக்குத் தோன்றாமல் போச்சு? என்று தன்னைத் தானே குட்டிக் கொண்டாள்.

இன்று மதியம் சாப்பிட வீட்டுக்கு வந்தோம். பிருந்தா அல்வா பரிமாறினாள். அது எனக்குப் பிடிக்காத ஸ்வீட் என்று முகுந்த் சொன்னான். அல்வா எனக்குப் பிடிக்காதா? யாருக்குத் தெரியும்?

பிருந்தாவுக்கு ரொம்பப் பிடிக்குமாம். சரி அவள் முகம் சுருக்குகிறாளே... கொஞ்சம் டேஸ்ட் பண்ணித் தான் பார்ப்போமே என்று எடுத்து வாயில் வைத்தேன்.

ஆபத்பாந்தவா... அநாதரட்சகா என்று முகுந்திற்கு ஆயிரம் முறை நன்றி கூறினேன். பெருமாளே அல்வா இவ்வளவு கேவலமாவா இருக்கும்? எல்லா அல்வாவும்



இப்படித் தானா? இல்லை இவள் கிண்டியது மட்டும் தான் இப்படியா? என்று நான் குழம்பிக் கொண்டிருந்த வேளையில் முகுந்தின் முகம் எனக்கான பதிலைத் தந்தது.

அவன் ஆசையுடன் அல்வாவை எடுத்து வாயில் போட்ட வேகம் என்ன? அதற்குப் பிறகு அவனது முகம் அஷ்டக் கோணலாக மாறியக் கோலம் என்ன? ஹா ஹா! நல்லவேளை நான் பிழைத்துக் கொண்டேன். அம்மா கூட சுகர்ன்னு சொல்லித் தப்பிச்சுட்டாங்க. முகுந்த் மட்டும் தான் மாட்டிக்கிட்டான். அவன் தன் முகம் மாறாமல் அதைச் சாப்பிட்டான். காலையில் ஒரு சட்டையைக் கொடுத்துக் கவுத்தினால்ன்னு பார்த்தால் மதியம் அல்வாவைப் போட்டு படுக்க வைச்சிடுவாள் போலவே!

இதுல காமெடி என்னன்னா முகுந்திடம் 'இன்னும் கொஞ்சம் அல்வாவை வைக்கவா முகுந்த்' என்று கேட்கிறாள். அவனைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. நான் தான் நடுவிலே புகுந்து அவனைக் காப்பாத்தினேன். அவனை மட்டுமா? என் பிள்ளைங்களும் சாப்பிடக் கூடாதுன்னு அதை எடுத்துக் கொண்டு போய் குப்பையிலே போட்டு விட்டேன்.

'அல்வா' அல்வா மாதிரி இருந்தால் சாப்பிடலாம். அழுவா ம்ாதிரி... அதாவது என்னைச் சாப்பிட்டு 'வா வந்து அழு' என்பது போல் இருந்தால் எப்படிச் சாப்பிடுவது?

**ஓ! என் அல்வா அவ்வளவு கேவலமாவா இருந்துச்சு. ஐயோ பாவம் முகுந்த். பெர்த் டே அதுவுமா தண்டிச்சிட்டேனா! இதுனால தான் அன்னைக்கு அல்வாவைக் கொட்டுனீங்களா? தாங்க்ஸ்டா கண்ணா. நான் தான் உங்களைத் தப்பா நினைச்சுட்டேன்.**

சாப்பிட்டு முடிச்சு கடைக்குப் போகும் போது காரில் லவ் லெட்டரு பாட்டுப் பாடுச்சு. அதைக் கேட்டவுடன் எனக்கு அதை அல்வாவை வைச்சு மாத்தி எழுதலாம்ன்னு தோணுச்சு. அது இதுதான்...

நான் அல்வாவை ருசிக்க ஆசைப்பட்டேன் – ருசியோ விளங்கலை
அதை அவளிடம் சொல்ல ஆசைப்பட்டேன் – சொல்ல முடியலை
சூப்பர் சாப்பாடுன்னு வந்தேன் நானு... மதியம் வீட்டுக்கு
இஞ்சி தின்ன குரங்காட்டம் முழிச்சேன். நடுவிலே

என் அம்னீசியா டார்ச்சரை நான் தாங்கி
உன் அல்வா கிட்ட முழி பிதுங்கி
லவ் பண்ணேன் உன்னைத் தான்
என் தம்பி வந்தான் கடவுளாட்டம்
இல்லைன்னா எனக்குப் போராட்டம்
கிழிஞ்சு போச்சு என் பெல் பாட்டம்
ஷர்ட் கொடுத்து வாழ்த்துச் சொன்னே முகுந்தோட தாயாட்டம்
அல்வாவைக் காட்டி மிரட்டுறியே சுடுகாடு பேயாட்டம்
உன் அல்வா டுபாக்குரு. அதக் கொட்டிடு பெட்டகு
இனிமே அல்வா கிண்டாதே
எங்களை ஆட்டிப் படைக்காதே
என் வைஃபா இருந்திடு
........................
சமையல் நிகழ்ச்சி பார்த்துவிட்டு
முயற்சிக்காதே வீட்டுக்குள்ளே
கடையிலே வாங்கித் தந்திடுறோம்



சிக்க வைக்காத கோந்துக்குள்ளே
அவன் சின்ன பையன் மா
நான் பச்சப் புள்ள மா.

ஹா ஹா! என் பாட்டைப் பார்த்து எனக்கே சிரிப்பு சிரிப்பா வருது. இதுல 'இஞ்சி தின்ன குரங்காட்டம்' அப்படின்னு எழுதினதுக்குப் பதிலா 'அல்வ தின்ன ஆதியாட்டம்' என்று கூட எழுதலாம். அந்த அளவுக்கு இருந்துச்சு அவ அல்வா!

அடப் பாவி! என்னை நக்கல் பண்ணி பாட்டா எழுதி இருக்கீங்க. நான் சுடுகாடு பேயாஆஆஆ? ஆதிதிதி... வீட்டுக்கு வாங்க. உங்களைக் கவனிச்சுக்கிறேன்.

பிப்ரவரி 9

இன்று பாண்டிச்சேரிக்கு பிருந்தாவின் குடும்ப வக்கீலோட பையன் கல்யாணத்திற்குச் சென்றோம். காலையில் இருந்து எல்லாம் நன்றாகத் தான் போய் கொண்டு இருந்தது. பிருந்தாவை வீட்டில் விட்டு விட்டு கடைக்குச் சென்றேன்.

அங்கே என் நண்பன் ஒருவன் வந்தான். ஏன்டா ஆதி ஒன்பது மாதங்களுக்கு முன்னால் ஆரம்பித்த உன்னோட aadhi28@gmail.com மெயில் ஐடியைப் பார்க்கவே மாட்டேன் என்கிறாய்? நம்ம ப்ரண்ட்ஸ் எல்லாம் உனக்கு மெயில் அனுப்பிவிட்டு உன் பதிலுக்காகக் காத்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டுப் போனான்.

நான் இரவு வீடு திரும்பியதும் அதைத் திறப்பதற்காக செக்யூரிட்டி கேள்வியை கிளிக் செய்தான். அது உன் காதலியின் பெயர் என்ன? என்று கேட்கிறது.

பெருமாளே! கொஞ்ச நாட்களாக இதை எப்படி மறந்து போனேன்? எனக்கென்று குழந்தைகள் உருவானதும் என் மனைவி, என் குழந்தைகள், என் குடும்பம் என்று சுயநலமாய் மாறிப் போனேனா? நான் யாரைக் காதலித் தேன்? ஏன் அவள் இதுவரை என்னை வந்துப் பார்க்க வில்லை? ஒருவேளை எனக்குத் திருமணம் ஆனது தெரிந்து ஒதுங்கிக் கொண்டாளா? அப்படி ஒதுங்கிப் போனாள் என்றால் அவள் எவ்வளவு நல்லவளாய் இருக்க வேண்டும். அவளுக்கா நான் துரோகம் செய்யுறேன்?!

நானே குழப்பத்தில் இருக்கும்போது இந்த பிருந்தா என்னைத் தூங்க வரச் சொல்லிக் கூப்பிட்டு நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

என்னுடைய கோபத்தை நான் முகுந்திடமோ, அம்மாவிடமோ கூடக் காட்டுவதில்லை. அவர்களைப் பார்க்கும்போது எனக்கு ஒரு அந்நியத் தன்மை தான் ஏற்படுகிறது. ஆனால் இவளிடம் மட்டும் பட்டென்று ஏதாவது சொல்லி விடுகிறேன். அது ஏன்? முகுந்திடமும் அம்மாவிடமும் தோன்றாத உரிமை உணர்வு இவளிடம் மட்டும் எப்படித் தோன்றுகிறது? இதுதான் தாலியின் மகிமையா?

*'சோ ஸ்வீட் ஆதி! உங்கள் காதலியின் பெயரை என்னிடம் கேட்டு இருக்கலாம் தானே? நான் சொல்லி யிருப்பேனே! உங்களுக்கு நினைவு போகும் அந்தக் கடைசி நொடிகளில் உங்கள் எண்ணம் முழுவதும் இடம் பிடித்திருந்தவள் நான்! நான் தான் உங்கள் நினைவில் கலந்திருந்தேன்! அதுதான் உங்களுக்கு என்னிடம் மட்டும் ஒரு உரிமை உணர்வு தோன்றியிருக்கும்' என்று கணவனுக்கு மனதினுள் பிருந்தா விளக்கம் அளித் தாள்.*



**மார்ச் 12**

இன்று வளைகாப்பு. திருமணத்தன்று தான் என்னால் ஓடியாடி நடமாட முடியாமல் போயிற்று. இந்த பங்ஷனை யாவது சிறப்பாக நடத்த வேண்டும் என்று நான் ஆயிரம் கற்பனைகள் செய்து வைத்துக் காத்திருக்க... அதற்குத் தடையாக வந்து நின்றான் மூர்த்தி.

அவன் யாரிடமோ போனில் கதை அளந்து கொண்டிருந் தான். பிருந்தா அவனிடம் சிக்காமல் என்னைக் கல் யாணம் செய்தது பற்றியும்... இன்னைக்கு பிருந்தாவைக் கரெக்ட் பண்ணிக் காட்டுவேன் என்றும்... அதற்காகவே மல்லிகை பூ, புடவை எல்லாம் வாங்கி வந்திருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். யார் மனைவிக்கு யார் வாங்கித் தருவது! இவனை... என்று முதலில் ஆத்திரம் வந்தது.

ஆனால் அதற்கு முன்பு பிருந்தாவை எந்த மல்லிகைப் பூவையும் வைக்க விடக் கூடாது. இந்தப் பூ மூர்த்தி வாங்கியது என்றோ, வேறு யாரோ வாங்கியது என்றோ மல்லிகைப் பூவில் லேபிளிலா ஒட்டி இருக்கு?!

நான் பூவைக் கசக்கிப் போட்டதும் என் பிருந்தாவின் முகமும் கசங்கியது. ஆனால் என்னால் மூர்த்தி பற்றிய உண்மையைச் சொல்லி அவள் மனதைக் கஷ்டப்படுத்த முடியாது. இவனுக்குப் பயந்து போய் தான்... நடக்க முடியாத, அம்னீசியா பேஷண்ட்டான என்னைத் திரு மணம் செய்திருக்கிறாள். அப்புறம் எப்படி இந்தப் பொறுக்கியைப் பற்றி அவளிடம் சொல்வது?

மனையில் வந்து அமர்ந்தவளின் முகம் மூர்த்தியைப் பார்த்ததும் சுருங்கிப் போயிற்று. நல்லவேளை... நான் அவளிடம் அவனைப் பற்றித் தெரிவிக்கவில்லை என்று நினைத்துக் கொண்டேன்.

இதற்கு மேலும் அவன் இந்த வீட்டில்... இந்த பங்ஷனில்... பிருந்தாவின் கண் பார்வை படும் இடத்தில் இருந்தால்... அப்புறம் நான் என்ன பிருந்தாவின் கணவன்? அடுத்த பத்தே நிமிடங்களில் அவனை அப்புறப்படுத்தி விட்டேன். இனி அவன் என் மனைவி இருக்கும் திசைப் பக்கம் தலை வைத்துப் படுக்கக் கூட மாட்டான்.

இவன் அந்தப் பட்டுப் புடவையை எடுத்து வந்திருப்பானா என்ன? ஒரு வேளை பிரகாஷே எடுத்து வந்திருந்தால்?! பிறந்த வீட்டுச் சீதனமாக அதை பிருந்தா பெருமையாக பாதுகாக்க நினைப்பாளோ? ஆனால் என்ன செய்வது? இந்த அயோக்கியன் மூர்த்தி விஷயத்தில் எந்த ரிஸ்கும் எடுக்க முடியாது. எதற்கு வம்பு என்று நினைத்து பிரகாஷ் தட்டில் வைத்துக் கொடுத்த புடவையை வேலைக்காரியிடம் கொடுத்து விட்டேன்.

*அடக் கடவுளே! ஒரு பூவிற்கும், புடவைக்கும் பின்னால் இத்தனை விஷயம் நடந்ததா?! தாங்க்ஸ் ஆதி. என்னைக் காப்பாற்றிவிட்டீங்க. இல்லைன்னா அந்த மூர்த்தி பயல் என்னவெல்லாம் கதை சொல்லியிருப்பானோ?*

இன்று அம்மா என்னிடம் இனிமேல் பிருந்தாவை நல்லபடியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். காலையில் அவளது முகவாட்டத்தைக் கண்ட நானும்



இதே முடிவிற்குத் தான் வந்திருக்கிறேன். யாரென்றே தெரியாத காதலியைப் பற்றி எண்ணி மனதைக் குழப்பிக் கொள்ளாமல் என் மனைவியைப் பார்த்துக் கொண்டாலே போதும் என்ற முடிவெடுத்து விட்டேன். இன்றிலிருந்து பிருந்தாவை சந்தோஷமாகப் பார்த்துக் கொள்வதே எனது முதல் வேலை என்று தீர்மானித்து விட்டேன்.

**மார்ச் 24**

இன்று எனக்கு இரு மகன்கள் பிறந்தார்கள். இன்று என் மகன்களுக்கு மட்டுமா பிறந்த நாள். இல்லையில்லை. நானும் இன்று தான் பிறந்தேன். நான் என்றால் இந்த ஆதித்யா அல்ல. பிருந்தாவின் கணவன் ஆதித்யா!

இத்தனை நாளாக யாருக்கோ துரோகம் இழைக்கக் கூடாதென்று பிருந்தாவிடம் நெருக்கம் காண்பிக்காமல் இருந்து விட்டேன். வளைகாப்பிற்குப் பிறகு தான் சிறிது மாறினேன்.

ஆனால் இன்று பிரசவத்தில் சிக்கல் ஏற்பட்டு என் பிருந்தா என்னை விட்டுப் பிரிந்து போய் விடுவாளோ என்று நினைக்கையில் என் சர்வாங்கமும் நடுங்கியது. பயம் என்னைப் பற்றிக் கொண்டது. அவள் இல்லை என்றால் இந்த ஆதித்யாவும் இல்லை என்று என் உள்ளுணர்வு விடாமல் கூவிக் கொண்டிருக்கிறது.

இவளை விடவா அந்த முகம் தெரியாத, பெயர் தெரியாத பெண்ணை நான் காதலித்து இருப்பேன்? எனக்கு இந்த ஜென்மத்திற்கு என் பிந்து மட்டுமே போதும். பி...ந்..து! இந்தப் பெயர் கூட நன்றாக இருக்கிறது. இனி நான் அவளை அப்படித் தான் அழைக்கப் போகிறேன். ஐ லவ் யூ பிந்து!

இந்த வரிகளோடு அந்த டைரி நிறைவு பெற்றிருந்தது.



## 24



**க**ண்களில் வழியும் நீரைக் கூடத் துடைக்காமல்... துடைக்கத் தோன்றாமல் பிருந்தா அமர்ந்திருந்தாள். தன் நினைவு இல்லாத போதும் கூட தன் கணவனுக்குத் தன் மேல் பிடிப்பு இருந்திருக்கிறது என்பதை நினைக்கும் பொழுது அவள் அடைந்த நிம்மதிக்கும், ஆனந்தத்திற்கும் அளவே இல்லை.

சரியாக அந்த நேரம், ''பிந்து...'' என்று அழைத்துக் கொண்டே ஆதித்யா உள்ளே வர, கையில் இருக்கும் டைரியைப் படுக்கையின் மேல் போட்டு விட்டுத் திரும்பியவள் அவனைக் கண்டு பெரிதாகப் புன்னகைக்க...

அவளது கண்ணீரைக் கண்டு பதறியவன் அவளருகே வந்து அவளது கண்ணீரைத் தன் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே, ''ஏன்மா அழுகிறாய்?'' என்று கேள்வி எழுப்பினான்.

பிருந்தாவோ அவனது முகத்தைத் தன்னருகே இழுத்து வைத்துத் தொடர் முத்தங்களைப் பதிக்க ஆரம்பித்தாள்.

''என்னாச்சுடா? என்ன கண்ணம்மா?'' என்று அவன் கேட்டுக் கொண்டிருக்க அவள் தனது வேகத்தைக் கூட்டினாலே தவிர நிறுத்தவில்லை.



''என்னம்மா?'' என்று அவன் மீண்டும் வினவ அவள் முத்தமிடுவதை நிறுத்திவிட்டு,

''மனைவி முத்தம் கொடுத்தால் அனுபவிக்கணும். இப்படி ஆராயக் கூடாது...'' என்று சொல்லி முடிக்கும் முன்பே ஒரு வேகத்துடன் அவளது உதடுகளை அவன் தனது உதடுகளால் சிறை செய்தான்.

அந்த நீண்ட முத்தத்தின் முடிவில் அவளை இறுக்கி அணைத்தவன், ''நானே ஐயோ பாவம் பச்சப் புள்ளைக் காரின்னு ஒதுங்கிப் போனால் நீ விட மாட்டே போல இருக்கு!'' என்று காதோரம் கிசுகிசுக்க, அவள் தனது அணைப்பை இறுக்கினாள்.

குழந்தைகளைப் பற்றிப் பேசினால் அவள் விலகுவாள் என்று அவன் எதிர்பார்த்ததிற்கு நேர்மாறாக அவள் மேலும் அவனை அணைக்கவும் ஆதித்யாவிற்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

அவளை தன்னிடம் இருந்து பிரித்து நிறுத்தியவன், ''சொல்லுடா. என்ன விஷயம்? ஏதோ நடந்திருக்கு போலவே!'' என்று ஓர் கூர் பார்வையுடன் கேட்டான்.

அவள் ஒன்றும் பேசாது அந்த டைரியை எடுத்து அவன் படிக்க வேண்டிய பக்கத்தைப் பிரித்துக் காண்பிக்க அவன் அதை வாங்கிப் படிக்க ஆரம்பித்தான்.

படித்து முடித்ததும் சந்தோஷம் அடைவான் என்று அவள் அவனை ஆவலோடு பார்த்திருக்க...

அவனோ கசங்கிய முகத்துடன் அவளை நோக்கி, ''என்னை இப்பவாது நம்புவாயா? நான் நல்லவன் தான். விஷ்ணுவா உன்னை ஏமாற்ற நினைக்கலை என்று அன்று

நான் நடந்து கொண்டதுக்கு நேற்று நான் விளக்கம் கொடுத்தேன். ஆனால் ஆதியா நான் ஏன் அப்படி செஞ்சேன் என்று என்னால நேற்ற எந்த விளக்கமும் கொடுக்க முடியலை. ஆனால் இது உனக்குச் சொல்லிவிட்டது தானே? நான் எப்பவும் உன்னை... உன்னை மட்டும் தான்டா நினைச்சிருக்கேன். இந்த உலகத்திலே நீ தான் எனக்குச் சகலமும். நீ தான் எனக்கு யாதுமாகி என் உள் மனசிலே நிலைத்து நின்று இருக்கிறாய்'' என்று தழு தழுத்தான்.

அங்கிருந்த கட்டிலின் மேல் ஏறி அமர்ந்தவள் கணவனைக் கண்களால் அருகில் அழைக்க அவன் தன் பக்கம் வந்ததும் அவனை மடி மீது சாய்த்துக் கொண்டு அவனது முடியைக் கோதிக் கொடுத்தவள் அவனது கண்களைப் பார்த்துக் கொண்டே பேச ஆரம்பித்தாள்.

''உங்க பக்கத்தில் இருக்கும்போது எனக்குக் கிடைக்கும் பாதுகாப்பு உணர்வை என்னால வார்த்தையால வடிக்க முடியாது. அது என் தாயால் எனக்குக் கிடைக்கக் கூடிய ஒரு பாதுகாப்பு உணர்வு. அதனால தான் அன்னைக்கு நான் யாரைப் பற்றியும் யோசிக்காமல் உங்களைக் கல்யாணம் செஞ்சுக்கச் சம்மதிச்சேன்.

நீங்க விஷ்ணுவா என்னிடம் ஒன்றும் சொல்லாது மறைந்து போனீங்களே... அப்பவே நான் உங்களை நம்பிக் கொண்டு தானே இருந்தேன். அன்னைக்கு ப்ரியா தான் என்னிடம் கேட்காமலே தாலியைக் கழட்டி நான் என்னவென்று உணரும் முன் உண்டியலில் போட்டு விட்டாள். இல்லா விட்டால் நான் கழட்டி இருக்க மாட்டேன். நான் உங்களை நிஜமாத்தானே காதலிச்சேன்.



ஆனால் அதே சமயம் உங்களைத் தேடி வந்து எனக்கு வாழ்க்கைப் பிச்சை கொடுங்கன்னும் நான் ஒரு நாளும் கேட்டு இருக்க மாட்டேன். ஏன்னா அது என் சுயமரியாதை சம்பந்தப்பட்டது.

ஆதியா வந்தது நீங்க... என் கணவன் விஷ்ணு அப்படிங்குறதாலே தான் நான் திரும்பவும் தாலி கட்டிக்க சம்மதித்தேன். நீங்க நேற்று ஹாஸ்பிடலில் இருந்து வந்து நமக்குக் கல்யாணம் ஆனது தெரியாமல் வேற பொண்ணை எனக்குக் கட்டி வைச்சட்டாங்களாம். நாம என்னடா செய்யலாம்ன்னு கேட்டீங்களே! அது ஒண்ணு போதாதாங்க நான் உங்களை நம்புவதற்கு? இந்த டைரியில் இருப்பது எல்லாம் அன்னைக்கு நீங்க ஏன் அப்படி நடந்துக்கிட்டீங்க என்பதற்கான காரணம். அவ்வளவுதான். இது கிடைச்சாலும் கிடைக்கா விட்டாலும் நான் உங்களை நம்புவேங்க'' என்று தழுதழுத்தாள்.

அவள் பேசப் பேச அவள் தன் மீது வைத்திருக்கும் காதலை உணர்ந்தவன் மௌனமாய் கண் மூடி அவள் மடி சாய்ந்திருந்தான்.

அவன் கண் திறந்து பேசுவான் என்று ஒரு சில நிமிடங்கள் காத்திருந்தாள். அவன் இன்னமும் அதிலேயே ஒன்றிப் போய் இருக்கிறான் என்று புரிந்து கொண்டவள் அவனது எண்ணத்தைத் திசை திருப்பும் பொருட்டு.

''ஏன் ஆதி, நான் உங்களுக்குச் சுடுகாடு பேயா? சரி பாட்டு தான் நக்கல் பண்ணி எழுதி இருக்கீங்கன்னு பார்த்தா கடைசியில் அல்வா தின்ன ஆதியாட்டம்ன்னு ஒரு பஞ்ச் வேற வைச்சு இருக்கீங்க. உங்களை...'' என்று வம்புக்கு இழுத்தாள்.

அவளது யுக்தி நன்றாகவே வேலை செய்தது. அவன் கண் திறந்து அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்.

''விஷ்ணுவா... அதாவது என் லவ்வரா இருந்தப்போ உங்களுக்கு அல்வா இஷ்டமா இருந்துச்சு... என் கணவன் ஆதியா இருக்கும்போது அல்வா சாப்பிடுவது கஷ்டமா இருக்கோ?'' என்று மேலும் அவள் வம்பு செய்ய,

அவன் எழுந்து அமர்ந்து கொண்டே, ''பின்ன நீயே யோசித்துப் பாரும்மா... அவனவன் அவன் காதலியைக் கவர் பண்ண தலையால கூட நடக்க ரெடியா இருக்கும் போது எனக்கு அல்வா சாப்பிடுவது ஒரு பொருட்டா இருக்குமா என்ன? ஆனால் அதே உன் கணவன் ஆன பின்னும் ஏன் செய்யணும்?''

''ஏன் செய்யக் கூடாது?''

''பிந்து லவரை தாஜா பண்ணுவது... அதுவும் பொது இடத்தில்... ரொம்ப ரொம்பக் கஷ்டம். ஆனா மனைவியைத் தாஜா செய்யுறது கஷ்டமா என்ன?''

''அது என்ன அவ்வளவு ஈஸியான வேலையா என்ன?''

''இல்லையா பின்னே? அவளை தாஜா பண்ணனும் என்றால் இதோ இப்படி பண்ணலாம்...'' என்று சொல்லிக் கொண்டே அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

''இல்லைன்னா இப்படிச் செய்யலாம்...'' என்று கூறிக் கொண்டே அவளது கன்னத்தில் முத்தமிட்டவன், ''அப்படியும் மசியலைன்னா...'' என்று சொல்லி நிறுத்தி அவளது உதடுகளைச் சிறை செய்தான்.



அந்த முத்தத்திற்குப் பின் அவன் மார்பு மீது சாய்ந்து கொண்டவளை அணைத்துக் கொண்டவன், ''நான் இவ்வளவு நாளா There is a woman behind every successful men என்று கேள்வி தான் பட்டிருக்கிறேன். இப்போ தான் என் அனுபவப்பூர்வமா உணர்கிறேன்'' என்றான்.

'என்ன அது?' என்பது போல் பிருந்தா சந்தோஷத்துடனும், ஆர்வத்துடனும் தன் தலை தூக்கி கணவனைப் பார்க்க... 'பேக்குன்னு நிரூபிக்குறா பாரு!' என்று மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

அவளது காதோரத்து முடியைக் கோதிக் கொடுத்துக் கொண்டே, ''பின்னே ஒரு அல்வாவைக் கிண்டி கொடுத்து என்னைக் கவிஞனாக்கிய பெருமை உன்னைத் தானேமா சேரும்'' என்று சொன்னவுடன் அவனைச் செல்லமாக அடிக்க ஆரம்பித்தாள்.

''பேசாமல் நாம வேணா ஒரு இன்ஸ்டியூட் ஆரம்பிப்போம். இவ்விடம் கவிதை எழுதக் கற்றுத் தரப்படும்ன்னு. நாம கத்துக் கொடுக்க வேண்டாம். உன் அல்வாவை மட்டும் டெய்லி கிண்டிக் கொடுத்திடு. அது போதும்'' என்று சொல்லி மேலும் பல அடிகளைப் பெற்றுக் கொண்டான்.

அப்பொழுது கதவைத் தட்டி யாரோ உள்ளே வர அனுமதி கேட்டார்கள். ஆதித்யா, ''உள்ளே வரலாம்'' என்று குரல் கொடுத்தவுடன் உள்ளே நுழைந்தது ப்ரியா.

தோழியைப் பார்த்ததும், ''ஹேய் ப்ரியா!'' என்று பிருந்தா சந்தோஷக் கூச்சலிட,

ப்ரியாவோ பிருந்தாவை வைச்ச கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண் முன்னே பிருந்தா சொடக்குப் போடவும்,

''உன்னை இவ்வளவு சந்தோஷமா பார்த்து எவ்வளவு நாள் ஆச்சு பிருந்தா!'' என்று முகம நிறைய பூரிப்புடன் சொன்னவள் அவளது கன்னத்தில் அழுத்தமாய் முத்த மிட்டாள்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆதித்யா, ''ஓய்...'' என்று கத்தவும்,

''அப்படித் தான் கொடுப்பேன்'' என்று சொன்ன ப்ரியா பிருந்தாவின் அடுத்த கன்னத்திலும் அழுத்தமாக முத்தமிட்டாள்.

அவளது செயலில் சிரித்த ஆதித்யா, ''நீங்க ரெண்டு பேரும் பேசிக் கொண்டு இருங்க'' என்று சொல்லி அறையை விட்டு வெளியேறினான்.

நேற்றே பிருந்தா ஆதித்யாவைப் பற்றி போன் மூலம் விஷயம் தெரிவித்திருந்தாள். இன்று டைரி கிடைத்ததும் அதில் ப்ரியாவிற்குத் தெரிவிக்க வேண்டிய விஷயத்தை மட்டும் தெரிவித்தாள். வெளியே ஆதித்யாவும் தன் தாய் மற்றும் தம்பியின் முன்னிலையில் அதையே தான் செய்து கொண்டிருந்தான்.

ப்ரியா இரு குழந்தைகளையும் கொஞ்சிக் கொண்டே பிருந்தாவிடம், ''நான் தான் அன்னைக்கே சொன்னேன்ல பிருந்தா... ஆதி ரொம்ப நல்லவர்ன்னு...'' என்று சொன் னாள்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே வெளியே வந்தார்கள்.



அப்பொழுது ஆதித்யா ப்ரியாவிடம், ''உன்னால தான் ப்ரியா எனக்கு ஒரு நல்ல மனைவியும், என் மனைவிக்கு ஒரு நல்ல குடும்பமும் கிடைச்சிருக்கு'' என்று ஆத்மார்த்த மாக நன்றி கூறினான்.

பிருந்தாவும் முறையே அவளுக்கு நன்றி தெரிவித் தாள்.

நிலைமையை சகஜமாக்கும் பொருட்டு, ''என்னால தானே உங்களுக்கு நல்ல வைஃப் கிடைச்சிருக்கா... அப்போ எனக்கு ஸ்பெஷலா என்ன செய்யப் போறீங்க?'' என்று ப்ரியா கேட்டதும்,

தனது தாடையைத் தடவிக் கொண்டே ஆதித்யா, ''ம்ம்ம் உனக்கு நாளைக்கு பொண்ணு பிறந்து என் பசங்க யாருக்காவது அவளைப் பிடிச்சுப் போனால் நான் உன் னிடம் வந்து சொல்லுறேன். உன் பொண்ணை பேஸ் புக் மூலமா பிரண்டு ரிக்வெஸ்ட் அனுப்பச் சொல்லு. என் பையனை அதை அக்செப்ட் பண்ண வைக்குறேன்'' என்று சிரிக்காமல் சொல்ல, கேட்டுக் கொண்டிருந்த ப்ரியா கடுப்பானாள்.

''நான் கூட என் பெண்ணை உங்க பையனுக்குக் கட்டி வைக்குறேன்னு சொல்லப் போறீங்கன்னு பார்த்தால்... அது எப்படி எப்படி இவங்க பையனுக்குப் பிடிச்சால்... அப்பக்கூட பிரண்டு ரிக்வெஸ்ட்டை என் பொண்ணு அனுப்பணுமா? தேவை தான் எங்களுக்கு. இப்பவே அவனவன் பேஸ் புக் மூலமா பார்க்காமலே லவ் பண் ணிக் கல்யாணம் பண்ணிக்குறாங்க. இவரு இருபது வருஷம் கழிச்சு பிரண்டா ஏத்துக்குவாராம். ஏன்... ஏன் இப்படி?

உள்ள வைச்சு உங்க பொண்டாட்டியைக் கிஸ் பண்ணியதுக்கா?'' என்று கேட்டதும்,

''ம்ம்ம் அப்படியும் வைச்சுக்கலாம்'' என்று ஆதித்யா ஸ்டைலாகத் தோள் குலுக்கிச் சொல்ல,

''ஆதிதி...'' என்று ப்ரியா கத்த, அதைக் கண்டு அனைவரும் நகைத்தனர்.

''சிரிச்சது போதும். உங்க பிள்ளைங்களுக்கு என்ன பேர் வைச்சு இருக்கீங்க?'' என்று ப்ரியா கேட்டதும் தான் அனைவருமே, 'அட ஆமா! மறந்தே போயிட்டோமே!' என்ற தினுசில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆதித்யா பிருந்தாவைப் பார்த்து, ''நீ ஏதாச்சும் செலக்ட் பண்ணி வைச்சிருக்கியாமா?'' என்று கேட்டான்.

''இல்லைங்க. நான் பொண்ணு பிறந்தால் என்ன பேர் வைக்கலாம்ன்னு தான் யோசித்தேன். பையன் பேர் யோசிக்கவே இல்லை...'' என்று இழுக்கவும்,

'அடிப்பாவி! இரு இரு உன் பசங்க வளர்ந்தவுடனே அவங்ககிட்டே உன்னைப் போட்டுக் கொடுக்கிறேன்'' என்று ப்ரியா நக்கல் பண்ணினாள்.

''நீ போட்டுக் கொடு. நான் காப்பாத்திட்டுப் போறேன்'' என்று பிருந்தாவின் தோள் மீது கைப்போட்டு அணைத்தவாறே ஆதித்யா சொல்ல,

''யாரு நீங்க? நீங்களே எப்பவும் அவனை நக்கல் தானே பண்ணுறீங்க'' என்றதும்,

''ஹலோ! என் வைஃபை நான் நக்கல் பண்ணுவேன். அதுக்காக மத்தவங்ககிட்டே விட்டுக் கொடுக்க முடியுமா



என்ன? அது என் பிள்ளைங்களே ஆனாலும் சரி'' என்று சொன்னதும் பிருந்தா தன் கணவனை நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தாள்.

அவளைப் பார்த்துப் பதில் புன்னகை புரிந்தவன் தன் தாயிடம் திரும்பி, ''அம்மா உங்களுக்கு ஏதாச்சும் விருப்பம் இருக்காம்ம?'' என்று கேட்டான்.

''அப்பா உங்க ரெண்டு பேருக்கும் பெருமாள் பேர் வைச்சார். நீங்களும் பெருமாள் பேரை வைக்க முடியுதான்னு பாருங்க'' என்றார்.

ப்ரியா பேர் பற்றிய பேச்சை எடுத்தவுடனே தன் மடிகணினியை இயக்க ஆரம்பித்த முகுந்த் தன் தாயின் விருப்பத்தைக் கேட்டதும் பெருமாள் பேர்களைத் தேடி எடுத்துக் காட்டினான்.

அதைப் பார்வையிட்ட ஆதித்யா, ''அனிருத் எப்படி இருக்கு?'' என்று கேட்டதும், ''சூப்பர்'' என்று அனைவரும் ஆமோதித்தனர்.

''அடுத்த பேர்...'' என்று அவன் தேட...

பிருந்தா, ''அதுவும் அ'ல வர மாதிரியே பாருங்க. அப்போ தான் ஒண்ணு போல இருக்கும்'' என்றாள்.

ஆனால் அவர்களுக்கு 'அ'வில் ஆரம்பிக்கும் எந்தப் பெயரும் பிடிக்காமல் போக,

பிருந்தா, ''அர்ஜுன். இது எப்படி இருக்கு?'' என்று கேட்ட நொடி,

ப்ரியா, ''அது ஒண்ணும் பெருமாள் பேர் இல்லையே பிருந்தா'' என்று சொன்னாள்.

ஓ என்று சொல்லி முகம் வாடிய பிருந்தாவைப் பார்த்த ஆதித்யா, ''அர்ஜுனை விட அந்தக் கிருஷ்ண னுக்கு நெருக்கமானவங்க யாரு இருக்க முடியும்? அவன் இல்லைன்னா இன்னைக்குக் கீதையே இல்லை. அதனால அர்ஜுன் என்றே வைச்சுக்குவோம். என்னம்மா சொல்லுறீங்க?'' என்று தன் தாயிடம் அபிப்ராயம் கேட்டான்.

பிருந்தாவின் முகவாட்டத்தைப் பார்த்திருந்த முகுந் தும் கஸ்தூரியும், ''சூப்பர்!'' என்றும், ''அந்தப் பேரே இருக்கட்டும்'' என்றும் கூறினார்கள்.

அவர்கள் அனைவரும் குழந்தைகளின் பேர்களைச் சொல்லி மகிழ்ந்தனர். சிரித்துக் கொண்டிருந்த ஆதித் யாவையும், பிருந்தாவையும் பார்த்த கஸ்தூரி தனது குடும்பத்தின் சந்தோஷத்தை மீட்டுத் தந்ததற்கு பெரு மாளுக்கு மனதார நன்றி தெரிவித்தார்.